
புங்குடுதீவு

கண்ணகை அம்மன் என வழங்கும்

# ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயம்



55.12
ராஜ
L/PR

## மகா கும்பாபிஷேக பெருவிழா மலர்

30 - 03 - 2005

புங்குடுதீவு அருள்மிகு கண்ணகை அம்மன் என வழங்கும்

# ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயம்



# மகா கும்பாபிஷேக மலர்

## 30.03.2005

உ

சிவமயம்

புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும்

# ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்

**புனராவர்த்தனப் பிரதிஷ்டா**

## மகா கும்பாபிஷேகப் பெருவிழா

**பங்குனித் திங்கள் 17ம் நாள் புதன்கிழமை (30.03.2005)**

**சர்வபோதகமகா கும்பாபிஷேகம் சிறக்க நல்லாசி வழங்குபவர்கள்**

*சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வரக்குருக்கள்*

*(இந்துமத குருபீடாதிபதி சுதுமலை)*

Dr. **சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள்**

*(இந்துமத குருபீட அவுஸ்திரேலியப் பிரதிநிதி) சுன்னாகம்)*

**சிவஸ்ரீ சுவாமிநாத பாலசுந்தரக் குருக்கள்**

*(நயினை தேவஸ்த்தானம்)*

***சர்வசாதகம்***

*சிவஸ்ரீ கைலை வாமதேவக்குருக்கள்*

*"ஆகமப்பிரவீன" நயினை*

*பிரம்மஸ்ரீ பாலகணேஷ்வரசர்மா (நயினை)*

***பிரதிஷ்ட பிரதம குரு***

*சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்*

*(ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம் சுன்னாகம்)*

***தேவஸ்தான ஸ்தானிகக் குருக்கள்***

*சிவஸ்ரீ நடராஜ ரவீந்திரக் குருக்கள்*

*சிவஸ்ரீ கணேச வாகீஸ்வரக்குருக்கள்*

## பங்குபற்றிச் சிறப்பிக்கும் குருமார்கள்

| | |
|---|---|
| *சிவஸ்ரீ கைலை ராஜேஸ்வரக் குருக்கள்* | *(நயினை)* |
| *சிவஸ்ரீ நி. நாகேந்திரக் குருக்கள்* | *(புங்குடுதீவு)* |
| *சிவஸ்ரீ சிவசுப்பிரமணியக் குருக்கள்* | *(புங்குடுதீவு)* |
| *சிவஸ்ரீ சோ. நடராஜக் குருக்கள்.* | *(நல்லை ஆதீன சிவாச்சாரியர்)* |
| *சிவஸ்ரீ க.குகதாசக் குருக்கள்* | *(ஆனைக்கோட்டை)* |
| *சிவஸ்ரீ சி. ஜோதீந்திரக் குருக்கள்* | *(கோப்பாய்)* |
| *சிவஸ்ரீ சோ. வரதராசக் குருக்கள்* | *(புளியங்கூடல்)* |
| *சிவஸ்ரீ ந. தாமோதரக் குருக்கள்* | *(நீராவியடி)* |
| *சிவஸ்ரீ மனோகரக் குருக்கள்* | *(புங்குடுதீவு)* |
| *சிவஸ்ரீ பஞ்சாட்சர பாலசுப்பிரமணியக் குருக்கள்* | *(திருக்கேதீஸ்வரம் ஆதினம்)* |
| *சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்* | *(வரசித்தி விநாயகர் ஆலயம்)* |
| *சிவஸ்ரீ மனோகரக் குருக்கள்* | *(புங்குடுதீவு)* |
| *சிவஸ்ரீ சோ. இ. பிரணாகார்திஹாக் குருக்கள்* | *(வீரபத்திரர் கோவில் கோப்பாய்)* |
| *சிவஸ்ரீ ம. பாலச்சந்திரக் குருக்கள்* | |
| *சிவஸ்ரீ கோபாலக்குரக்கள்* | |
| *சிவஸ்ரீ ப. சண்முகானந்தக் குருக்கள்* | |
| *சிவஸ்ரீ ம. நா. குகனேசக் குருக்கள்* | *(சுன்னாகம்)* |
| *சிவஸ்ரீ உமாரமணக் குருக்கள்* | |
| *சிவஸ்ரீ ச. ஸ்ரீகாந்தக் குருக்கள்* | |
| *சிவஸ்ரீ லம்போதர குமாரசுவாமிக் குருக்கள்* | *(சித்தங்கேனி)* |
| *சிவஸ்ரீ கு.குகேஸ்வரக் குருக்கள்* | |

## யாகசம்ரட்சகர்கள்

| | |
|---|---|
| *பிரம்மஸ்ரீ க. கைலைவா சர்மா* | *(புங்குடுதீவு)* |
| *பிரம்மஸ்ரீ ச. திவ்யசர்மா* | *(யாழ்ப்பாணம்)* |
| *பிரம்மஸ்ரீ ச. சிவாசர்மா* | *(கொக்குவில்)* |
| *பிரம்மஸ்ரீ இ. சபரீசசர்மா* | *(புங்குடுதீவு)* |
| *பிரம்மஸ்ரீ கு. உமாசுமசர்மா* | *(கைதடி)* |
| *பிரம்மஸ்ரீ ச. பிரதீபசர்மா* | *(யாழ்ப்பாணம்)* |
| *பிரம்மஸ்ரீ வி. கஜேந்திரசர்மா* | *(அச்சுவேலி)* |
| *பிரம்மஸ்ரீ வா. கைலாசரசர்மா* | *(நயினை)* |
| *பிரம்மஸ்ரீ சோ. வேணுகோபால சர்மா* | *(புங்குடுதீவு)* |
| *பிரம்மஸ்ரீ இ. ஜனார்தன சர்மா* | *(புங்குடுதீவு)* |
| *பிரம்மஸ்ரீ தி. கிருபாகரசர்மா* | *(ஆவரங்கால்)* |

# உள்ளடக்கம்

## (கட்டுரைப்பகுதி)

1. இராஜ ராஜேஸ்வரி அம்பாள் மேல் எழுந்த திருவூஞ்சல் — 21
- வித்துவான் அமரர் சி. ஆறுமுகம் -

2. புங்குடுதீவு அருள்மிகு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வரலாறு — 25
- திரு. சின்னத்தம்பி கோபாலபிள்ளை -

3. புங்குடுதீவுக் கோவில்களும் பண்பாடும் ஓர் வரலாற்றுக் கண்ணோட்டம் — 35
- பேராசிரியர் வி. சிவசாமி -

4 புங்குடுதீவு என்ற பெயர் எப்படி வந்தது? — 45
- திரு. தம்பிஐயா தேவதாஸ் -

5. தீவகம் - வரலாற்று நோக்கு — 47
- பேராசிரியர். கா. குகபாலன் -

6. சக்தி வழிபாடும் சாக்த தந்திரங்களும் — 51
-டாக்டர் மா. வேதநாதன் -

7. அறிவே தெய்வம் — 57
- திரு. முருகவே பரமநாதன் -

8. மன்னார் முதல் மாத்தறை வரையில் பழம் பெரும் ஈஸ்வரங்கள் — 63
- திரு. த. மனோகரன் -

9. மனம்போல வாழ்வு — 67
- கலாநிதி பண்டிதை செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி -

10. இலங்கையில் சிறுதெய்வ வழிபாடு பெறும் முக்கியத்துவம் — 71
- திரு. கி. புண்ணியமூர்த்தி -

11. தெய்வீக வாழ்வு — 77
- சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக்குருக்கள் -

12. கலைகள் — 87
- திரு. த. இலங்கேஸ்வரன் -

13. தெய்வீகத் திருத்தலங்கள் 93
- வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் -

14. இலங்கையில் இந்துசமயம் 107
- அமரர் கி. லக்ஷ்மண ஐயர்-

15. கண்ணகியம்மன் கதை 119
- திரு. நாகமணி சண்முகம் -

16. கடவுளைக் காண்போமா? 123
- புலவர் ஈழத்து சிவாநந்தன் -

17. மலர் மலர., 125
- திரு. மு. கனகசபாபதி -

18. தேர் ஓடியது 129
- அமரர் சி. முத்துக்குமாரு -

## உள்ளடக்கம்

### (திருப்பணியாளர்கள்)

1. திருவிழா உபயகாரர்கள் 131

2. தர்மகர்த்தாக்கள் 132

3. பழைய நிர்வாக சபையினர் 132

4. நடப்புக்கால நிர்வாக சபையினர் 133

5. கும்பாபிஷேக புனர்நிர்மாண செயலணிக் குழு 133

6. 2005ஆம் ஆண்டிற்கான கும்பாபிஷேக ஒழுங்குபடுத்தல் குழு 134

7. வெளிநாட்டில் வாழும் ஆலய கும்பாபிஷேக குழுப்பிரதிநிதிகள் 135

8. Committee Members of the Paripaalana Sabai and Trustee 136

*பிரம்மஸ்ரீ தி. கருணாநந்த சர்மா*

**யாக அலங்காரம், அமைப்பு**

*சிவஸ்ரீ வாமதேவ கைலாசநாதக் குருக்கள் (நயினை)*

**மங்கள வாத்தியம்**

*கோண்டாவில் நாதஸ்வர இசையருவி V.K. பஞ்சமூர்த்தி குழுவினர்,*

*கல்வியங்காடு நாதஸ்வர இளவரசன் S. பாலமுருகன் குழுவினர்,*

*தேவஸ்தான இசை வித்துவான் ஆனந்தன் குழுவினர்*

**கட்டட நிர்மாணம், திருத்தம், சிற்ப வேலைகள்**

*அராலியூர் சிற்பாசிரியர் கந்தசாமி கோபாலசிங்கம்,*

*கல்வியங்காடு சி. யோகநாதன் ஆசாரியார்,*

*புங்குடுதீவு சுந்தரம் சுந்தரலிங்கம்*

**வர்ணவேலை**

*திருநெல்வேலி கனகராஜ் ராஜ்பதி குழுவினர்.*

# உள்ளடக்கம்

## (ஆசியுரைப்பகுதி)


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பதிப்புரை | :- | திரு. தம்பிஐயா தேவதாஸ் | 01 |
| 2. | ஆசியுரை | : | சிவப்பிரகாஸ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் | 03 |
| 3. | ஆசியுரை | :- | காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் | 05 |
| 4. | அருள் ஆசிச் செய்தி | :- | ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் | 06 |
| 5. | ஆசியுரை | : | அருட்கவி எஸ். வினாசித்தம்பி | 07 |
| 6. | ஆசிச்செய்தி | :- | கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி | 08 |
| 7. | ஆசியுரை | :- | பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் | 09 |
| 8. | ஆசிச்செய்தி | :- | கம்பவாரிதி இ. ஜெயராஜ் | 11 |
| 9. | ஆசிச்செய்தி | :- | கம்பகாவலன் க. சிவராமலிங்கம் | 12 |
| 10. | ஆசிச்செய்தி | : | சட்ட அறிஞர். வி. ரி. தமிழ்மாறன் | 13 |
| 11. | வரலாற்றுக் குறிப்பு | :- | பேராசிரியர் கா. குகபாலன் | 14 |
| 12. | ஆசிச்செய்தி | :- | திரு. இரா. சுந்தரலிங்கம் | 15 |
| 13. | வாழ்த்துச்செய்தி | :- | திருமதி. மகாலெட்சுமி | 17 |
| 14. | ஆசிச்செய்தி | : | திரு. சதாசிவம் சேவியர் | 19 |
| 15. | வாழ்த்துச்செய்தி | : | திரு. சின்னத்துரை கருணாமூர்த்தி | 20 |

## பதிப்புரை

*"என்னை நன்றாக இறைவன்*
*படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ்*
*செய்யுமாறே"* (திருமந்திரம்)

நான் பிறந்த நல்ல கிராமம் புங்குடுதீவு. அங்கு எழுந்தருளியிருக்கும் கண்ணகையம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகின்றது. அதற்காக இந்த கும்பாபிஷேக மலரை வெளியிடுகின்றோம். இம்மலரில் ஏறக்குறைய 18க்கு மேற்பட்ட சிவமணம் கமழும் அருமையும் பெருமையும் வாய்ந்த ஆக்கங்கள் இடம்பெறுகின்றன. சிந்தனைக்கும் சிறந்த ஆய்வுக்கும் களம் அமைக்கும் கருவூலமாக இம்மலர் திகழ்கிறது. எங்கள் கோயிலின் கும்பாபிஷேக நினைவாக சிறந்த மலர் ஒன்றை வெளியிடவேண்டும் என்ற என் கருத்துக்கு அங்கீகாரம் அளித்த அம்பிகையடியார்களான அறங்காவலர் பெருமக்களுக்கும் ஆலயத்திருப்பணி சபையினருக்கும் மகாகும்பாபிஷேக குழுவினர்களுக்கும் தமிழ் உலகமும் சைவ உலகமும் என்றென்றும் கடப்பாடுடையதாகும்.

போரும் இடப்பெயர்வும் இழப்புகளும் அவலங்களும் துன்பங்களும் துயரங்களும் ஏக்கமும் பயமும் முழுமையாக ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் தமிழர்களது துன்பியல் வாழ்வில் "அஞ்சாதே" என்று அருள் செய்யும் எங்கள் அருட்கோவிலாக இயங்குவது எங்கள் அன்னை கண்ணகியம்மன் கோவிலாகும்.

சோழப்பேரரசர் காலத்து தஞ்சைப் பெரியகோவில் போன்றதொரு திருப்பணியை எம்மண்ணின் மைந்தர்கள் செய்துள்ளனர். மன்னர்கள் செய்யும் பெரும்பணியை எம்மண்ணின் மைந்தர்கள் செய்துவிட்டனர்.

இம்மலரின் உருவாக்கத்தில் மனமுவந்து பணியாற்றியதுடன் எவ்வித வர்த்தக விளம்பரமும் இன்றி அன்னையின் மலர் வெளிவர வேண்டும் என்று நின்ற மகா கும்பாபிஷேக குழுவின் பொருளாளர் திரு. மார்க்கண்டு லிங்கநாதன், தலைவர் - த.குழந்தைவேலு, செயலாளர் - த. ரகுநாதன் மற்றும் சி. முருகானந்தவேல். மற்றும் அனைவருக்கும் நன்றி கூறி எங்கள் குலதெய்வமான கண்ணகியம்மனின் அருள் அனைவருக்கும் கிடைப்பதாக என்று கூறி வணங்குகின்றேன்.

*அன்புடன்*
**தம்பிஐயா தேவதாஸ்**
*(பதிப்பாசிரியர்)*

# ஆசியுரை

*பண்டு நால்வருக் கறமுரைத் தருளி பல்*
*லுலகினிலுயிர் வாழ்க்கை*
*கண்டநாதனார் கடலிடங்கை தொழக்*
*காதலித்துறை கோயில்*
*வண்டு பண்செயு மாமலர்ப் பொழின் மஞ்ஞை*
*நடமிடு மாதோட்டம்*
*தொண்டர் நாடொறுந் துதிசெயவருள் செய்கே*
*தீச்சர மதுதானே*

*- திருஞானசம்பந்தர் -*

இலங்கை திருக்கேதீச்சரம் ஆலய திருப்பணிச்சபை இலங்கை யாழ்மாவட்டத்தில் உள்ள புங்குடுதீவு என்னும் ஊரில் கிழக்குத் திசையில் அமைந்துள்ள கண்ணகை அம்மன் என அழைக்கப்பெறும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் திருக்கோயில் குடமுழுக்கு விழா 30.03.2005 மிகச்சிறப்பாக நடைபெறவிருப்பதும் அதுபோல் விழாமலர் வெளியிடவிருப்பதும் அறிந்து மகிழ்ந்தோம். அன்று முதல் இன்று வரை தமிழ்நாடும் இலங்கையும் அன்பால், பண்பால், மொழியால் தொடர்பு கொண்டு விளங்குகிறது. வரலாற்றாய்வாளர்களும் இதனை உறுதி செய்துள்ளனர். சிறந்த சிவ பக்தனாய் விளங்கிய இலங்கைவேந்தன் இராவணனின் பட்டத்தரசி அழகமர் மண்டோதரிக்குத் திருப்பெருந்துறைப் பெருமான் அருளிய திறத்தை மணிவாசகப்பெருமான்.

*ஆர்கலி சூழ்தென் னிலங்கை*
*அழகமர் வண்டோதரிக்கும்*
*பேரருள் இன்ப மளித்த*
*பொருந்துறை மேயபிரான்*

என்று குயில் பத்தில் குறிப்பிடுவார். தமிழகத்தில் அவதரித்த ஞானசம்பந்தப்பெருமானும், திருக்கேதீச்சரப் பெருமானைத் தமிழகத்திலிருந்து பாடிப்பரவியுள்ளார். மேலும் தமிழகத்திலிருந்து சைவாச்சாரியார் ஒருவர் ஈழநாட்டிற்குச் சென்று அங்குள்ள பௌத்த மன்னனைச் சைவ சமயத்திற்குத் திருப்பினார் என்று ராஜரத்நாகரி கூறுகின்றது. இச்செய்தியை மதுரை சரித்திரம் என்ற நூலில் நெல்சன் என்பார் குறித்துள்ளார். ஈழமன்னன் மகளின் ஊமைத்தன்மையைத் தில்லையில் திருச்சாழல்பாடி மணிவாசகப்பெருமான் ஊமை நீங்கச் செய்தார்.

நமது திருவாவடுதுறை ஆதீனம் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகம் அவர்களுக்கு நாவலர் பட்டம் தந்து ஆறுமுகநாவலர் எனும் பெயரோடு விளங்கச் செய்தது.

நமது அருளாட்சிக் காலத்தில் இலங்கை வாழ் தமிழறிஞர்களுக்கும். இலங்கை அமைச்சர்களுக்கும் விருதும் பாராட்டும் வழங்கிச் சிறப்பித்திருப்பதை தமிழ்கூறு நல்லுலகம் நன்கறியும். இலங்கை வாழ் மக்கள் விண்ணப்பத்திற்கு ஏற்ப நாம் இலங்கை நாடு எழுந்தருளியதும் யாவரும் நன்கறிவர். இவ்வாறு இலங்கையும் தமிழ்நாடும் கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசர்க்கு அட்செய்மின் என்ற திருமுறை வாக்கிற்கேற்ப விளங்குகிறது. கேது அருள்பெற்ற கேதீச்சரம் ஆலயத்திருப்பணி சபை ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்மன் திருக்கோயில் திருப்பணி செய்து குடமுழுக்கு நிகழ்த்தியிருப்பது பாராட்டிற்குரியது.

*முரிந்து வீழ்ந்தன வெடித்தன வுடைந்தன முதிய*
*நெரிந்து வாகிய கோபுர நெடுமதில் பிறவுந்*
*தெரிந்து முன்னையிற் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு*
*புரிந்து ளோர் பெனும் புண்ணியம் நான்மடங்குறுவர்*

என்று காஞ்சிபுராணம் திருப்பணி செய்வதால் ஏற்படும் பயனை எடுத்துரைக்கின்றது. எனவே திருப்பணியில் பங்கு கொண்டு சிவபுண்ணியச் செயலைச் செய்த மெய்யன்பர்கள் யாவரும் நலம் யாவும் பெற்றுச் சிறக்கவும் குடமுழுக்கு விழா சிறப்புற நடைபெறவும். விழா மலர் திருநெறிய மணம் பரப்பவும். நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

**சிவப்பிரகாச**
**தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்**
திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை.

# ஆசியுரை

இலங்கை, யாழ்ப்பாணம் மாவட்டம் புங்குடுதீவில் அமைந்துள்ள "கண்ணகியம்மன்" என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் திருக்கோவில் "குடமுழுக்கு" விழா எதிர்வரும் 30.03.2005ல் நிகழவிருப்பது அறிந்து மகிழ்கிறோம்.

கற்புக்கலன் பூண்ட பொற்புடைத் தெய்வமாம் கண்ணகியம்மன் என வழங்கும் "ஸ்ரீ இராஜராஜேஸ்வரி" அம்மன் கண்ணுதற் பெருங்கடவுளின் அருட்சத்தியாய் அருள்பாலித்து வரும் திருக்கோயில் நடைபெறும் குடமுழுக்கு விழாவால் மேலும் சிறப்புறும் என்பதில் ஐயமில்லை.

விழாவை ஒட்டி மலர் ஒன்று வெளிவரவிருப்து சிறப்புக்குரியது அறிஞர் பலரின் ஆன்மீக கட்டுரைகளோடு மலர் மணம் வீசும் என நம்புகின்றோம். விழா இனிது நிறைவேறவும் மலர் மாண்புடன் வெளிவரவும் அரனது சத்தியாம் அம்மை திருவருள் துணை நிற்பதாக.

ஈசர்பாகத்து நேரிழையாம் அன்னை அருட்சத்தியின் திருவருளால் விழா அமைப்பாளர்களும் பங்கேற்றுப் பயன்பெறும் ஆன்மநேயச் செல்வர்களும் சிவஞானமும் தீர்க்காயுளும் பெற்று வளமுடன் பல்லாண்டு வாழ அருளுமாறு செந்தில்நகர் கந்தவேள் திருவடிகளை சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்

கயிலை மாமுனிவர்
**திருவாளர் திரு. காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**
அதிபர், காசித்திருமடம்
திருப்பனந்தாள்.

# அருள் ஆசிச்செய்தி

அம்பிகை அடியார்களிற்கு புங்குடுதீவுப் பதியில் எழுந்தருளி இருந்து அருள் ஆட்சி புரியும் கண்ணகி அம்பாளிற்கு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

அண்ட சராசரங்களிற்கும் தாயாக விழங்கும் அன்னை இவ் ஆலயத்தில் இராஜராஜேஸ்வரியாக எழுந்தருளி இருந்து வேண்டுவார் வேண்டுவதை ஈகின்றவளாக இருக்கின்றாள். நிறைந்த ஆலயங்களை கொண்ட பிரதேசம் புங்குடுதீவு. இங்கு வாழ்கின்ற மக்கள் சைவ சமய பற்றும், இறைபக்தியும், மொழிப்பற்றும் கொண்டவர்கள்.

அரிய பிறவியாகிய மானிடப்பிறவியை எடுத்த நாம் இறைவழிபாட்டின் ஊடாகவே பிறவியின் பெரும்பயனை அடைகின்றோம். எங்கும் வியாபித்திருக்கின்ற இறைவன் ஆலயத்தில் நிதா்சனம் ஆக எழுந்தருளியுள்ளான். இதனாலேயே நம் சமயத்தவா் வீடுகள் தோறும் கிராமங்கள் தோறும் நகரங்கள் தோறும் ஆலயங்களை அமைத்தனா். இதனை நம் சமயம், "கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்" என்றும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும் "நித்தலும் எம்பிரான் கோயில் புக வேண்டும்" என்றும் வழிகாட்டுகின்றது. இதனை உணா்ந்த புங்குடுதீவு மக்கள் அன்னை ராஜராஜேஸ்வரிக்கு இன்று கும்பாபிஷேகம் என்னும் பெரும் சாந்தி விழாவை கண்ணாலே பாா்த்து மனதாலே அனுபவித்து மண்ணில் நல்லவண்ணம் வாழ வழிவகுத்துள்ளாா். இதனை அனைவரும் தரிசித்து இறைவனுடைய ஆசியை என்றும் வேண்டும் இன்ப அன்பு பெற பிராா்த்திக்கின்றோம்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**

*(நல்லை திருஞானசம்பந்தா் ஆதீனம்*
*பருத்தித்துறை வீதி, நல்லூா், யாழ்ப்பாணம்)*

# ஆசியுரை

## நெடியகனிக் கற்பகமாய் அருள்வாய்

*வாரிதனை ஆடையாய்க் கொண்டிலங்கும்*
*வளநிறையுங் குடுப்பதியின் தென்பால், தேவர்*
*நேரிலே வந்து பணி புரிய வேதம்*
*நிறைந்தவிதி யாகமத்துப் பூசையேற்கும்*
*காரணியாய்க் கண்ணகியாய், மக்களுக்குக்*
*கண்ணெதிரே காட்சிதரும் செல்வியாகி*
*ஏரணிவான் சோலைநடுக் கோயில் மேவும்*
*இராஜரா ஜேஸ்வரியே போற்றி போற்றி*

*அன்னேநின் விழிநோக்கால் அடியாரெல்லாம்*
*அறிவுயர்ந்த கலைஞராய்ச் செல்வம் பொங்கப்*
*பொன்னோங்கு மனைவளங்கள் மக்கள், தாரம்*
*பொருந்து நலமாய் வாழ்க காத்தாயம்மா*
*முன்னோங்கு கோபுரந்தோய் சிற்பத்தூபி*
*முதன்மைதரு சிங்காரக் கோயில் தங்கி*
*மின்னேறு முடிதுலங்க வீதியெல்லாம்*
*விளையாடி அற்புதங்கள் புரிந்தாயம்மா*

*கனிந்தமர்ந்த கண்ணகித்தாய் அருகிருக்கக்*
*கனகசபை யரன்பாக வல்லியாகி*
*நினைந்தவரம் தரும் இராஜ ராஜேஸ்வரியாம்*
*நின்றருளும் தாயேநின் அடியார் எல்லாம்*
*மனந்திரண்டுன் கும்பாபி ஷேகம் செய்தார்.*
*மாதாவே நின்கடைக்கண்ணோக்கி எங்கும்*
*தனந்திரண்ட சுகம்செழிக்கத் தமிழ்சிறக்கச்*
*சைவநெறி செழிக்க அருள் புரிவாய் போற்றி*

*பலகாலம் நினைக்காண மக்கள்கூட்டம்*
*பார்த்துமனங் குளிர்வதற்கு வந்துநின்றார்*
*கலைகாணும் இசைநிகழ்வால், யாகம் பொங்கும்*
*கனகஅபி ஷேகத்தால், விழாக்களாலே*
*நிலைகாண நின்றவளே, பண்டுபோல*
*நெடியகனிக் கற்பகமாய் அருள்வாயம்மா*
*மலைபேணும் இராஜராஜேஸ்வரியே நின்றாள்*
*மலரிட்டு வணங்குகிறோம் போற்றி போற்றி*

சுபம்

Dr. **அருட்கவி சி. விநாசித்தம்பி** M.A
*(ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்*
*நாகேஸ்வரம், அளவெட்டி)*

**புங்குடுதீவு அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி ஆலய மகாகும்பாபிஷேகம்**

# ஆசிச் செய்தி

பெருஞ்சாந்தி விழா என்று போற்றப்படும் மகாகும்பாபிஷேக விழா மேற்படி ஆலயத்தில் நடைபெற இருப்பது குறித்து பெருமகிழ்ச்சியடைகிறேன். இவ்வாயலத்தில் கண்ணகி அம்மனின் அருட்பிரவாகம் மிக மிக போற்றுதற்குரியது. பல தடவைகளில் அங்கு நான் சென்று உரையாற்றி இருக்கிறேன். வழிபாடு செய்கின்ற பக்தர்களின் மன எழுச்சியை அங்கு காணக்கூடியதாக இருந்தது. கவலைகளைத் தீர்ப்பதற்காகவும் சுபகாரியங்கள் நடப்பதற்காகவும் பக்தி எழுச்சி மிக்க ஒரு கூட்டம் அங்கு வந்து வழிபாடு செய்வதைக்காண முடியும்.

*"எங்கெங்கு காணிலும் சக்தியடா*
*ஏழு கடல் அவள் வண்ணமடா"*

என்று அடியார்களின் வாயிலே ஒலித்துக்கொண்டிருப்பதை அங்கு காணலாம்.

கடந்த சில காலமாக அடியார்களின் வருகை குறைந்து காணப்பட்டதால் அம்பிகையின் ஆலய எழுச்சியும் சிறிது தளர்வுற்று இருந்தது. ஆனால் அவ்வாலயத்தை சூழவுள்ள பக்தர்களின் கைங்கரியத்தால் இவ்வாலயம் மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டதும் அதற்குரிய குடமுழுக்கு விழா நடைபெற இருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஈழத்திரு நாட்டின் நாலா திசைகளிலும் பரந்து வாழும் இவ்வூர் மக்கள் இவ்விழாவைத் தரிசிப்பதற்கு தவறமாட்டார்கள் என்பது எனது நம்பிக்கை. புதுப் பொலிவு பெற்று விளங்கும் அம்பிகையின் திருக்கோவில் மேலும் மேலும் எழுச்சி பெற வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி**
*சமாதான நீதிபதி*
*(தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்*
*தெல்லிப்பழை, யாழ்ப்பாணம்).*

# ஆசிச் செய்தி

யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த தீவகத்தின் ஒன்றாகிய புங்குடுதீவில் சைவப்பண்பாடு சிறப்புற்று விளங்கி வருவது எமக்கு மகிழ்ச்சியைத்தரும் விடயமாகும். எனினும் கடந்த இரு தசாப்தங்களுக்கு மேல் இப்பிரதேசத்தில் இடம் பெற்று வரும் அசாதாரண சூழ்நிலை காரணமாக பொலிவிழந்த பிரதேசங்களில் இதுவுமொன்றாகும். எனினும் இங்கு வாழும் சைவ அன்பர்களும் இங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று வாழ்ந்து கொண்டிருக்கும் சைவ அன்பர்களும் தாம் வாழ்ந்த பிரதேசத்தை மீண்டும் பொலிவு பெறச் செய்ய வேண்டும் என்ற விருப்பில் புங்குடுதீவு கிழக்கில் கோயில் கொண்டெழுந்தருளி அருள் பாலிக்கும் அருள்மிகு கண்ணகை அம்மன் எனப் போற்றப்படும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் கோவிலின் புனர்நிர்மாணப்பணிகளை முன்னெடுப்பதில் ஆலய பரிபாலன சபையினர்க்கு உறுதுணையாக அமைந்து ஊர்கூடி கோயில் அமைக்கும் நிலையில் நிறைவேற்றியிருப்பது பாராட்டிற்குரியது இதன்மூலம் இப்பிரதேசம் பொலிவுபெற்று விளங்குதைக் காணும் ஒவ்வொருவரும் மனநிறைவு கொள்வர் என்பதில் ஐயமில்லை.

யாதேவி சர்வ பூதேஷு சக்தி ரூபேண சமஸ்திதா<br>
நமஸ் தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

என தேவிமாகாத்மிய அம்பிகையின் திருவருட் சக்தியைப் போற்றுகின்றது. அம்பிகை அனைத்து உயிரினங்களிலும் சக்திவடிவில் நிலைபெற்று அருள் பாலிக்கின்றாள். இப்பிரபஞ்சத்தின் அன்னையாக விளங்கும் காரணத்தினால் சர்வ வல்லமை கூடிய ஸ்ரீ இராஜராஜேஸ்வரியாகப் போற்றப்படுகின்றாள். அத்தகைய தெய்வீக சக்தி மிக்க அன்னையின் திருக்கோயிற் திருப்பணியில் அர்ப்பணிப்புடன் தம்மை ஈடுபடுத்திய சிவாச்சாரியர்களும், சிற்பக்கலைஞரும், ஆலயபரிபாலன சபையினரும் திருப்பணியில் தம்மை இணைத்துக் கொண்டுள்ள அனைத்து அடியார்களும் அம்பிகையின் திருவருளுக்குப் பாத்திரராவார்களாக!

"திருக்கோயிலில்லா ஊர் திருவில் ஊர், அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடு" என்பது அப்பரது திருவாக்கு. அவ்வகையில் தாம் வாழ்ந்த இப்பிரதேசத்தில் தெய்வீகச் சிறப்பு மேன்மேலும் சிறந்து விளங்கும் வகையில் இவ்வாலயத்தில் இடம்பெறும் மகாகும்பிஷேகம் சிறப்புறுவதாகுக! இவ்வரிய பணியினால் சைவப்பண்பாடு இப்பிரதேசத்தில் மீண்டும் பொலிவு பெறுவதாகுக! சிவாகம மரபின்படி அமைந்துள்ள அம்பிகையின் ஆலயத்தில் அன்னை கொலுவீற்றிருந்து அருளாட்சி செய்யும் காட்சியைக் காணும் பேறு அடியார்களுக்குக் கிட்டியுள்ளமை அவர்கள் செய்த தவப்பேறன்றி வேறில்லை.

மகாகும்பாபிஷேகத்தையடுத்து இவ்வாலயத்தை அடியார்கள் பரிபாலன சபையினரோடு இணைந்து திரிகரண சுத்தியோடும் பக்தியுணர்வோடும் பேணிப்பாதுகாப்பது அவர்களது கடமையாகும். வீடு பேற்றினை நல்கும் சிறந்த சிவபுண்ணியச் செயல் இத்தகைய கைங்கரியத்தில் எம்மை இணைத்துக் கொள்வதாகும்.

இவ்வாலயத்தில் நடைபெறும் இம்மகா கும்பிஷேகத்தின்போது தெய்வீக சாந்தியும் பொலிந்து விளங்குவதைப்போன்று தொடர்ந்தும் ஆலயத்தின் நித்திய நைமித்தியங்கள் குறைவின்றி நிறைவேற அனைவரும் உறுதிகொள்ள வேண்டியது இன்றியமையாதது.

ஆலயம் புதுப்பொலிவு பெற்று விளங்குவது போல் எம் அனைவரது உள்ளங்களிலும் புதுப்பொலிவும் தெய்வீக உணர்வும் மிளிர அன்னையின் திருவருள் கிட்டுவதாகுக! இவ்வாலயத்தின் மகாகும்பாபிஷேகத் திருவருட்பேறு உலகெங்கணும் பரவி எங்கும் அன்பும் சாந்தியும் சமாதானமும் சுபிட்சமும் பெருகி மக்கள் இன்புடன் இனிதே வாழ அன்னையின் அருள் சிறக்கவேண்டுமென்ற பிரார்த்தனையுடன் கூடிய நல்லாசிகள் அனைவருக்கும் உரித்தாகுக! இக்கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளிவரும் சிறப்புமலர் சிறந்ததொரு வரலாற்று ஆவணமாகவும் தெய்வீக சிந்தனைகளுடன் கூடிய மலராகவும் திகழும் வண்ணம் மலராசிரியருக்கும் இம்மலரின் வெளியீட்டில் பங்குகொள்ளும் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

***‘அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்’***

**பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர்**

# ஆசிச் செய்தி

## கும்பாபிஷேக தரிசனம் கோடிபுண்ணியம்

இறை, உயிர், தளை எனும் முப்பொருள் உண்மையை நம்சைவசித்தாந்தம் பேசும். முற்றறிவுப்பொருளான சிவம் என்றும் மாசிலதாம். சிற்றறிவுப் பொருளான உயிர் அறிவில் பொருளான மலத்தால் தளையுண்டு தானும் அறிவில் பொருளாய் ஆகி கல்போல் கிடக்கும் இறை தன் பெருங்கருணையால் மலவயப்பட்ட ஆன்மாவை அம்மலத்தினின்றும் மீட்டு தன் சுயநிலையான வியாபக பிரகாசநிலையை அவ்வுயிர்க்கு நல்குதற்காய் மாயைக்குட்பட்ட 36 தத்துவங்களை நிர்ணயித்து தானும் இறங்கி உயிர்களையும் அத்தத்துவமயப்படுத்தும். கலைமயமாக சிவதத்துவங்களுள் நின்று வித்தியாதத்துவங்களுள்ளும் ஆத்ம தத்துவங்களுள்ளும் அவ்வுயிர்களைப் பொருத்தி, இயக்கி தனு, கரண, புவன, போகங்களை நல்கிப் பின், இருவினை ஒப்பினையும், சத்திநிதிபாதத்தினையும், குருவாக வந்து மலபரிபாகத்தினையும் ஈந்து, ஆன்மாவை தத்துவங் கடக்கச்செய்து, பரமுத்தி அருளும். இதுவே இறைவனின் ஐந்தொழிலின் நோக்கமாம். மாயைக்குட்பட்டு கீழ்நிலையில் உள்ள ஆன்மாவை உய்விக்க, தத்துவங்கடந்த பரம்பொருளை, அருவ, அருவுருவ, உருவநிலைகட்குள் உட்படுத்தி, சொரூபநிலைச் சிவனை தடத்தநிலை கொள்ளவைத்து, மந்திர தந்திரங்களால் கும்பவிம்பங்களுக்குள் உட்படுத்துவதே கும்பாபிஷேகமாம். கும்பாபிஷேகநிகழ்வில் சிவ வியாபகம் ஏற்படுகின்றது. அதைநோக்கியே நம் ஆன்றோர் கும்பாபிஷேக தரிசனம் கோடிபுண்ணியம் என்றனர். ஈழத்திருநாடு சைவத்தைத் கண்ணெனப் போற்றுவது ஈழத்தின் அச்சைவச் செழுமைக்கு தீவகங்கள் ஆற்றிய பங்களிப்பு மிகப்பெரிது. தீவகங்களில் ஒன்றான புங்குடுதீவும், சைவம் பேணுதலில் தனித்தகைமை கொண்டது. அப்புங்குடுதீவின் புனிதத்தலமாய் போற்றப்படுவது கண்ணகி அம்பாள் திருக்கோயில். அத்திருக்கோயில் கும்பாபிஷேகம் காண்கிறது. சைவ உள்ளங்கள் இச்செய்தியால் மகிழும். அன்னையின் அருட்கருணையை இவ்வவனிக்கு ஆக்க அந்தணசிவாச்சாரியர்கள் அருமறை ஓதி, அற்புத கும்பாபிஷேகத்தினை நிகழ்த்த உள்ளனர். இவ்வருட்காட்சியை காண்பதும், போற்றுவதும், தரிசிப்பதும், பிறவிப்பெருங்கடல் நீந்தப் பெருந்துணை செய்யும். அன்பர்கள் பயன் எய்தவேண்டும் எனப்பிரார்த்திக்கிறேன் இவ்வரிய நிகழ்வு சிறப்புற வேண்டுமென, என்னை வாழ்விக்கும், கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன் பாடிப்பரவும் பரம்பொருளை வேண்டிப் பணிகிறேன்.

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

**கம்பவாரிதி. இ. ஜெயராஜ்**

# ஆசிச்செய்தி
# வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ

வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோயில் மண்ணில் மக்களின் தெய்வ சிந்தனையையும் தமிழ்ப் பற்றையும் பாரம்பரியத்தையும் பறைசாற்றி பொங்கு கடற்கரையில் ஓங்கி உயர்ந்து நிற்கும் கண்ணகை அம்மன் - இராஜராஜேஸ்வரி கோயில் குடமுழுக்கு காண உளது என்ற செய்தி உள்ளத்தையும் உடலையும் குளிர்வித்து நிற்கின்றது.

பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய் நின்று அருள் பாலிக்கும் தாயே! நின் குளிர்ந்த கனிந்த பார்வை மக்களை வாழ்விப்பதாக.

முத்தமிழ் காப்பியத் தலைவியின் பெயரில் நிலைகொண்டு தமிழ் செய்து இராஜராஜேஸ்வரியாக வியாபித்து அருளாட்சி நடாத்தும் நின் கடாட்சம் காலாதிகாலமெல்லாம் எம்மை வாழ்விப்பதாக.

தமிழைப் பழித்த வடபுல மன்னனின் தலையில் கல்லாய் ஏறித் தென்புலத் தமிழ்மண்ணில் தெய்வமான நின் பெருமை பேசும் காப்பியத்துக்கு தமிழகமே நினைக்காத போதே, முதன்முதலாய் சிலப்பதிகார விழா எடுப்பித்த கருணை உனதே என்ற வரலாற்று நிகழ்ச்சி ஒன்றே, தாயே! நின் அருளாட்சியின் கருணை காட்டப்போதும்.

நின்குடமுழுக்கு காரணமாக நின்று தொண்டாற்றும் அத்தனை தமிழ் சைவ உள்ளங்களையும் வாயார வாழ்த்தி மனமாரத் துதித்து மெய்யார வணங்கி மகிழ வாய்த்த பிறவியை வாழ்த்தி நிற்கிறேன்.

வாழ்த்தவாயும் நினைக்கமட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவா! நீவாழி.

நாம் வாழ.

தணிகை
28, குமாரசாமி வீதி
யாழ்ப்பாணம்.

நின் திருவடி மறவாத
**க. சிவராமலிங்கம்**
"தமிழகம்"
புங்குடுதீவு -1

# வாழ்த்துச் செய்தி

பொன்கொழிக்கும் திருநகராம் எங்கள் புங்கையூரின் தென்கிழக்குக் கரையோரம் கோயில் கொண்டமர்ந்தருள் பாலிக்கும் கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் திருக்குடமுழுக்குப் பெருவிழாவினையொட்டி வெளியிடப்படுகின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்கக் கிடைத்த இந்த வாய்ப்பினைப் பெரும் பேறாகவே கருதுகின்றேன்.

ஒரு நாட்டின், ஊரின், கிராமத்தின் அருள் வளமும் பொருள் வளமும் அங்கு நிறைந்திருக்கும் கோயில்களின் எண்ணிக்கையைக் கொண்டு அளவிடப்படுவது திராவிடர் வரலாற்றில் பதியப்பட்டதொரு விடயமாக உள்ளது. வானுயர்ந்த கோபுரங்களும் வளமார் நெடுமாடங்களும் பல கதைகளைச் சொல்லாமல் சொல்வதுண்டு. அந்த வகையில் கண்ணகை அம்மன் ஆலய வரலாற்றிலும் பல பாடங்கள் பொதிந்து கிடக்கின்றன. அண்மைக் காலம் வரை பல சங்கடமான பாதைகளைக் கடந்து வந்ததாகவே இந்த வரலாறும் அமைந்திருப்பது பலரும் அறிந்த விடயமேயாகும்.

திராவிடர் கட்டடக்கலையைப் பொறுத்தளவில் எந்தவொரு கட்டடத்தின் உயரமும் கோயிலின் உயரத்தைவிட மேலுயர்ந்ததாக இருக்கக் கூடாது என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே கோபுரங்களையும் மண்டபங்களையும் மிக உயரமாக அமைப்பது வழக்கமாகும். இங்ஙனமாக, ஆண்டவனை உயர்த்துவதன் மூலமாகத் தங்களையும் உயர்த்தும் மனப்பக்குவத்தைத் திராவிடர் கொண்டிருந்ததாகத் தெரிகின்றது. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற முதுரையின் பின்னாலுள்ள தத்துவம் "கோயிலை உயர்த்தாமல் உன்னை உயர்த்த நினைக்காதே" என்பதாகத்தானிருக்க வேண்டும் என நினைக்கின்றேன்.

இந்தக் கோபுரங்களும் மண்டபங்களும் வெறும் சீமெந்துக் கலவையின் சேர்க்கையாக அன்றி எமது வாழ்க்கைப் பயணத்துக்கான திசைகாட்டிகளாக அமைவதற்கென்றே கருதப்பட்டவையாகும். அறத்தை,வாய்மையை, பக்தியை, தொண்டுள்ளத்தை எம்முள் தோற்றுவித்துத் தொடர்ந்திருக்கச் செய்யும் வாழ்க்கைக் கலையின் வடிவமாகவே கோயில்கள் ஊருக்குள் மிளிர்ந்திட வேண்டும். அதாவது மற்றோரை வாழ்விப்பதற்கென்றே இவை வடிவமைக்கப்படுகின்றன எனலாம்.

இந்த வகையில் தாமும் வாழ்ந்து மற்றோரையும் வாழவைக்கும் தயாள குணங்கொண்ட எம்மூர்ப் பெருமக்களின் தயாபரச் செயற்பாட்டின் விளைவாக மீண்டுயர்ந்த அம்பாள் ஆலயத்தின் திருக்குடமுழுக்குப் பெருவிழா எங்கள் வரலாற்றில் இன்னொரு மைற்கல்லாக அமைவது திண்ணமாகும். அன்று சிலப்பதிகாரப் பெருவிழாகண்டு ஈழத்துக்குப் பெருமைசேர்த்த இந்தப் புண்ணிய பூமியில் இப்படியான புண்ணிய நிகழ்வுகள் தொடர்வதற்கும் அதற்குத் துணைநிற்கும் வள்ளற் பெருமக்களுக்கும் "எரிபுரை மேனி இறைவர் செம்பாகத் திருப்பவளாம் எங்கள் முக்கண்ணியின் முழுவருளும் குறைவின்றிக் கிட்ட புவனங்கடந்தாளின் பூவடியிறைஞ்சி நிற்கின்றேன்.

**வி. ரி. தமிழ்மாறன்**
சட்ட பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

# வரலாற்றுக் குறிப்பு

**கண்ணகி அம்மன் கோவில் வரலாறு பற்றி பண்டிதர் மு. ஆறுமுகம் அவர்கள் புங்குடுதீவு ஸ்ரீகணேச வித்தியாசாலைப் பழைய மாணவர் சங்க வெள்ளிவிழா மலரில் (1951) எழுதிய பொன் ஏட்டில் புகழ் பெற்ற புங்குடுதீவு என்ற கட்டுரையில் கண்ணகி அம்மன் கோவில் வரலாறு பற்றி**

இன்றைக்கு அறுநூறு வருடங்களுக்கு முன்பு இங்கே வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஒரு பெரு வேளாளனுடைய எருமை மாடுகள் வழக்கமாகக் கிடக்கும் குளத்தில் ஒருநாள் காணப்படவில்லை. அவற்றை ஊருக்குள் பல இடங்களிலும் தேடினார். காணப்படவில்லை. அவர் தென் கடற்கரையோரமாகப் பார்த்துக்கொண்டு போனார். கடலில் ஒரு கூப்பிடு தூரத்தில் எருமைகள் கிடந்தன. சந்தோஷத்துடன் ஓடிப்போனார். கரைப்பக்கமாக அவற்றைக் கொண்டு வரும்பொருட்டு அடித்து நடத்தினார். தாம் கிடந்த இடத்தையே அவை சுற்றிச் சுற்றி ஓடின. இப்படி அவற்றைக் கரையேற்றக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் பொழுது அவைகளின் நடுவில் ஒரு பெட்டி கிடப்பதைக் கண்டார். உடனே அதனைத் தூக்கிக் கொண்டு கரைக்குப்போனார். அந்த ஐந்தறிவு பிராணிகள் எல்லாம் கதறிக்கொண்டு அவர்பின்பு சென்றன. அவர் கரையில் இரண்டு கயிற்றடிதூரம் போனதும் பெட்டியை வைத்துவிட்டுத் தனது உடையை இறுக்கிக் கட்டிக்கொண்டு பின்னரும் அதனைத் தூக்கினார். ஆனால் அவரால் பெட்டியை அசைக்க முடியவில்லை. இந்தச் செய்தி வாய்த்தந்தி மூலம் ஒரு கணப்பொழுதில் ஊரெங்கும் பரவியது. ஊரார் பலரும் வந்து பெட்டியைத் திறந்து பார்த்தார்கள். அதனுள் அவர்கள் கண்டதென்ன! வீராமலை!! வீரபத்தினித் தெய்வம் ஆம் கண்ணகையம்பாள் உருவம் இருக்கக் கண்டார்கள். அந்த அம்பாளுக்குக் கோவில்கட்டிப் பூசித்தார்கள்.

ஆம் அம்பாள் கோவிலுக்குப் போனால் உண்மையில் திருச்செந்தூரில் நிற்கின்றோம் என்ற நினைவே தோன்றும். பரந்த நிலக்கடலலை வா! வா! என்று வந்தாய்? எனப்புரண்டு மோதிக்கொண்டிருக்கும். வெண்மணற்கரை, இப்படிகே் கொஞ்சம் இருங்கள், ஏன்? கால்வலிக்க நிற்கவேண்டும் என்னும் குளிர்ந்த பிராணவாயு மெத்தனத் தவழ்ந்து வந்து நம்மை அன்புடன் அழைத்து கொண்டு போகும். தெய்வ சக்தியும் இயற்கை அன்னையின் அழகும் ஒருங்கமைந்து அந்தக் கண்ணகையம்பாள் கோவில் பூலோக சுவர்க்கமென எவரையும் ஆனந்தமடையச் செய்யும். வரகவி முத்துக்குமாரப் புலவரால் இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகளின் முன் பத்தும் பதிகமும் பாடிப்போற்றப்பட்ட தலமது. மணிமந்திரரூபிநீ என்று தொடங்கும் புலவரது செய்யுள் கன்னலொடு செந்நெல்விளை புங்கைநகர் தன்னிலுறை கண்ணகைப் பெண்ணரசியே என முடிகின்றது. இவையாவும் நம் தமிழ் மக்கள் பண்பாட்டைக் காட்டுகின்றன.

தகவல்

**பேராசிரியர் கா. குகபாலன்**

# ஆசிச்செய்தி

# பெண்ணின் நல்லாளின் குடமுழுக்குப் பெருவிழா – 2005

காப்பியப் புகழ்வாய்ந்த மண், மணி பல்லவம் எனும் நயினை. அம்பதிபுங்கை நகர். அதன் அண்மித்தான அற நெறியும் அகவொளியும் மிசைந்துமேவும் பொன்னகரம். இந் நகரின் கண்ணே கோயில் கொண்டவள் கண்ணகியாம் இராஜ இராஜேஸ்வரி அம்பிகை. அலை கடலை அகல் விழியால் உன்னி நோக்கிய பாங்கில் நிலை கொண்ட சிலை வடிவம் கீர்த்தி பெறுவதும் இவ்வாலயத்திலேயே.

மாசக்தி அருள்வடிவான தெய்வம், நீதி பிழைத்த பாண்டிய மன்னன் அரசு கொண்ட மதுரையம்பதியை அனலிட்டுப் பொசுக்கி நீதியை நிலை நாட்டிய கற்புடைத் தெய்வமே இங்கு குடிகொண்டாள் எனும் கருத்தும் உண்டு.

நாளடைவில் மக்கள் மனங்கொண்ட அன்னையின் நாமம் இராஜ இராஜேஸ்வரி எனப்புலர்ந்தது. அன்னையின் அருட்கொடையால் கொடுத்துச் சிவந்த செங்கரங்கள் நிலை கொண்டவரும், அடையா நெடுங்கதவுக் கொடையாளிகளும் உயிர் படைத்த பூமி புங்கை நகர்.

பெண்ணரசி கண்ணகியாள் கொடுத்த நீதியும் பெண்மை நலம் மிளிர அன்புக்கரத்தால் அணைத்த சேதியும் ஒருங்கு சேர பெண்ணில் நல்லாள் வடிவில் குடிகொண்ட மாதரசி, கொடுக்கக் கொடுக்கப்பொருள் வளமும், அருள் வளமும் சிறக்க மக்கள் நலம் பெற்ற பூமி பொன்கொடு தீவாயிற்றே! இந்தக் காரணப் பெயரைக் காத்து நிற்க ஆடற் திருமகன் பரமனது பாதியாகிட சக்தியாகி சமரச சன்மார்க்க சஞ்சீவியாகி, சப்த தீவுகளொன்றின் அழகொழுகு ஆலயம், வானந்தழுவும் இராஜகோபுரம், புதுமை மிக்க கண்கண்ட தெய்வமாய் காக்கும் கரங்களுடன் அபயகரம் நீட்டும் அருள்வடிவாம் அம்மையைக்காண பக்தர்களுக்கு ஆயிரம் கண் படைக்கவில்லையே.

இராஜ இராஜேஸ்வரி அம்மைக்கு கனிவான இதயத்தோடு அனலிடை அரக்கென உருகி நிற்கும் அடியாரைக் காக்கும் தெய்வத்திற்கு குட முழுக்குப்பெருவிழா! மெஞ்ஞானம் புலர்ந்த பரத கண்டத்தைப்போல சமய நெறி தழைத்தோங்கும் புண்ணியம் சேர் மண்களான நயினை, வேலணை, அனலை போன்று புங்கை நகரும் மெஞ்ஞான வெள்ளம் கரைபுரண்டோடும் காருண்ய பூமி. இந்தப் பெருமைக்குத்தாய்மை தழுவிய பேருண்மையை கண்ணகியம்மன் கோயில் கொண்ட நன்மையே காரணமாகும்.

இப்பெருமைகளுக்கெல்லாம் பேசாப் பொருளாய் அமைந்தெம்மைக் கணந்தோறும் காக்கும் அன்னையை புன்கையம்பதி வாழ் மக்கள் பொழுது தோறும் போற்றித் துதிக்க வேண்டும். வரலாற்றுப் பெருமை பெற்ற வடிவாம்பிகையை வாழ்த்தி வணங்குதல் வேண்டும். வாழையடி வாழையென வந்த திருக்கூட்டமாய் மெய்தானரும்பி விதிர்விதித்து கைதான் நெகிழவிடாது கூப்பி கண்ணீர்மல்கச் சிக்கெனப்பிடிக்க வேண்டும். கீர்த்தியாய் வாழ நெறியதுவே என்று புரிந்து கொள்ள வேண்டும்.

“கொல்லை வேடர் கூடி நின்று கும்பிட முல்லை அயலெ முறுவல் செய்யும் முதுகுன்றம்” என்பது போல மக்கள் எல்லாம் ஒன்று நின்று நன்றே தொழுவோம் நாயகியே! அவள் அன்றே தருவாள் அருளாசியை. அது என்றும் உலவும் உயிர்மூச்சு.

எனது பேனா இப் பெருமாட்டியின் குடமுழுக்குப் பெருவிழாவைச் சித்தரிக்கப்பெற்ற பேறினை முன்றவப்பேறு என மகிழ்ந்து சிந்தனைக்குரிய சக்தியாம் இராஜ இராஜேஸ்வரியின் பாதங்களைப் பணிந்து நிறைவு செய்கிறேன்.

“அம்மா பரதேவி தயாபரியே சும்மா உலகின் சுமையாகவிரேன்”

**இரா. சுந்தரலிங்கம்**
*(கொழும்புத் தமிழ்ச்சங்கத் துணைத்தலைவர்,*
*ஓய்வுபெற்ற - வடமானில கல்விப்பணிப்பாளர்)*

# ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி
# எங்கள் இல்லகவிளக்கு

தீவகம் தீதகல சைவ நெறிபற்றும் திருவிடம். அந்த வரிசையில் கண்ணகியென வழங்கும் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் குடி கொண்ட காரணத்தால் பெருமை சேர் மண் புங்கை நகர். குதித்தெழும் அலைகடலை நீக்கமற நோக்கும் அம்மையின் அருளாட்சி அலாதியானது.

மக்கள் மாண்புற மாசற்ற சோதியாய் விளங்குபவள் எம் அன்னை இராஜ இராஜேஸ்வரி. "காசறு விதையாய் கரும்பாய் தேனாய் அலையிடப் பிறவா அமுதாய்" என நெஞ்சையள்ளும் சிலம்பு செப்பிய மறக்கற்பின் மாதரசியே கண்ணகி தெய்வமென நம்பிக்கை கொள்வார் புங்கை நகரில் பல்லாயிரவர்.

அந்த நம்பிக்கைக்கு உயர்வுதரும் உத்தமியாய் விளங்கும் அன்னைக்கு குடமுழுக்கு. இந்நிகழ்வு நேர்த்தியும் கீர்த்தியும் நிரம்பியது.

வானளாவிய இராஜ கோபுரம் சிற்பியரின் கைவண்ணம் பற்றிச் சிந்திக்கவைக்கும் பான்மையது. "கோபுர தரிசம் கோடி புண்ணியம்" செழுமை உள்ளம் கொண்ட அன்னை தன்னை வணங்குபவர்க்கு அருள் பாலிக்கும் பான்மை எல்லோரையும் வியப்பிலாழ்த்தும்.

தொழுபவர்தம் மனக்குறை போகும் நிமலன்தேவி கூப்பிய கரத்தினர். அம்மை குறைகளை போக்கும் குலமகள் கண்ணீர் மல்க அழுதாரையும் தொழுதாரையும் அபயக்கரத்தால் அள்ளி அரவணைக்கும் அருள் வள்ளல். அன்னையின் அடையா நெடுங்கதவாய் அஞ்சேல் என்ற சொல்லோடு நாளும் விளங்குவது நேற்றைய இன்றைய நிகழ்வுகளால் பட்டறிவால் புரிந்துகொள்ளலாம்.

நீறில்லா நெற்றி, நெய்யில்ல உண்டி ஆறில்லா ஊர் என்பனபோல் கோயிலில்லா ஊர் குடியிருக்க உகந்ததல்ல. இன்று அன்னையின் அருட் கடாட்சத்தால் புங்கை நகர் வளமான கோயிலையும் சிதையாத குடியிருப்புகளையும் மீளப்பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நனிசிறந்த வேளை புங்கு நகர் மக்களை வம்மின்! என வினையாக வேண்டி அன்னைக்கு உங்கள் அன்புக் காணிக்கைகளை செலித்தி தவறாது வந்து வணங்கி முத்தியின்பம் பெறுவீரகளென அன்னையின் பாதம் தொட்டு வேண்டுகிறேன்.

பிறவிப் பெருங்கடல் நீந்த விழைபவர் அன்னையின் சீரடிகளைச் சிரம் தாழ்த்தி வணங்குதல் சாலப் பொருத்தமே. மெஞ்ஞான வெள்ளமே எமக்கெல்லாம் பேரின்ப பெருவாழ்வைத் தர வல்லது. இந்தத்தீர்க்கமானது குறிக்கோளைக் கொண்ட எம் புங்கு நகர் மக்கள் தீர்க்க தரிசிகளே.

மண் மணக்க மனம் தழைக்க குடமுழுக்கு விழா காணும் இப் பொன்னாளைக் கொண்டாடும் பேறு தனித்துவ மானதே!

இந்நாளில் எனது மனம் நிறைந்த வாழ்த்துகளை வழங்க என்னை நன்கு இறைவன் படைத்தனன் அது வாழ்வில் நாம் பெற்ற பெரும்பேறே!

சக்தி சக்தி என்று சொல்லு உங்கள்
சங்கடங்களெல்லாம் நீங்கும்.
ஓம் சக்தி.

**திருமதி. மகாலட்சுமி (ஆசிரியை)**
*(ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி,*
*பத்திரகாளி அன்னையரின் மீளா அடியார்)*

# ஆசிச்செய்தி

கருணையுள்ள கண்ணகி! தாயே!

கடல் தாண்டிவந்தாய் அம்மா கடற்கரையிலே அமர்ந்தாய் தாயே வெயில் தாங்க மர நிழல் உண்டு. வீசும் தென்கடல் தென்றலும் உண்டு. உன்னைப் பாடவும் கீதம் இசைக்கவும். ஊர் கொள்ளாத குயில்களும் உண்டு.

மங்கையர் திலகம் நீ. மாமேரு கற்பரசி. தீ பந்தம் போல் சுளலும் உன் கருணைக் கருவிழிகள் அருளைப் பொழியும் அமுதத் திருவிழிகள்.

தாயே! நீ வாழும் சொர்க்கம் எம் தீவின் மையம் எழு தீவின் சிகரம். நாம் வாழும் இல்லம்.

அம்மா. சீவன் இல்லாத மந்தைகள் நாம். சிந்தை தள்ளாடும் சீவன்கள் நாம். சொந்தபந்தங்கள் இல்லை அம்மா எமைச் சுமந்து செல்லவும் யாருமில்லை. தஞ்சம் நீயே தயாபரியே.

அடம் பிடித்தே ஒன்று கூடி வடம் பிடித்தோம். ஆடி அசைந்து உன் சித்திரத்தேர் இருந்து சுடர் விழி காட்டினாய் அம்மா! விட்டில் பூச்சியாய் சுற்றி வளர்ந்தோம். இனிமேலும் வளர்வோம் வழிகாட்டம் மாவழிகாட்டு. பெற்றவளே தாயே! பிள்ளைகள் நாம் உன்கால் வாரிவந்தோம் வளர்ந்தோம் வசதிகள் வாய்ப்புகள் ஆயிரம் தந்தாய்! வாழும் வழிவகை பல்லாயிரம் தந்தாய் கருணையால் பல்கலைகளும் தந்தாய்.

கொட்டிடும் செங்குருதியில் தோய்ந்தோம். குற்றுயிராகவே உனைவிட்டுப் பிரிந்தோம். புங்கை நகர் ஆளும் குங்கும நாயகி, தமிழ் ஈழத்தில் மங்காப் புகழ்பெற்ற மங்கள நாயகி.

தாயே! உறவு பலபட்டது. புண்பட்ட மனதோடு புலம் பெயர்ந்தோம். கண்கெட்ட நிலையோடு காணத்துடிக்கிறோம். கருணை காட்டம்மா.

கருணைக் கடலே! அமுதக் கடலே! சதா உன்னை இரந்து இறைஞ்சி இருகரம் ஏந்தும் ஏழைகள் அம்மா

**சதாசிவம் சேவியர்**
“தீவகன்”
ஸ்காபுறோ
டொறொண்ரோ, கனடா.

# வாழ்த்துச் செய்தி

நாங்கள் பிறந்த நல்ல ஊர் புங்குடுதீவு. அந்த நல்ல ஊரின் கண் எழுந்தருளியிருக்கும் ஆலயம் புங்குடுதீவு அருள்மிகு கண்ணகையம்மன் என வழங்கும் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயமாகும். எங்கள் குலதெய்வம் கண்ணகையம்மனுக்கு கும்பாபிஷேகம் என்றால் அது எங்கள் ஊர் மக்களுக்கு பெருவிழா வெளிநாடுகளில் வாழும் என்னைப்போன்ற கண்ணகையம்மன் அடியார்களுக்கு ஈடிணையே இல்லாத பெருவிழா. வெளிநாடுகளில் வசிக்கும் புங்குடுதீவு மக்களின் அனைத்து உள்ளங்களிலும் கண்ணகியம்மனே நிறைந்து நிற்பாள்.

பழைமைக்கும் புதுமைக்கும் எடுத்துக் காட்டாக விளங்கும் எங்கள் அம்மன் கோவில் இன்று விழா கோலம் புணுகின்றது. வெளிநாடுகளில் வாழும் புங்குடுதீவு வாசிகளின் மனங்களெல்லாம் பெருமகிழ்ச்சியால் பொங்குகின்றது. இந்த கும்பாபிஷேக பெருவிழாவிலே எங்கள் குலதெய்வமாகிய கண்ணகியம்மாளை மனத்தாலும் வாக்காலும் வாழ்த்தி அம்பிகையின் பாதகமலத்தை வணங்குகின்றேன். உன்னைக்காண இதோ ஓடி வருகிறேன். அருள் தருவாய் தாயே!

அன்புடன்
**சின்னதுரை கருணாமூர்த்தி**
பேர்ன்,
சுவீற்சர்லாந்து.



கடலில் மிதந்து வந்த பேழையைத் திறந்த போது காணப்பட்ட
கண்ணகை அம்மன் சிலை முதன் முதலில் நிறுவப்பட்ட இடம்.
பூவரசமரம் கண்ணகை அம்மன் ஆலயத்தின் தலவிருட்சமாக வளர்ந்து நிற்கிறது.

உ

சிவமயம்

## கண்ணகை அம்மன் என வழங்கும்

# ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள்

# திருவூஞ்சல்

இயற்றியவர் அமரர்
வித்துவான் சி. ஆறுமுகம்

### காப்பு

*திருவளரும் புங்கைநகர்த் தென்பால் இன்பத்*
*தெய்வமணங் கமழ்கோயிற் காட்டில் சீரார்*
*பெருவளஞ்சேர் இத்தியடிப் புலத்தே வைகும்*
*பிராட்டி ஸ்ரீ ராஜராஜேஸ் வரிமேல் ஊஞ்சல்*
*மருவுமிசைப் பாவுரைப்ப நாவின் மங்கை*
*மகிழ்ந்துநலந் தரக்கலட்டி மன்னி ஓங்கி*
*உருவளரும் வரசித்தி விநாய கன்தன்*
*உபயபதம் உளத்திருத்தி வழுத்தல் செய்வாம்*

### நூல்

*சீரிலங்கும் வைரமணிக் கால்கள் நாட்டித்*
*திகழ்நீலங் கொண்டு நெடுவிட்டம் நீட்டிப்*
*பேரிலங்கும் சிலாமுத்து வடமும் பூட்டிப்*
*பிறங்குமொளி ஆடகப்பொற் பலகை மாட்டிப்*
*பாரிலங்குங் காஷ்மீரப் பட்டும் சார்த்திப்*
*பண்புடனே அமைந்திலங்கும் ஊஞ்சல்மேவி*
*ஏரிலங்கப் பெருந்தேவி ஆடீர் ஊஞ்சல்*
*இராஜராஜேஸ் வரியம்மே ஆடீர் ஊஞ்சல்*

*எங்கெங்கும் தெங்குதிரண் டெழுந்தே யோங்க*
*ஏற்றமுறு செழும்பயிர்கள் இலங்கப் பாங்கர்ப்*
*பொங்குமணி மாளிகைகள் பொலிய, நன்னீர்*
*புனிதமுறு கூவல்தொறும் பொங்கிப் பாயச்*
*சங்கினொடு மணிகொழித்துத் தரங்கம் பாடித்*
*தாழ்ந்திறைஞ்சத் தவளமணல் எக்கர் சார*
*இங்கிதமார் இத்தியடிப் புலத்தே மன்னும்*
*இராஜராஜேஸ் வரியம்மே ஆடீர் ஊஞ்சல்*

மன்னர்குலம் மாளிகையில் மகிழ்ந்தே போற்றும்
மாதவமே மறைக்கொழுந்தே யாடீர் ஊஞ்சல்
செந்நெல்மலி சீகாழிச் செம்மற்(கு) அன்று
சிவஞானப் பாலளித்தோய் ஆடீர் ஊஞ்சல்
தென்னவனார் செருக்கறுத்த செல்வி கற்பின்
தீரமிகு கண்ணகியெம் தெய்வப் பாவை
முன்னாக அமர்ந்தவளே ஆடீர் ஊஞ்சல்
மோகினி ராஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்

கங்கையொடு சோமியும்வெண் கவரி வீச
காளியடைப்பையேந்தக் கணங்கள் வாழ்த்தத்
துங்கமிகும் துணைப்பதங்கள் தலையிற் சூடித்
துயநில மகள்பணிந்து துதிகள் சொல்ல
நங்கைகலை மகள்சாம கீதம் பாட
நாரதர்யாழ் மீட்கநந்தி தாளங்கொட்ட
செங்கமல மங்கையங்கை வடந்தொட்டாட்டத்
தேவிராஜேஸ் வரியம்மே ஆடீர் ஊஞ்சல்

ஐம்புலன்கள் அடக்கிநெறி, உணர்ந்த சீலர்
அகத்தினிக்கும் ஆரமுதே ஆடீர் ஊஞ்சல்
செம்புலத்துப் புலவர்குழாம் சிரமேற் கொள்ளும்
செல்விசிந்தா மணியரசி ஆடீர் ஊஞ்சல்
நம்புசிவ நாமமென்றும் நவிலுந் தொண்டர்
நல்லிதயக் கனவெல்லாம் நனவதாக்கித்
தெம்புதரு மீனாட்சி ஆடீர் ஊஞ்சல்
தேவிராஜேஸ் வரியம்மே ஆடீர் உஞ்சல்

*ஆறாறு தத்துவமும் கடந்த அண்ணல்*
*அன்பரகத்து அடங்குபர சிவத்தின் ஆதிப்*
*பேறான அருட்சத்திப் பெருக்கே அம்மா*
*பெருமாட்டி சீமாட்டி ஆடீர் ஊஞ்சல்*
*நீறாகிக் கொடுமையெலாம் நீங்க அன்று*
*நெஞ்சமிசைத் தீயெழுப்பி மதுரைகாத்த*
*வீறாரும் பத்தினியும் காண வீர*
*வித்தகிரா ஜேஸ்வரியே யாடீர் ஊஞ்சல்*

*ஏழ்பிறப்பும் காப்பவளே ஆடீர் ஊஞ்சல்*
*எங்கெங்கும் சிவஞான விளக்கை ஏற்றித்*
*தாழ்வகற்றித்தொண்டர் குழாம் தழைக்கச்சைவத்*
*தலைமைநெறி தந்தவளே ஆடீர் ஊஞ்சல்*
*ஞானமிகும் ஐந்தெழுத்தும் நீறும் வாழி*
*நற்புங்கை மணிநகரும் நாடும் வாழி*
*வானமுகில் வாழிகல்வி செல்வம் வாழி*
*வரராஜ ராஜேஸ்வரி ஊஞ்சல் வாழி*

## லாலி

லாலி லாலி அம்பா லாலி லாலி
லலிதாம்பிகா வருக லாலி லாலி
ஆதிமுதல் நாயகியே லாலி லாலி
அன்பர்துயர் தீர்ப்பவளே லாலி லாலி
வேத முடிவானவளே லாலி லாலி
வெற்றிதரும் அபிராமி லாலி லாலி

## எச்சரிக்கை

பரமசிவனருட் சக்தி பரையே எச்சரிக்கை!
பகர்வரிய வரமருளும் பரையே எச்சரிக்கை!
அரனருகி லமரன்னை அபயம் எச்சரிக்கை!
ஆதிரா ஜேஸ்வரியெம் அம்மா எச்சரிக்கை

**பராக்கு**

பத்திநெறி யுத்தமர்தம் பரிவகற்றி என்றும்
பரமசுகம் அருள் பராசக்தி பராக்கு!
சக்தி சிவசக்தியண்டம் தாங்கி யறந்தாங்கும்
சத்தியமே நித்தியமே தாயே பராக்கு!
வித்தையருள் ராஜரா ஜேஸ்வரி பராக்கு
வீரமிகு முலகன்னை வெற்றி பராக்கு!
முத்தியருள் சிவகாமி முதல்வி பராக்கு
முந்துதமிழ் கேட்டுருகும் எந்தாய் பராக்கு!

**மங்களம்**

**பல்லவி**

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரிக்கு ஜெயமங்களம் - என்றும்
சுத்தசத்தி உத்தமிக்குச் சுபமங்களம் (ஸ்ரீ)

**அநுபல்லவி**

மாதா மனோன்மணிக்கு மன்னுபரமேஸ்வரிக்கு
வேதாந்த நாயகிக்கு வீரபத்திர காளிக்கு (ஸ்ரீ)

**சரணம்**

வேழமுக நாதனுக்கும் ஜெயமங்களம் -வீர
வெற்றிவடி வேலவற்கும் ஜெயமங்களம்
காளி மணாளனுக்கு ஜெயமங்களம் - கற்புக்
கண்ணகி அம்மனுக்கு ஜெயமங்களம்

பொங்கு பொருள்வல்லவர்க்கும் ஜெயமங்களம் - எங்கும்
போற்றுகலை வாணருக்கும் ஜெய்மங்களம்
புங்கைநகர் மக்களுக்கும் ஜெயமங்கம் - என்றும்
புவனம் முழுவதற்கும் சுபமங்களம். (ஸ்ரீ)

# புங்குடுதீவு
# அருள்மிகு கண்ணகை அம்மன்
# என வழங்கும்
# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வரலாறு

**திரு. சின்னத்தம்பி கோபாலபிள்ளை**

இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள மண்டைதீவு வேலணைத் தீவு. நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு, காரைதீவு (காரைநகர்) ஆகிய தீவுகளுக்கு மத்தியில் அமைந்திருப்பதே புங்குடுதீவு ஆகும். அத்தீவுகளின் மத்தியில் அமைந்திருந்தமையால் போலும் ஒல்லாந்தர் இதற்கு "மிடில்பேர்க்" எனப் பெயரிட்டிருந்தனர்.

யாழ்ப்பாணக் குடாநாடு போன்றே இத்தீவுகளும் ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டவை. யாழ் குடாநாடு, பூநகரி, தென்னிந்தியா போன்ற இடங்களுக்கும் இத்தீவுகளுக்கும் இடையில் கிறிஸ்து ஆண்டுக்கு முன்பிருந்தே பல தொடர்புகள் இருந்துள்ளமை, வரலாற்றுச் சான்றுகள் மூலம் தெரியவந்துள்ளன. தென்னிந்திய வரலாற்றிலே கி. மு. 1500 தொடக்கம் கி.பி 500 வரை பெருங்கற்பண்பாடு நிலவியுள்ளது. இப்பெருங்கற்பண்பாட்டுக் குரிய தடயங்கள் புங்குடுதீவின் ஊரைதீவிலும் திகழியிலும் ஆய்வுகள் மூலம் பெறப்பட்டுள்ளன. எனவே இப்பகுதிகளுக்கும் தீவுகளுக்கும் இடையில் காலத்திற்குக் காலம் பல்வேறு தொடர்புகள் இருந்துள்ளமை இதன் மூலம் புலப்படும்.

புங்குடுதீவு பல காலத்திலும் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு வந்துள்ளது. அவை பியங்குதீவு, கொங்கர்தீவு, பங்கர்திவிய, பொங்கர்தீவு, மிடில்பேர்க், திருப்பூங்குடி, பொன்கொடுதீவு, புங்கையூர் என பல. அக்காலத்தில் இங்கு புங்கு மரங்கள் அடர்த்தியாகக் காணப்பட்டமையால் புங்குடுதீவு எனப் பெயர் இடப்பட்டிருக்கலாம் என்பது ஆய்வாளர்கள் பலரது கருத்தாகும். இத்தீவு ஏழு மைல் நீளத்தையும், ஒன்றரை மைல் அகலத்தையும், 11.2 சதுர மைல் பரப்பளவையும் கொண்டது. இதன் தரைத்தோற்றம் பொதுவாக சமதரையாகக் காணப்பட்டாலும் தென்கிழக்குப் பகுதியான மாவுதிடல், வீராமலைப் பகுதிகள் கடல் மட்டத்திலிருந்து சற்று உயரமான பகுதிகளாக உள்ளன. இங்கு 16000ற்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்தார்கள். இன்றைய போர்ச்சூழல் காரணமாகப் பலரும் வெளியிடங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் இடம்பெயர்ந்து விட்டனர்.

இங்குள்ள மக்களின் பிரதான தொழில் துறைகளாக விவசாயமும், சிறுகைத் தொழிலும் விளங்கியபோதிலும் பெரும்பாலானவர்கள் இலங்கையின் சகல நகரங்களிலும் வர்த்தக நிலையங்களை அமைத்துத் தங்கள் கடின உழைப்பினால் உயர்ந்தார்கள். கல்வி அறிவிலும் மேம்பட்டவர்களான இவர்கள் அரசாங்க உத்தியோகங்கள், ஆசிரியர், பேராசிரியர், வைத்தியர், பொறியியலாளர் என்பன போன்ற உயர் தொழில்களிலும் சிறந்து விளங்குகின்றனர். இவ்வாறு தொழில்களினால் நாம் தேடிய செல்வத்தின் ஒரு பகுதியை ஆலயத் திருப்பணிகளுக்கும், தம் சமூக முன்னேற்றத்திற்கான பொதுப்பணிகளுக்கும், தானதர்மங்களுக்கும் செலவிட்டுப் புண்ணிய சிலர்களாக வாழ்ந்தார்கள். இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இத்தீவுகளில் வாழும் மக்களில் பெரும்பாலானவர்கள் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். கிறிஸ்தவ, கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த மக்களும் இங்கு வசிக்கின்றார்கள். இதனால் இவ்வூரில் அறுபதுக்கு மேற்பட்ட பெரியனவும், சிறியனவுமான சைவ ஆலயங்களும், நான்கு கிறிஸ்தவ தேவாலயங்களும் காணப்படுகின்றன. இதனால் இவ்வாலயங்களில் வருடந்தோறும் பல்வேறு சமய, கலாச்சார விழாக்கள் இடம்பெறுகின்றன. இங்கு சிறப்புற்று விளங்கும் பன்னிரண்டு சக்தி ஆலயங்களும் ஒன்பது விநாயகர் ஆலயங்களும் ஐந்து முருகன் ஆலயங்களும், நான்கு ஐயனார் ஆலயங்களும், மூன்று சிவன் ஆலயங்களும், இரண்டு பெத்தப்பர் ஆலயங்களும், ஒரு நாகதம்பிரான் ஆலயமும், ஒரு கிருஷ்ணர் ஆலயமும், ஒரு காத்தவராயர் ஆலயமும், ஒரு வீரபத்திரர் ஆலயமும், 25ற்கு மேற்பட்ட வைரவர் ஆலயங்களும் உள்ளன. கிறிஸ்தவ தேவாலயங்களில் புனித அந்தோனியார், புனித சவேரியார், அன்னை வேளாங்கண்ணி ஆலயங்களும் ஒரு புரட்டஸ்தாந்து தேவாலயமும் அமைந்துள்ளன.

பன்னிரு சக்தி பீடங்களாக கண்ணகை அம்பாள், குறிகாட்டுவான் மனோன்மணி அம்பாள், முத்துமாரி அம்பாள், காளிகா பரமேஸ்வரி அம்பாள், வல்லன்பதி இலுப்பண்டை நாச்சிமார், மடத்துவெளி இளந்தாரி நாச்சிமார், மாவுதிடல் மலையடி நாச்சிமார்", கள்ளிக்காடு துர்க்கை அம்பாள், பட்டயக்கார அம்பாள், கண்ணகிபுரம் பத்திரகாளி அம்பாள், பிட்டிவயல் நாச்சிமார், இத்தியடி நாச்சிமார் (நாகபூசணி அம்பாள்) ஆகியன காணப்படுகின்றன. இவற்றுள் இளந்தாரி நாச்சிமாரும் இலுப்பண்டை நாச்சிமாரும் இன்று முருகன் ஆலயங்களாகப் பெயர் மாற்றம் பெற்றுள்ளன.

மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் (பூவரசு) ஆகியவை ஒருங்கே அமையப்பெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயமாக விளங்குவது கண்ணகையம்மன் என வழங்கும் அருள்மிகு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயம் ஆகும். இவ்வாலயம் புங்குடுதீவு தெற்குக் கடற்கரை மணற்பரப்பில் ஏறக்குறைய ஆயிரம் பரப்பு நிலத்தில் அமைந்துள்ளது. வேண்டுவார் வேண்டுவதை வழங்கி அருள்புரியும் அன்னையாம் கண்ணகையம்மன் கோவில் கொண்டுள்ள இவ்வாலயத்தின் பூர்வீக வரலாற்றைக் கீழே நோக்குவோம்.

சித்திரமணி மகுடம் பத்மமலர் வதனமும்
　　செம்பவள வாய் முறுவலும்
சிந்தூரப் பொட்டழகும் செய்யவிருகாதினில்
　　திகழும் பொற் கொம்பினழகும்
முத்து மூக்குத்தியும் நெஞ்சிற் பதக்கமும்
　　முருகுதவழ் மலர் மாலையும்
முத்தாரம் கையினிற் கடகமும் கணையாழி
　　மொய்த்திட்ட விரலினழகும்
கொத்துமணிமேகலையும் வஞ்சி
　　நுண்ணிடை - யழகும்
கோகனகப் பாதச் சிலம்பும்
　　கோடானுகோடி யருணோதயப் பிரகாசமும்
கொண்ட நின் காட்சி யடியேன்
　　எத்தனை விதங்கள்தான் ஒண்ணினுங் காணாது
ஏங்குதே நெஞ்சமம்மா!
　　எழிலாரும் புங்கைநகர் தென்கரையில்
தங்கி வாழ் இராஜராஜேஸ்வரி அம்மையே!

*(ஆசிரியமணி சி.க. நாகலிங்கம் அவர்கள்)*

ஈழவளநாடாம் இலங்கையைக் கி.பி. 1505லிருந்து போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் தமது ஆட்சிக்கு உட்படுத்தியிருந்தனர். இவர்கள் தமது ஆட்சிக்காலத்தில் தமது ஆட்சி நிர்வாகத்தைப் பரிபாலிப்பதற்காக உள்ளூரில் ஓரளவு படித்த, செல்வாக்கானவர்களுக்கு விதானையார், உடையார், மணியகாரர் என்னும் அரச பதவிகளை வழங்கி அவர்கள் மூலம் ஆட்சி நிர்வாகத்தைச் செய்து வந்தனர். இந்த வகையில் புங்குடுதீவின் நிர்வாகமும் இத்தகைய படிமுறைப் பதவிகளில் இருந்தவர்களினால் மேற்கொள்ளப்பட்டன. இவர்கள் தங்களது அதிகாரப் பரப்பிற்கமைய செயற்பட்டார்கள். தமது அதிகாரச் செல்வாக்கின் மூலம் அக்காலத்தில் பெருநிலச் சொந்தக்காரர்களாகவும், பெரிய விவசாயிகளாகவும் பண்ணையாளர்களாகவும் உயர்ந்தனர்.

இவ்வகையில் புங்குடுதீவின் நிர்வாகத்தில் இடம்பிடித்தோரில் திரு. கதிரவேலு ஆறுமுகம் (கறுப்பாத்தை) உடையார், இராமநாதர் உடையார், திரு. முத்துக்குமார் உடையார், திரு. ஐயம்பிள்ளை உடையார், திரு. வைத்திலிங்கம் உடையார், திரு. சரவணமுத்து உடையார், திரு. கதிரவேலு மணியகாரர், திரு. இராமலிங்க முதலியார், திரு. பசுபதிப்பிள்ளை விதானையார், திரு. சுப்பிரமணியம் (தம்பு) விதானையார் திரு. சின்னத்துரை விதானையார் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

இவர்களில் திரு. கதிரவேலு ஆறுமுகம் உடையார் காலத்தால் முற்பட்ட, செல்வாக்குள்ள நிலச்சுவாந்தர் ஆவார்.. இவருக்குப் புங்குடுதீவு கிழக்கில் இருந்து தெற்குக் கடற்கரை வரை காணிகள் உண்டு. இவர் தனது பட்டியிலிருந்து மந்தைகளைக் காலையில் வெளியில் சென்று மேய்ந்து வருவதற்காகத் திறந்து விடுவார். இவரது மாடுகளும் எருமைகளும் வழமைப்பிரகாரம் வெளியில் சென்று வயிறார மேய்ந்து விட்டு மாலையில் தங்களது பட்டிக்குத் திரும்பி விடும். ஒரு நாள் மாலையாகியும் அவரது மாடுகள் பட்டிக்குத் திரும்பவில்லை. உடனே உடையார் தனதுக்கு வேண்டிய சிலருடன் மாடுகள் வழமையாக மேயப்போகும் இடங்களுக்குத் தேடிப்போனார்.

என்னே அதிசயம்! இந்து சமுத்திரம் அலை மோதும் தென்கிழக்குக் கடற்கரையில் வெளிச்சவீடு அமைந்துள்ள கோரியா என்னும் இடத்தின் கடற்கரையின் ஒரு பகுதியில் ஏதோ ஒன்றைச் சுற்றி வளைத்துக் கொண்டு அவரது மாடுகள் நின்றன. அங்கு சென்று மாடுகளைத் துரத்தினார். ஆனால் மாடுகள் அந்த இடத்தை விட்டு அசையவில்லை. அருகில் சென்று பார்த்தபோது அங்கே மாடுகளிள் நடுவே ஓர் அழகிய பேழை காணப்பட்டது. சென்றவர்கள் பேழையைத் தூக்கிக் கரைக்குக் கொண்டுவர மாடுகளும் கரைக்குத் திரும்பி வந்தன. கரைக்கு வந்ததும் பெட்டியை ஓரிடத்தில் வைத்தபோது அப்பெட்டி நிலத்தில் இருப்புக்கொள்ளவில்லை. இதனால் திரும்பவும் அவ்விடத்தில் இருந்து தூக்கிக் கொண்டு வந்து நாயன்மார்காடு என்ற இடத்தில் வைத்துத் திறந்து பார்க்க முற்பட்டனர். ஆனால் அந்த இடத்திலும் அப்பெட்டி இருப்புக் கொள்ளாததோடு அவர்களால் பெட்டியைத் திறக்கவும் முடியவில்லை.

அவர்கள் மீண்டும் அப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு தற்போது இக்கோவில் அமைந்துள்ள இடத்திற்கு வந்தனர். அங்குள்ள ஒரு பழைமை வாய்ந்த பூவரசம் மரத்தின் நிழலிலே வைத்துவிட்டு இளைப்பாறியபின் திரும்பவும் தூக்கினர். ஆனால் அவர்களால் மீண்டும் அப்பெட்டியை அவ்விடத்தில் இருந்து தூக்க முடியவில்லை. இச்செய்தி ஊருக்குள் பரவியதும் பலர் அங்கு வந்து சேர்ந்தனர். எல்லோரும் சேர்ந்து தூக்க முயன்றும் முடியாததால் பெட்டியைத் திறந்து பார்த்தனர். அதனுள் அழகான ஒளிமயமான அம்பாள் சிலை ஒன்று காணப்பட்டது. இதனைப் பார்த்துக் கொண்டு நின்ற ஒரு வயோதிபப் பெண் உருக்கொண்டு அம்பாளே பேசுவது போல் பேச முற்பட்டாள். "நான் திருவருள் கூட்டிய கண்ணகிப்பெண். என்னுடன் எனது பாதுகாப்பிற்காக இதோ பத்திரகாளிக்கும் இந்த இடம் பிடித்துக் கொண்ட படியால் இங்கு வந்து சேர்ந்தோம். எங்களை இந்த இடத்திலேயே பிரதிஷ்டை செய்து ஆறுதல் படுத்துங்கள். நன்மை உங்களை நாடி வரும். வேறும் ஆறுசிலைகள் வெவ்வேறு இடங்களுக்குப் போயிருக்கின்றன. அங்குள்ளோர் அவற்றைப் பார்க்கட்டும்" என்று கூறினாள். கண்ணகியாக உருக்கொண்டு அவ்வயோதிபப்பெண் கூறியதைக் கேட்ட அங்கு நின்ற அத்தனை பேரும் பக்தி பரவசமாயினர். சில நாட்களின் பின்னர் உருக்கொண்ட அம்மையின் திருவாக்கின்படி ஏனைய சிலைகளில் ஒன்று ஒரு பேழையுடன் கரம்பன் மேற்குக் கரையோரமாகக் கண்டெடுக்கப்பட்டு அங்கும் கண்ணகிக்கு ஆலயம் அமைக்கப்பட்டது.

மற்றைய சிலைகள் காரைநாகர், வட்டுக்கோட்டை, மாதகல், சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டு அவ்வவ் விடங்களில் கண்ணகிக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆறுமுகம் உடையார் கிராம மக்களுடன் சேர்ந்து கோவில் அமைக்கும் பணியில் இறங்கினார். கட்டிடத்திற்குரிய மரங்கள் பெருமளவில் கிடைக்கவில்லை. இந்நிலையில் மறுநாள் இரவு மழையுடன் கூடிய பெரும் புயல் அடித்தது. என்னே புதினம்! அதிகமான பனைமரங்கள் முறிந்து விழுந்தன. இதனால் ஆலயம் கட்டுவதற்கான நல்ல மரங்கள் கிடைக்கப் பெற்றன. இம்மரங்களைக் கொண்டு அப்பெட்டி வைக்கப்பட்டிருந்தது இடத்தில் ஆலயம் அமைக்கப்பட்டு, கண்ணகி அம்மனை அங்கு பிரதிஷ்டை செய்து நித்திய பூசைகள் செய்து வழிபட்டனர். இத்துடன் இவ்வாலயத்தின் வடக்குப் பக்கமாக காவல் தெய்வமாகிய பத்திரகாளி அம்மனுக்கும் சிறிய ஆலயம் ஒன்றினை அமைத்து நித்திய பூசைகள் மேற்கொள்ளப்பட்டன.

கண்ணகி அம்மனை பேழையுடன் வைத்த நானூறு வருடம் பழமை வாய்ந்த பூவரசம் மரம் ஆலயத்தின் தல விருட்சமாகியது. அதிலே ஒர் அரிக்கன் லாம்பு நாள்தோறும் எரிந்து வருகின்றது. அக்கிராம மக்களிடையே பக்தி வெள்ளம் பரவியது. காலத்திற்குக் காலம் கடல்முலம் ஆலயத்திற்குத் தேவையான தளபாடப் பொருட்கள் ஆலயக் கரையை வந்தடைந்தன. ஆகம விதிகளுக்கு அமைய ஆலயம் அமைக்க உரிமையாளர்களும் கிராம மக்களும் முயற்சி எடுத்தனர். நாளடைவில் ஆலயத்திற்குச் சுண்ணாம்புக் கற்களினாலான நிரந்தரக் கட்டிடம் அமைக்கப்பட்டது. 1880ஆம் ஆண்டிலிருந்து நித்திய பூசைகளுடன் திருவிழாவும் (நைமித்திய பூசைகள்) நடைபெறத் தொடங்கியது. ஆடிமாத பூர நட்சத்திரத்தை அந்தமாகக் கொண்ட பத்து நாட்களுக்குத் திருவிழா நடைபெற்றது. அதிலும் அதிசயம், கொடியேற்றத் திருவிழாவிற்கு முன்னரே கொடிமரம் கடல்மூலம் கரைக்கு வந்தடைந்தது அதாவது அம்மனுக்கு விழாவெடுக்க முற்பட்ட வேளையில் பக்தர் ஒருவரின் கனவில் அம்பாள் காட்சி தந்து கொடிமரம் செய்வதற்கான மரம் கடற்கரையில் வந்து கிடப்பதாகவும் அதனைக் கொடித்தம்பம் செய்வதற்கு உபயோகப்படுத்துமாறும் பணித்தருளினாள். இச்செய்தி அறிந்த ஊரவர்கள் மறுநாள் அதிகாலை கடற்கரைக்குச் சென்று பார்க்கையில் நல்ல நீளமான மரமொன்று கரையில் அடைந்து கிடப்பதைக் கண்டனர். அம்பாளைப் போற்றினர்.

1931ஆம் ஆண்டு மீண்டும் கோவில் புனரமைப்புச் செய்யப்பெற்றுக் கும்பாபிஷேகமும் நடைபெற்றது. இவ்வாலயக் கும்பாபிஷேகத்தின் போது கருவறையில் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளும், இரண்டாம் மண்டபத்தின் வடக்குப் புறத்தில் தெற்கு முகமாக, தெற்கு வாசலின் ஊடாகச் சமுத்திரத்தை நோக்கியபடி ஸ்ரீ கண்ணகி அம்பாளும் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். இதனைக் கொழும்பு பிரபல வர்த்தகர் பொறளை திரு. கா. நாகலிங்கம் அவர்கள் ஏனையவர்களின் உதவிகளையும் பெற்றுச் செய்து முடித்தார். இவ்வாண்டிலிருந்து கோவில் திருவிழா சித்திரை மாதத்திற்கு மாற்றப்பட்டது. 1932இல் உரிமையாளர் பரம்பரையில் இருவர் உட்பட ஐவர் கொண்ட பஞ்சாயம் ஏற்படுத்தப்பட்டது.

1944இல் கோவில் மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழாவை திரு. ஆறுமுகம் உடையார் பரம்பரையினரும், இரண்டாம் திருவிழாவை (குருந்த மர நிழலில் அம்மன் சிவலிங்கத்திற்குப் பூசை செய்யும் விழா) திரு. மார்க்கண்டு சோதிநாதர் குடும்பமும், மூன்றாம் திருவிழாவான ஆசிரியர் திருவிழாவை ஆசிரியர்களும் நான்காம் திருவிழாவை (தீர்க்கசுமங்கலிகள் விழா) திரு. சுப்பையா நடராசா குடும்பமும், ஐந்தாம் திருவிழாவை தோட்ட விவசாயிகளும் ஆறாம் திருவிழாவான கப்பல் திருவிழாவைக் கடற்தொழிலாளர்களும், ஏழாம் திருவிழாவை கொழும்பு வாழ் புங்குடுதீவு வர்த்தகர்களும், எட்டாம் திருவிழாவை திரு.சி. முத்துக்குமாரு குடும்பமும், ஒன்பதாம் திருவிழாவை (வேட்டைத் திருவிழாவும் சப்பறத் திருவிழாவும்) பன்னிரண்டாம் வட்டார மக்களும், தேர்த்திருவிழாவை திரு. முத்துக்குமார் உடையாரும் அவரின் பின் உரித்தாளர் திரு. க. மு. சின்னத்துரை விதானையார் குடும்பமும், பூங்காவனத் திருவிழாவைத் திரு. மா. கந்தையா குடும்பத்தினரும், வைரவர் மடையைத் திரு. சின்னையா குடும்பத்தினரும் செய்து வந்தனர். வேட்டைத் திருவிழாவன்று சுவாமி வேட்டையாடுவதற்காக, தல்லையப்பற்று முருகன் ஆலயத்திற்கு வருகைதருவார்.

திருவிழாக் காலத்தில் தண்ணீர்ப்பந்தல் மண்டபப்படியை திரு. தில்லையம்பலம் குடும்பத்தினரும் தெற்குவீதி மண்டபப்படியை திரு. அ. கணபதிப்பிள்ளை திரு. க. சிவசம்பு குடும்பத்தாரும், வடக்கு வீதி கேணியடி மண்டபப்படியை திரு. நாகநாதி குடும்பத்தாரும், ஆடிப்பூர விழாவை திரு. முத்துதம்பி, திரு. சின்னத்தம்பி, திரு. நாகமணி, ஆசிரியர் திரு. சி. இராமலிங்கம் குடும்பத்தாரும் பத்திரகாளியம்மன் கோவில் வைகாசிப் பொங்கலை விரும்புலி திரு. சுப்பையா குடும்பத்தினரும் செய்து வந்தனர்.

வல்லன்பதி இலுப்பண்டைநாச்சிமார் ஆலயத்தின் புளியமரத்தில் பள்ளி கொண்டிருக்கும் நாகபாம்பு கண்ணகியம்மன், நயினை நாகபூஷணியம்மன், புளியங்கூடல் முத்துமாரியம்மன் ஆலய உற்சவ காலங்களில் அம்மனுக்கு வாயினால் பூ எடுத்துச் செல்வதாக கண்ணால் கண்டவர்கள் கூறக் கேள்வி.

1957இல் மீண்டும் ஆலயத்தின் சுண்ணாம்புக் கட்டிடம் முழுவதும் அழிக்கப்பட்டுப் புதிதாக சீமெந்துக். கட்டிடம் அமைக்கப்பட்டது. இத்திருப்பணியைத் திரு. மு. முத்தையாபிள்ளை அவர்கள் செய்து முடித்தார். 1964இல் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. இதன் பின்னர் பலர் திருவிழா செய்ய முன்வந்ததால் 1979இலிருந்து சித்திராபூரணையைத் தேர்த்திருவிழாவாகக் கொண்டு பதினைந்து நாட்களாகத் திருவிழாக் காலம் அதிகரிக்கப்பட்டது. 1957இல் ஆரம்பிக்கப்பட்ட இராஜகோபுர வேலைகளும், பின்னர் ஆரம்பிக்கப்பட்ட புதிய சித்திரத்தேர் வேலைகளும் 1979இல் பூர்த்தி செய்யப்பட்டன. இவ்வாலயத்தின் உருவாக்கத்தில் முன்னின்று உழைத்த ஆசிரியர்களான வித்துவான் ஆறுமுகம், திரு. நா. கார்த்திகேசு, சங்கீத பூஷணம்.

திரு. க. தாமோதரம்பிள்ளை, திரு. சி.சின்னத்துரை, திரு. சி. க. நாகலிங்கம், திரு. அ.க. கண்ணையா, சட்டத்தரணி திரு. ப. கதிரவேலு, கொழும்பு வாழ் புங்குடுதீவு வர்த்தகர்களான திரு. மு. முத்தையாபிள்ளை, திரு. நா.க. மயில்வாகனம், திரு. சி.கு. செல்லையா, திரு.சி. முத்துக்குமாரு, திரு. நா.சி.. செல்லையா, திரு. இ.க.கந்தையா, திரு. ந. செல்லத்துரை, திரு.மு. கனகசபாபதி, திரு. சோ.க.ஐயம்பிள்ளை, திரு. அ. குழந்தைவேலு, திரு. க. தியாகராசா, திரு. மு.ச.சண்முகராசா, திரு. த. கிருஷ்ணசாமி, சிவஸ்ரீ ப.கணேசராசக்குருக்கள் ஆகியோர் என்றும் நினைவில் கொள்ளப்பட வேண்டியவர்கள் ஆவர்.

புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கப்படும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் அருட்கொடையினால் மக்கள் அளப்பரிய செல்வங்களுடன் எங்கும் இனிதே வாழ்கிறார்கள். இவ்வாலயத்திருப்பணிகளுக்கு வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அயராது உழைத்தவர்கள் பலர். அவர்களுள் க. அம்பலவாணர், சி. க. நாகலிங்கம், வித்துவான் சி. ஆறுமுகம், நா. கார்த்திகேசு, க. தாமோதரம்பிள்ளை நா. பாலசிங்கம் ஆசிரியர்களும் சே. சின்னத்தம்பி, சி. கனகசபை, ம. இராசையா, சி. இலகுப்பிள்ளை, வே. சுப்பையா, ந. செல்லத்துரை அ. கண்ணையா, த. மாதுங்கர், அ. சோமசுந்தரம், வ. சின்னத்தம்பி, ச. பொன்னம்பலம், டாக்டர். சி.கணேஸ், நா. நல்லத்தம்பி, வ. இராமலிங்கம், ஆ. விசுவலிங்கம், மு. தில்லையம்பலம், திருமதி. முத்துலெட்சுமி, சண்முகரத்தினம், க. நாகலிங்கம், ஆ. விசுவலிங்கம், மு. தில்லைய்பலம், திருமதி. முத்துலெட்சுமி, சண்முகரத்தினம், க. நாகலிங்கம் (குணமாலை), ஆசிரியர் வ. சின்னப்பு, இ. தம்பு ஆசிரியர், நீ. ஆறுமுகம் ஆசிரியர், நீ. சேதுபதி தலைமை ஆசிரியர், ச. அம்பலவாணர். சி.க நடராசா, அ. குழந்தைவேலு, க.'. கனகசபை, நா. அ. கனகசபை, சி. சின்னையா, ப. செல்லத்துரை ஆ. கார்த்திகேசு, ஆ. கனகலிங்கம், சி. கு. நல்லதம்பி, மு.வ. நடராசா, அ. தம்பிராசா, சி. சரவணமுத்து ஆசிரியர், நா. விசுவலிங்கம், மா. கந்தையா, ம. கண்ணையா, சி. சிவகுரு, நீ. முத்தையா, மு. குமாரசாமி, மு. தியாகராசா, த. கந்தையா, சி. குமாரசாமி, க. ஆறுமுகம், வி. ஆறுமுகம், சோ, சேனாதிராசா, அ. கணபதிப்பிள்ளை, ச. சதாசிவம், மு. கனகரத்தினம், சி. பரராசசிங்கம், ஆ. வில்வரத்தினம், வீ.வ. இராமநாதன், சு. கந்தையா ஆசிரியர், அ.கனகசபை, நா.சி. நடராசா, தா. இராசலிங்கம் ஆசிரியர். க. மார்க்கண்டு, வே. சுப்பிரமணம், சிவத்திரு சரவணமுத்து, பெ. முத்துவேலு, க.செல்லத்தம்பிஇன்னும் பலர் சேவையாளர் அனைவருக்கும் உள்ளமார்ந்த நன்றி.

இக்கோவிலின் காணியின் உரிமை இன்று வரை அமரர் சபாரெத்தினம் இராசரெத்தினம் அவர்களின் பெயரிலேயே இருக்கிறது.

ஆலய உரிமையாளர்கள் பொதுமக்களின் அனுசரணையுடன் கோவிலில் நித்திய, நைமித்திய பூசைகளை முறைப்படி செய்து வருங்காலத்தில் தென்கடல் மூலம் அதிசயமான நிகழ்வுகள் இடம் பெற்றன. கோவிலில் விளக்கு ஏற்றுவதற்காகவும், பூசைத் தேவைகளுக்குமான தேங்காய்

எண்ணெய்ப், பீப்பாய்கள், தேர்வடக் கயிறுகள், மரங்கள், பலகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் யாவும் எதிர்பாராத வகையில் காலத்திற்குக் காலம் வந்து சேர்ந்தன. இந்த அதிசய நிகழ்வுகளால் இவர்கள் அருள் பொலிவு பெற்றனர். இன்று நிரந்தரப் பஞ்சாயத்தில் திரு.ச. இராசரெத்தினம், திரு. ஆ. சபாரெத்தினம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஆலய அர்ச்சகர் பரம்பரையை நோக்கின் ஆரம்ப கால அர்ச்சகராகப் பிரம்மஸ்ரீ சபாபதி ஐயர் அவர்கள் இருந்துள்ளார். இவரின் பின் சிவஸ்ரீ குமாரசாமி ஐயர் அவர்கள், சிவஸ்ரீ கு. இரத்தினசபாபதி ஐயர் அவர்கள், சிவஸ்ரீ இ.நடராசா ஐயர் அவர்கள், சிவஸ்ரீ கணேசராசக் குருக்கள் அவர்கள், சிவஸ்ரீ ந. இரவீந்திரநாத ஐயர் ஆகியோர் ஆலய அர்ச்சகர்களாக இருந்துள்ளனர். கும்பாபிஷக, வருடாந்த மகோற்சவ சிவாச்சாரியார்களாகக் கோப்பாய் சிவஸ்ரீ வைரவநாதக் குருக்கள் சித்தங்கேணி சிவஸ்ரீ சிவசாமிக்குருக்கள், சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள், பிரதிஷ்டாபூஷணம் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள், சிவஸ்ரீ நா. பரமேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள், சிவஸ்ரீ ப.பாலசுப்பிரமணியக் குருக்கள் ஆகியோரும் இருந்துள்ளனர்.

சிலப்பதிகாரப் பெருவிழா நடைபெற்ற சிறப்பைப் பெற்ற ஆலயம் இதுவாகும். 1954ஆம் ஆண்டு சிலப்பதிகார விழாவை எங்கு நடாத்துவதெனத் தீர்மானிக்க முடியாது தமிழ்நாட்டிலுள்ள தமிழ் அறிஞர்களும் இலங்கைத் தமிழ் வல்லுநர்களும், தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் இருந்த கண்ணகையம்மன் ஆலயங்களின் பெயர்களை எழுதித் திருவுளச்சீட்டு மூலம் தெரிவுசெய்தபோது விழாவைப் புங்குடுதீவு கண்ணகையம்மன் ஆலய முன்றலில் நடாத்தத் திருவுள அனுமதி கிடைத்ததாகக் கூறப்படுகின்றது. அதன்பிரகாரம் 1954இல் இவ்வாலயத்தின் முன்றலில் புதிய மண்டபம் அமைக்கப்பெற்று சிலப்பதிகாரப் பெருவிழா நடைபெற்றமை வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வாகும்.

புங்குடுதீவு மக்களின் பெரும் பங்களிப்புடன் ஈழத்தின் பேரறிஞர்களும், இந்தியப் பேரறிஞர்களும் இணைந்து சிலம்புச் செல்வி கண்ணகிக்கு அவளது சந்நிதானத்தில் எடுக்கப்பட்ட இவ்விழா மூன்று நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு மூவுலகும் திரண்டாற்போல் மக்கள் வெள்ளம் அலைமோதியமை கண் கொள்ளாக் காட்சியாகும். இவ்விழாவிலே இந்தியப் பேரறிஞர்களான சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானக் கிராமணியார், திரு. அ.ச. ஞானசம்பந்தர், கலைமகள் ஆசிரியர் திரு. கி.வ. ஜெகநாதன், திரு. அ. முத்துச்சிவன் ஆகியோரும் ஈழத்து அறிஞர்களான அமைச்சர் திரு. சு. நடேசபிள்ளை, வித்துவான் திரு. பொன். அ. கனகசபை, வித்துவான் திரு. சி. ஆறுமுகம், வித்துவான் திரு. க. வேந்தனார், பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம், ஆசிரியர்திரு. க. சிவராமலிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தமை இங்கு குறிப்பிடத் தக்கதாகும். புங்குடுதீவு மக்களின் விருந்தோம்பும் பண்பைக் கண்டு தமிழ்நாட்டுப் பேரறிஞர்கள் உள்ளம் நெகிழ்ந்து கற்புக்கரசியாம் கண்ணகியின் காவிரிப் பூம்பட்டினமோ

இதுவென வியந்து பாராட்டினர்.

புங்குடுதீவு மக்கள் அம்பாளின் திருவருட் கடாட்சம் பெற்றவர்கள் இவ்வாலயத்தின் வராற்றின் கொழும்பு வாழ் புங்குடுதீவு மக்களின் சேவை குறிப்பிடத் தக்கதாகும். சைவசமயத்தையும், தமிழ் மொழியையும் தம் வாழ்வில் இணைத்து வாழ்ந்து வரும் தீவக மக்கள், தாம் எங்கு வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் ஆலயம் அமைத்து வழிபடும் பாங்கு போற்றுதற்கு உரியது. அவர்கள் இடம்பெயர்ந்து வாழும் கனடா மண்ணிலும் தனது அன்னையாம் கண்ணகி அம்பாளின் தேர்த்திருவிழாவினைச் சித்திரா பௌர்ணமி தினத்தில் கனடா ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் கொண்டாடி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

பொன்பெருகு சைவநெறிப்
புண்ணியம்பொலியமறை
பூத்தவாகமங்கள் பொலியப்
புராணவிதிகாசங்கள் தருநீதி நிறை பொலியப்
பொழிந்த திருமுறைகள் பொலிய
அன்புநாண் ஒப்புரவு
கண்ணோட்டம் வாய்மையெனும்
ஐந்துமுயர் சால்பு பொங்கும்
ஆனந்த சமுதாய ஞானவொளி பொலியமெய்
யடியாரும் தமிழும் பொலிய
முன்புதொடுவினை நீக்கி முத்தியுறு பணியாக்கி
முந்துமன் னுயிர்கள் பொலிய
முத்துநவ ரத்தின மிசைத்த மணித் தேரேறி
முதுவீதி வருமன்னையே!
இன்பமிகு நின்பாத பங்கயமலர்ந்த சுக
மெங்களுக் கினிதருளுவாய்
எழில்வாரிப் புங்குநகர் வந்த கண்ணகித்தாயே!
இராஜராஜேஸ்வரியே! *அருட்கவி. சீ.வி.*

திருவாரூரில் பிறக்க முத்தி

திருவண்ணாமலையை நினைக்க முத்தி

சிதம்பரத்தைத் தரிசிக்க முத்தி

மதுரையில் வசிக்க முத்தி

கண்ணகியை பார்க்க முத்தி


காசியில் இறக்க முத்தி

ஆதாரம் : கனடா சைவநீதி சிறப்பிதழ்


சிலப்பதிகார விழா மலர் -1954

வீரகேசரி நாளிதழ் - 1979

ஈழநாடு நாளிதழ் - 1979



1990ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்திருவிழாவில்
பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்ட காட்சி.



கண்ணகை அம்மன் தேரில் ஏறுவதற்காக எழுந்தருளும் காட்சி.

(படப்பிடிப்பு : தம்பிஜயா தேவதாஸ்)

# புங்குடுதீவுக் கோவில்களும் பண்பாடும் ஓர் வரலாற்றுக் கண்ணோட்டம்

**பேராசிரியர் வி. சிவசாமி**
B..A. HMS (Lon)
B.A. M.A. (Cey) Hon. D. LITT. (Jaffna)
ஓய்வு பெற்ற சமஸ்கிருதப் பேராசிரியர்,
துறைத்தலைவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கையின் வட பகுதியிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டினை அடுத்துள்ள பல தீவுகளிலே வேலணைத்தீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, காரைதீவு (காரை நகர்) ஆகிய ஏழு, தீவுகளும் சப்த (ஏழு) தீவுகள் அல்லது தீவகம் எனவும் அழைக்கப்படும். யாழ்ப்பாணக் குடாநாடு போலத் தீவகமும் ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்டதாகும். ஏனைய தீவுகளுக்கு நடுவண் இத்தீவு அமைந்துள்ளது. இதனால் ஒல்லாந்தர் இதனை "மிடில் பேர்க்" என அழைத்தனர். இத்தீவிலும் ஊரைதீவு, களதீவு, வரதீவு, மண்டைதீவு, பல்ல தீவு, கேரதீவு, கண்ணாத்தீவு ஆகிய எழு தீவுகள் உள்ளன. யாழ்ப்பாண நகருக்கும் இத்தீவுக்கும் இடையில் வேலணைத்தீவும் இரு கடல்களும் உள்ளன. இதுவும் வேலணைத்தீவும் அம்பலவாணர் தாம்போதியாலும் வேலணைத்தீவும் யாழ்ப்பாணநகரும் பண்ணைத்தாம்போதியாலும் இணைக்கப்பட்டுள்ளன. கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குள்ளே இத்தாம்போதிகள் அமைக்கப்பட்டன. இவற்றின் மூலம் மக்களுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாகப் போக்குவரத்துச் சுலபமாகவும், குறுகிய காலத்திலே செய்யக் கூடியதாகவும் ஏற்பட்டுள்ளது.

இத்தீவு யாழ்ப்பாண நகரிலிருந்து 15 மைல் தொலைவிலுள்ளது. இது 11.2 சதுர மைல் கொண்டுள்ளது இங்கு தரைத்தோற்றம் பொதுவாகச் சமமாகவே காணப்படுகின்றது ஆக உயர்ந்த பகுதிகளான மாவுதிடல், வீராமலைப்பகுதிகள் 10,15 அடி உயரமுடையதாகும். இவை தென் கிழக்கில் உள்ளன. இங்கு பருவ மழை ஆகஸ்டு தொடக்கம் டிசம்பர் வரை பொதுவாகப் பெய்யும். ஏனைய மாதங்களிலும் சில வேளைகளிலே சில நாட்கள் பெய்யும். ஆனால் பெருமளவு வறட்சியே நிலவும்.

பொதுவாக, இங்கு தமிழர்களே வாழ்ந்து வந்துள்ளனர். பழைய காலத்தில் இங்கு வாழ்ந்த மக்கள் தொகை பற்றி அறிய முடியாதுள்ளது கி.பி. 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த போர்த்துக்கீச மதகுருவான குவேறோஸும், அதே காலப்பகுதியைச் சேர்ந்த ஒல்லாந்த மதகுருவான போல்டேஸும் இங்கு 800 மக்கள் வாழ்ந்தனர் எனக்குறிப்பிட்டுள்ளனர். 1824ம் ஆண்டு இலங்கைக் குடிக்கணக்கின்படி 1802 மக்களும் 1834லே வெளியிடப்பட்ட சைமன் காசிச் செட்டியின் நூலின்படி 2415 மக்களும், இலங்கைக் குடிக்கணக்கின்படி 1971லே 13,766 மக்களும் 1981லே 14622 மக்களும் வாழ்ந்தனரென அறியப்படுகின்றது. 1991ல் ஏற்பட்ட மக்கள் இடப்பெயர்வின்பின் தற்பொழுது சுமார் 3000 மக்கள் வாழுகின்றனர். இவர்களிலே பெரும்பாலானவர்கள் இந்துக்களே.

பிரித்தானியர் ஆட்சிக்கு (1796) முற்பட்ட காலப்பகுதியில் இங்கு நிலவிய இந்து சமயம் பண்பாடு பற்றிப் பெருமளவு அறிய முடியாதுள்ளது. எனவே கி.பி. 1800 தொடக்கம் இன்று வரை இங்கு நிலவிவந்துள்ள இந்து சமயம், பண்பாடு பற்றிச் சுருக்கமாக இக்கட்டுரையிலே கூறப்படும்.

இந்து சமயம் இங்கு நீண்ட காலமாக நிலவி வந்திருப்பினும், கி.பி. 16,17,18ம் நூற்றாண்டுகளிலேற்பட்ட போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் ஆட்சியினால், அது மிகவும் நலிந்து நிலவிற்று எனினும் பிரித்தானியர் ஆட்சித் தொடக்கத்திற்குச் சற்று முன்பும், குறிப்பாக அவர்களின் ஆட்சி தொடங்கிய பின் ஏற்பட்ட மதசுதந்திரத்தின் விளைவாக இந்து சமயத்தில் ஒரு புத்துயிர்ப்பு ஏற்படலாயிற்று. இந்து சமயத்தின் நிலைக்களன்களாகக் கோவில்களே விளங்குகின்றன. கோயில்களே சமய சமூக பண்பாட்டு மையங்களாகும். அவற்றை மையமாகக் கொண்டே சமூகம் பொதுவாகச் செயற்பட்டு வந்துள்ளது.

19ம், 20ம் நூற்றாண்டு காலப் புங்குடுதீவுக் கோவில்கள், பண்பாடு பற்றிய தொடர்ச்சியான வரலாறு பற்றி அறிவதற்கான மூலங்கள் நன்கு பேணப்பட்டில. சமீபகாலப் போர் அனர்த்தங்களால் பேணப்பட்டவை பல கிடைத்தில. அரச ஆதரவிலே 1890லே பதிவு செய்யப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட கோவில்கள் இந்து கிறிஸ்தவ சமய ஆலயங்கள் பற்றிய கையெழுத்துப்பதிவேடு குறிப்பிடற்பாலது. ஆலயங்கள் பற்றிய குறிப்புக்கள் இதிலே மிகக் குறைவாயினும், அவை முக்கியமானவை. இப்பதிவேட்டிலே 1800-1860 வரையுள்ள காலப்பகுதியில் அமைக்கப்பட்ட இருபது கோவில்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இவற்றுள் 10 பிள்ளையார் 7 அம்மன் 2 முருகன், ஓர் ஐயனார் கோவில்கள் அடங்குவன குறிப்பிட்ட கோவில் நிறுவப்பட்ட ஆண்டு, நிறுவியவர், சிலவற்றில் நிர்வாகி (மனேச்சர்) கோவில் அமைக்கப்பட்ட பொருள் (கல்,மண்) நாட்பூசை, திருவிழா சில கோவில்களிலே திருவிழாவின் போது பங்கு பற்றிய மக்கள் தொகை ஆகிய இப்பதிவேட்டில் இடம்பெற்றுள்ளன. அடுத்தபடியாகப் புங்குடுதீவிலுள்ள பல கோவில்கள் பற்றிய குறிப்பிடத்தக்க தகவல்களடங்கிய மலர் ஒன்றினைக் கனடா வாழ் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் "பூவரசம் பொழுது 2003" எனும் தலைப்பிலே வெளியிட்டுள்ளது. இதில் இங்குள்ள பெரிய, சிறிய முப்பது கோவில்களும், நான்கு சமாதிக் கோவில்களும் பற்றி விவரிக்கப்படுகின்றன. இவற்றுள்ளே குறிப்பாக 8 பிள்ளையார் 3 சிவன் 10 அம்மன் 5முருகன் ஆலயங்களும், சில ஐயனார் கோவில்களும் வைரவர் ஆலயங்களும் பிறவும் அடங்குவன. இதிலுள்ள கட்டுரைகளை எழுதியவர்களிற் பலர் மேற்குறிப்பட்ட பதிவேட்டினைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. கோவில்கள் பல பற்றிய தகவல்கள் முழுமையாக இல்லாவிடினும், சில கோவில்கள் இதில் இடம்பெறாவிடினும், இது ஒரு முக்கியமான ஆவணமாகும். இத்தகைய மலர் இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. இந்து சமயத்திணைக்களத்தினால் 1984லே வெளியிட்டுள்ள இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோவில்கள் எனும் நூலிலும் புங்குடுதீவிலுள்ள சில கோவில்கள் பற்றிய சிறுகுறிப்புக்கள் உண்டு. இதிலே (ப.48) கண்ணகை அம்மன் கோவில் என வழங்கப்படும் ஸ்ரீ இராஜேஸ்வரி அம்மன் கோவில் 130 ஆண்டுகள் பழைமை வாய்ந்ததெனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் மேற்குறிப்பிட்ட

பதிவேட்டின் படி கண்ணகை அம்மன் கோவில் 1805 நிறுவப்பட்டதாகும். அவ்வாறெனில் 1984 இவ் ஆலயம் 179 ஆண்டு பழைமை வாய்ந்ததாகும். மேலும் கண்ணகை அம்மன் கோவில் தான் பழைய பெயர் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் எனும் பெயர் மாற்றம் சென்ற நூற்றாண்டிலே தான் ஏற்பட்டதாகும். இது போலவே வேறு சில கோவில்களிலேற்பட்ட மாற்றங்கள் பற்றிப் பின்னர் கூறப்படும். மேலும் கோவில்களிலே குறிப்பாக மஹா கும்பாபிஷேகம் நடைபெறும் வைபவத்தையொட்டிச் சிறப்பு மலர்கள் சில பிரதான கோவில்கள் சார்பிலே வெளியிடப்பட்டு வருகின்றன. மேலும் இதனையொட்டிப் புதினப்பத்திரிகைகளிலே சிறப்புக்கட்டுரைகளும் குறிப்பிட்ட கோவில்கள் பற்றி வெளிவருவது உண்டு. இவற்றுடன் குறிப்பிட்ட கோவிலின் வரலாறு, கிரியைகள், விழாக்கள் பற்றி அறிந்தவர்களைப் பேட்டி கண்டும், நேரடியான கள ஆய்வு இயன்றவரை செய்தும் அறியலாம். ஆனால் பெருந்தொகையான செலவிலே கோவில்களை அமைத்துப் பெரிய கிரியைகளும், விழாக்களும் நடைபெற்று வரும் கோவில்களிலே குறிப்பட்ட கோவில் பற்றிய பல்வேறு தகவல்களையும் ஒன்று சேர்த்துப் பாதுகாத்து, சமகாலத்தவரும், பிற்காலத்தவரும் அறியும் வகையில் செயற்படும் வழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. இது மிகவும் கவலைக்குரிய விடயமே. இதனாலே தான் கோவில்களின் உண்மையான வரலாறு பற்றிய தகவல்களிலே சில வேளைகளிலே முரண்பாடுகள் காணப்படுகின்றன. மேலும், கோவில்களில் இடம்பெறும் மஹோற்சவம், மற்றும் முக்கிய தினங்கள் பற்றி யாழ்ப்பாணத்திலிருந்து ஆண்டு தோறும் வெளிவரும் வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் குறிப்பிட்ட பெரிய கோவில்கள் பற்றியவையே இவற்றிலிடம் பெற்றுள்ளன.

முதற் குறிப்பிட்ட யாழ்ப்பாண மாவட்ட கோவில்கள் பற்றிய பதிவேட்டின்படி புங்குடுதீவு கிழக்கிலுள்ள 12 ஆலயங்களும், மேற்கிலுள்ள 8 ஆலயங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இக்கோவில்களிலே பெரும்பாலும் ஒரு நேரப் பூசை நடைபெற்றுள்ளது. சில கோவில்களிலே நவராத்திரி விழா, மஹோற்சவம், புராண படனம் முதலியன இடம் பெற்றுள்ளன. சில கோவில்கள் கல்லினாலும், வேறு சில மண்ணாலும் கட்டப்பட்டவை. கோவில்கள் பற்றிய தகவல்கள் எப்படியுள்ளன என்பதைச் சில உதாரணங்களால் விளக்கலாம். கண்ணகையம்மன் கோயில் (1805), அமைத்தவர்கள் நரசிம்ம முதலியார் முத்துக்குமாரும் மற்றையோரும் கல்கட்டிடம், ஒரு நேரபூசை, தேரோட்டம் 800 மக்கள் பங்குபற்றினர். பெருங்காடு கந்தசாமி கோயில் (1085) அமைத்தவர் முருகர் காசிநாதர், மனேச்சர் விசுவநாதர் நாகநாதன், கல்கட்டிடம்: ஒரு நேரப்பூசை: 500 மக்கள் பங்குபற்றினர். (தேரோட்டத்தின்போது சமூகமளித்தோர்) பெரியபுலம் பிள்ளையார் (1800) நிறுவியவர் விசுவநாதர் ஐயம்பிள்ளை: மனேச்சர் நாகநாதர் வேலுப்பிள்ளை, பொங்கல், புராணபடனம், ஒரு நேரபூசை, குறிகாட்டுவான் பேய்ச்சி அம்மன் கோவில் (1850) நிறுவியவர் கந்தர் முருகர். மனேச்சர் முருகர், அம்பலவாணர், ஒரு நேரப்பூசை, மண்சுவர், 1000 மக்கள் (பிற தீவுகளிலிருந்து வந்தோர் உட்பட) பங்குபற்றினர். இவ்வாறு கோவில்கள் பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால் அனைத்துக் கோவில்களுக்கும் ஒரே விதமான தகவல்கள் முற்றாக இல்லை. சில தகவல்கள் பூரணமாக இல்லை. எவ்வாறாயினும் 1890 ஆம் ஆண்டு இக்கோவில்கள் செயற்பட்டு வந்துள்ளமை குறிப்பிடற்பாலது. இப்பதிவேட்டிலே செவ்வையாக அமைக்கப்படாத

சில கோவில்களும், வேறு சிலவும் இடம்பெற்றில. எடுத்துக்காட்டுகளாக புங்குடுதீவு மேற்கிலுள்ள காளி அம்மன் ஆலயம், அரியநாயகன்புலம் பிள்ளையார் ஆலயம் நாகதம்பிரான் கோவில் சில ஐயனார் கோவில்களும், ஆஞ்சநேயர், வீரபத்திரர், காத்தவராயர், வைரவர் முதலிய தெய்வங்களுக்கான கோவில்களும் இதிலிடம்பெற்றன. பதிவு செய்வதற்கான சில வரையறைகளில்லாத சிறு ஆலயங்கள் விடப்பட்டிருக்கலாம். மேலும் . இருபதாம் நூற்றாண்டிலே நிறுவப்பட்ட கிராஞ்சியம்பதி சிவன் கோவில், கதிர்காமம் போன்றவை அதில் இடம்பெற்றிருக்க முடியாது.

எனவே கி.பி. 1800 - 1860 க்கும் இடையில் பல இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டு நன்கு செயற்பட்டமையை நோக்கும்போது, இக்காலத்திலே யாழ்ப்பாணத்தின் பிற இடங்களிற் போலவே இங்கு ஒரு சமயப்புத்துயிர்ப்பு மீண்டும் ஏற்பட்டமையை அவதானிக்கலாம். இவ்வாறு ஏற்பட்ட புத்துயிர்ப்பின் தொடக்க காலத்திலே தான் ஆறுமுகநாவலர் (1823-1879) தோன்றி இப்புத்துயிர்ப்பினை முன்னெடுத்து வெற்றிகண்டவர்.

மேலும் குறிப்பிட்ட காலத்தில் (1800-1860) அமைக்கப்பட்ட கோவில்களை நோக்கும்போது பெரும்பாலானவை பிள்ளையார், அம்மன், முருகன், நாச்சிமார், ஐயனார் போன்ற தெய்வங்களுக்கானவையே. சிவனுக்குரிய தனிப்பட்ட கோவில்களில்லாவிடினும் சிவ வழிபாடு அவருக்குரிய விரதங்கள், விழாக்கள் முதலியனவும் நடைபெற்றன. திருமுறை ஓதுதல் திருவெம்பாவை, சிவராத்திரி விழாப்போன்றவை குறிப்பிடற்பாலன. மேலும் சில கோவில்களின் பெயர்கள் முற்றாகவே மாற்றமடைந்துள்ளன. வேறு சில கூடுதலான அடைமொழிகளுடன் அழைக்கப்படலாயின. இத்தகைய மாற்றங்கள் 20ம் நூற்றாண்டிலேற்பட்டன. கண்ணகி அம்மன் கோவிலின் பெயர் மாற்றம் பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிகாட்டுவான் பேய்ச்சி அம்மன் கோவிலின் பெயர் ஜெகன்மாதா மனோன்மணி அம்மன் என மாற்றப்பட்டுள்ளது. ஊரதீவு பாணாவிடை ஐயனார் கோவில் பெருமளவு சிவன் கோவிலாக மாறிவிட்டது. புங்குடுதீவு கிழக்கிலுள்ள நாச்சிமார் கோவில்களில் இரண்டு முருகன் ஆலயங்களாக மாறிவிட்டன. எடுத்துக்காட்டாக மடத்துவெளி நாச்சிமார் கோயில், வயலூர் பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயமாக மாறிவிட்டது. மேலும் இக்காலப்பகுதியில் எக்கோவிலுக்கும் கோபுரங்கள் அமைக்கப்படவில்லை.

1890இல் இருந்து சுமார் ஒரு நூற்றாண்டுக்குச் சற்று மேற்பட்ட காலத்திலேற்பட்ட மாற்றங்களையும், புதிய அம்சங்களையும் பிறவற்றையும் மேற்குறிப்பிட்ட "பூவரசம் பொழுது மலர் 2003" லே காணலாம். இக்காலப்பகுதியிலே (1891-2003) பல கோயில்கள் விசாலித்து அமைக்கப்பட்டன. சில ஆலயங்கள் வெள்ளைக் கற்களால் அமைக்கப்பட்டன; அமைக்கப்படுகின்றன. சிலவற்றிற்குக் கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளன கட்டப்படுகின்றன. புத்தம் புதிய ஆலயங்களும் நிறுவப்பட்டுள்ளன. இவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாகக் கிராஞ்சியம்பதி சிவன் கோவில், (சின்னக்) கதிர்காமம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டலாம். பெரியபுலம் பிள்ளையார் ஆலயத்திலுள்ள நடேசர் விக்கிரகம் புங்குடுதீவுக் கோயில்களில் உள்ளவற்றிலே காலத்தால்

முந்தியதாகும் எனக்கூறப்படுகின்றது. ஐம்பதுக்கு மேற்பட்ட பெரிய, சிறிய கோவில்களிலே சுமார் 15 பெரிய கோவில்கள் மஹோற்சவக் கோவில்களாகும். சின்னக் கதிர்காமம் செயற்படாமலுள்ளது. கண்ணகையம்மன் கோவில், கிராஞ்சியம்பதிசிவன் கோவில் போன்றசில கோவில்களுக்கு வானளாவிய கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வேறு சிலவற்றிற்கு கோபுரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்து சமயத்திலுள்ள பல தெய்வங்களுக்கும் பெரிய, சிறிய கோவில்கள் உள்ளன. பிள்ளையார், சிவன், அம்மன், முருகன், வீரபத்திரர், பைரவர், கிருஷ்ணர், நாகதம்பிரான், ஐயனார், காத்தவராயர், ஆஞ்சநேயர், பெத்தப்பு, முதலிய தெய்வங்களுக்கான ஒன்று அல்லது பல கோவில்கள் உள்ளன. ஒரே தெய்வத்தின் பல்வேறு மூர்த்திகளுக்கான (வடிவங்களுக்கான) கோவில்கள் பல உள்ளன. எடுத்துக்காட்டுகளாக அம்மனுக்குரியனவாக கண்ணகையம்மன்-இராஜராஜேஸ்வரி, பேய்ச்சியம்மன் - ஜெகன்மாதா மனோன்மணி, முத்துமாரியம்மன், நாகம்மாள், காளி, துர்க்கை, நாச்சிமார் கோவில்களைக் குறிப்பிடலாம். எல்லாமாகப் பெரிதும் சிறிதுமாக 25க்கு மேற்பட்ட அம்மன் ஆலயங்கள் உள்ளன. முன்னர் பிடாரி அம்மன் கோவில்களும் இருந்ததாக அறியப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட 1890ம் ஆண்டுப் பதிவேடு, 2003ம் ஆண்டு பூவரசம்பொழுது மலர் இரண்டையும் தொகுத்து நோக்கும்போது கோவில்கள் நிறுவப்பட்டவை பற்றிய கருத்தில் பெருமளவு ஒற்றுமை காணப்படுகின்றது. கோவில்கள் பெருமளவு, குடும்பக் கோயில்களாகவே உருப்பெற்றுப் பின்னர் குறிச்சிக்குரிய கோவில்களாக மாறி, இறுதியிலே அனைவருக்கும் பொதுக்கோயில்களாகவே வளர்ந்துள்ளன எனலாம். ஏற்கனவே கவனித்தவாறு பெரும்பாலும் ஒவ்வொரு கோவிலுக்கும் நிறுவுனர் மனேச்சர் என இருவர் குறிப்பிடப்படுகின்றனர். நிறுவுனரும், மனேச்சரும் உறவினராக இருந்தனர். 19ம் நூற்றாண்டு புங்குடுதீவுப் பொருளாதாரத்திற்கு ஏற்பக் கோவில்கள் - பெரிய கோவில்கள் கூட அவ்வளவு பெரிதாக இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் வழிபடுவோரிடத்தே கோவிற்பற்றும், ஒற்றுமையும் கூடுதலாக இருந்தன. உறவினர்கள், அயலவர்களின் கூட்டு முயற்சியினாலேயே பெருமளவு கோயில்கள் செயற்பட்டன. திருமுறை ஓதல், கந்த புராணம் போன்ற புராண படனம் முதலியன நாவலர் பெருமானின் செயற்பாடுகளின் பின்னர் மேலும் சிறப்பாக நடைபெற்றன எனலாம். வேதாகம முறையிலான கிரியைகளும், விழாக்களும் ஒருபுறம் நடைபெற, இவை சாராத வழிபாட்டு முறைகள் -பொங்கல், வேள்வி, குளிர்ச்சி போன்றவை குறிப்பாக கிராமப்புறங்களிலுள்ள சிறு கோவில்களில் இடம் பெற்று வந்தன. திருவெம்பாவை, நவராத்திரி விழாக்கள் பல கோயில்களிலே நடைபெற்றுவந்தன.

19ம் நூற்றாண்டு முடிவிலும் 20ம் நூற்றாண்டிலும், இவ்வூர் மக்களில் துணிகரமானவர்களும், கற்றவர்களும் குறிப்பாக ஆங்கிலம் கற்றவர்களில் ஒரு சாராரும் யாழ்ப்பாணத்திற்கு வெளியே கொழும்பு போன்ற இடங்களுக்கு கடல் கடந்து மலேசியாவுக்கும் சென்றனர். இவர்களிலே கணிசமான தொகையினர் வர்த்தகத்திலே சிறப்புற்றனர். இவர்களில் ஒரு சாரார் இங்குள்ள பல கோவில்கள் வளர்ச்சியடைய உதவினர். இங்குள்ள பெரிய கோவில்களின் வரலாறு

இதற்குச் சான்று பகரும். 20ம் நூற்றாண்டு முடிவிலும், இந்த நூற்றாண்டுத் தொடக்கத்திலும், தாயகத்திலிருந்து புலம் பெயர்ந்த பற்றுள்ள மக்கள் ஆதரவிலே தான் பல கோவில்களில் இன்று திருப்பணிகள் நடைபெறுகின்றன. எனவே 20ம் நூற்றாண்டு முடிவுக்காலத்திலேற்பட்ட நலிவைத் தொடர்ந்து ஒரு புத்துயிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது எனலாம்.

மேலும் இங்குள்ள கணிசமான தொகை பெரிய கோவில்களுக்கு அவற்றை நிறுவியவர்களும், நிர்வகித்தவர்களும், பக்தர்களும் நிலங்களைக் கொடையாக வழங்கியுள்ளனர். அவற்றிலிருந்து பெறப்படும் வருமானம் பெருமளவு அவ்வக்கோவில்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தன. இன்று அந்த நிலங்களைத் தற்போதைய நிர்வாகத்தினர் பலர் அடையாளங்காண முடியுமோ தெரியாது.

ஏற்கனவே குறிப்பிட்டவாறு சில கோவில்களின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன. அல்லது பழைய பெயர்களுடன் புதிய பெயர்களும் சேர்த்து வழங்கப்படுகின்றன. முன்னர் சுட்டிக் காட்டியவாறு கண்ணகை அம்மன் கோவில், பேய்ச்சி அம்மன் கோவில், நாச்சிமார் கோவில்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஆனால் அன்றாட வழக்கில் மக்கள் இக்கோவிலைப் பழைய பெயர்களாலேயே இன்றும் அழைக்கின்றமை குறிப்பிடற்பாலது. இவற்றைப் போலவே பாணாவிடை ஐயனார் கோவில் சிவன் கோவிலாகவே பெருமளவு மாறியுள்ளது. காளியம்மன் கோவில் காளிகா பரமேஸ்வரி கோவில் என அழைக்கப்படுகின்றது. இவ்வாறு பல கோவில்களில் ஆகம முறையிலான கிரியைகள், வழிபாட்டு முறைகளுக்கேற்ப பெயர்கள் சமஸ்கிருதமயமாக்கம் செய்யப்பட்டுள்ளன. அதேவேளையில் பழைய பெயர்களும், ஆகமம் சாராத வழிபாட்டு முறைகளும், மரபுகளும் ஓரளவாவது பேணப்பட்டு வருகின்றமை குறிப்பிடற்பாலது. இதே போக்கு யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள பல கோவில்களிலே காணப்படுவது கவனித்தற்பாலது.

மேலும் ஏனைய இடங்களிற் போலவே இங்குள்ள கோவில்களும் அவை அமைந்திருக்கும் இடப்பெயர்களோடு சேர்த்தே அழைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டுகளாக, கிராஞ்சியம்பதி கந்தசாமி கோவில், கலட்டிப் பிள்ளையார் கோவில் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கோவிலைப் பற்றிக் குறிப்பிடும்போது, கோவில் வளர்த்த பண்பாடு பற்றியும் சிறிதளவாவது குறிப்பிட வேண்டியுள்ளது. கோவிலமைப்பிலே கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம் ஆகிய கலைகள் குறிப்பிடற்பாலன. குறிப்பாகக் கட்டிடங்கள் சிற்பங்கள் ஆகியனவற்றை உள்ளூர் கலைஞர்களும், குறிப்பாக வெளியூர் கலைஞர்களும் இவற்றை உருவாக்கியுள்ளனர். ஆகமங்கள், சிற்பநூல்கள் கூறும் விதிகளுக்கேற்ப இவை அமைக்கப்பட்டுள்ளன. இசைக்கலை சிறப்பாக பண்ணிசைக்கலையும், கர்நாடக இசையும் குறிப்பிடத்தக்கவை. நாதஸ்வரம், தவில் கர்நாடக இசைக்குரிய இசைவாத்தியங்களே, சில காலங்களில் உள்ளூரிலும் இக்கலைஞர்கள் வாழ்ந்து சில கோவில்களில் சேவகம் செய்தனர். ஆனால் சிறப்பாக மகோற்சவங்களுக்கும் வேறு முக்கியமான விழாக்களுக்கும் வெளியிலிருந்து தான் கலைஞர்கள் வந்து பங்கு பற்றினர். பண்ணிசை பொதுவாக நன்கு போற்றப்பட்டு வந்தது. இவ்விசையிலே ஓரளவாவது பயிற்சி பெற்றவர்கள் கோவில்களிலே திருமுறைகள் ஓதி வந்தனர். பெரும்பாலான பாடசாலைகள் கோவில்களினருகே தான் நிறுவப்பட்டிருந்தன. எனவே மாணவர்களும் பெரும்பாலான

ஆசிரியர்களும் குறிப்பாக வெள்ளிக்கிழமைகளிலே காலையிலே கோவிலுக்குச் சென்று திருமுறைபாடி சுவாமி தரிசனம் செய்த பின்னரே பாடங்களைக் கற்க கற்பிக்கத் தொடங்கினர்.

மஹோற்சவ காலங்கள் பெரிய கலைவிழாக்கள் போலவே பெரிய கோவில்களிலே நடைபெற்றன. இவ்விழாக்களுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து சிறந்த நாதஸ்வர, தவில் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டு சிறப்பான கச்சேரிகள் நிகழ்த்துவர். சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதிவரை சதிர்க்கச்சேரிகளும் இசைக்கச்சேரிகளும் சில திருவிழாக்களிலே சிறப்பாக இடம்பெற்றன. இவற்றைவிட கதாப்பிரசங்கங்களும் சில திருவிழாக்களிலிடம் பெற்றன. திருவிழா உபயகாரர்கள் போட்டியிட்டு வெவ்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி வந்தனர். கண்ணகையம்மன் கோவில், கலட்டி பிள்ளையார் கோவில், பெரிய புலம் பிள்ளையார் கோவில், குறிப்பாக பெருங்காடு கந்தசுவாமிகோவில் ஆகியனவற்றிலே மஹோற்சவங்கள் பிரமாதமாக பல்வேறு கலைநிகழ்ச்சிகளுடள் நடைபெற்றன. குறிப்பாக கந்தசுவாமி கோவில் பூங்காவனத்திருவிழா சென்ற நூற்றாண்டு நடுப்பகுதியிலே மிக கோலாகலமாக நடைபெற்றன. கோவில் முன்றில் நன்கு அலங்கரிக்கப்பட்ட மேடையிலே யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல நாதஸ்வர, தவில் கலைஞர்களும் பிரபலசதிர்(நடன)க் கலைஞர்களும், பிறரும் பங்குபற்றிச் சிறப்பித்தனர். நன்கு அலங்கரிக்கப்பட்ட பூந்தொட்டியிலே சுவாமி மேற்குறிப்பிட்ட கலைஞர்கள் வீதிகளிலும் தத்தம் பங்களிப்புச் செய்ய உலாவருதல் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இத்திருவிழாவை அன்றைய இளம் வாலிபர்கள் நடத்தி வந்தனர்.

மேலும் சிவாச்சாரியார்களும், ஏனையோரில் ஒரு சாராரும் சமய அறிவிலே சிறந்து விளங்கினர். சிவாச்சாரியர்களில் ஒரு சாரார் வேதங்கள் ஆகமங்களில் மட்டுமன்றி சைவத்திருமுறைகள், சைவசித்தாந்தம், புராணங்களிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தனர். இருபதாம் நூற்றாண்டிலிருந்தோரிலே சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள், ஐ.கைலாசநாதக் குருக்கள், தி.சதாசிவக்குருக்கள், ஸ்ரீநிவாசக்குருக்கள் முதலியோரைக் குறிப்பிடலாம். இவர்களைப் போலவே அந்தணர் அல்லாதவர்களிலே திரு.வ. பசுபதிப்பிள்ளை, வைத்தியர்.க.கணபதிப்பிள்ளை, அவருடைய சகோதரர் க.சதாசிவம்பிள்ளை ஆசிரியர், சேதுபதி ஆசிரியர், நா. தில்லையம்பலம் ஆசிரியர், கை.நாகமணி, சி.குருமூர்த்தி சாஸ்திரியார், வித்துவான் சி. ஆறுமுகம், வித்துவான் பொன்.அ.கனகசபை, தி.சதாசிவம் ஆசிரியர், சி.க. நாகலிங்கம் ஆசிரியர் முதலிய பல அறிஞர்கள் சைவத்திருமுறைகளிலும்,சைவசித்தாந்தத்திலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தனர். இவர்கள் பெரும்பாலும் தாம் வாழ்ந்த இடத்திலுள்ள கோவில்களிலே தான் திருமுறை ஓதுதல், கந்தபுராணம், பெரியபுராணம் முதலிய புராணபடனம் செய்தல், கோவில்கள் பற்றிய பதிகங்கள் ஊஞ்சல் முதலியனவற்றை இயற்றுதல் போன்ற பல சமயப் பணிகளைச் செய்து வந்தனர். புராணம் வாசித்துப் பயன் சொல்லுதலிலே மேற்குறிப்பிட்ட சில சிவாச்சாரியார்களும் பங்குபற்றினர்.

1954ம் ஆண்டு கண்ணகை அம்மன் கோவில் (முன்றலில்) நடத்தப்பட்ட சிலப்பதிகாரவிழாவும், 1960ம் ஆண்டு கலட்டி விநாயகர் ஆலயத்திலே தமிழுக்கும் தமிழர் நன்மைக்குமாக நடத்தப்பட்ட மஹாயாகமும் கோடியர்ச்சனையும் சில காலத்தின் பின்னர் இதே ஆலயத்தில் நடைபெற்ற

தமிழ்த்திருமுறை அர்ச்சனையும் குறிப்பிடற்பாலன. புங்குடுதீவிலே சைவசமய வளர்ச்சிக்காக திரு.வ. பசுபதிப்பிள்ளை விதானையாரால் நிறுவப்பட்டு நன்கு செயற்பட்டு வந்த சைவகலாசங்கத்தின் சமய கல்விச் செயற்பாடுகளும் அக்கழகம் கிராஞ்சியம்பதி முருகன் ஆலயச்சூழலிலே 1967ல் நடத்திய சைவப்பெருமகாநாடும், திரு.க. திருநாவுக்கரசு தலைமையில் இயங்கிவந்துள்ள சர்வோதயத்தின் சமூக சமயப்பணிகளும் நன்கு குறிப்பிடத்தக்கவை.

சமூகத்திற்கும் கோவில்களுக்குமிடையில் மிக நெருங்கிய பிணைப்பு பொதுவாக நிலவிவந்தது. ஆனால் சென்ற நூற்றாண்டின் எண்பதுகளிலேற்பட்ட போர் அனர்த்தங்கள் அவற்றைத் தொடர்ந்து 1991ல் ஏற்பட்ட மக்கள் இடப்பெயர்வினால் இங்கு பல நூற்றாண்டுகளாக நிலவி வந்த உட்கட்டுமானம் நன்கு சீர் குலைந்து விட்டது. 1991லும் அதற்கு முந்திய சில ஆண்டுகளிலும் பெருந்தொகையான மக்கள் புலம்பெயர்ந்து விட்டனர். 1991ம் ஆண்டு ஒக்டோபரிலேற்பட்ட பெரிய இடப் பெயர்வின் பின் சுமார் 850 மக்களே தங்கியிருந்தனர். 1996மே மாதம் தொடக்கம் சில மக்கள் மீளக் குடியேறித் தற்போது சுமார் 3000 மக்கள் உள்ளனர். இன்றைய சூழ்நிலையிலே பழைய உட்கட்டுமானத்தைக் காலத்திற்கேற்றவாறு அமைப்பதிலே சில பிரச்சனைகள் தொடர்ந்து நிலவுகின்றன.

இந்தப் பின்னணியிலேதான் 1991ம் ஆண்டு தொடக்கம் பல வகையிலும் பாதிப்படைந்துள்ள கோவில்கள், புனர் நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றன. இதற்காகக் கோவில்களுக்கு அரசாங்கமும் குறிப்பிட்ட தொகை நிதி வழங்கியுள்ளது. ஆனால் இந்த நிதி கோவில்கள் அனைத்திற்கும் வழங்கப்படவில்லை. ஆனால் நிதி வழங்கப்பட்ட கோவில்களுக்கு அத்தொகை போதாது. எனவே, கோவில்களை மீள அமைப்பதற்கு வெளிநாடுகளிலே புலம் பெயர்ந்து வாழும், சமயப்பற்றும், தேசப்பற்றுமுள்ள புங்குடுதீவு மக்களே முன்வந்து பேரூக்கமளித்து உதவி செய்து வருகின்றனர். இவர்களைவிட யாழ்ப்பாணம், குறிப்பாகக் கொழும்பு முதலிய இடங்களிலுள்ள சில வர்த்தகர்களும் பிறரும் தத்தம் பங்களிப்புகளைச் செய்து வருகின்றனர்.

1991ம் ஆண்டின் பின்னர் ஏ 9பாதை 2002லே திறக்கப்பட்ட பின்னரே கோவில் திருப்பணிகள் பெருமளவு துரிதப்படுத்தப்பட்டு மகாகும்பாபிஷேகங்களும், திருப்பணிகளும் நடைபெறுகின்றன, நடைபெறவுள்ளன. 1991 - 1996 வரை கிராஞ்சியம்பதி சிவன் கோவில் தவிர ஏனையவற்றிலே ஒரு நேரப்பூசை கூட நடைபெறவில்லை. சிவன் கோவில் அர்ச்சகர்கள் பெரும்பாலும் இங்கு கஷ்டங்கள் மத்தியிலே தங்கியிருந்து கோவில் பூசையைத் தொடர்ந்தனர். இங்குள்ள சின்னக்கதிர்காமம் என்னும் சிறிய ஆலயம் புகழ்பெற்ற கதிர்காமத்தை யொத்ததாகச் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் புங்குடுதீவு வர்த்தகரான திரு. பொன்னையா என்பவராலே அமைக்கப்பட்டது. கதிர்காமத்திற் போலவே வழிபாடு அவரால் நடத்தப்பட்டது. ஆனால் அவரின் மரணத்துடன் அது கைவிடப்பட்டுள்ளது. ஆனால் அக்கோவில் தேர், தீர்த்தம் பற்றி வாக்கிய பஞ்சாங்கம் தொடர்ந்து குறிப்பிடுகின்றது. ஆறுகாலப்பூசை மேற்குறிப்பிட்ட சிவன் கோவிலிலே தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. ஏனைய பல ஆலயங்களிலே வசதிக்கேற்றபடி மூன்று நேர, இண்டு நேர, ஒருநேரப் பூசைகள் நடைபெறுகின்றன. 1991ன் பின் இன்னும் சில கோவில்களிலே பூசை மீளத் தொடங்கவில்லை.

1991க்கு அல்லது சில ஆண்டுகளுக்கு முன்பாவது சுமார் 16000 மக்கள் வாழ்ந்த காலத்திலே முற்குறிப்பிட்ட கோவில்கள் நன்கு செயற்பட்டு வந்தன. ஆனால் தற்போது 3000 மக்கள் வரையில் வசிக்கும் போது இக்கோவில்கள் யாவும் குறிப்பாகப் பெரிய கோவில்கள் மீள அமைக்கப்பட்டாலும், முன்னைய காலத்திற் போல நன்கு செயற்பட முடியுமா? என ஒரு சாரர் வினா எழுப்புகின்றனர். ஆனால் கோவில்கள் மீள அமைக்கப்பட்டு முடிய மக்களில் மேலும் ஒரு சாராராவது மீண்டும் வருவார்கள். உட்கட்டுமானம் திரும்பவும் ஏற்படும் என எதிர்பார்க்கலாம். போதிய அளவு ஈடுபாடுள்ள மக்களின்றி பெரிய செலவுகளிலே திருப்பணிகள் ஏன் செய்ய வேண்டும் என வெளிநாடுகளிலுள்ள தேசப்பற்று, சமயப்பற்றுள்ள சிலரிடம் வினாவியபோது அவர்களின் பதில் பின்வருமாறு நல்ல நம்பிக்கையுடன் காணப்பட்டது. ஆதாவது "நம் ஊரிலே பிறந்த வளர்ந்த நாம் வசதிப்படி பணம் அனுப்பி எங்களுடைய கோவில்களை மீள உறுதியாக அமைத்துவிட்டால் அவை தொடர்ந்து செயற்படும். எமக்கு அடுத்த சந்ததியினர் எம்மைப்போல் இக்கோவில்களை ஆதரிப்பார்களோ தெரியாது அவர்கள் இங்கு பிறக்காவிட்டாலும் மூதாதையர் வழிபட்ட கோவில்கள் எனக்கருதி அவர்களில் ஒரு சிலராவது நிதி உதவி செய்வார்கள். வந்து தரிசித்தும் போவார்கள். ஆனால் பெரிய செலவுகள் செய்வார்களா என்பது தெரியாது. எனவே நன்கு உறுதியாகக் கட்டிவிட்டால் இவர்கள் ஆதரவ அளித்தால் என்ன, அளிக்காவிட்டால் என்ன ஊரிலுள்ள ஒரு சிலராவது வணங்குவார்கள். எனவே உடனடியாகப் பழைய நிலை வராது, காலப்போக்கில் ஏற்படும் என்ற நல்லெண்ணத்துடன் அவர்கள் கூறினார்கள். அந்நிலை ஏற்படவேண்டும் என அனைவரும் விரும்புவோமாக.

இவ்வாறு மீள அமைத்து மகாகும்பாபிஷேகம் நடைபெற்ற, நடைபெறும், நடைபெறவுள்ள கோயில்கள் வழிபாடுகளோடு சமூக நலனைக் கவனிக்கும் நிறுவனங்களாகவும் விளங்குதல் காலத்திற்கேற்ற செயற்பாடாகும். அன்னதானம், பிரசாதம் வழங்குவது மட்டுமன்றிக் குறிப்பாக மக்களுக்குச் சமயம், ஒழுக்கம் முதலியனவற்றைப் புகட்டுதல், வசதிப்படி ஏழை மக்களுக்கு உதவி செய்தல், இளம் சிறார்களுக்கு முன்பள்ளிக்கூடங்கள் நடத்துதல் போன்றவற்றிலே கோவில் பரிபாலனசபையினரோ, தர்மகர்த்தாக்களோ ஈடுபடுதல் சாலவும் நன்று. மக்களுக்கும் கோவில்களுக்குமிடையிலே நல்லுறவு நிலவுதல் நன்று. இது எங்களுடைய கோவில். இறைவழிபாட்டு நிறுவனம். எனவே இதனைப் போற்றி வழிபடுதலோடு பாதுகாத்தல் எம்முடைய கடமை என மக்கள் உணர்ந்து செயற்படுதலே மிக நன்று. காலம் தோறும் மக்கள் தங்களின் இன்னல்கள், கஷ்டங்கள், நீங்கவும் அபிலாஷைகள் நிறைவேறவும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்று முகமாகப் 'பல திருப்பணிகள் செய்துள்ளனர், செய்து வருகின்றனர்.

கோவில்களுக்குரிய அசையும், அசையாத உடைமைகளை நன்கு பயன்படுத்திப் பாதுகாத்தலோடு கோவிலின் வரலாறு சிறப்புக்கள், செயற்பாடுகள், பற்றிய விபரங்களையும் கோவிற் பிரசுரங்களையும் பழம் பொருட்களையும் பேணிப்பாதுகாத்தல் அவசியமாகும். பல கோவில்களின் வரலாறு தெளிவில்லை.

சென்ற நூற்றாண்டின் கடைசிப் பகுதிவரை கோவில் பரிபாலன சபையின் பிரதான உறுப்பினர்களும், தர்மகர்த்தாக்களும் பெரும்பாலும் இங்கே தங்கியிருந்து கோவில்களைக் கவனித்தார்கள். இப்பொழுது பலர் ஊருக்கு வெளியே தான் வசிக்கிறார்கள். சில வேளைகளிலே தான் இங்கு வந்து செல்லுகின்றார்கள். இந்த நிலைமை மாறவேண்டும்.

மேலும் ஒரு முக்கியமான அம்சம் குறிப்பிடற்பாலது. புங்குடுதீவு இறைபக்தி, சமயஞானம், மறைஞானம் முதலியவற்றிற்குப் பேர்போன இடங்களிலொன்றாகும். ஏற்கனவே குறிப்பிட்டவாறு பல கோவில்கள் நிறைந்த புண்ணிய பூமியாகும். வழிபாட்டிடங்கள் மட்டுமன்றி பல் சமய ஞானிகளும் தமிழ்ப்புலமையாளர்களும் தோன்றிய இடம்; உலாவிய இடம் வரலாற்று ரீதியிலே நோக்கும்போது பௌத்த சமயம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலே இலங்கையிலே பரவிய பின்னர் புங்குடுதீவு, நயினாதீவு, போன்ற தீவுகளிலே பௌத்த சமயத்திலே மிக உயர்ந்த ஞானம் பெற்ற "அர்ஹத்" துறவிகள் வாழ்ந்ததாக பாளி மொழியிலுள்ள மஹா வம்சமும் வேறு சில நூல்களும் கூறுகின்றன. அதேபோல இந்து சமய ஞானிகளும் வாழ்ந்தனர். 20ம் நூற்றாண்டிலே வாழ்ந்த நான்கு பிரபல்யமான ஞானிகளிலே மருதப்பு சுவாமிகள், சுப்பிரமணிய சுவாமிகள் வைத்திய சைவசித்தாந்த பேறிஞர். க.கணபதிப்பிள்ளை, சதானந்த சுவாமிகள் முதலியோர் குறிபிடற்பாலர். இவர்களுக்கு இங்கு சமாதிக் கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவர்களைவிட சரணவமுத்து சுவாமிகள் முதலியோரும் இருந்தனர்.

இந்த இடத்தைச் சேர்ந்தவர்களில் ஒரு சாரார் யாழ்ப்பாணத்திலும், இலங்கையின் வேறு சில இடங்களிலும் குறிப்பிடத்தக்க சமயப்பணிகள் செய்துள்ளனர்; செய்துவருகின்றனர். தற்பொழுது புலம் பெயர்ந்துள்ள வெளிநாடுகளிலும் சமயப்பணிகள் செய்துள்ளனர்; செய்துவருகின்றனர். எடுத்துக்காட்டுகளாக கனடாவிலே அமரர் பண்டிதர் வீ.வ நல்லதம்பி செய்துள்ள சைவப்பணிகள், லண்டனிலுள்ள கனகதுர்க்கை ஆலயத்தலைவராக இருந்து சமய, சமூகப்பணி செய்து வரும் அன்பர் முதலியோரைக் குறிப்பிடலாம். ஏற்கனவே குறிப்பிட்ட சிவாச்சாரியார்களும், வேறு சிலரும் சமய அறிவிலும் கோவில் கிரியைகள் செய்வதிலும் சிறந்து விளங்கினர். அவர்கள் இங்கு மட்டுமன்றி வேறு பல இடங்களிலும் சமயசேவை செய்து பிரபல்யமடைந்தனர். மேலும் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த சில குருமாரும் குறிப்பிடத்தக்கவர்கள். எடுத்துக்காட்டாகச் சென்ற நூற்றாண்டிலே தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் வண.டிஜே. அம்பலவாணர் போன்றோரைக் குறிப்பிடலாம். இவ்வாறு சமய ரீதியிலான ஞானிகள், சிலரின் தாயகமாகவும் இவ்விடம் விளங்குகின்றது. ஆகவே .சமய ஞான பாரம்பரியம் நிலவும் இடமாகவும் இத்தீவு திகழ்ந்துவந்துள்ளது. இவ்விடத்துக்கோவில்கள் பற்றிய வரலாறும் பண்பாடும் விரிவாக ஆராயப்பட்டு அனைவருக்கும் பயன்படும் வகையில் எழுதப்படல் சாலவும் நன்று.

புங்குடுதீவு சைவாலயங்கள் புதுப்பொலிவுடன் மீண்டும் விளங்கி மக்களுக்குச்சமய பண்பாட்டு கலங்கரை விளக்குகளாகத்திகழ எல்லாம் வல்ல இறைவன் இறைவி திருவருள் பாலிப்பாராக. மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலயம் மீண்டும் முன் மாதிரியான ஓர் ஆலயமாக இலங்க எல்லாம் வல்ல அம்பாள் வழிகாட்டி அருளுவாளாக.



புங்குடுதீவு அருள்மிகு கண்ணகையம்மன் என வழங்கும்
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயக்கோபுரம் புதுப்பிக்கப்படுகின்றது.



ஆலயத்தின் தெற்கு வீதி இவ்வாறு காட்சியளிக்கிறது.

# புங்குடுதீவு என்ற பெயர் எப்படி வந்தது?

திரு. தம்பிஐயா தேவதாஸ்
B.A. (Cey), BEd (Cey)
M.A. Journalism & Mass Communication

இலங்கையின் வடமாகணத்திலே யாழ்ப்பாணக் குடாநாட்டின் கடற்பரப்பில் பல தீவுகள் பரந்து கிடக்கின்றன. சப்த தீவுகள் உட்பட பதினொரு பெரிய தீவுகளும் வேறுசில சிறிய தீவுகளும் காணப்படுகின்றன. அனலைதீவு, எழுவைதீவு, காரைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, மண்டைதீவு, வேலணைத்தீவு ஆகிய ஏழு தீவுகளும் ஒரே தொடராக யாழ்ப்பாணக் குடாநாட்டின் தெற்கே அமைந்துள்ளன. சற்றுத் தொலைவில் நெடுந்தீவு அமைந்துள்ளது. இவற்றைவிடக் கச்சதீவு, பாலைதீவு, மான்தீவு கேரதீவு போன்ற சிறிய தீவுகளும் பரந்து கிடக்கின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள சப்த தீவுகளின் நடுநாயகமாக விளங்குவது புங்குடுதீவாகும். யாழ்ப்பாண நகரில் இருந்து கடற்பாதையால் இணைக்கப்பட்டுள்ள இத்தீவு "ப" வடிவில் அமைந்துள்ளது. 34 கிலோமீற்றர் சுற்றளவு உள்ள இத்தீவு 28.9சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்டதாகும்.

புங்குடுதீவு என்ற பெயர் இந்த ஊருக்கு நீண்டநாட்களாகவே வழங்கப்பட்டு வருகின்றது இந்தப் பெயர் எப்படி வந்தது என்பதற்கு பலரும் பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றனர்."பியாங்குதீபம்" என்பது புங்குடுதீவினைக் குறித்துள்ளது என வல்லிபுரச் சாசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது ஐரோப்பியர் ஆட்சியில் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் தீவகத்தில் காணப்படும் தீவுகளுக்கு தங்கள் நாட்டில் உள்ள பெயர்களைச் சூட்டிக் கொண்டனர். போர்த்துக்கீசர் புங்குடுதீவுக்கு "கொங்குரடிவா" என்று பெயர் சூட்டினர். பல தீவுகளுக்கு மத்தியில் புங்குடுதீவு அமைந்திருந்ததால் ஒல்லாந்தர் தம் தீவுகளின் பெயர்களில் ஒன்றான "மிடில்பேர்க்" என்ற பெயரைச் சூட்டினார்கள்.

மஞ்சள் நிறமும் வாசனையும் கொண்ட "புயாங்கு" என்ற ஒருவகை மரம் இத்தீவில் அதிகமாகக் காணப்பட்டதாம். அதனால் இத்தீவுக்குப் புயாங்கு தீவு என்ற பெயர் வந்தது. இப்பெயர் காலப்போக்கில் புங்குடுதீவு என்று மாறியது என்று சிலர் கூறுவர். இன்னும் சிலர் இக்கதையை வேறுவிதமாகவும் கூறுகின்றனர். "புங்கை" என்ற ஒருவகை மரம் அக்காலத்தில் இத்தீவில் அதிகமாகக் காணப்பட்டதாம். அதனால் இத்தீவுக்குப் "புங்குடுதீவு" என்ற பெயர் வந்தது என்கின்றார்கள்.

இந்தியாவில் தமிழ் நாட்டின் பூங்குடி என்னும் கிராமம் இப்பொழுதும் இருக்கிறது. அக்காலத்தில் இக்கிராமத்தைச் சேர்ந்த சிலர், போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் அவர்களது கொடுமைகளில் இருந்து தப்பி தமது பெண்களைப் பாதுகாப்பதற்காகத் தப்பி ஓடினார்கள். அப்படி தப்பி ஓடிய சிலர் இங்கு குடியேறினர். அவர்கள் இத்தீவிற்கு "பூங்குடி" என்று பெயர் சூட்டினர். அந்தப் பெயரே திருப்பூங்குடி பின்பு புங்குடுதீவு என மாறியது என்றும் சிலர் கூறுகின்றனர். புங்குடுதீவு ஆதிகாலத்தில் செல்வம் கொழிக்கும் கிராமமாக இருந்தது. அதனால் அதற்கு "பொன்கையூர்" என்ற பெயர் வழங்கப்பட்டது. அதுவே பின்பு புங்குடுதீவு என்று மாறியதோ என்றும் சிலர் கருதுகின்றனர்.

டானியன் ஜோன் என்னும் அறிஞர் கந்தபுராணத்தைச் சான்று காட்டி பின்வருமாறு விளக்கம் கூறுகின்றார் புங்கம் + உடு+தீவு = புங்குடுதீவு இவ்வாறே புங்குடுதீவு வந்தது என்று கூறுகின்றார். புங்கம் = அம்பு உரு உருவுதல் = வேல் உருவிப் பாய்தல் எனவே அம்பு அல்லது வேல் உருவிப் பாய்ந்த இடமே புங்குடுதீவு ஆகியது என்று அவர் கூறுகின்றார். குமாரசாமி என்ற அறிஞர் இன்னொரு கருத்தைக்கூறுகின்றார் அவர் புங்குடுதீவு என்னும் பெயர் சிங்களப் பெயரின் திரிபு என்று கூறுகின்றார். "புயங்கு திவயின" என்ற சிங்களச் சொல்லின் திரிபு என்று அவர் கூறுகின்றார். "திவயின" எனற சிங்களச் சொல்லின் பொருள் தீவு என்பதாகும் புயங்கு திவயின என்ற சிங்களப் பெயரை தமிழர்கள் புங்குடைய தீவு என்று வழங்கினர் என்றும் அதுவே பின்பு புங்குடுதீவு என்றும் மாறி இருக்கலாம் என்று அவர் எழுதி இருக்கிறார். இவரது கருத்துக்கு எதிரான கருத்தை பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை வெளியிட்டுள்ளார். "நம்பொத்த" என்ற சிங்கள நிகண்டில் இது "பியங்குதிவம்" எனக்கூறப்பட்டுள்ளது. புங்குடுதீவு என்ற சொல்லே காலகதியில் "பியங்குதிவம்" என மாறி இருக்கலாம் அதனை புங்கம் + உடு+தீவு எனப் பிரித்து புங்கமரம் நிறைந்த தீவு எனப் பொருள் கூறலாம். புங்கமரம் நெய்தல் நிலத்துக் கருப்பொருள் என்று அவர் கூறுகிறார். புங்குடுதீவு என்ற பெயர் எவ்வாறு வந்தது என்று இவ்வாறு பலரும் பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றனர். புங்குடுதீவு என்பது நாற்புறமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும். இந்தத் தீவுக்குள்ளும் பலதீவுகள் காணப்படுகின்றன. இவ்வாறு இங்கு 7 தீவுகள் காணப்படுகின்றன. பல்லத்தீவு, கேரதீவு, ஊரைதீவு, களதீவு, வரதீவு, கண்ணாத்தீவு, மண்டைதீவு என்று அழைக்கப்படுகின்றன.

இவற்றுள்ளே பல்லத்தீவும் கண்ணாத்தீவும் இன்றும் கடல் சூழ்ந்த சிறு தீவுகளாகவே உள்ளன. கேரதீவு ஒல்லாந்தர் காலத்திலேயே முருகைக்கல் பாதையால் பிரதான தீவுடன் இணைக்கப்பட்டு விட்டது. ஏனைய தீவுகள் இயற்கையாகவே கடல்தூர்ந்து மேடாகி பிரதான தீவுடன் ஒரே தரையாகி விட்டன. புங்குடுதீவு மிகநீண்ட கால வரலாற்றைக் கொண்டது. கண்ணகை அம்மன், பாணாவிடை ஐயனார் கோவில், பெரியபுலம் வீரகத்தி விநாயகர் ஆலயம் போன்ற ஆலயங்களின் வரலாறு காலத்தால் முந்தியது.

பழைய காலத்தில் இத்தீவுக்கு கடல்மூலமே பிரயாணம் செய்தார்கள். புங்குடுதீவுக்கும் வேலணைதீவுக்கும் இடையில் 1953ஆம் ஆண்டு வாணர் பாலம் அமைக்கப்பட்டதால் புங்குடுதீவு மக்கள் தரைமார்க்கமாகப் போக்கு வரத்தை ஆரம்பித்தனர். யாழ்ப்பாண நகரிலிருந்து வேலணையூடாக வரும் பிராதனவீதி புங்குடுதீவைத் தொடுகிறது. பிரதானவீதி மடத்துவெளி குறிச்சிக்காடு, ஆலடி ஆஸ்பத்திரியடிச் சந்தியூடாக பெருங்காடு சென்று ஒரு பகுதி குறிகட்டுவானுக்கும் மறுபகுதி இறுப்பிட்டிக்கும் செல்கிறது.

போர் காலத்துக்கு முன்பு புங்குடுதீவில் 16,000க்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வந்தனர். 12 வட்டாரங்களாகப் பிரிந்து ஒரு கிராமசபையின் நிர்வாகத்தில் இயங்கியது. கிழக்கு, மத்தி, மேற்கு என்ற கிராமசேவகர்கள் பிரிவையும், கொண்டிருந்தது. வேலணை அரசாங்க அதிபர் பிரிவின்கீழ் இப்பொழுது இயங்கி வருகின்றது. போர்ச் சூழல் நிலைகளால் இங்குள்ள மக்கள் நாட்டின் தென்பகுதிக்கும் வெளிநாடுகளுக்கும் இடம் பெயர்ந்தார்கள். இப்பொழுது இந்தக் கிராமத்தில் கிட்டத்தட்ட 3000 மக்களே வாழ்கின்றனர். இக்கிராமத்தில் பிறந்த பலர் வெளி இடங்களில் வர்த்தகர்களாகவும் அறிஞர்களாகவும், எழுத்தாளராகவும் பிரகாசிக்கின்றனர். இவ்வறிஞர்கள் இத்தீவின் புவியியல் தன்மைகளை ஆராய்ந்தால் மேலும் பல அரிய தகவல்களைப் பெறலாம்.

# தீவகம் - வரலாற்று நோக்கு

**பேராசிரியர் கா. குகபாலன்**
புவியியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தீவகப் பிரதேசம் புவியியல் ரீதியாகக் குடாநாட்டிலிருந்து வேறு படுத்தப்பட்ட பண்புகளைக்கொண்டிருந்த போதிலும் வரலாற்று நோக்கில் குடாநாட்டுடன் மட்டுமின்றி நாட்டின் வரலாற்றுடன் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருக்கின்றது. தீவக வரலாறு தமிழருடைய வரலாறாகவுள்ளது. இருப்பினும் சிங்களவர்கள் தமது வரலாற்றை - உண்மைத் தன்மையைப் பேணினார்களோ இல்லையோ இதிகாச வடிவில் எழுதி வைத்துள்ளனர். ஆனால், எமது பிரதேச வரலாற்றை பல்வேறு ஆதாரங்களினூடாக சிரமப்பட்டே பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. அதாவது இப்பிரதேசத்தினது அல்லது மக்களினது வரலாற்றை எடுத்துக் கூறக்கூடிய இலக்கியங்களோ அன்றேல் வாய்மொழி மூலம்பெறப்பட்ட தகவல்களோ மிகமிகக் குறைவாகவேயுள்ளது.

தீவகத்தின் வரலாற்றினை நோக்கின் மிக அண்மையிலுள்ள யாழ் குடாநாட்டுடனும் தென்னிந்தியாவுடனுமே நெருங்கிய தொடர்புகொண்டிருந்தது என்பதற்கு தீவகத்தின் அமைவிடம் சான்றாகவுள்ளது. பொதுவாக இவ்விரு பிரிவுகளிலிருந்து வர்த்தகம், மீன்பிடித்தல் ஆகியவற்றோடு தொடர்புடையவர்கள் இப்பிரதேசத்தை மையமாகக் கொண்டோ அன்றேல் இப்பிரதேசத்தினூடாகவோ தமது நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம். அது மட்டுமல்லாது தென்னிந்தியாவில் காலத்துக்குக்காலம் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும் இப்பகுதி நோக்கிய உள்ளிடப் பெயர்வினை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பாக இருந்திருக்க நியாயமுண்டு. குறிப்பாக பல்லவ, பாண்டிய, சோழ, விஜயநகர அரசுகளின் தோற்றங்களின் விளைவாக அவர்களுக்கெதிரானவர்களின் உள்வரவு நிகழ்ந்துள்ளமைக்குப் பல்வேறு சான்றுகள் உண்டு. உதாரணமாக கி.பி.1365 ஆம் ஆண்டில் மதுரையை ஆண்ட இஸ்லாமியரைத் துரத்திவிட்டு ஆட்சியைக்கைப்பற்றிய குமாரகம்பண்ணன் காலத்தில் பல நிர்வாக மாற்றங்கள் ஏற்பட்டமையால் உயர்பதவி வகித்தவர்கள் தீவுப்பகுதி உட்பட யாழ்ப்பாணப் பகுதியில் வந்து குடியேறினர் எனத் தெரிய வருகின்றது.

மேலும் யாழ்ப்பாணத்தை ஆண்ட சிங்கை ஆரியச்சக்கரவர்த்தியின் வேண்டுகோளின்படி செய்யூர் இருமரபும் துய்ய தனிநாயகன் என்னும் வேளாளன் நெடுந்தீவில் குடியமர்த்தப்பட்டான் என கைலாயமாலை கூறுகின்றது. இவரது வழித்தோன்றல்கள் பல்வேறு தீவுகளில் பரந்து வாழ்கின்றனர். அத்துடன் ஏற்கனவே கூறப்பட்டது போல குடாநாட்டிற்கும் தென்னிந்தியாவுக்குமிடையில் குறிப்பாக வர்த்தகம், மீன்பிடித்தொழில் மேற்கொள்வதற்கு இணைப்புப்பாலமாக தீவுப்பகுதிகள் காணப்பட்டிருக்கின்றன. இத்தொழிலில் ஈடுபட்டோர் காலத்துக்கு காலம் வருகை தந்து காலப்போக்கில் அங்கேயே தங்கியிருக்கலாம் ஏனெனில் தென்னிந்திய வழக்காறுகள், பண்பாட்டு அம்சங்கள் தீவகத்திலும் பெருமளவிற்கு அவதானிக்க முடிகின்றது.

தீவுப்பகுதிகளூடாக சர்வதேச வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. என்பதற்கு அங்கு காணப்பட்ட, காணப்படுகின்ற துறைமுகங்கள் சான்றாகவுள்ளன. மிக நீண்ட காலமாக ஊர்காவற்றுறைத் துறைமுகம் சர்வதேச பிரசித்தி பெற்றிருந்தது. இத்துறைமுகம் பற்றித் தமிழகத்திலுள்ள கல்வெட்டுக்களிலும் நாகபூரனி அம்மன் கோவிலில் உள்ள கல்வெட்டுக்களிலும் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மேற்குறித்த கல்வெட்டுக்களிலிருந்து 12 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற வர்த்தகம் பற்றிய தெளிவு பெறப்பட்டடுள்ளது. மேலும் காரைநகரிலுள்ள களபூமித்துறைமுகம் ஒரு பெரிய துறைமுகமாக விளங்கியுள்ளது. போல் டேயஸ் என்ற ஒல்லாந்த மதகுரு இத்துறைமுகமூடாக யானைகள் ஏற்றுமதி செய்யப்பட்டது எனவும் அதனால், இதற்கு யானைப்பாலம் என வழங்கியதாகவும் தெரிவித்தார். புங்குடுதீவில் புளியடித்துறை என்ற தற்போது பயன்படுத்தப்படாத துறைமுகம் ஒன்று உண்டு. இதனருகில் பெருக்கு மரங்கள் காணப்படுகின்றன. இம்மரங்கள் அராபியரால்அறிமுகம் செய்யப்பட்டது என்பர். எனவே, இத்துறைமுகத்தூடாக வெளிநாட்டு வர்த்தகம் நிகழ்ந்திருக்கலாம் எனக்கொள்ள இடமுண்டு. தீவுப்பகுதிகளுக்கும் குடாநாட்டுப்பகுதிகளுக்கும் இடையில் இடப்பெயர்வினைப் பொறுத்தவரை ஒத்த பண்புகள் காணப்படுகின்றன. உதாரணமாக கிராஞ்சி, கேரதீவு என்பன பூநகரியிலுள்ள உயரப்புலம் என்பது கொக்குவிலிலும் காணப்படுகின்றன.

தீவுப்பகுதியின் வரலாறுபெருங்கற்பண்பாட்டுடன் தொடர்பு கொண்டது. சாட்டி, புங்குடுதீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களில் காணப்படும் மேற்படி பண்பாட்டுத் தொடர்புகள் ஆனைக்கோட்டையிலும் அவதானிக்கப்பட்டுள்ளது.

தீவுப்பகுதியுட்பட யாழ் குடாநாட்டில் திராவிடர் வந்து குடியேறுவதற்கு முன்னர் நாகர் வாழ்ந்துள்ளனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. நாகர் பாம்பினை வழிபாடு நிகழ்ந்திருக்க நியாயமுண்டு. அத்துடன் புராதன வரலாற்றினைக் கூறும் மகாவம்சம், தீவம்ச இதிகாசத்தில் நாகதீபம் ஒரு பௌத்த சமயத்தின் வளர்ச்சியினைக் கொண்ட பகுதியாகவிருந்துள்ளது. எனப்படுகின்றது. இங்கு நாகர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு புத்தர் வந்து போனார் எனவும் அவற்றில் குறிப்பிட்டுள்ளது. இந்த நாகதீபமே நயினாதீவு எனக்கொள்ளலாம்.

பியாங்க தீபம் என்பது புங்குடுதீவினைக் குறித்துள்ளது எனவல்லிபுரச்சாசனத்தில் தெரியப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாட்டில் பெத்த மரபினை அடிப்படையாகக்கொண்டெழுந்த மணிமேகலையில் கூறப்படும் மணிபல்லவம் என்பது நயினாதீவையே குறிக்கின்றது எனவும் ஆகவே, தென்னிந்திய - இலங்கைப் பௌத்த மரபுகள் தீவகத்திலும் சங்கமித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் தமிழர்களே பௌத்தர்களாக இருந்திருக்கின்றனர் எனவும் தென்னிந்தியாவில் எவ்வாறு பௌத்த மதம் அழிவுற்றதோ அதேபோல தீவகத்தையுள்ளிட்ட பகுதிகளிலும் நிகழ்ந்ததிருக்கலாம் எனவும் கொள்ள இடமுண்டு. மேலும் நயினாதீவு எனும் பெயர் நயினப்பட்டா என்னும் பிராமணர் தமிழ்நாட்டிலிருந்து வந்து குடியேறியதால் அப்பெயர் வழங்கி வந்தது எனவும், இவரே நாகதம்பிரான் கோவில் அர்ச்சகராக இருந்துள்ளார் எனவும் தெரியவருகின்றது. நயினா என்றால் பாம்பு என்றும் பொருளுண்டு.

காரைச்செடிகள் அதிகமாக காணப்பட்டதால் காதைதீவு எனவும், பியாங்குச் செடிகள் காணப்பட்டதால் பிங்கதீவு எனவும், பின்னர் புங்குடுதீவாக மருவியது எனவும் சிலர் கருதுவர். தமிழ்நாட்டிலுள்ள புங்கனூர், பூங்குடி முதலிய இடப்பெயர்களை இங்கும் வைத்திருக்க

வாய்ப்புண்டு. இவையும் மருவி புங்குடுதீவாகியிருக்கலாம். நெடுந்தீவானது நீண்ட தீவாகவிருக்கின்றமையால் அவ்வாறு பெயர் பெற்றிருக்கலாம். இத்தீவுக்கு பசுந்தீவு எனவும் பெயர் உண்டு. அதிக பசுக்கள் இங்கு காணப்பட்டமையால் இராமேஸ்வரத்தில் நடைபெறும் நாளாந்தக் கோவில் பூசைக்கு இங்கிருந்தே பால் எடுத்துச் சென்றனர் என ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தை ஆரியச்சக்கரவர்த்தி ஆண்ட காலத்தில் வேலன் என்ற நாட்டுத்தலைவன் தானையுடன் (சேனை) அங்கு வாழ்ந்து வந்தமையால் அவ்விடம் வேலன் தானை என அழைக்கப்பட்டு காலப்போக்கில் வேலணை என மருவியது என்பர். இதேபோலவே நாராயணன் தானையுடன் தங்கியிருந்த இடம் நாரந்தனை என அழைக்கப்பட்டதாக ஐதீகமுண்டு. குளக்கோட்டன், வெடியரசன் பற்றிய கதைகள் நெடுந்தீவிலும், காரைநகரிலும் அல்லிராணிகள் பற்றிய கதைகள் அல்லைப்பிட்டியிலும் இன்றும் வழக்கிலுள்ளன. இவையாவும் ஐதிகமாகவிருப்பதனால் வரலாற்றாசிரியர்களால் வாண்முறையில் ஆராய வேண்டியனவாயுள்ளன.

10ஆம் நூற்றாண்டில் எழுச்சி பெற்ற சோழப்பேரரசு 11 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையைக் கைப்பற்றுகின்றது. இதன் தாக்கம் தீவகத்திலும் பிரதிபலிக்கின்றது. நாரந்தனையில் கண்டெடுக்கப்பட்ட முதலாம் இராசராசனின் 33 செப்பு நாணயங்கள் சேரமன்னனின் 5 வெள்ளி நாணயங்கள் சிறிய அம்பாள் சிலை என்பன சோழ நாட்டுக்கும் தீவகத்துக்குமிடையில் தொடர்பு இருந்துள்ளது. என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. அதுமட்டுமல்லாது புங்குடுதீவில் சோழனோடை, சோழன்புலன் முதலிய இடப்பெயர்களும் தொடர்பினை எடுத்துக் காட்டுகிறது. அத்துடன் இத்தீவிலுள்ள பல்லதீவு சோழருக்கு முன் ஆட்சிசெய்த பல்லவத் தொடர்பினைக் காட்டுவதாக அமையலாம்.

பண்பாட்டு வணிகத் தொடர்புகள் மட்டுமல்லாது கிரேக்க, ரோம அராபிய, சீன வர்த்தகத் தொடர்புகளும் காணப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. 1922 இல் வினாசிப்பிலிப்பன் என்பவர் அல்லைப் பிட்டியிலே கிடங்கு வெட்டியபோது 179 குஜராத் பொற்காசுகள் கிடைத்தன என அறியக் கிடைக்கின்றது. அதே போலவே யாழ்ப்பாண மன்னனின் சேது நாணயமும் கிடைக்கப் பெற்றுள்ளது. சீனத் தொடர்புகளும் தீவுப் பகுதிகளில் காணப்பட்டுள்ளன. வேலணை மேற்குக் கரையில் சீனன் கோவில் என்ற இடத்தில் சீனக்குடியிருப்பு இருந்ததாகத் தெரியவருகின்றது. 1936 இல் நயினாதீவில் கண்டெடுக்கப்பட்ட பெரிய சாடி 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீனச்சாவடி என அடையாளம் காட்டப்பட்டுள்ளது. இத்தகைய சாடிகளும் உடைந்த துண்டுகளும் அல்லைப்பிட்டி, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட சீனக் காசுகளைச் சான்றாகக் கொள்ளலாம். இவை பெரும்பாலும் 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும் என்பர்.

தீவுப்பகுதியிலுள்ள சில இடப்பெயர்கள், சாவான (ஜாவாக்காரன்) சீனன்புலம், கணக்கர் வளவு, செட்டியார் தோட்டம் செட்டிவளவு, பனிக்கன்புலம் என்பன ஜாவா, சீனா, இந்தியத் தொடர்புகளைக் காட்டுகின்றன. இவர்கள் இங்கு தங்கியிருந்து வர்த்தகம் செய்திருக்கலாம் எனக் கொள்ள இடமுண்டு. மேலும், கேரளத்திலிருந்து தீவுப்பகுதிக்கும் யாழ்குடாநாட்டுப் பகுதிக்கும் மக்கள் வந்து குடியேறியதற்குப் பல சான்றுகள் உண்டு. குறிப்பாக கேரளத்தையும் இலங்கையின் வடக்குக் கிழக்கையும் மலபார் பிரதேசமாகவே பின்வந்தோர் குறிப்பிட்டிருக்கின்றமை

இதற்குச் சான்று பகர்கின்றது. குறிப்பாக கோவளம் ( காரைநகர்) கரம்பன் ( வேலணை) ஆகிய பெயர்கள் கேரளாவிலும் காணப்படுகின்றன. ஆகவே, தென்னிந்தியத் தொடர்புகள் பல்வேறு காலங்களில் மக்கள் உள்வரவினையோ அன்றில் அந்நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பினையோ வெட்டவெளிச்சமாகக் காட்டுகின்றது. பண்ணைத்துறை தீவகத்தில் காணப்படும் ஒரு இடமாகும். இந்தியாவில் பெண்ணையாற்றுப் பகுதியிலிருந்து இடப்பெயர்வினை மேற்கொண்டோர் தமது பிரதேசம் போல் உள்ளது எனக்கருதி அப்பெயரைச் சூட்டியிருக்கலாம். அது காலப்போக்கில் மருவி பண்ணை என மாறியிருக்கலாம் என ஐதீகம் உண்டு.


ஐரோப்பியர் ஆட்சியில் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் தீவகத்தில் காணப்படும் தீவுகளுக்கு தங்கள் நாட்டிலுள்ள பெயர்களைச் சூட்டிக் கொண்டனர்.

| **போர்த்துக்கீசர்** | | | **ஒல்லாந்தர்** |
|---|---|---|---|
| வேலணை: | தனதீவு | (Tanadiva) | லெய்டன் |
| காரைநகர்: | கார்டிவா | (Cardiua) | அம்ஸ்ரடாம் |
| புங்குடுதீவு: | கொங்கரடிவா | (Congardiua) | மிடில்போக் |
| நயினாதீவு: | நாயடடிவா | (Nayadadiua) | ஹார்லெம் |
| அனலைதீவு: | | | ஹொட்டர்பம் |
| நெடுந்தீவு: | நெறுங்டிவா அல்லது | (Nerundiua)- | டெல்வ்ற் |
| | டீ. கிளராஸ் | (Dclaras Claras) | |


மேற்படி அவர்களிட்ட பெயரில் லெய்டன், டெல்வ்ற் என்ற இரண்டுமே வழக்கிலிருக்கின்றன. ஊர்காவற்றுறைக்கு அவர்கள் ஊர்ப்பெயரான கயிற்ஸ் என்று நாமம் இட்டனர். இதுவும் இன்றுவரை நிலவிவருகின்றது.

ஐரோப்பியர் தீவகத்தில் விட்டுவிட்டு சென்ற ஞாபகச் சின்னங்கள் இன்றுமுள்ளன. போர்த்துக்கீசர், ஒல்லாந்தரை நினைவூட்டுவதற்கு நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய இடங்களில் கோட்டைகளுள்ளன. அத்துடன் ஒல்லாந்தர், அராபிய, பாரசீகம் முதலிய பிரதேசங்களிலிருந்து குதிரைகளைக் கொண்டு வந்து நெடுந்தீவில் வளர்த்தனர். ஆங்கிலேயரும் குதிரை வளர்ப்புடன் அதனைப் பயன்படுத்தவும் செய்தனர். அக்குதிரைகளின் வழித்தோன்றல்கள் இன்னும் அங்குள்ளன. ஆங்கிலேய அதிகாரியான நோலன் அயர்லாந்தில் காணப்படுவது போன்று முருங்கைக்கற்களாலான வேலியினை அறிமுகப்படுத்தினான். இது இன்றுவரை நெடுந்தீவில் வழக்கிலுள்ளது. ஐரோப்பியரின் வருகையினால் பெற்ற முக்கியமான அம்சம் கத்தோலிக்க புரட்டஸ்தாந்து. கிறிஸ்தவ சமயங்களாகும்.

(இக் கட்டுரை பேராசிரியர் கா. குகபாலன் எழுதிய தீவகம் - வளமும் வாழ்வும் என்ற நூலிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது. அனுமதி வழங்கிய பேராசிரியர் குகபாலன் அவர்களுக்கு நன்றி.)



ஆலயத்தின் வசந்த மண்டபம் புனரமைக்கப்படுகின்றது.



ஆலயத்தின்
தேர் இருப்பிடக்
கட்டிடம் இவ்வாறு
காட்சியளிக்கின்றது.

# சக்தி வழிபாடும் சாக்ததந்திரங்களும்

**டாக்டர் மா. வேதநாதன். எம்.ஏ., பி.எச்.டி**
முதுநிலை விரிவுரையாளர்
இந்து நாகரிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

உலகிலே தோன்றி வளர்ந்த புராதன வழிபாட்டு முறைகளுள் சக்தி வழிபாடும் ஒன்றாகும். சக்தியைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடும் சமயம் சாக்தம் எனப்படும். இச்சமய நெறியினைப் பின்பற்றுவோரைச் சாக்தர்கள் என அழைப்பர். சக்தி வழிபாட்டு முறைகளையும் சாக்தக்கிரியை வகைகளையும் சக்தி பேதங்களையும் விபரிக்கின்ற பிரதான சமய - சாஸ்திர நூல்களாகச் சாக்த தந்திரங்கள் விளங்குகின்றன. தந்திர சாஸ்திரங்கள் கூறும் வழிபாட்டு முறைகளைத் தாந்திரிக வழிபாட்டு முறைகள் என்று குறிப்பிடலாம் சத்திய யுகத்தில் கருதியும் திரேதயுகத்தில் ஸ்மிருதியும் துவாபரயுகத்தில் புராணங்களும் விசேடமான சமயசாஸ்திர நூல்களாக விளங்கும் சிறப்புடையனவென்று மகா நிர்வாண தந்திரம் குறிப்பிடுகின்றது.

தந்திரம் என்ற சொல் தன் என்ற வினையடியிலிருந்து பிறந்ததாகும். தன் என்ற வினையடிக்கு நீட்டுவது என்பது பொருளாகும். இவ்வகையில் கிரியைகளை விரிவாக நீட்டி அதிக அளவில் செய்வதே தந்திரம் என்ற சொல்லின் பொருளாகும். தந்திரம் என்ற பதத்திற்கு அறிவு பரவுவதற்கு ஏதுவாகவுள்ளது. என்ற பொருளுமுண்டு. தந்திரம் என்றபதம், ஞானத்தை விஸ்தரிக்கும் சாஸ்திரம் என்று பொருள்படுவதாக சாக்த தந்திரங்கள் குறிப்பிடுகின்றன. கிரியையென மருவுமலையாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம் என்ற நிகண்டு நூலானது தந்திரம் என்ற சொல் சித்தாந்தம், ருத்ராலயம், பரிச்சதம் ஆகிய பொருள்களைக் குறித்து நிற்பதாகக் கூறுகின்றது. சேர்ஜோன் வூட்றொவ் என்ற அறிஞர் விதி, நியமம், சாஸ்திரம் சமயநூல் ஆகிய பொருள்களைத் தந்திரம் என்ற சொல் குறித்து நிற்பதாகக் குறிப்பிடுகின்றார்.

மனிதன் தன்னுடைய புலன்களைச் சரிவரப் பயன்படுத்துவதன் மூலம் புலனுணர்வுத் தன்மையிலிருந்து விடுபட்டு அவனை இறைத்தன்மைக்கு உயர்த்தமுடியுமெனச் சாக்த சந்திரங்கள் குறிப்பிடுகின்றன. இவ்வகையில் மனிதனை இறைத் தன்மைக்கு உயர்த்துவதற்கு உதவும் நுட்பமான அனுஷ்டானத்தோடு கூடிய சமய - சாஸ்திர நூல்களே சாக்த தந்திரங்கள் எனலாம்.

தந்திரங்களுக்கு ஆகமங்கள் என்ற பெயரும் உண்டு. உயர்ந்த மந்திர தத்துவங்களை உள்ளடக்கியிருப்பதாலும், உயர்ந்த உட்பொருளை உணர்த்துவதாலும் மனிதனை ஆன்மீக விடுதலை பெறச் செய்வதாலும் ஆகமங்களுக்குத் தந்திரம் என்ற பெயர் வழங்கப்பட்டிருப்பதாக காமிக ஆகமம் கூறுகின்றது.

தந்திரங்கள் வைதீக மரபுகளுக்கு மாறுபட்டவையாகவிருப்பினும் வேதங்கள் கொண்டுள்ள அதே குறிக்கோளைக் கொண்டு விளங்குகின்றன. வைதீக இந்து மரபுப் படி தந்திரங்கள் அல்லது ஆகமங்கள் என்பவை வேதத்தினை அடிப்படையாகக் கொண்டவைகளே என மகாதேவன் குறிப்பிடுகின்றார். எனவே கோட்பாட்டளவில் வேதத்திற்கும் ஆகமத்திற்கும் அத்துணை வேறுபாடில்லை எனலாம்.

இதனை, தந்திரத்தின் சமயதத்துவத்திற்கும் வேதத்தின் மெய்ப்பொருளுக்கும் வேறுபாடில்லை எனச் சிவபெருமான் பார்வதி தேவியிடம் கூறியதாகக் கூறும் குலார்ணவ தந்திரக் குறிப்பு உறுதிப்படுத்துகின்றது.

வேதங்களும் ஆகமங்களும் இறைவனால் அருளப்பட்டவை என்பது இந்துமரபாகும். இதனைத் திருமந்திரப்பாலும் உறுதி செய்கின்றது. மன்னுமாமலை மகேந்தர மதனில் சொன்ன ஆகமம்தோற்றுத்தருளி என்ற மணிவாசகரின் மணிவார்த்தைக்கு ஏற்ப சைவாகமங்கள் சிவபெருமானால் அருளப்பட்டவை போன்று சாக்த தந்திரங்களும் சிவபெருமானால் பார்வதி தேவிக்கு மகாகைலாசத்தில் உபதேசிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பரமேஸ்வரன் பராசக்தியின் நிர்ப்பந்தத்தினால் வேத வழி நின்று சனகர், சனந்தனர், சனக்குமரர், சுகப்ரம்மம், வஸிஸ்டர் என்ற ஐந்து மஹரிஷிகள் மூலமாக சுபாகம தந்திர பஞ்சகம் என்ற சக்தி வழிபாட்டுக்குரிய சமயாசார சாஸ்திரத்தை மண்ணுலகிற்கு வழங்கியதாகக் கூறப்படுகின்றது. இந்தச் சாஸ்திர நெறிப்படியே ஆதிசங்கரும் சக்தியை வழிபாடு செய்தார். இதனையே வேதம் சொன்ன வழியே வழிபட நெஞ்சுண்டு என்று அபிராமிப்பட்டரும் குறிப்பிடுகின்றார். இந்த வேதமார்க்கத்திற்கு அதிகார மில்லாத ஆன்மாக்களும் ஆன்மா ஈடேற்றம் பெறவேண்டுமென்ற நோக்கில் பரமேஸ்வரனால் அறுபத்தி நான்கு தந்திரங்களும் அருளப்பட்டன.

இந்துசமய மரபில் இருநூற்றைம்பதுக்கும் மேற்பட்ட தந்திரங்கள் இருந்ததாக அறியப்படுகின்றது. இந்து சமய நெறிகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி தந்திரங்கள் உள்ளன. சைவ தந்திரங்கள் முப்பத்தி ரெண்டெனவும், வைணவ தந்திரங்கள் எழுபத்தி ரெண்டெனவும் சாக்த தந்திரங்கள் அறுபத்தி நான்கு எனவும் கூறப்படுகின்றது. சாக்த தந்திரங்களின் தொகை அறுபத்திநான்கு என்பதை ஆதிசங்கரரின் சௌந்தர்யலஹரி என்ற சாக்த நூல் வாயிலாகவும் அறிந்து கொள்ள முடிகின்றது. எனினும் சாக்த தந்திரங்களின் (ஆகமங்கள்) தொகை எழுபத்தேழு என்றும், இவற்றுள் அறுபத்திநான்கு தந்திரங்கள் கௌலதந்திரங்கள் (கௌமாகமங்கள்) எனவும், வசிட்ட சங்கிதை சனகசங்கிதை, சனந்தன சங்கிதை சனற்குமாரசங்கிதை, சுதசங்கிதை என்ற ஐந்து சுமாகம தந்திரங்கள் (சுபாகமங்கள்) எனவும் ஏனைய எட்டும் மசிர தந்திரங்கள் (மிசிராகமங்கள்) என்றும் கூறப்படுகின்றன. சந்திரகலை சோதிஸ்வகி புவனேஸ்வரி துர்வாசமாதா தர்சஸ்பதியா என்பன குறிப்பிடத்தக்க மிசிர தந்திரங்களாகும். இம்மூன்று வகையான சாக்த தந்திர பிரிவுகளும் முறையே இடது கைமார்க்கம் (கௌல சாரம்) வலது கைமார்க்கம் (சமயாசாரம்) சூலம்பு மார்க்கம் என்று மூன்று வகையான சக்தி வழிபாட்டு மரபுகளை விபரிக்கின்றன.

சதுச்சதி என்ற பிரபந்தத்தில் மகாமாயாசம்பரம், யோகி நிஜாலசம்பரம் தத்துவசம்பரம், எட்டு விதமான பைவதந்திரம் எட்டு ரூபமான பஹுரூ தந்திரம், எட்டு விதமான யாமள தந்திரம் சந்தரஞானம் மாலினி மஹாஸமமோஹனம், வாமயுஸ்டம், மகாதேவம்,வாதுமை, வாதுலோத்தரம் , ஹருத்பேதனம், தந்தரபேதனம், குஹ்யதந்திரம், காமிகம், கலாபாதம், கலாஸாரம் குண்டிகாமதம், மதோத்திரம், வீணை, த்ரோதலம் பூந்தோட்டாமரம், குலஸாரம் , குலோத்தேசம் குலசூடாமணி சர்வஞ னோத்தரம் மஹாகாளீமதம் அருணேசம் மோதினீசம், விகுண்டேச்வரம், பூர்வத'ர், பச்சிமத'ம், உத்தரம் என்ற அறுபத்திநான்கு சாக்த தந்திரங்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றை விட மகாநிர்வாண தந்திரம் குலாரணவதந்திரம், ரோகினி தந்திரம், காமதேனுதந்திரம், சம்மோகன தந்திரம், நித்தியதந்திரம் , சனற்குமாரதந்திரம், ருத்திராயமன தந்திரம் ஆகிய தந்திரங்களும் சாக்தக் கிரியை முறைகளைச் சிறப்புற விபரிக்கின்றன. இவற்றினின்றும் வேறான குமாரதந்திரம் கௌரமார வழிபாட்டுமுறைகளை விபரிக்கின்றது.

பரந்த இந்தியா ஒரு காலத்தில் விஷ்ணு கிராந்தம் ரதகிராந்தம், அஸ்வகிராந்தம் என மூன்று கிராந்தங்கள் என்ற பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கிராந்தத்திற்கும் அறுபத்திநான்கு தந்திரங்கள் உள்ளன. ஒரு வரலாற்று நோக்கில் விந்தியமலைகளுக்கு கிழக்கே ஜாவாவரையுள்ள நிலப்பகுதி விஷ்ணு கிராந்தம் எனப்படும். விந்தியத்திற்கு வடக்கே மகாமக சீனம் உட்பட உள்ளநாட்டிற்கு ரத்கிராந்தம் என்பது பெயர். மேற்கே எஞ்சிய பகுதி அஸ்வகிராந்தம் ஆகும்.

தந்திரம் என்ற சொல்லானது கி.பி. 423 - 24 மாலவவருடம் (480) ஆம் ஆண்டைச் சேர்ந்த மல்வாவில் உள்ள காய்ங்டார் சாசனத்தில் முதன் முதலில் காணப்படுகின்றது. ஆகமம் என்ற சொல்வரும் சாசனச்சான்று இதற்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகும். எனவே ஆகமம் என்ற சொல்லானது வழக்கத்திற்கு வருமுன்னரே தந்தீரம் என்ற சொல் வழக்கத்தில் இருந்திருக்கலாமென எண்ண இடமுண்டு. திருஞானசம்பந்தர்( கி.பி. 7ஆம் நூற்றாண்டு) தனது திருநீற்றுப் பதிகத்தில் திருநீற்றை தந்திரமாவது நீறு என்று குறிப்பிட்டுள்ளார். திருநாவுக்கரசரும் மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி என்று தந்திரத்தின் தெய்வீக சக்தியைக் குறித்துள்ளார். தமிழில் தந்திர சாஸ்திரம் எனக் கூறக்கூடிய ஒப்பற்ற தனிநூல் திருமந்திரமாகும். இதில் உள்ள பாடல்கள்யாவும் ஒன்பது தந்திரங்களாக வகுக்கப்பட்டுள்ளன. அத்திருமந்திரம் தந்திரமாவது எந்தைபிரான் தன் இணையடிதானே என்று தந்திரத்தை குறிப்பிட்டுள்ளதும். நோக்கற்பாலதாகும். திருமூலர் எக் காலத்தில் வாழ்ந்தார் என்பதிலும் கருத்து வேறுபாடு உண்டு சிலர் கி.பி.6 ஆம் நூற்றாண்டு என்பர். வேறு சிலர் கி.பி.8 ஆம் அல்லது கி.பி.9 ஆம் நூற்றாண்டென்பர். காலம் எதுவாகிலும் திருமூலர் காலத்தை தந்திரசாஸ்திரகாலம் எனக் கூறமுடியும். ஆதிசங்கரர் (கி.பி.8ஆம் நூற்றாண்டு) அறுபத்தி நான்கு சகதிதந்திரங்களை சத்'யா தந்திரை என்று ஸௌந்தர்யலஹரீதியில் குறித்துள்ளார். தந்திரங்கள் கி.பி.10ஆம் நூற்றாண்டின் பின்னர் தோன்றியதென்பது சில அறிஞர்களின் கருத்தாகும். இது ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று சிவாகமங்களைப் போன்று தந்திரங்கள் நூல் வடிவம் பெற்றகாலம் பிற்பட்டவையாக மிகவும் முற்பட்டவை என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை.

சாக்த தந்திரங்கள் ஆன்மாக்களை ஏறுவரிசையில் பசு, வீரம், திவ்வியம் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கின்றன. தளை நீங்கப் பெறாத பசு என்ற ஆன்மாவானது தனது விலங்கியல்புகளை விடுத்துப் படிப்படியாக தெய்வீக குணம் பொருந்திய வீத, திவ்விய ஆன்மாக்களென்ற நிலையினை அடைவதற்கு சாக்த தந்திரங்கள் உதவுகின்றன.

குலார்ணவதந்திரம் ஏறுவரிசையாக வேதாசாரம். வைஷ்ணவாச்சாரம் , சைவாச்சாரம் தட்சிணாச்சாரம், சித்தாந்தாச்சாரம், கௌலாச்சாரம் என்ற ஏழுவித ஆசாரங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இங்கு ஆசாரம் என்ற சொல்லானது சாதகரின் ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் வழி வழக்கம் அனுஸ்டானம் என்ற பொருளின் வழங்கப்படுகிறது. இந்த ஏழு ஆசாரங்களும் முதல் மூன்றும் பசு ஜீவன்களுக்கும் அடுத்தது வீரஜீவனுக்கும், இறுதியிரண்டும் திவ்ய ஜீவனுக்கும் ஏற்பட்டவையாகும். தாந்திரிகப் பயிற்சியில் இறுதியாக விளங்கும் சித்தாந்தம், கௌலம் என்ற இரு ஆசாரங்களும் ஆன்மாவைப் புனிதமாக்கும் பணியைப் பூர்த்தி செய்கின்றன.

முதல் மூன்று ஆசாரங்களாக விளங்கும் வேதம் ,வைணவம்,சைவம் என்பவை முறையே கிரியாமார்க்கம், பக்திமார்க்கம், ஞானமார்க்கம் என அழைக்கப்படுகின்றன. வேதசாரத்தில் சடங்குகளும், வைணவ ஆசாரத்தில் தியானமும். சைவ ஆசாரத்தில் ஞானமும் வற்புறுத்தப்பட்டுள்ளன. முதல் மூன்று ஆசாரங்களிலும் அடைந்ததைப் பாதுகாக்கவே நான்காவது ஆசாரமாகிய தட்சண ஆசாரத்தில் முயற்சி செய்யப்படுகின்றது. இதன் பின் உள்ள வாமாசாரத்தில் பின் நோக்கிச் செல்லும் ஓட்டம் ஆரம்பிக்கின்றது. இந்த வாமாசாரக கிரியையினைப் பஞ்சதத்துவ வழிபாடு எனச் சாக்த தந்திரங்கள் குறிப்பிடுகிறன. மது மாமிசம், மீன், தானியம் என்ற ஐந்து பொருட்கள் பஞ்சதத்துவ வழிபாட்டில் இடம் பெறுகின்றன.இக்கிரியை யின் அடிப்படையாக அமைந்த தத்துவம் ஒருவன் விழுவதற்கு ஏதுவாயிருக்கிற ஒன்றே அவனை தெழச் செய்யக் கூடியதுமாக இருக்க வேண்டுமென்பதே ஆகும். ஒன்றுக்குப் பிரதியீடாக வேறொன்று வைத்தும் பஞ்சதத்துவ வழிபாடாற்றலாம் என்று தந்திரங்கள் குறிப்பிடுகின்றன. உதாரணமாக மதுவுக்கு பதிலாக தெங்கின் இளநீரும், புலாலுக்கு பதிலாக இஞ்சியும் பயன்படுத்தலாம் எனக்கூறப்பட்டுள்ளது. பஞ்ச தத்துவ வழிபாடு மிகவும் கடினமானவை. எனவே இது வீர ஜீவனுக்கே என்று தந்திர சாஸ்திரத்தில் திட்ட வட்டமாக கூறப்பட்டிருக்கின்றது. பசு ஜீவன் இதற்குத் தகுதியுள்ளது அன்று, திவ்வியனுக்கு இது தேவையில்லை.

தாந்திரிக வழிபாடு ஒரு தனியான வழிபாட்டு நெறியாகும். முதலில் விக்கிரகங்கள் வழிபாட்டுப்பொருளாக பயன்படுத்தப்படுகின்றன. படிப்படியாக வழிபடுவோன் அத்தெய்வத்தினை யந்திர வடிவத்திலோ அல்லது கோடுகளால் ஆன சக்கர வடிவத்திலோ தியானிக்கக் கூடிய வழியை தந்திரங்கள் கூறுகின்றன.

தந்திர சாத்திரங்களில் சக்தியின் ஒரு கூறாகிய காளியின் வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீராமகிருஸ்ண பரமஹம்சர் தந்திர சாதனைகளின் மூலம் காளி வழிபாட்டில் சிறந்து விளங்கினார். தந்திர வழிபாட்டு முறைகள் தவறாக நடந்த போதே சுவாமி விவேகானந்தர் தந்திரங்களைக் கண்டித்தார். "நிறுத்திடுவேன் நினைந்த உரு நிமலன் தானே" என்று சைவசித்தாந்த சிந்தனை போன்ற சக்தி தன்னுடைய சொந்தமான திருவுளப் பாங்கிற்கு ஏற்றபடியாக பல்வேறு உருவங்களை தாங்கிக் கொள்வாள் என்று காயத்ரீ தந்திரம் குறிப்பிடுகின்றது. சம்மோகன தந்திரத் திரு காளி, தாரா, சின்னமஸ்தா, சுந்தரி, வகலா, ரமா, மாதங்கி, புவனா, சித்திவித்யா, தூமவதி என்ற (தசமகாவித்தைகள்) கூறப்பட்டுள்ளன. யோகினி தந்திரம் காளியே உலக மாதா என்கிறது. கைவலயத்தை தரக்கூடியவள் காளியே எனச் சிவபெருமான் காமதேனு தந்திரத்தில் கூறியுள்ளார். சக்தி சாதனைகள் செய்வதற்கு சிறந்த இடங்களாக விளங்கும் சக்தி பீடங்கள் நூற்றெட்டாகும். சூலசூடாமணி தந்திரம் ஏழு சக்திபீடங்களையும் குலார்ணவம் பதினெட்டு சக்தி பீடங்களையம் குறிப்பிடுகின்றன. சக்தியை வணங்கும் உபசாரமே ஒரு பெரு வாழிபாடாகின்றது. உபசாரங்களின் தொகை அறுபத்தி நான்காக விளங்குவதை சாக்த நூல்களில் காணலாம். உபசாரங்களின் தொகை மூன்று, ஐந்து, ஏழு பத்து, பன்னிரண்டு, பதினாறு எனப்பலவகைப்படுவதை சனற்குமார தந்திரம் முதலான தந்திர சாஸ்த்திரங்களில் காணலாம்.

இவ்வாறு சக்தி வழிபாட்டு முறைகள் சக்தி பீடங்கள், சாக்த உபசாரங்கள், சாக்த சாதனைகள் முதலியவற்றை விபரிக்கும் நூல்களாக சாக்த தந்திரங்கள் விளங்குகின்றன. செல்வச்சந்நிதி முருகன் கோவில் வழிபாட்டு மரபுகளை கூர்ந்து நோக்கினால் அவ்வழிபாட்டில் தாந்திரிக வழிபாட்டின் முறையான விழுமியங்களைக் கண்டுகொள்ள முடியும். இவ்வகையில் செல்வச்சன்னிதி ஆலய தாந்திரிக மறைஞான மரபுகள் தனியாக ஆராயத்தக்கவையாகும்.

வைதீகக் கிரியைகளைச் செய்வதற்கு சில கட்டுப்பாடுகள் உள்ளன. எல்லா வருணத்தை சேர்ந்தவர்களும் அக்கிரியைகளைச் செய்ய முடியாது. ஆனால் தந்திரங்கள் கூறும் தாந்திரிக முறையிலான கிரியைகளை ஆண் பெண் என்ற வேறுபாடு எதுவுமின்றி எல்லா வருணத்தை சேர்ந்தவர்களும் செய்யலாமென கௌதாமிய தந்திரம், மற்றும் தந்திர நூல்கள் குறிப்பிடுகின்றன. ஒரு சண்டாளன் கூடத் தந்திரியக் கிரியை ஆற்றலாமென்ற தந்திரக் கருத்தானது "ஆவுரித்து தின்றுழலும் புலயரேனும் கங்கைவார் சடைக்கரத்தார்க்கு அன்பராகில் அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்ற திருநாவுக்கரசரின் வாக்கோடு ஒப்பு நோக்கக்கூடியதாகவுள்ளது. தமிழ் நாட்டின் பல்லவர் காலத்தில் தோன்றிய பக்தி இலக்கியங்கள் சாதிப் பாகுபாட்டைத் தகர்த்து அன்பினால் ஆண்டவனை அடைய வழிகாட்டியது போல சாக்த தந்திரங்கள் கிரியைகளை பக்தி சிரத்தையோடு செய்வதனால் அனைவரும் ஆன்மீக விடுதலை அடைய முடியுமெனக்கூறுகின்றது.

முடிவுரை.

சக்தி வழிபாட்டு முறைமைகளை விபரிக்கும் அடிப்படை ஆதார நூல்களாக சாக்த தந்திரங்கள் விளங்குகின்றன. இவை வேதாகமங்களை போன்று இறைவனால் அருளப்பட்ட புனித நூல்களாகும். சாக்தமரபில் அறுபத்தி நான்கு சாக்த தந்திரங்கள் தனிச் சிறப்புடையன என்றாலும் அவற்றை விடவும் சாக்த தந்திரங்கள் உள்ளன. திருமூலர் காலத்தை தந்திர காலம் எனக் கருத இடமுண்டு. ஆகமங்கள் தோன்றிய காலத்தில் அல்லது அதற்கு சற்று முந்திய காலத்தில் தந்திர சாஸ்திரங்களும் தோன்றியிருக்க வேண்டும். தமிழ் நாட்டில் ஆகம மரபுக்கு தனிச்சிறப்பு இருப்பது போன்று வங்காளத்தில் தந்திர மரபுக்கு பெரும் மதிப்புண்டு. எந்த வர்ணத்தை சேர்ந்த எவரும் கிரியைகளை செய்வதற்கு உரித்துடையவர் என்று கூறுவதனால் இந்து சமய சாஸ்திர வரலாற்றில் தந்திரங்களை புரட்சி இலக்கியங்கள் என்றும் கருத முடியும். இன்று சாக்த தந்திரங்கள் கூறும் தாந்திரிக வழிபாட்டினையே பெயர் மாற்றி சக்தி வழிபாடு என்று அழைத்து வருகின்றோம்.

# அறிவே தெய்வம்

திரு. முருகவே பரமநாதன்

உணர்ந்துணர்ந் திழிந்தக றுயர்ந்துரு
வியந்தவிந் நிலைமை
உணர்ந்துணர்ந் துணரிலும் இறைநிலை
யுணர்வரி துயிர்காள்
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் தரிய
னரை னென்னு மிவரை
உணர்ந் துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சுமின்
மனப்பட்ட தொன்றே

(நம்மாழ்வார்) திருவாய்மொழி 1:3.6

ஆறறிவு உடையவர் மனிதர். ஆறாவது அறிவு பகுத்தறிவு. மெய்ஞ்ஞான நிலையில் ஏழாவது அறிவு எனவும் பேசப்படும். மனிதத்தை விலங்கு, பிராணி, இருகால் மிருகம் என விஞ்ஞானிகள் சொல்வர். சமூகம், சமுதாயம், சமயிகள் மனிதப் பிறவியை மிகமிகச் சிறந்ததாகக் கணித்தனர். மனிதன் விலங்காகும் நிலையில் அவன் ஐயறிவினனே மக்கட் பதடிபற்றி திருக்குறள் பேசிற்று. எனவே எத்தரத்திலும் மனிதம் சாலச்சிறந்ததுதான். பகுத்தறிவுவாதமும், விஞ்ஞான பூர்வமான கண்ணோட்டமும், மனிதசிந்தனையின் உச்சக்கட்டம் எனலாம். ஆக பற் பல சிந்தனாவாதிகள் இப்பூப்பந்தில் எப்போதும் பிறந்து கொண்டிருக்கின்றார்கள் உளவியல், உடலியல், உயிரியல், இரசாயன பௌதீக இயல், விண்ணியல், மண்ணியல், தத்துவ இயல் மெய்யியல், சமூகஇயல் போன்ற பன்முக ஆய்வுகள் ஒப்பியல் நோக்கில் நடைபெறுகின்றன. இஃது மனிதம் உள்ளளவும் நிகழும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் பற்றி நம்மவர்கள் கூறியுள்ளனர். மனம் உடையவன் மனிதன், சிந்தனைவளம் மிக்கது மனிதம். எனவே அறிவு, நுண்ணறிவு, பகுத்தறிவு, இயல்பறிவு மெய்யறிவு, பட்டறிவு, உற்றறிவு, கல்வியறிவு என்றெல்லாம் பேசப்படுகிறது.

சமய நோக்கிலும் அறிவுசார்ந்த சிந்தனைகள் மனிதகுலத்தை வளர்த்து விட்டிருக்கிறது. மறை ஞானச்சிந்தனைகள் மக்கட் பண்பாட்டைப்பற்றி ஆய்கின்றன. உலகில் நாற்பெருஞ்சமயங்களுட் பற் பல சமய அனுட்டானங்கள் உண்டு. கிழக்கும் மேற்கும் இன்று இணைந்து காணப்படுகிறது. சமயம் பரம்பலும், வெவ்வேறு மதிப்பீடுகளும் பூப்பந்திலுண்டு. இறையோடு இயைந்த இன்பம் இன்பத்தோடியைந்த வாழ்வு உயர்வானது. சமய நோக்கில் அறிவியற் கண்ணோட்டம் இன்று விரவியுள்ளது. கடவுட் கொள்கையை ஏற்ற சமயங்களும் ஏற்காத சமயங்களும் உண்டு. நாத்திகமும் இல்லாமல் இல்லை. அபேதவாதம் கூறும் கொம்மியூனிசம் மதம் ஒரு அபினி என்கிறது. இறை தூதரின் மார்க்கத்திற் செல்லும் சமய வாதிகளும் இருக்கிறார்கள்.

கடவுளும் சமயமும் நம்பிக்கையில் எழுந்தனவே, நம்பிக்கை என்னும்போது ஆதார பூர்வமான நியாயப்படுத்தல், ருசுப்படுத்தல், உண்மைகள் விஞ்ஞான பூர்வமாக ஒப்பனையாக வேண்டுமென இன்று நியாயிக்கிறார்கள். மனிதனே தெய்வத்தைக் கிறியேற் பண்ணினான் என்ற கருத்தும் நிலவுகின்றமை கண்கூடு. இந்த நம்பிக்கை மூடநம்பிக்கையின் வெளிப்பபாடே என்போர் மதமாற்சரியங்களை ஏற்பதில்லை. உண்மையின் அடிப்படையில் ஒவ்வாதன. இன்று ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டும் புத்திசீவிகளும் இல்லாமல் இல்லை. பூரண நம்பிக்கையோடு வாழ்ந்தவர்கள் கூடச் சமயத்தை வெறுக்கிறார்களென்றால் ஏதோ அடிப்படை இருக்கத்தான் வேண்டும். "பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால் மெய்போலுமே" என்ற பேச்சும் ஆய்விற்குரியது. சிறிது ஊன்றிப் பார்த்தால் மூடநம்பிக்கைகள், கண்மூடிவழக்கங்கள், மதசம்பிரதாயங்கள், ஒத்த ஒவ்வாத தன்மைகள், அபிப்பிராய பேதங்கள் எம்மை மதத்தில் இருந்து பிரிக்கவும் செய்கிறது. இப்பார்வையிலே பல தெய்வ வணக்கம் ஏகப்பட்ட சடங்குகள், புதிய கடவுளர் அறிமுகம் கண்மூடித்தனங்கள், எனப்பல ஏற்றுக்கொள்ளமுடியாத குப்பைகள், நம்சமயத்தில் மலிந்து கிடக்கக் கண்ட பல மெய்ச் சமயிகள் சமய வெறுப்பாற் பிற சமயங்களைத் தழுவவும் செய்கிறார்கள். மதியால் வந்தது மதம் என்கிறார் காஞ்சிப் பெரியவர். சமைத்தல் என்றால் பக்குவம் செய்தல் ஒரு பெண் சமைந்து விட்டாள் என்றால் பக்குவப் பட்டுவிட்டாள் என்று பொருள். எனவே மக்களைப் பண்படுத்துவது சமயம் என்பர். அப்பரடிகள் சமையமென்ற சொல்லைப் பிரயோகித்திருக்கிறார். மக்களை பண்புடையர் ஆக்குவது சமயம் என்பது குன்றக்குடிகளார் கருத்து. மதசம்பந்தமற்றதுவே கடவுட்சிறப்பு. ஒன்றே தான் தெய்வம் இரண்டு என்று வந்து விட்டால் அது தெய்வமல்ல. அது கடவுட்படைப்பு பல கடவுள் வணக்கம் உடையதும் சமயமன்று. இன்று இந்துமதவாதிகள் ஸ்மார்த்தர்கள் சைவசமயத்தை விழுங்கமுயல்கின்றனர். போர் மூட்டச் சீர்குலைவால் சைவசமயிகள் நலிந்தபோது கைகொடுக்கும் போர்வையிற் கிறித்தவர் ஆக்கப்பட்டுள்ளனர். இந்நிலை வட அமெரிக்கா, ஐயிரோப்பா பிரிட்டனில் நன்கு வளர்ந்துள்ளது. எவர் எப்படிச் சொன்னாலும் தெய்வம் ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு என்ற பட்டினத்தார் வாக்கும் ஒன்றேகுலமும் ஒருவனே தேவன் என்ற கருதுகோளும் எம் சமய அடிநாதமாகும். எல்லோராலும் ஆமோதிக்கப்பட்டதுமாகும். இந்தக் கொம்பியூட்டர் யுகத்திலே பல தெய்வம் பேசுவது அறியாமை, அறிவு மூடம் எனலாம்.

நாகரிகப் பழைமை வாய்ந்த நாடுகளில் ஒன்று எகிப்து. ஆற்றோர நாகரிகம் கொழித்த இந்நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னே இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தெய்வவழிபாடு இருந்தது என அந்நாட்டு வரலாறுகள் கூறுகின்றன. இரண்டாயிரம் தெய்வங்களை வணங்கிவந்த பூர்வீக எகிப்தியர்களிடையே கடவுள் ஒருவனே என்ற புதிய சமயப் புத்தொளி பரப்பியவன் ∴ பாரோ அக்கன் அட்டான் என்ற மன்னன். ∴பாரோ அ(க்)கன் அ(ட்)டான் கல்லினாலோ, செம்பினாலோ (கடவுளுக்கு) எந்தச்சிலையையும் செய்யக்கூடாதெனத் தடைசெய்தான். இறைவனுக்கு வடிவம் இல்லை அவன் ஆகாசமெங்கும் நிறைந்துள்ளான் எனவே பாடல்களையும் புதிதாக ஆக்குவித்தான். கி.மு. 1400 ஆண்டுகளுக்கு முன் இவ்வண்ணமொருபுரட்சி செய்த அவனை வரலாற்று ஆசிரியர்கள் போற்றியுள்ளனர். எகிப்திய வரலாற்றில் அவன் முக்கிய இடம் பெற்றான்.

இக்கண்ணோட்டத்தில் ஏக தெய்வக் கொள்கையையே நம்முன்னோர்கள் மேற்கொண்டிருந்தனர் என்பது வெள்ளிடைமலை, ஆரியர் படையெடுப்பின்வழி பல தெய்வ வணக்கமாய் மாறியது. சதுர்வர்ணமுறையும் இப்பாரம்பரியத்தில் வந்ததே. இந்நிலை புலம் பெயர்ந்த தேசங்களிலும் புகுந்துவிட்டது. இல்லை புகுத்தப்பட்டது எனலாம். ஆலயங்களையும் ஆண்டவனையும் பெருக்கும் ஆரியத்துக்கு அடிபணிந்து சௌசம் செய்யும் சூத்திரர்கள் இதை உணர்ந்தாய் இல்லை. இதனால் உண்மையான சமயபாரம் பரியம் தடம் புரளக்காணலாம்.

அய்யன் வள்ளுவனார் அடக்க முடைமை, அருளுடைமை, அன்புடைமை ஆள்வினையுடைமை, ஊக்கமுடைமை, ஒழுக்கமுடைமை என்ற வரிசையில் அறிவுடைமை, மெய்யுணர்தல் என்ற அதிகாரமும் வகுத்துள்ளார். இது அறியாமை மடைமை போன்றவற்றைக் களையவே எழுந்தன போலும். உடைமை என்றாற் சொத்து பொருள் பண்டம் உடையராகத் தன்மை செல்வம், முதுசம் பொருந்தி இருத்தல் எனப்பொருள் படலாம். இந்த உடைமை மனிதவிழுமியங்களை ஆளுமைகளை உயர்த்தும் வள்ளுவம் சார்ந்த அறிவியக்கப்புலமைதரும் பிரயோகங்கள் எம்மை விழிப்புணர்வு பெறச் செய்கின்றன. அறிவற்றம் காக்கும் கருவி நன்றின்பால் உய்ப்பது அறிவு, மெய்ப்பொருள் காண்பது அறிவு செம்பொருள் காண்பது அறிவு. நுண்பொருள் காண்பது அறிவு உலகத்தோடொவ்வதுறைவது அறிவு, அறிவுடையார் ஆவதறிவார். அறிவுடையார் எல்லாம் உடையர், என்னும் தொடர்கள் எம்மைச் சிந்திக்கச்சீண்டுகின்றன. மெய்யுணர்தல் என்றால் எண்மையால் உணர்த்தும் என்று பொருள். இச்செந்நெறியில் சென்ற சிந்தனாவாதிகள் அறிவே தெய்வம் என்று அடித்துப் பேசினார். அவ்வளவோடமையாது வெகுத்துப்போன தெய்வவழிபாட்டையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இணையதளத் தொடர்புடைய இன்றைய இளஞ்சந்ததியினர் இந்நிலையால் கோயிலை வெறுக்கிறார்கள். அவர்கள் விடுக்கும் கேள்விக்கணைகளுக்குப் பொருத்தமான விடை கூற ஆலயங்களோ, அதுசார்ந்தவர்களோ சமயக்கணக்கரோமுன்வரவில்லை. பலதெய்வ வழிபாட்டை அறிமுகம் செய்யும் ஆலயங்கட்குப் போவோர்க்கு எதை வழிபடுவது எதை விடுவது எதைத் தவிர்ப்பது என்றவினா ஒன்றை விட்டு ஒன்றை வணங்கினால் கடவுள் தண்டிப்பாரோ என்ற சபலம் தட்டுவதும் இயல்பே.

ஒரு ஆலயத்தில் பல உற்சவங்கள் (திருவிழா) அனேகசடங்குகள் யாகம், ஓமம், திருக்கல்யாணங்கள், சதா அர்ச்சனைகள் போன்றவற்றால் மக்கள் பெரிதும் வெறுப்படைகிறார்கள். இந்நிலை நமக்கு வரக்கூடாதென்பதை மக்கள் உணர்கிறார்கள். எனவே அறிவே தெய்வமென்ற உண்மையை உணரத்தொடங்கிவிட்டனர். கல்லிலும், செம்பிலுமோ இருப்பான் எங்கண்ணுதலே எனப்பாடினார் பட்டினத்தார். நம் மத்தியில் இந்த அறியாமையை, மூடத்தனங்களை அகற்றும் மாமனிதர்கள், உழைப்பாளிகள் தோன்றவேண்டும். எம் சந்தேகங்கள்போய், அறிவுபூர்வமான எண்ணங்கள் பரப்பப்படவேண்டும். அறிஞர்களின் அறிவோதயத்தில் அறியாமை இருள் அகல வேண்டும்.

சமுதாய மட்டத்திலும் கவிதை மரபிலும் பல புரட்சிகளை யாக்கிய பாரதி பல தெய்வ வணக்கத்தைச் சாடினார்.

ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்! - பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுன்
டாமெனல் கேளீரோ?
மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயக்கும் மதியிலிகாள்! எத
னோடும் நின்றோங்கும் அறிவொன்றே தெய்வமென்
றோதி யறியீரோ?
*(பாரதியார் கவிதைகள் அறிவே தெய்வம் 1-2)*

தெய்வம் பல பல சொல்லிப் - பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்
உய்வ தனைத்திலும் ஒன்றாய் -எங்கும்
ஓர்பொருளானது தெய்வம்
யாரும் பணிந்திடும் தெய்வம் - பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று - இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்
(பாரதி கவிதை - முரசு 11,13)

இன்றைய இளந்தளிர்கள் பல தெய்வ வணக்கத்தை ஏற்பதில்லை. பல கோயில்களும் பலதேவதைகளும் வளர்ந்து வணிகப் பாதையிலே தான் வழிபாட்டிடங்கள் தொழிற்படுகின்றன. தெய்வத்தை பெருக்குவதிலும் பார்க்க பல கோவில்களைத் திறப்பதிலும் பார்க்க ஆலயங்கள் சமுதாயசேவைமையங்களாய் மாறவேண்டும். சமய எண்ணங்களை விதைக்கவும் வேண்டும். சமயக்கட்டமைப்பை மேற்கொண்டு புதிய சமுதாயத்தை உருவாக்கவும் வேண்டும். அதர்மகர்த்தாக்கள் அறங்காவலர் தேவையில்லை. பூசகர்களும் சிறந்த பூசுரராய்த்திகழ வேண்டும்.

சுமார் பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரியார் திருப்புகழிலே பல இடங்களில் இதை எடுத்துக் கூறியுள்ளார்

அரவு புனைதரு புநிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர வொளி திகழ்
அறிவை யறிவது பொருளென அருளிய பெருமாளே
திருப்புகழ் 509 (குமரகுருபரர்)

இதன் கருத்து
பாம்பை ஆபரணமாகக் கொண்ட பரிசுத்த மூர்த்தியாம் சிவனும் வழிபட்டு வணங்க உனது மழலை மொழியால் அவர் தெளிவுற ஒளிமயமாம் அறிவை அறிவதுதான் பொருள் என்பது என்று அவருக்கு (தந்தைக்கு) உணர்த்திய பெருமாளே

ஈசனுடன் ஞான மொழிபேசிய முருகன் குருபரனாகத் திகழ்கிறான். தந்தைக்கு உபதேசம் பண்ணிய சாமியைத் தகப்பன் சாமி என்பர். இந்த அறிவை அறிவது தான் பொருளென உணர்த்திய (பெரும் + ஆள்) பெருமாள் முருகன் ஓங்காரத்துட் பொருளை ஐயன் எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே என்பது திருவாசக வாக்கு.

குகையில் நவநாத ருஞ்சி றந்த
முகைவனச் சாத னுந்த யங்கு
குணமு மசு ரேச ருந்த ரங்க முரல்வேதக்

திருமாலின் கொப்பூழாம் சிறந்த தாமரை மொட்டில் தோன்றிய பிரமனும் விளங்கும் முக்குணங்களும் அசுரர்தலைவர்களும், கடல்போல் ஒலிக்கின்ற வேதத்தைத்

குரக தபு ராரி யும்பர சண்ட
மரகதமு ராரி யுஞ்செ யங்கொள்
குலிசகைவ வாரி யுங்கொடுங்க ணற நூலும்

திரிபுரத்தை எரித்த அந்த நாளில் தேரின் குதிரையாகக் கொண்ட திரிபுர சம்மார மூர்த்தியாம் சிவனும், வீரம்மிக்கவரும், பச்சை நிறங்கொண்டவரும், முரன் என்னும் அசுரனை அழித்தவருமாகிய திருமாலும், வெற்றி பெற்ற குலி ஆயுதத்தைக் கையிற் கொண்டவனும் வலன் என்னும் அசுரனை அழித்தவனுமான இந்திரனும் (கொடுங்கண்) கடுமையானவிதிகளைத் திட்டங்களை விதிக்கும் தருமசாத்திரநூல்களும்

அகலிய புராண மும்புர பஞ்ச
சகலகலை நூல்களும் பரந்த
அருமறைய நேக முங்கு விந்தும் அறியாத

விரிவான புராணங்களும் உலகிலுள்ள சகல கலை நூல்களும், விரிந்துள்ள அரிய மறை நூல்கள் (வேதம் முதலிய மறை நூல்கள்) பலவுமாக இவையெல்லாம் ஒன்று கூடிச் சேர்ந்துமுயன்றும் அறியமுடியாத

அறிவு மறி யாமை யுங்கடந்த
அறிவு திரு மேனி யென்று ணர்ந்துன்
அருணசர ணார விந்த மென்று அடைவேனோ
(திருப்புகழ் 1019)

அறிவு அறியாமை ஆகிய இரண்டையும் கடந்து அறிவு எதுவோ அதுவே உனது திருமேனியாகும் என நான் உணர்ந்து உன்னுடைய சிவந்த தாமரை போன்ற திருவடியை என்று சேர்வேனோ?

அறிவும் அறியாமையுங் கடந்த அந்த அறிவே இறைவன் திருமேனி என்பது அருணகிரியார் கருத்து. அருணகிரியாருக்குப் பல தசாப்தங்கள் முன் தோன்றி திருமூலர் இச்சிந்தனையை எப்பவோ சொல்லியுள்ளார்.

அறிவறி யாமை இரண்டு மகற்றிச்
செறிவா யெங்கும் நின்ற சிவனைப்
பிரிவறியாது பிராணென்று பேணும்
குறியறி யாதவர் கொள்ளறியாரே

(திருமந்திரம் 2580)

அறிவு வடிவென் றறியாத என்னை
அறிவு வடிவென் றருள் செய்தான் நந்தி
அறிவு வடிவென் றருளால் அறிந்தே
அறிவு வடிவென் றறிந் திருந்தேனே

(மேலது 2357)

அறிவுக் கழிவில்லை யாக்கமும் இல்லை
அறிவுக் கறிவல்ல தாதாரம் இல்லை
அறிவே அறிவை அறிகின்ற தென்றிட்
டறைகின் றனமறை யீறுகள் தாமே

(மேலது 2358)

அறிவே தெய்வமென்ற கருத்தை வேத வாக்காகப் பாடிய பாரதிக்குப் பல்லாயிரம் ஆண்டு கட்கு முன்னரே திருமூலர் கூறியுள்ளார். இறைவன் ஒருவனே என்பதை வாதவூரர் நிலைநாட்டியுள்ளார். இவ்வுண்மையை சம்பந்தரும் சுந்தரரும் எடுத்துச் சொல்லியுள்ளனர்.

உறையும் அறிவேயுன்னை யல்லால்
அமையாதெனதாதரவே

(சம்பந்தர் 3:55-9)

அறிவே உன்னை யல்லால் இனியாரை நினைக்கேனே

(சுந்தரர் 7:24-9)

நம் அறியாமையால் தெய்வங்கள் பலபேசி அலைகின்றோம். காணாதென்று தெய்வங்களைத் தேவதைகளைப் பெருக்கி வணிகம் செய்கின்றோம். இந்தக் கடைகள் வேண்டாம் சிறுதெய்வம், பெருந்தெய்வம், என்று இந்து மதமும் சைவமும் எம்மை ஏமாற்றலாம் நாம் ஏமாந்து போக மாட்டோம். கலிகாலக்கந்தன், கலிகாலக்கண்ணன், கலிகால அய்யப்பன் என்று சொல்லி என்ன கண்டோம் எம் அறிவைக்குருடாக்கியதுதான் பயன். யுகத்தோறும் தெய்வம் வேறா? கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் யார், நமக்கு விளக்கந்தரயாரும் இல்லை தாயுமானாரும் பத்திரகிரியாரும் அறிவே தெய்வமென்றார். உலகில் ஆயிரம் தெய்வமில்லை

அறிவை அறிவதுவே ஆகும் பொருள் என்று
உறுதி சொன்ன உண்மையினை ஒருநாள் எந்நாளோ

(தாயுமானவர்)

அறிவை அறிவா லறிந்தே அறியும் அறிவதனில்
பிறவு படநில்லாமல் பிடிப்பதினி எக்காலம்

அற்ப சுகமறிந்தே அறிவை அறிவால் அறிந்து
கெற்பத்தில் வீழ்ந்து கொண்டகேடறுப்ப தெக்காலம்

(பத்திர கிரியாம் புலம்பல் எந்நாட்கண்ணி 184,25)



ஆலயத்தின் தண்ணீர்ப்பந்தல் புனரமைக்கப்பட்டுள்ளது.



கண்ணகையம்மன் ஆலயத்திற்கு வடக்குப்புறத்தில் அமைந்துள்ள
ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயில்

# மன்னார் முதல் மாத்தறை வரையில் பழம் பெரும் ஈஸ்வரங்கள்

த. மனோகரன்

இலங்கையில் மேற்குக் கரையில் மன்னாரிலிருந்து மாத்தறைவரை பல நூற்றாண்டுகள் பழமையும் பெருமையும் கொண்ட ஆறு சிவாலயங்கள் இருந்தமை அப்பிரதேசங்களில் இந்துக்களின் வரலாற்றுச் சின்னங்களாகவும் பண்டைய பெருமையையும் இருப்பையும் எடுத்துக் கூறுவனவாயுள்ளன.

விஜயன் இலங்கைக்கு வந்து கரையொதுங்கிய காலத்தில் இலங்கையில் புகழ்பெற்ற ஐந்து சிவாலயங்கள் இருந்ததாக மகாவம்சம் கூறுகின்றது. வடக்கே நகுலேஸ்வரமும், கிழக்கே திருக்கோணேஸ்வரமும், மேற்கே திருக்கேதீஸ்வரமும், முன்னேஸ்வரமும், தெற்கே தொண்டீஸ்வரமும் மேற்படி ஐந்து சிவாலயங்களாகும். இதனை வரலாற்று அறிஞரான சேர் போல் பிரிஸ், கலாநிதி க. இந்திரகுமார் போன்றோர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இவற்றைவிட நாடு முழுவதும் மேலும் பல சிவாலயங்கள் இருந்தமைக்கான ஆதாரங்களுமுள்ளன. இந்த வகையிலே மன்னார் முதல் மாத்தறை வரையிலான இலங்கையின் மேற்குக் கடற்கரையை அண்டிய பகுதியிலுள்ள ஆறு சிவாலயங்கள் அதாவது ஈஸ்வரங்கள் பிரசித்தி பெற்றவை.

மகாவம்சம் கூறும் ஐந்து சிவாலயங்களில் மூன்று இப்பகுதியில் உள்ளன. அதே போன்று பழமை கொண்ட வேறு மூன்று சிவாலயங்களும் இங்குள்ளமை குறிப்பிடத்தக்கது.

மன்னாரிலுள்ள திருக்கேதீஸ்வரம் திருஞான சம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோரால் தேவாரப் பதிகங்கள் பாடப்பெற்ற பெருமையுடையன இன்றும் உலகிலுள்ள இந்துக்களின் கவனம் திருக்கேதீஸ்வரம் மீது உள்ளமை பெருமைக்குரியது. போர்த்துக்கேயரால் சிதைக்கப்பட்ட போதும் மீண்டும், மீண்டும் வன்முறையாளரால் சிதைக்கப்பட்டபோதும் நிலைத்து நிற்பது திருக்கேதீஸ்வரமாகும்.

அதற்குத் தெற்கே சிலாபம் நகரிலிருந்து ஒருமைல் கிழக்கே உள்ள முன்னேஸ்வரமும் போர்த்துக்கேயரால் சிதைக்கப்பட்டபோதும் இன்றும் தன்பழம்பெருமை குன்றாமல் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

திருக்கேதீஸ்வரமும், முன்னேஸ்வரமும் இந்து மக்கள் மத்தியிலே பெற்றுள்ள முக்கியத்துவம் ஏனைய நான்கு சிவாலயங்களும் பெறாதிருந்த போதும் அவற்றின் வரலாற்றுச் சிறப்புக்கள் இந்துக்களின் பெருமைக்கும், சிறப்புக்கும் சிறந்த ஆதாரங்களாகவுள்ளன.

கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயம் பல நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த சிவாலயமாகும். 1794ஆம் ஆண்டு கடலில் முத்துக் குளிக்கச் சென்றவர்களினால் கண்டெடுக்கப்பட்ட விநாயகர் திருவுருவம் இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பின்னரே இவ்வாலயம் முத்து விநாயகர் ஆலயம் என்ற பெயரை ஏற்றது.

அதற்கு முன் பல நூற்றாண்டுகளாக இவ்வாலயம் சோமசுந்தரேஸ்வரம் என்ற பெயருடன் விளங்கியது. இவ்வாலயத்திலுள்ள பழமைவாய்ந்த சிவலிங்கமும், அழகுடை நந்தியும் இன்றும் வழிபாட்டிற்குரியனவாயுள்ளன.

அடுத்ததாக கொழும்பு மாவட்டத்தின் தெற்குப் பகுதியிலுள்ள இரத்மலானையிலுள்ள திருநந்தீஸ்வரம்.1518இல் போர்த்துக்கேயரால் சிதைத்தழிக்கப்பட்ட இச்சிவாலயத்தின் சின்னங்கள் நிலத்தினடியிலிருந்து கண்டெடுக்கப்பட்டு பதினான்கு ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன.

மிகப்பெரிய ஆவுடையாரும், உடைந்த நிலையிலுள்ள நந்தியும் பல கருங்கற் படிவங்களும் திருநந்தீஸ்வரத்தின் பழமைக்குக் கட்டியம் கூறி நிற்கின்றன. அதே வேளை 1954இல் ராகுல தேரர் என்ற பௌத்த பிக்கு தனது "சலலிஹினி சந்தேசய" என்ற சிங்கள மொழியிலான காவியத்தில் இவ்வாலயம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் ஈஸ்வரன் கோயில் வழிபாட்டு முறைகளைச் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ள ராகுல தேரர் "மக்கள் மிகவும் விருப்புடன் தமிழ் மொழியில் பாடும் தோத்திரங்களால் மனதைக் கவரும் ஈஸ்வரன் கோயில்" என்று குறிப்பிட்டுள்ளார்.

உதவித் தொல்பொருள் ஆணையாளர் செனரத் திசாநாயக்க இவ்வாலயம் 10,11ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்த தென்கின்றார். இச்சிவாலயத்தின் பிரமாண்டமான கருங்கல்லாலான

வாயிற் தூண்கள் அண்மையிலுள்ள புகையிரத வேலைத் தளத்தில் புதையுண்டுள்ள தென்று கூறப்படுகின்றது. கொழும்பு மாவட்டத்தில் இந்துக்களின், தமிழர்களின் பழம்பெரும் வரலாற்றுச் சான்றாகக் கொள்ளப்படும். இவ்வாலயம், முருகன் ஆலயமாக மாற்றமடைந்திருப்பினும் மீண்டும் சிவவழிபாடுகள் நடைபெற்று திருநந்தீஸ்வரம் என்ற பண்டைப் பெயருடன் பிரசித்தமாகி வருகின்றது.

தெற்கில் காலி மாநகரில் பாண்டியரின் மீன் சின்னத்தை வாயிலிலேயே தாங்கி நிற்கும் அழகிய, உயர்ந்த கோபுரத்தைக் கொண்டது மீனாட்சி சுந்தரேஸ்வரம். இலங்கையின் தென்பகுதியில் பாண்டியரின் செல்வாக்கு மேலோங்கியிருந்த வேளை அதாவது சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மீனாட்சி சுந்தரேஸ்வரம் பாண்டிய அரசால் நிர்மாணிக்கப்பட்டதாகக் கொள்ளப்படுகின்றது. அங்குள்ள மிகப் பெரிய நந்தி ஆலயத்தை அழகு செய்கின்றது. இன்றும் சீருடன் விளங்கும் இச்சிவாலயம் காலி மாவட்டத்தில் இந்து சமயத்தினதும், தமிழினதும் தொன்மைக்குச் சான்றாக விளங்குகின்றது.

அடுத்தது மாத்தறை மாவட்டத்தின் தேவேந்திர முனை (தெவிநுவர)யில் விஜயனின் வருகையின் போதிருந்த பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான தொண்டீஸ்வரம் போர்த்துக்கேயரால் சிதைத்தழிக்கப்பட்டது. போர்த்துக்கேயரின் ஆட்சி இலங்கையில் அஸ்தமித்தபின் அப்பகுதியிலிருந்த மக்கள் அச் சிவாலயத்தை விஷ்ணு ஆலயமாகப் புனர் நிர்மாணம் செய்தனர். இன்று தொண்டீஸ்வரம் என்ற பழம்பெரும் சிவாலயம் விஷ்ணு ஆலயமாகப் பிரசித்தி பெற்று விளங்குகின்றது.

தொண்டீஸ்வரத்திலிருந்த பண்டைய நந்தியின் திருவுருவம் இன்றும் அழகுறக் காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் தென் எல்லையில் சிவ வழிபாட்டின் பழமைக்குக் கட்டியம் கூறி நிற்கும் தொண்டீஸ்வரம் இலங்கையில் இந்து சமயத்தவரின் தொன்மையான இருப்புக்குச் சான்றாக விளங்குகின்றது.

மேற்படி ஆறு சிவாலயங்களில் சோமசுந்தரேஸ்வரம் விநாயகர் ஆலயமாகவும், திருநந்தீஸ்வரம் முருகன் ஆலயமாகவும், தொண்டீஸ்வரம் விஷ்ணு ஆலயமாகவும் மாறியிருப்பினும் இன்றும் இந்துக்களின் சிறப்புக்கும் பெருமைக்கும், பழைமைக்கும் வரலாற்று உறுதிக்கும் விளக்கமாயுள்ளன.

இவற்றிற்கும் மேலாக கடந்த நூற்றாண்டில் மேற்குக் கரையில் கொழும்பு மாவட்டத்தில் பொன்னம்பலவாணேஸ்வரம், அருணாசலேஸ்வரம், கைலாசநாதீஸ்வரம் போன்ற சிவாலயங்களும் பிரசித்தமடைந்துள்ளன.

இலங்கையிலுள்ள இந்துக்களின் வரலாற்றுச் சான்றுகள் பேணப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். வரலாற்று ஆய்வின் மூலம் ஆவணப்படுத்தப்படும் இலங்கையின் இந்து ஆலயங்களின் வரலாற்றுச் சிறப்புக்கள் இன்னும் பல ஆயிரம் ஆண்டு எமது தொன்மைக்குச் சான்றாக விளங்கும்

இந்நாட்டில் நமக்கென்று பழம்பெரும் வரலாறு உண்டென்ற உத்வேகத்துடன் இந்து சமய வரலாற்று ஆய்வுகள் மேற் கொள்ளப்படுவது காலத்தின் தேவையாகும்.

# மனம்போல வாழ்வு

கலாநிதி பண்டிதை
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஜே.பி

வாழ்க்கை என்பது ஒரு புதிர். சிந்தித்துச் செயலாற்றினால் இது இன்பமயமானது. சிந்தியாது மனம் போன போக்கிலே போனால் அது துன்பமயமான முடிவையே தந்து விடும். வாழ்க்கை என்ற நாடகத்திலே வெற்றிகள், தோல்விகள், ஆசைகள், பூசல்கள், அழுகைகள், சிரிப்புக்கள், எழுச்சிகள், வீழ்ச்சிகள் அனைத்தும் எதிர்கொள்வதைச் சமநோக்கோடு வரவேற்க வேண்டிய கடமை நமக்கு உண்டு. இன்பமும் துன்பமும் மனித வாழ்க்கையில் ஊடுருவி நின்றாலும் அவற்றை ஒன்றாக நினைக்கும் உள்ளம் வாழ்க்கையை ஒளிமயமாக்கும். பெரியபுராணத்திலே திருக்கூட்டச் சிறப்பைப் பாடிய சேக்கிழார் பெருமான்.

“கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்”

என்று அப்பெரியவர்களைக் குறிப்பிடுகிறார். பல சோதனைகளைத் தரிசித்து நின்ற அப்பர் சுவாமிகள் “இன்பமே எந்நாளும் துன்பமில்லை” என்று பாடுவதும் வியப்பைத் தருகிறது. இத்தகைய நிறைவான மனநிலையை நாம் பெறுவது எப்படி? என்பதைத் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

பெரும்பாலும் உலகிலுள்ளோர் துன்பத்தை வெறுக்கின்றனர். அதே நேரத்தில் இன்பத்தை விரும்புகின்றனர். இவ்வின்பமும் நிலையானதாக அமைய வேண்டும் என்பது அனைவரது விருப்பமும் ஆகும். ஆனால் அழியும் தன்மையுடையவற்றில் பற்று வைப்பது சிற்றின்பம் என்றும், அழியாத பொருளில் பற்று வைப்பது பேரின்பம் என்றும் பகுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டாவது நெறியில் எம்மை ஈடுபடச் செய்வதே சமயம் என்ற மார்க்கமாகும். சமுதாய வாழ்வைப் பக்குவமான வழியில் செலுத்துவதற்குத் துணை நிற்பதே சமயம் ஆகும். மனிதப்பிறவி எடுத்தவர்கள் ஒழுங்கான நெறிகளோடு வாழ்வதற்குத் தெய்வநம்பிக்கை மிக இன்றியமையாதது. இதனை எமக்கு நல்குவது சமயம். மனிதப் பண்பாட்டைக் காத்து நிற்பது சமயம்; சமுதாயத்திலே சீர்கேடு தோன்றாமல் தடுத்து நிற்பது சமயம்; சமுதாயத்தின் கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவது சமயம்; பரோபகார சிந்தையைத் தூண்டுவது சமயம். எனவே சமயம் காட்டும் பாதை ஒளிமயமானதும் இன்பமயமானதும் ஆகும். இந்தப் பாதைகளைத் தவறவிட்டவர்கள் மண்ணில் வீழ்ந்து மடிபவர்களேயன்றி விண்ணில் உயர்ந்து நிற்பவர்களாகமாட்டார்கள்.

இறையன்பும் வழிபாடும் பெருகி வளரும்போது நாடும் சமுதாயமும் நலம்பெற்று ஓங்குகிறது. அவை குறையும் போது முறைகெட்டுக் கறைபடிந்து ஊழல்கள் மலிந்து காணப்படுகிறது.

அரசாங்கத்தால் சமுதாயத்துக்குச் சீர்கேடு ஏற்பட்ட பொழுதெல்லாம் சமயப் பெரியார்கள் முன்வந்து தடுத்து நிறுத்திச் சமுதாயத்தின் நலனைப் பேணினர். பெரியவர்கள் யார் என்பதை இனம் காணத் தெரிய வேண்டும். நல்ல இதயம் உள்ள பலர் மூடர்களாக இருக்கிறார்கள். இவர்களால் சமூகத்துக்கு நன்மையும் இல்லை; தீமையும் இல்லை. நல்ல அறிவுள்ள பலர் தீயவர்களாக இருக்கிறார்கள். இவர்களே சமூகத்திலிருந்து வேறாக ஒதுக்கப்பட வேண்டியவர்கள். நல்ல இதயமும் நல்ல அறிவும் பெற்ற ஒரு சிலர் வாழ்வதால் தான் உலகம் வாழ்கிறது. இவர்களே பெரியவர்கள் வரிசையில் வைத்து எண்ணப்படத் தக்கவர்கள்.

திருஞானசம்பந்த மூர்த்திகள் முதலிய சமய குரவர்கள் வரலாறு இதற்கொரு சான்றாக அமைகிறது. அன்பின் மேலீடும் அறிவின் மேலீடும் ஒன்றாக இணையும்போது மக்கள் மத்தியில் அமைதியும் எழுச்சியும் தாண்டவமாடும். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் அன்புப் பிழம்பாகவும் இணைந்தபோது நமது சமயப்பாதையை மேற்கு நாடுகளும் மகிழ்ச்சியுடன் வரவேற்றன.'

இவ்வுலகில் அன்பின் மையமாக விளங்குபவர்கள் பெண்கள். அறிவின் மையமாக விளங்குபவர்கள் ஆண்கள். இவர்களின் ஒருமைப்பாடே திருமணமாக இணைகிறது. பின்பு இல்லறமாக மலர்கிறது. எமது சைவ தத்துவத்திலும் இடப்புறம் அம்மைக்கும், வலப்புறம் அப்பனுக்கும் அமைந்து அன்பையும் அறிவையும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அன்புக்கிடமான இருதயம் உடம்பின் இடப்பாகத்திலும் அறிவுக்கிடமான மூளை சிரசின் வலப்பாகத்திலும் அமைவதும், இரண்டும் ஒன்றுபடும் போதுதான் வாழ்க்கை வளம் பெறும் என்பதைக் காட்டுகிறது. இன்று மூளை வளர்ச்சியுள்ளவர் பலர். ஆனால் அதே நேரத்தில் இதயவளர்ச்சி அதாவது அன்பு நிலை பெற்றோர் மிகச் சிலரே. வாழ்க்கை என்ற மேடையிலே அமையும் காட்சிகளில் மிக முக்கியமானது இல்லற நிலை ஆகும். "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு. இந்தப் படியில் நின்று கொண்டு முன்னும் பின்னும் நோக்கிப் பயனுள்ளவற்றை ஆற்றுவது என்பதும் எமது சைவம் காட்டும் நெறியாகும்.

அன்பையும், அறிவையும் இணைத்துக் கொண்டு கருமமாற்றினால் அருள் பெருகும். இதனால் இன்பநிலை தானே வந்தெய்தும். மனிதனுடைய எண்ணங்களே அவனுடைய வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கிறது.

"நீர் என்ன நினைக்கிறீர்" என்று எம்மைப் பார்த்து ஒருவர் கேட்டால் சட்டென்று சொல்லக்கூடிய வண்ணம் நினைப்பு அமைய வேண்டும் என்று ஒரு அறிஞர் (மாக்ஸ் ஔரோபியர்) எடுத்துக் கூறுகிறார். அப்படியானால் எந்நேரமும் எண்ணங்களும் சிந்தனைகளும் தூய்மையாக அமைய வேண்டும் அல்லவா? இத்தூய்மைக்கு வழிகாட்டுவது சமயம். ஆனால் சமயத்தை அறிதல் ஒரு வகை; அறிந்து தெளிதல் இரண்டாவது வகை; தெளிந்து நிற்றல் மூன்றாவது வகை;

நிற்றலோடு மாத்திரம் நின்றுவிடாமல் நிறப்பித்தல் என்பது பயனுள்ள நிலையை எய்தி நிற்கும் பெருநிலையே வேண்டற்பாலது. எனவே எண்ணத்தாலும் பேச்சாலும் செயலாலும் பெரியவராகும் நிலையை எய்து வைப்பதே வாழ்க்கையின் குறிக்கோளாகும்.

"எண்ணிய(து) முடித்தல் வேண்டும்.
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய மனமும் வேண்டும்
தெளிந்த நல்லறிவும் வேண்டும்"

(சுப்பிரமணிய பாரதியார்)

## சான்றோர் சொல்லமுதம்

நம(ச்)சிவாய என்னும் பஞ்சாட்சரம் அல்லது இறைவனைப் பற்றிய ஐந்தெழுத்து வேதத்துக்கு இருதயம் ஆகிறது. உயிருடன் இயங்குகின்ற உடலில் நடுநாயகம் வகிப்பது இருதயம். இது வாழ்வுக்கு இன்றியமையாதது. மூளை வேலை செய்யாவிட்டாலும் வாழ்வு நடந்தேறும். ஆனால் இருதயம் வேலை செய்யா விட்டால் மரணம் நேரும். உடலோடு கூடிய வாழ்க்கையில் இருதயம் பெற்றுள்ள பெருநிலையைப் பரமார்த்திக வாழ்வில் பஞ்சாட்சரம் (நமசிவாய) பெற்றுள்ளது.

அசையாத கடல் உருண்டோடுகிற அலையாகவுங் காட்சி கொடுக்கிறது. அத்தகைய அலையையும் கடல் எனக் காண்பதுமுறை. உலகாக இயங்குபவன் ஈசன், அதனால் உலகையே ஈசனாக உணர்வது ஆத்மசாதனம். ஈசனாகக் காண்பதால் அதனிடத்து நாம் வைக்கிற இணக்கத்தை மேலானதாக்குகிறோம். கீழான இணக்கத்தை மேலான இணக்கமாக மாற்றுவது தியாகம். குழந்தையானது தன்தாயோடு இணங்கியிருந்து இன்பம் பெறுதலில் தூய்மையுண்டு. ஜீவன் ஈசனொடு இணங்கியிருந்து இன்பம் பெறுதலில் தூய்மை மிகவுண்டு.

மனிதன் எதனோடு தொடர்பு வைக்கிறானோ அதன் இயல்பு அவனுக்கு உரியதாகிறது. நீராடுவதால் உடல் தூயதாகிறது. நெருப்பை அணுகுவதால் குளிர் அகலுகிறது. இறைவனைச் சார்வதால் இன்பம் ஓங்குகிறது. அடியார்களை உய்விப்பது இறைவனது பெருந்திட்டமாகும். ஈசனிடம் தங்களை ஒப்படைப்பதற்கு ஏற்ப பக்தர்கள் அருள்துறையில் உயர்நிலை எய்துகின்றனர்.

ஒருவனுக்கு அன்னியமாயிருந்து அவனால் வேண்டப்படாத பொருளே மலம் அல்லது அழுக்கு எனப்படுகிறது. சிவனாருக்கு அன்னியமான பொருள் ஏதும் இல்லை. ஆதலால் அவர் நிர்மலன் எனப்படுகிறார்.

அருள் சுரத்தலும் அருளைக் காட்டுதலும் ஒன்றேயாம். ஈசன் எல்லார்க்கும் பொதுவாகவும் சமனாகவும் இருக்கிறான். எனினும் அவனிடம் சரண்புகுகின்றவர்களுக்கு அவன் தன்னை முழுதும் கொடுத்து உதவுகிறான். உலகின் எல்லா நாடுகளிலும் எல்லாச் சமயங்களிலும் பக்தர்கள் தோன்றியுள்ளார்கள். அவர்கள் அனைவரும் இறைவனைக் கருணைக்கடல் என்று கூறியிருக்கின்றனர். அதற்கேற்ற காரணமும் உள்ளது. கடவுளை அடைவதற்காகவும், ஏனைய இலட்சியங்களை அடைவதற்காகவும் நாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் மிகப்பெரியவைகள் என்று சொல்லுவர் உலகத்தவர். பக்தர்களோவெனின் உண்மையாகவே கடவுளை அடைதற்குப் பெருமுயற்சி எடுத்துக் கொள்வார்கள். ஆனால், தங்களுடைய முயற்சிகளை மிக அற்பமானவைகள் என்று அவர்கள் மதிப்புப் போடுவார்கள். தங்களுடைய அற்ப முயற்சிக்கு இரங்கி அளவுகடந்த அருளை கருணையையும் கடவுள் வாரி வழங்கியுள்ளார் என்று அவர்கள் போற்றுகின்றனர்.



கண்ணகை அம்மன் ஆலயத்தின் தெற்கு வீதியில் அமைந்துள்ள தெற்பைக்குளம்.

# இலங்கையில் சிறு தெய்வ வழிபாடு பெறும் முக்கியத்துவம்

**திரு. கி. புண்ணியமூர்த்தி**
(B.A. Dip, In Edu.Med)

இந்து சமய வழிபாடு ஆகம நெறிக்குட்பட்ட வழிபாடு, ஆகம நெறிக்குட்படாத வழிபாடு என இருவகைப்படும். ஆகமநெறிக்குட்பட்டவழிபாட்டை எடுத்து நோக்குவோமாயின் இது ஒரு விதிமுறைக்கு உட்பட்ட வழிபாடாகவும் நிறுவனம் சார்ந்த வழிபாடாகவும் அமைந்திருக்கும். இதனைப் பெருந்தெய்வ வழிபாடு எனவும் குறிப்பிடுவர். ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட ஆலயத்தில் சிற்ப சாஸ்திர விதிப்படி அமைக்கப்பட்ட விக்கிரகங்களுக்கு பஞ்ச ரிஷி வம்சத்தைச் சேர்ந்த சிவாச்சாரியாரால் பூசை செய்யப்பட்டு வழிபடும் வழிபாடாக ஆகம நெறிக்குட்பட்ட வழிபாடு இருக்கும். இதில் நித்திய நைமித்திய கிரியைகள் விதி முறைப்படி நிகழும். மகோற்சவங்கள் வருடம் தோறும் இடம்பெறும். காலத்திற்கு காலம் கும்பாபிஷேகம் இடம் பெறும்.

ஆகம நெறிக்குட்படாத வழிபாடு கிராமிய சமயத்தைப் பிரதிபலிக்கும் வழிபாடாகும். இது சிறு தெய்வ வழிபாடு எனவும் கிராமியத் தெய்வ வழிபாடு எனவும் குலதெய்வ வழிபாடு எனவும் பல்வேறு பெயர் கொண்டழைக்கப்படும். சிறு தெய்வ வழிபாட்டில் இடம் பெறும் தெய்வங்களை ஊர்த்தெய்வங்கள் என்றும், கிராம தேவதைகள் என்றும், காவல் தெய்வங்கள் என்றும், எல்லைத் தெய்வங்கள் என்றும் அழைப்பர். இச் சிறு தெய்வ வழிபாடு வயல் வெளி ஆற்றோரங்களிலும், பெருந்தெருக்களிலும், குளக்கரைகளிலும், மரப்பொந்துகளிலும், காட்டுப் பகுதிகளிலுமென ஒரு வரையறுக்கப்பட்ட இடமின்றி எல்லா இடங்களிலும் காணப்படும். சிறுதெய்வ வழிபாட்டுக்குரிய குறியீடுகளாக சூலம், கல், தடி போன்றவை காணப்படும்.

## சிறு தெய்வவழிபாட்டில் காணப்படும் பொதுத்தன்மை

விதி முறைக்குட்பட்ட பெருந்தெய்வ வழிபாட்டிலிருந்து சிறுதெய்வ வழிபாட்டுத் தெய்வங்கள் வேறுபட்ட இயல்பினைக் கொண்டனவாக உள்ளன. இத் தெய்வங்கள் மனித உணர்வினால் தோற்றுவிக்கப்பட்டவையாகும். இவை பிறப்பு, இறப்பு உள்ளவையாகவும், வரையறுத்த ஆற்றலைக் கொண்டவையாகவும் அதிகளவு உயிர்ப்பலியை ஏற்பவைகளாகவும் பகைமையை அழிக்கும் தன்மை கொண்டனவாகவும், குடும்பத்திற்கென சாதிக்கெனப் பிரிக்கப்பட்டவைகளாகவும் பிராமணர் அல்லாத பூசாரிகளை பூசகர்களாகக் கொண்டமைந்தவைகளாகவும் பொது மக்களால் உருவாக்கப்பட்டவைகளாகவும் உள்ளன.

சிறு தெய்வ வழிபாட்டுக்குரிய தெய்வங்கள் தமக்குள்ளேயே பகையும், நட்பும் கொண்டவைகளாகவும், புரிந்துணர்வு கொண்டவைகளாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளன. இத் தெய்வங்களின் தோற்றம் பற்றி செவி வழிக் கதைகள், நாட்டுப்புறக் கதைகள், புராணக் கதைகள் என்பன எடுத்துக் கூறுகின்றன. எண்ணிக்கையில் மிகக் குறைந்தளவான இத் தெய்வங்களில் பெருமளவானவை ஆண் தெய்வங்களாகவே உள்ளன. சிறு வழிபாட்டுத் தலங்கள் நித்திய வழிபாடுகள் அற்றவைகளாக இருந்த போதிலும் சில நியமங்களைக் கொண்டமைந்தவைகளாக உள்ளன. இவை சிறப்பான ஆலய அமைப்புக்களைக் கொண்டவைகளல்ல. அநேகமாக ஒரு பிரகாரத்தை மட்டுமே உடையவைகளாக உள்ளன. இவ் ஆலயங்களுக்குரிய ஆலய நிர்மாண விதிகள் பொதுவாகக் குறிப்பிட்டுக் கூறக்கூடியவைகளாக அமைந்திருப்பதில்லை. இந்நிர்மாணங்கள் மரபு வழியாக இடம்பெற்று வருபவைகளாக உள்ளன.

சிறு தெய்வ வழிபாட்டுக்குரிய சடங்குகள் அல்லது விழாக்கள் அத் தெய்வங்களின் உத்தரவைப் பெற்றே நிகழுகின்றன. மந்திர உச்சாடனங்கள் வழிபாட்டில் முக்கிய இடம் பெறுகின்றன. மந்திரங்கள் மூலம் இத் தெய்வங்களின் ஆற்றலைப் பெறலாம் என்ற நம்பிக்கையும் கிராமிய மக்களிடையே காணப்படுகின்றது.

சிறு தெய்வ வழிபாட்டிற்குரிய பொதுவான வழிபாட்டுப் படிமுறைகளாக மடைப்பண்டம் எடுத்தல், உள் மடை பரவுதல், வெளி மடை பரவுதல், தூளி பிடித்தல், பரிகலம் அழைத்தல், வளந்து வைத்தல், பொங்கலிடல், பறையடித்தல், பலியிடுதல், சன்னதமாடுதல், கட்டுச் சொல்லல், கழிப்புக் கழித்தல், தண்ணீர் ஓதிக் கொடுத்தல், திருநீறு "போடுதல், பேய்க்குப் பார்த்தல்", வழிவிடுதல் போன்ற அம்சங்கள் காணப்படுகின்றன.

## சிறுதெய்வ வழிபாடு கிராமிய வாழ்க்கையில் பெறும் முக்கியத்துவம்

சிறு தெய்வ வழிபாடு கிராமிய மக்களின் வாழ்க்கையில் மிகவும் முக்கியத்துவம் பெறும் வழிபாடாகும். இவ் வழிபாட்டிற்கு பொது மக்கள் ஒரு பூசகரின் உதவியின்றி தாமே நேரடியாக வழிபாடு செய்யக்கூடியதாக இருக்கும். அத்துடன் பெருந் தெய்வ வழிபாட்டை விட அதிகமாக இவ் வழிபாடு உணர்ச்சிபூர்வமானதாக அமைந்திருக்கும். கிராமிய மக்கள் ஆத்மார்த்தமாக கிரியைகளில் ஈடுபடுவதனால் அவர்களின் ஒழுக்கம், சிறப்பாகப் பேணப்படக்கூடியதாக இருக்கின்றது. உள்ளார்ந்த கட்டுப்பாடுகளை பேணக்கூடியவர்களாக அவர்கள் இருப்பார்கள்.

சிறு தெய்வ வழிபாடு கிராமியக் கலைகளையும் வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆலய விழா இடம்பெறும் காலங்களில் காவடி, கரகம், கும்மி, கோலாட்டம், கூத்து முதலான கிராமியக்கலைகள் இடம் பெறுவது வழமையாகும். மேலும் சிறு தெய்வ வழிபாடு சமூக ஒற்றுமையையும், சமூக நீதியையும், ஒழுங்கையும் பேணி வளர்ப்பதற்கு நிலைக்களனாக உள்ளது. அத்துடன் அனைத்து மக்களும் வழிபடக் கூடியளவு இலகுவான வழிபாட்டு முறைகளைக் கொண்டதாகவும் பக்தியினூடாகத் தமது விருப்பங்களை நிறைவேற்ற வேண்டுதலை

மேற்கொள்ளக் கூடியதாகவும் அதன் மூலம் மனத் திருப்தியைப் பெறக்கூடியதாகவும் சிறு தெய்வ வழிபாடு அமைந்திருப்பதைக் காணலாம். கிராமிய மக்கள் ஆன்ம ஈடேற்றம் பெற சிறு தெய்வ வழிபாட்டிலேயே பெரிதும் ஈடுபடுகின்றனர் எனலாம் சில சிறு தெய்வ வழிபாட்டு தெய்வங்களையும் அவற்றிற்குரிய வழிபாட்டம்சங்களையும் பார்ப்போம்

## கண்ணகி வழிபாடு

கண்ணகி வழிபாடு இலங்கையில் பன்னெடுங்காலந் தொட்டு வழக்கிலிருந்து வந்துள்ளது. கி.பி. 2ம் நூ. ஆண்டில் சேரன் செங்குட்டுவன் கண்ணகித் தெய்வத்திற்கு விழா எடுத்த போது அங்கு சென்ற கஜபாகு மன்னனால் கண்ணகி சிலை இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டதாக சங்க இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. தென்னிந்தியாவிலிருந்து இலங்கைகக்கு வர்த்தக நோக்கில் வந்தவர்களாலும் கண்ணகி வழிபாடு பரப்பப்பட்டதாகக் கருதப்படுகின்றது. சிலப்பதிகாரம் உரைபெறு கட்டுரையிலும் வரத்தகு காதையிலும் இலங்கையில் கண்ணகி வழிபாடு பரவிய முறை பற்றிக் கூறப்பட்டுள்ளது. அது தவிர இராஜவல்லி, இராஜ ரத்னாகர, கஜபாகத்தாவ, பத்தினிஹல்ல, பத்தினி கத்தாவ, பத்தினி பிலிம் போன்ற சிங்கள நூல்களிலும் கண்ணகியின் வரலாறு பற்றி விளக்கப்பட்டுள்ளது. கஜபாகு மன்னனால் கொண்டு வரப்பட்ட பொருட்கள், சிலைகள் பற்றி கோகில சந்தேச எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் ஒழுக்கத்தின் தேவை முக்கியத்துவம் பெற்றமையினாலேயே கண்ணகி வழிபாடு சிறப்புப் பெற்றதெனக் கூறலாம். பௌத்த மதத்தில் பத்தினி வழிபாடாகவும், காவல் தெய்வ வழிபாடாகவும் கண்ணகி வழிபாடு வளர்ச்சி கண்டது. அங்க நாமை கடவை எனும் இடத்தில் முதல் பத்தினி கோயில் கஜபாகு மன்னனால் அமைக்கப்பட்டதாக இலங்கையின் வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்பின்னர் நடுவப்பிட்டிய, குருநாகலை, கட்டுகம்பளைப்பற்று ஆகிய இடங்களிலும் இலங்கையில் பரவலாக ஏனைய இடங்களிலும், கண்ணகி வழிபாடு பரவியதாகக் கருதப்படுகின்றது. கண்டியில் பத்தினிகோயில் அமைக்கப்பட்டு வழிபாடு இடம்பெற்று வருகிறது. வடகிழக்குப் பகுதிகளில் மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம், காரைதீவு, கல்முனை, செட்டிபாளையம், களுவாஞ்சிக்குடி, திருக்கோயில் போன்ற இடங்களில் கண்ணகிக்கு வருடா வருடம் விமர்சையாக விழா எடுக்கப்பட்டு வருகின்றது.

## வழிபாட்டு முறைகள்

கண்ணகி அம்மனுக்குரிய வழிபாட்டு முறைகளாக ஆகமம் சார்ந்த வழிபாடு, ஆகமம் சாராத வழிபாடு என இருவழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன. ஆகமம் சாராத வழிபாட்டு முறையே மிக அதிகமாக இடம் பெற்று வருகின்றது. மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் ஊர்காவல் பண்ணுதல், கதவு திறத்தல், கலியாணக்கால் வெட்டுதல், கலியாணச் சடங்கு செய்தல், கும்பம் வைத்தல், ஏடு படித்தல், மடிப்பிச்சை எடுத்தல், நெல் குற்றுதல், விநாயகப் பானை ஏற்றுதல், குளிர்ச்சி பாடுதல், எட்டாம் நாள் சடங்கு செய்தல் எனும் ஒழுங்கு முறைகள் காணப்படுகின்றன.

வன்னிப்பிரதேசத்தில் பஞ்சாங்கம் பார்த்தல், பாக்குத் தெண்டல், ஊர்காவல் பண்ணல், பண்டம் எடுத்தல், பரிகலம் அழைத்தல், கும்பம் வைத்தல், தூளி பிடித்தல், தீர்த்தம் எடுத்தல், வளர்ந்து நேர்தல், மடை பரவல், நோர்ப்புக் குற்றல், கட்டாடுதல், பரிகலம் வழி விடுதல், மடைகலைத்தல், நேர்த்திக்கடன் செய்தல், போன்ற வழிபாட்டு ஒழுங்கு முறைகள் காணப்படுகின்றன.

கண்ணகி வழிபாட்டுக்குரிய நேர்த்திக் கடன்களாக காவடி எடுத்தல், அலகு குற்றுதல், அங்கப் பிரதட்சணம் செய்தல், பிள்ளை விற்றல், அடையாளம் கொடுத்தல், மடிப்பிச்சை எடுத்தல், பாளை விற்றல், கரகம் ஆடுதல், கும்மி ஆடுதல், போர்த்தேங்காய் அடித்தல், கூத்து ஆடுதல் போன்றவை காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் விரோதைய சிங்கை ஆரியனின் காலத்தில் பல கண்ணகி கோயில்கள் கட்டப்பட்டதாக வரலாறு உண்டு. கஜபாகு மன்னன் சம்புத்துறை வழியாக வந்து கந்தரோடை அங்கநாமைக் கடவையில் கண்ணகி கோயில் அமைத்ததாகவும் வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கண்ணகி ஆலயங்களில் வேலம்பரைக் கண்ணகி, வற்றாப்பளைக் கண்ணகி, பன்றித் தலைச்சி கண்ணகி, மந்திகைக் கண்ணகி, நவாலிக் கண்ணகி, கோப்பாய்க் கண்ணகி புங்குடுதீவுக் கண்ணகி ஆகிய கண்ணகி ஆலயங்கள் மீது சிறப்புபாடப் விருத்தப்பாடல்களும் பெற்றவையாகும். காவியப் பாடல்களும் ஊஞ்சல் பாடல்களும், அகவல் பாடல்களும் பாடப்பட்டு வருகின்றன.

## திரௌபதை அம்மன் வழிபாடு

மகாபாரதக் கதையை அடிப்படையாகக் கொண்ட வழிபாடு திரௌபதை அம்மன் வழிபாடாகும். இலங்கையின் பல்வேறு இடங்களில் திரௌபதை அம்மன் வழிபாடு காணப்படுகின்றது. குறிப்பாக மட்டக்களப்பு, திருகோணமலை, பழுகாமம், உடப்பு, பாண்டிருப்பு, போன்ற இடங்களைக் குறிப்பிடலாம்.

## வழிபாட்டு முறைகள்

திரௌபதை அம்மன் வழிபாட்டு முறைகளில் சடங்கு முறைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. மகாபாரதக் கதையை அடிப்படையாகக் கொண்டே சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. பொதுவாக பதினெட்டு நாட்கள் சடங்கு இடம் பெறும்.

## உடப்பு திரௌபதை அம்மன் ஆலயம்

இவ் ஆலயத்தில் ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து ஊர்காவல் பண்ணுதல், கரகம் பாலித்தல், கொடியேற்றம் (வெளி) ஆகியன இடம் பெறும். முதலாம் நாள் தொடக்கம் நான்காம் நாள் வரையும் பாரதக் கதை படிப்பும், விசேட பூசைகளும் நடைபெறும் ஐந்தாம் நாள் உள் கொடியேற்றமும், ஆறாம் நாள் படிக்கட்டு அபிஷேகமும், ஏழாம் நாள் அநுமன் கொடியும் (வெளிக்கம்பமும்) எட்டாம் நாள் படிக்கட்டு அபிஷேகமும், ஒன்பதாம், பத்தாம்

நாட்களில் படிக்கட்டுப் பூசையும், பதினோராம் நாள் திரௌபதை அம்மன் எழுந்தருளல், காவியம் படித்தல், ஊஞ்சல் படித்தல் என்பனவும், பன்னிரெண்டாம் நாள் திருக்கல்யாணமும், பதின்மூன்றாம் நாள் அம்மன் தீர்த்தயாத்திரையும், பதினான்காம் நாள் துச்சாதனன் திரௌபதையைத் துகிலுரிந்த கதை பாவனை செய்யப்படுதலும், பதினைந்தாம் நாள் வனவாசம், பஞ்சபாண்டவர்வனம் புகுதல், நேர்த்தி பெறல் என்பனவும், பதினாறாம் நாள் தவநிலைக் காட்சிகள், தீமூட்டல் என்பனவும், பதினேழாம் நாள் அக்கினி குண்டக் காவல் காத்தலும், பதினெட்டாம் நாள் தீக்குளிப்பும், கொடியிறக்கம் என்பனவும் இடம் பெறும்.

மட்டக்களப்பில் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்திலும் இவ்வாறு பதினெட்டு நாட்கள் சடங்கு நடைபெறும். காவல் பண்ணுதல், கதவு திறத்தல், பரிகலம் அமைத்தல், மடை வைத்தல், தெய்வம் ஆடுதல், கட்டுச் சொல்லுதல், விரதம் இருத்தல் அம்மன் ஊர்வலம் வருதல், வனவாசம் செல்லுதல், நேர்த்தி கொண்டு வருதல், அர்ச்சுனன் தவநிலை, தீமிதிப்பு, தீக்குழிக்குப் பால் வார்த்தல், வைரவர் பூசை ஆகியன இடம் பெறும்.

திரௌபதை அம்மன் வழிபாடு சமய, சமூக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இதன் மூலம் சமூக ஒழுக்காற்று பேணப்படுகிறது. கூட்டுப்பொறுப்பு ஏற்படுகின்றது. புனிதத் தன்மை பேணப்படுகின்றது நோய் நீக்கம் செய்யப்படுகின்றது. கலைவளர்ச்சி ஏற்படுகின்றது. எனவே சிறு தெய்வ வழிபாட்டில் திரௌபதை அம்மன் வழிபாடு சிறப்பிடம் பெறுகிறது எனலாம்.

## முத்துமாரியம்மன் வழிபாடு

முத்துமாரியம்மன் வழிபாடு பற்றி பல மரபுக் கதைகள் புராணக் கதைகள் போன்றவற்றில் அறியக் கூடியதாக உள்ளது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, மன்னார், மலையகம் போன்ற இடங்களில் இவ் வழிபாடு பரந்து காணப்படுகிறது.

## வழிபாட்டு முறைகள்

முத்துமாரியம்மனுக்குரிய கிரியைகள், ஆகமம் சார்ந்தும், சாராமலும் இடம்பெற்று வருகின்றன. அதிகமாக ஆகமம் சாராத சடங்குமுறையே காணப்படுகின்றது. இச் சடங்கில் பூசாரியார் முக்கிய பங்கு வகிக்கிறார். பத்ததிமுறையின் அடிப்படையிலேயே கிரியைகள் இடம் பெறுகின்றன.

சடங்கு முறைமை பிரதேசத்திற்குப் பிரதேசம் மாறுபட்டுக் காணப்படுகின்றது. மலைநாட்டில் கரகம் பாலித்தல், மதிப்பெடுத்தல், காப்புக் கட்டுதல், பிரதோற்சவம், குடிவிடுதல், சாமி பார்த்தல், இடும்பன் பூசை என்பன காணப்படுகின்றன. இங்கு நேர்த்திக்கடனாக மாவிளக்கு, கரகம் எடுத்தல், காவடி எடுத்தல், தீச்சட்டி எடுத்தல், அங்கப்பிரதட்சணை போன்றவை நிகழ்த்தப்படுகின்றன.

மட்டக்களப்பில் மாரியம்மன் வழிபாடு கிராமத்திற்குக் கிராமம் பரந்து காணப்படுகின்றது. இங்குள்ள சடங்கு முறைகளாக பஞ்சாங்கம் பார்த்தல், கதவு திறத்தல், விளக்கு வைத்தல், பரிகலம் அழைத்தல், பண்டம் எடுத்தல், மடை கொடுத்தல், கும்பம் வைத்தல், மடை பரவல்,

தெய்வம் ஆடுதல் தவநிலை ஏறுதல், காத்தவராயன் கழுவேற்றல், விநாயகர் வளர்ந்து நேரல், பாளயம் செய்தல், குளிர்த்தி பாடுதல், கதவு அடைத்தல் என்பன இடம்பெறும்.

முத்துமாரியம்மனுக்குரிய பிரபந்தங்களாக முத்து மாரியம்மன் தாலாட்டு ஊஞ்சல் பதிகம், காவியம், காவடிப்பாட்டு போன்றவை காணப்படுகின்றன. நோய் நீக்கத்தின் பொருட்டு, மும்மாரிபொழிய வேண்டியும், காமியத்தின் பொருட்டுமே முத்துமாரி வழிபடப்படுகின்றாள் எனலாம்.

### பெரியதம்பிரான் வழிபாடு

மிகப்பழங்காலந்தொட்டு பெரிய தம்பிரான் வழிபாடு காணப்படுகின்றது. யாழ்ப்பணம், வன்னி, மட்டக்களப்பு, திருமலை போன்ற பிரதேசங்களில் இது காணப்படுகின்றது. தமிழ் நாட்டை விட இலங்கையிலேயே இவ்வழிபாடு அதிகம் காணப்படுகின்றது.

### வழிபாட்டு முறைகள்

ஆகமம் சாராத சடங்குமுறைகளே அதிகம் காணப்படுகிறது. இச்சடங்கு முறைகள் பற்றி பெரிய தம்பிரான் பத்ததி, கட்டடி முதலியார் பத்ததி ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணச் சடங்கு முறைப்பற்றிப் பார்ப்போமானால் அங்கு பஞ்சாங்கம் பார்த்தல், கொடித்தம்பம் நிறுத்துதல், பண்டம் எடுத்தல், உள்மடை, வெளிமடை, பிராமணமடை பரவல், கண்ணூறு கழித்தல், தெய்வம் பாலித்தல், வழிவிடுதல், கொடிக்தம்பம் இறக்கல் ஆகியன காணப்படுகின்றன. நெல் குற்றல், பொங்குதல், நோர்ப்புச் சடங்கு செய்தல், தெய்வமாடல், பாலமுதம் ஒப்புக் கொடுத்தல், தீர்த்தம் ஆடுதல், வழிவிடுதல் ஆகியன காணப்படுகின்றன.

பெரியதம்பிரானுக்குரிய பிரபந்தங்களாக பெரிய தம்பிரான் காவியம், துதி, பதிகம், ஊஞ்சல் என்பன காணப்படுகின்றன.

பெரிய தம்பிரான் வழிபாடும் சமய முக்கியத்துவம் மாத்திரமின்றி சமூக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவ்வழிபாட்டிலும் கூட்டுப்பொறுப்பு, சமூக ஒழுக்கலாறு, புனிதத்தன்மை, இடையீடற்ற இறைவழிபாடு நோய் நீக்கம், காவல் பண்ணுதல் ஆகியன காணப்படுகின்றன.

மேற்கூறிய தெய்வங்களை விட சிறுதெய்வ வழிபாட்டில் ஐயனார் வழிபாடு, கொத்திவழிபாடு, வதனமார் வழிபாடு, அண்ணன்மார் வழிபாடு, நாகதம்பிரான் வழிபாடு, முனியப்பர் வழிபாடு, மாடசாமி வழிபாடு, இடும்பன் வழிபாடு, மதுரை வீரன் வழிபாடு போன்றவையும் காணப்படுகின்றன. இலங்கையில் இன்று சிறு தெய்வ வழிபாடே மக்களின் வாழும் சமயமாகவும், இந்து சமயவளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பதாகவும் உள்ளது எனலாம்.

# தெய்வீக வாழ்வு

சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள்

உலகில் தோன்றும் மக்கள் சிலகாலம் வாழ்ந்து, மறைந்துவிடும் தன்மை கொண்டோராவர். அவர்கள் வாழும் வகையிலிருந்தே உலகத்தோரால் உலக இன்பங்களை அனுபவித்தாலும் அதில் மனத்தைப் பறி கொடுக்காமல் தெய்வ சிந்தனையுடன் வாழ்வது மிகவும் அரிய உயரிய வாழ்வாகும்.

நமது முன்னோர்கள் - அன்றாடம் அதிகாலையில் நித்திரைவிட்டெழுவது முதலாக இரவு மீண்டும் படுக்கைக்குச் செல்லும் வரையுள்ள சகல காரியங்களையும் இன்ன வகையிற் செய்தல் வேண்டும் என விதித்திருக்கின்றனர். "இப்படிச் செய்தல் தகாது", "இப்படித்தான் செய்தல் வேண்டும்" என்று வரையறுத்துக் கூறப்பட்டவற்றை ஆராய்ந்து பார்த்தோமெனில் - அவையனைத்தும் ஆரோக்கியத்திற்கும் செல்வத்திற்கும் - அமைதிக்கும் ஒற்றுமைக்கும் அன்புக்கும், இறுதியில் எல்லையில்லாத இன்பத்திற்குமே ஏற்றவையாக இருப்பதை அறியலாம். ஆலய வழிபாடு தினமும் செய்தல் வேண்டுமென்பதும் அவர்களது அறிவுரையாகும். ஒளவைப்பாட்டியும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" எனவும் கூறியுள்ளார். எனினும் வாழ்க்கைப் பிரச்சனைகள் பலவற்றுக்கும் மத்தியில் உழலும் மனிதனுக்கு மன அமைதிக்காகச் சில நிமிடமாவது நியதியாகத் தினமும் வழிபாடாற்றுவது மிகவும் அரிதாகும். ஆயினும் ஆலயத்திற்குச் சென்று சில நிமிட நேரமாவது சிந்தனைகளைச் சிதறவிடாது மனத்தை ஒரு நிலைப்படுத்தித் தியானம், அர்ச்சனை தோத்திரம் ஆகியவற்றில் ஈடுபடுத்தினால் அன்று முழுவதுமே மனத்தில் நிம்மதியும் சந்தோஷமும் அமைதியும் நிலைத்திருப்பதை அனுபவத்தில் அனைவரும் அறிவோம்.

**கோபுர தரிசனம் கோடி புண்ணியம்**

கோவிலுக்கு வெகுதூரத்திலிருந்து நோக்கும் போதே நமது மனத்தில் தெய்வ சிந்தனையை உண்டு பண்ணுவது கோபுரத்தின் திருத்தோற்றமாம். இதனால் இதைத் தூலலிங்கம் எனக் கூறுவர். இதன் அமைப்பு எரியும் சுடர் போன்று உள்ளதை அறிவீர்கள். இறைவனின் திருவருள் வடிவமும் இவ்வண்ணம் என்றுதான் அருளாளர்கள் கூறியுள்ளனர்.

"சோதியே! சுடரே! சூழொளி விளக்கே! எனவும், "தூண்டு சுடர் அனைய சோதி" என்றும் "கற்பனை கடந்த சோதி" எனவும் "பிரமம்மாய் நின்ற சோதிப்பிழம்பு" என்றும் திருமுறைகள், புராணங்கள் இறைவனைப் போற்றியுள்ளன. மணிவாசகப் பெருமான் சிவ புராணத்தில், சிவனை

"ஓங்கி - ஆழ்ந்து - அகன்ற - நுண்ணியனே" என வர்ணித்துள்ளார். எனவே கோபுரத்தை இந்த மாதிரியான அமைப்பில் உருவாக்கினார். இதன் நாற்புறங்களிலும் பிரம்மா, விட்டுணு, உருத்திரன், மகேஸ்வரன் ஆகிய மூர்த்திகளின் பலவகைத் தோற்றங்கள் அமைக்கப்பட்டிருப்பது ஒரே பரம்பொருள்தான் பல்வேறு தோற்றங்களைத் தாங்கி ஐந்தொழில்களையும் நடாத்துமெனத் தெளிவதற்கேயாகும். சதாசிவ வடிவத்தின் ஐந்து திருமுகங்களும் சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம் எனப் பெயர்பெற்று முறையே, பிரம்ம, விட்டுணு, உருத்திர, மகேச, சதாசிவ மூர்த்திகளாக விளங்குகின்றன. இவை ஆற்றும் ஐந்து தொழில்களும் பின்வருமாறு சிவாகமங்களில் கூறப்படுவதைக் காண்க.

"சத்யோஜாஞ் சிருஷ்டி ரூபம்-
ஸ்திதிர் வாம முகம் பவேத்,
சம்ஹாரம் தட்சிணம் வக்த்ரம்
திரோ பாவஞ்ச பூர்வகம்
அனுக்கிரஹஞ்ச ஊர்த்வ வக்த்ரம்"

இக்கோபுரங்கள் முத்தத்துவங்களின் வடிவில் மூன்றுபடி நிலையுள்ளவையாகவும் பஞ்சகலை வடிவுளதாக ஐந்து நிலையுள்ளவையாகவும் இன்னும் ஏழு - ஒன்பது நிலைகளைக் கொண்டவையாகவும் வெவ்வேறு தத்தவ அடிப்படையில் இடம், பொருள், காலம் இவற்றுக்கேற்ப அமைக்கப்படுகின்றன.

இப்பிரபஞ்சம் முழுவதுமே இதனுள் அடக்கம் என நாம் சிந்தித்து வழிபடுவதற்காகவே உலகில் நடைபெறும் லீலா வினோதங்கள் பலவற்றைச் சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் சித்தரித்துள்ளனர். உபானம் முதலான வரிவர்க்கங்களில் மந்திரங்கள், பதங்கள், வர்ணங்கள், புவனங்கள், தத்துவங்கள், கலைகள் ஆகிய யாவும் கற்பிக்கப்படுகின்றன. இதைத் தரிசிப்பது கோடி புண்ணியமாகும்.

கோபுர தரிசனத்தை முடித்தபின் கால் கைகளைச் சுத்தப்படுத்திக்கொண்டு ஆசாரத்துடன் உள்ளே புகுதல் வேண்டும்.

## மலைபோல ஒரு மாடு

திருநாளைப் போவார் திருச்சரிதையில் - திருப்புன்கூர்த்தலத்தை அடைந்து வெளியில் நின்று தரிசனம் செய்ய முனைந்தபோது கோபுரத்து மண்டபத்தில் உள்ள பெரிய நந்தி மறைந்திருப்பதைப் பார்த்து "மலைபோல ஒரு மாடு படுத்திருக்கிறதே" எனப் பாடினார். உடனே அந்த மாபெரும் நந்தி இறைவனருளால் விலகியது என அறிகிறோம். அந்த நந்தித் தேவருக்கும் "அதிகாரநந்தி" எனப் பெயர். நமது கோவில்களில் இடவசதியின்மையால் அமைக்கப்படுவதில்லை.

ஆயினும் நாம் மனத்தினால் அவரைச் சிந்தித்து வழிபட்டு, சுவாமி தரிசனம் செய்வதற்கு அவரது அனுமதியைப் பெற்று உட்செல்லுதல் வேண்டும். உள்ளே சென்றதும் கொடிமரத்திற்கு இப்பால் பூமியிலே வீழ்ந்து வணங்குதல் வேண்டும். அங்குள்ள பலிபீடத்தில் நமது காமம், குரோதம், மதம் முதலானவற்றை அர்ப்பணம் செய்து பரிசுத்த ஆன்மாவாகிய நந்தியைப்போல் நாமும் தூய்மையும் பக்தியும் உள்ளவர்களாகி வழிபடுதல் வேண்டும். கொடிமரத்தின் அமைப்பினை நோக்கின் அது சோதிவடிவான இறைவனை உணர்த்துவதாய் இருப்பதை அறியலாம். அதனடியில் மூலாதாரத்து அதிபதியாகிய கணபதி சிறிதாக, மறைவாக அமர்ந்திருப்பார். பாசநீக்கம் பெற்றுவிட்டால் ஆன்மா பதியைச் சென்றடைந்து பரமானந்தத்தை அனுபவிக்கும் என்பதனைக் காண்பிப்பதற்கே - பலிபீடம், நந்தி முதலியன முறையே அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் கோவிலின் அமைப்பு கோபுரத்திலிருந்து கர்ப்பக்கிரகம் வரையும் நோக்கின் படுத்திருக்கும் ஒரு மனிதனின் உடலமைப்பின் பிரகாரம் இருப்பதை உணரலாம். கோபுரம் பாதங்கள் கர்ப்பக்கிரகம் சிரசாகும். மேலும் கொடிமரம், விமானம் ஆகியன கீழே சமாதியில் உட்கார்ந்திருக்கும் ஒரு ஞானியின் வடிவில் அமைந்திருக்கின்றன. மூலாதாரம் முதல் ஆறு ஆதாரங்களும் கீழிருந்து படிப்படியாக விளங்குகின்றன. எனவே, இருவிதமான அமைப்புக்களும் திருவருளால் ஞானத்தில் நாம் கீழிருந்து மேல் நிலைக்கு உயர்த்தப்பட்டு நற்கதியடைய முடியும் என்பதையும் ஏககாலத்தில் தெரியவைக்கின்றன. பாசங்களிலிருந்து விடுபட்ட ஆன்மாவானது படிப்படியாக ஆணவ முனைப்பு குன்றக்குன்ற ஞானவடிவமாக மாற்றமடையும் என்பதனை விளக்குவதற்காக, வெளியிலிருந்து எல்லா மண்டபங்களிலும் தனித்தனி ஒவ்வொரு நந்தி அமைக்கப் பெற்றிருப்பதனாலும் இவை ஒவ்வொன்றும் படிப்படியாக உருவத்தில் சிறிது சிறிதாக இருப்பதனாலும் ஆழ்ந்து சிந்திக்கக் கூடியதாக உள்ளது. இதேபோன்று பாசநீக்கம் பெற்ற ஆன்மா கொடிமரமாகிய பதியுடன் சென்று சேர்வதனைக் கொடிமரம் விளக்குகின்றது. கொடிமரம் பதி, கொடிச்சீலையில் எழுதப்பெற்ற நந்தி சத்திநிபாதம் பெற்ற ஆன்மா தருப்பைக் கயிறு பாசம். எனவே இருவகையான நிலையிலும் முப்பொருள் விளக்கத்தை நமக்கு நல்கி நிற்பதை அறியலாம். கொடிமரத்தினடியில் மூலாதார ஸ்தானத்தில் நான்கு இதழ்களுடன் கூடிய தாமரைப் புஷ்பத்தில் மூலாதாரக் கணபதி வீற்றிருப்பார். மூலவர் எந்த மூர்த்தியாக இருப்பினும் மூலாதார ஸ்தானத்தில் விநாயகரே காணப்படுவார்.

*"வ, ச, ஷ, - தனயுக்தே சம்யசாதார பத்மே*
*தருண மருண சாத்ரம் வாரணாஸ்யாம் கணேசம்*
*அபய வரத ஹஸ்தம் சாருபாசாங்கு சோத்யத்*
*கரயுகள மனக்யம் சிந்தயேத் விக்னராஜம்"*

என, ஆகம தியானம் விளம்புகின்றது. இதனைப் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில்

மாமலர் நாலையும் வட்டத்தின் மேலிடு
மாமலர் நாலினும் வவ்வாதி சவ்விடு
மாமலர் நாலிலே வட்டத்தினுள்ளே
ஓமென விநாயகன் உலாவி நின்றானே

என்று திருமூல தேவர் கூறுகின்றார்.

ஆகவே, இவற்றை நன்கு சிந்தித்துக் கொடிமரத்துக்கு இப்பால் கீழே வீழ்ந்து வணங்குதல் வேண்டும். அங்ஙனம் வணங்கும்போது காமம், வெகுளி, மயக்கம் ஆகியவை நம்மைவிட்டு நீங்குவதற்காக, பலிபீடத்திலே இவற்றை நாம் பலியிட்டுப் பரிசுத்தமான ஆன்மாவாகிய நந்தியைப்போல் ஆகவேண்டுமெனச் சிந்தித்து வணங்குதல் வேண்டும். கீழே வீழ்ந்து வணங்கும் நமஸ்காரம் ஆண்களுக்கு அட்டாங்க நமஸ்காரமெனவும், பெண்களுக்குப் பஞ்சாங்க நமஸ்காரம் எனவும் சொல்லப்படும்.

பூமியில் பதியும் வண்ணம் வணங்குதல் - (ஆண்களும் பெண்களும் செய்யக்கூடிய பொதுவான நமஸ்காரம் கைகள் இரண்டையும் கூப்பித் தலையைச் சாய்த்து அதனுடன் சேர்த்து மூன்று அங்கங்களினாலும் வணங்குவது திரியங்க நமஸ்காரமாகும்) உச்சியின்மீது இருகரங்களையும் உயர்த்தி வணங்குதல் ஆண்களுக்கு மட்டுமே உரிய வணக்கமாகும்).

விநாயகர் முதல் சண்டேஸ்வரர் ஈறாக உள்ள மூர்த்திகளை முறைப்படி ஒவ்வொரு சன்னிதானத்தின் முன்னரும் சிறிது நேரம் மன அடக்கத்துடன் நின்று அந்தந்தச் சுவாமிக்கு ஏற்ற தோத்திரங்களில் ஏதாவது ஒன்று பல கூறி வணங்குதல் வேண்டும். வணங்கும்போது அந்த மூர்த்தியின் திருத்தோற்றத்தை நன்கு பார்த்துச் சிரசு முதல் பாதம் வரை அத்திருவுருவை அவதானித்துத் தத்துவார்த்தங்களை மனத்தில் சிந்தித்து வழிபடுதல் வேண்டும். அங்ஙனம் இல்லா விடில் நாம் கண்களை மூடித் தியானத்தில் ஈடுபடும் நேரத்தில் மூர்த்தியின் திருத்தோற்றத்தை நமது மனக்கண்களால் காணுவதற்கு இயலாது போய்விடும். ஆகவே கண்களை நாம் பெற்றதின் பயன் இறைவனின் அழகிய திருத்தோற்றத்தினையும் அபிஷேக ஆராதனைகளையும் திருவுலாவரும் அலங்காரக் காட்சியினையும் கண்டு ஆனந்தம் அடைய வேண்டுமென்பதை உணர்தல் அவசியம்.

## விநாயகர்

விநாயகப் பெருமானையே நாம் முதலில் வணங்குதல் வேண்டும். மூலமும் முழுதும் முடிவுமாக விளங்கும் பிரணவ வடிவினராக விநாயகப் பெருமான் விளங்குவதனால் இவரின் வழிபாடு முதன்மை பெற்றது. அ+உ+ம் ஆகிய (A-U-M) மூவெழுத்துக்களின் நாதங்கள் ஒருங்கு இணையும்போது "ஓம்" என்னும் ஒலி பிறக்கின்றது. நாதவடிவில் இறைவன் நமக்குக்

காட்சி தருவதற்கே பிரணவமாகிய ஓம் என்னும் எழுத்தைப் போன்ற யானையின் முகத்தைத் தமது திருவதனமாகக் கொண்டு விநாயகர் விளங்குகின்றார். விநாயகனை முதலில் வணங்கினால், நாம் ஆரம்பிக்கும் எக்காரியமும் எவ்வித இடையூறும் இன்றி நிறைவேறும் எனவும் அல்லாவிடில் விக்கினங்கள் சம்பவிக்கும் எனவும் நமக்குக் கந்தபுராணம் அறிவுரை பகருகிறது.

விநாயக வழிபாடு செய்யாவிடின் தீமை விளையும் என்பதைச் சிவபெருமான் திரிபுரதகனம் செய்ய முற்பட்டபோது தேர் அச்சு முறிந்ததால் நமக்கு உணர வைக்கின்றனர். இதனை "முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைதரம் அச்சது பொடிசெய்த அதிதீரா" என அருணகிரிநாதர் குறிப்பிடுகின்றார். விநாயகரை வழிபாடு செய்யும் போது, இரு கைகளையும் முட்டியாகப் பிடித்து இரு கபாலங்களிலும் குட்டிக் கும்பிடுதல் வேண்டும். இதனால் சிரசிலுள்ள அமிர்தமானது சகல நாடிகளிலும் கலந்து உடம்பு முழுவதும் அமிர்தமயமாக மாறிவிடுமெனக் கூறப்படுகின்றது.வலது கை முட்டியினால் தலையின் வலது பக்கத்திலும் இடக்கை முட்டியினால் இடது பக்கத்திலும் குட்டிக் கும்பிடுதலே முறையாகும்.

மேலும் வலது கையினால் இடக்காதினையம் இடது கையினால் வலக் காதினையும் பிடித்துக் கொண்டு மூன்று முறை தாழ்ந்து எழுந்து (கணைக்காலில் தொடைபடும் வண்ணம்) வணங்கல் வேண்டும் இதனைத் "தோப்புக்கரணம்" எனக் கூறுவர். கயமுகன் என்னும் அசுரன் தேவர்களைக் கொண்டு இங்ஙனம் தன்னை வழிபடும்படி கூறிக் கொடுமைப்படுத்தினான். விநாயகப் பெருமான் அவனைச் சம்காரம் செய்து தேவர்களைக் காத்தருளினார். அன்று முதல் தேவர்கள் விநாயகப் பெருமானைத் தோப்புக்கரணம் செய்து வழிபடுவராயினர்.

கருணையின் திருவடிவாகவும் ஞானத்தின் இருப்பிடமாகவும் விநாயகரை நாம் சிந்தித்து வழிபடுதல் வேண்டும். மூஷிக வாகனத்தைக் கொண்டுள்ளதன் நோக்கம் அற்பப்பிராணியாயினும், பெருத்த உருவத்தினையுடைய தம்மைச் சுமக்கும் வண்ணம் மிக லேசாகத் தம்மை உணரவைத்தலேயாகும். இதிலிருந்து பலவகைப் பிறவிகளின் வெளித்தோற்றம் மாறுபாடாக இருப்பினும் உயிர் ஒரே தன்மையானதெனவும், அவ்வுயிரில் பரம்பொருளாகிய இறைவன் கலந்து உறைகின்றான் என்பதும் நமக்குத் தெரிகின்றது. விநாயக வணக்கத்தினை முடித்துக்கொண்டு சிவபெருமான் திருச்சந்நிதியின் முன்னர் செல்லுதல் முறையாகும்.

**சிவன்**

சிவபெருமானே சைவமணிகளின் முழு முதற்கடவுளாவார். சிவபெருமான் உலகம் முழுவதும் நிறைந்தும் உலகத்தோரின் மனம், வாக்கு முதலியவற்றைக் கடந்தும் நித்தியராய் விளங்குபவர். எனவே, உலகம் முழுவதும் வியாபித்துள்ள சிவனை அவரின் பேராற்றல் கருதி ஆணாகவும், பெருங் கருணைகருதிப் பெண்ணாகவும் ஒரே சமயத்தில் ஞானிகள் தமது உணர்விலே கண்டார்கள். அந்தத் திருக்கோலத்தையே அர்த்தநாரீஸ்வர வடிவாகவும் சிவலிங்கத்

திருமேனியாகவும் நமக்கு வர்ணித்தார்கள். சிவம், சக்தி ஆகிய இரண்டும் பிரிக்கமுடியாத சம்பந்தமுடையவை. சிவன் -சக்தியின் மூலம் இயங்கி ஐந்து தொழில்களையும் நிகழ வைக்கிறது. சிவசக்தி ஐக்கியத்தினை சி என்னும் பதமே நமக்குப் புரிய வைக்கிறது. சி என்பது சிவம் வ என்பது சக்தி சிவம் உறுதியாக இருக்க, சக்தி இயக்கம் கொண்டு விளங்குகிறது. இதனை உமாபதி சிவாச்சாரியார் "பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும் கூசாமற் காட்டக் கொடி" என்று கொடிக்கவி என்னும் நூலிற் குறிப்பிடுகின்றார். பேசா எழுத்து என்றால் அசையாது. நிர்விகல்பமாக விளங்கும் சி என்னும் இறைவன், பேசும் எழுத்து என்றால் இயங்கும் தன்மை கொண்டது வ என்பது திருவருளாகிய சக்தி.

இதை உணர்த்தவே, சிவக்குறியாக உள்ள சிவலிங்கத்தையும் ஆண், பெண் அடையாளத்தின் தோற்றத்தில் அமைத்துள்ளனர். சிவலிங்கத்தின் கீழுள்ள வட்டமான பகுதி ஆவுடையாள் எனப்படும். இது இயக்க சக்தியாகிய திருவருள் மயமானது. உலகம் முழுவதும் தன்னுள் அடக்கி விளங்குவதுடன் இதனுள்ளே பாதியும் மேலே தெரியும் வண்ணம் பாதியுமாக உள்ளது லிங்கம் என்னும் பகுதியாகும். இது அசைவின்றி என்றும் உள்ள பொருளாகிய சிவம் ஆகும். உலக வடிவாக உள்ள ஆவுடையாளின் அமிழ்ந்தும் அதனைக் கடந்து மேற்பட்டும் இருப்பதனாலே (கட+ உள்) கடவுள் என்று அழைக்கின்றோம். இன்றைய விஞ்ஞானிகள் கண்டுள்ள முடிவுகளின்படியும் உலகத்தின் எல்லாப் பொருள்களையும் துகள்களாக்கி மேலும் நுண்துகள்களாக்கி ஆராய்ந்து பார்க்கினும் உள்ளே ஒவ்வொரு நுண்துகளிலும் இருபொருள்கள் காணப்படுகின்றன என்றும் ஒன்று அசைவற்றதும் மற்றது அசைவு உள்ளது எனவும் (எலெக்ட்ரோன், நியுட்ரோன்) கூறுகின்றனர். இதனை நமது மெய்ஞ்ஞானிகள் எப்போதோ கண்டு கூறியிருப்பதை அவரறியார்.

**அம்மன்**

சிவலிங்க தரிசனத்தை முடித்துக்கொண்டு நடராஜர் முதலிய மூர்த்திகளைத் தரிசத்துக்கொண்டு அம்பிகையைத் தரிசித்தல் வேண்டும். இறைவன் வேறு அன்னை வேறு என நாம் எண்ணுதல் தகாது. யாவராலும் கண்டுணர முடியாத இறைவன் அருள் திருமேனி தாங்கி நமக்கு உருவமாகத் தோற்றமளிக்கும் போது கருணை வடிவான தாயாகிய அம்பிகை வடிவிலே நாம் கற்பிக்கின்றோம்.

"அப்பன் நீ அம்மை நீ" அம்மையே அப்பா" போன்ற திருமுறைத் தொடர்கள் இதனை வலியுறுத்துகின்றன. இறைவன் எல்லா வஸ்துக்களையும் உயிர்களையம் கோவிலாகக் கொண்டு அதனுள்ளுறை தெய்வமாகத்தானே விளங்குகின்றான். எனவே எல்லா வடிவங்களும், படிமங்களும், அவனுக்குக் கோவிலாகும். ஆயினும் திருவருள் வடிவாகிய சக்தியின் வடிவமே அவனுக்குச் சிறப்பான கோவிலாகும். இதனைத் "தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை" என்னும் தொடரின் ஆக்கமான தத்துவக் கருத்து இயம்பி நிற்கிறது. நாம் அன்னையின் கருணையினாலே தான்

ஆண்டவனை உணர முடியும் என்பதனாலும் ஆண்டவன் நம்மை நோக்கிக் கீழிறங்கி வரும்போது அன்னை வடிவிலேதான் வருவான் என்பதனாலும் நம்மை மிகவும் அணுகி விளங்குவது ஆண்டவனின் அருட்சக்தியே என அறியலாம். இதனாற்றான் "நமப் பார்வதிபதயே" என வரும் தொடரில் பார்வதியை முதலில் கூறிப்பதியையுணர வைக்கின்றனர். அன்னையை வணங்கி அருள்பெறுவோமாக.

## சுப்பிரமணிய சுவாமி

இதன்பின் முருகப்பெருமான் திருச்சந்நிதியை அடைந்து வணங்குதல் வேண்டும். என்றும் இளையனாய் அழகனாய் ஆண் மயிலை வாகனமாய்க் கொண்டு தேவலோக, பூலோக மாதர்களாகிய இரு தேவிமார்களைக் கொண்டு, திருக்கரத்திலே வேற்படைக் கலத்தைத் தாங்கிய வண்ணம் முருகன் காட்சி தருகின்றான். அவனது கொடியிலுள்ள சேவல் அவனது பெரும்புகழை யாவரும் அறியும் வண்ணம் உரத்துக் கூவிச் சொல்லுகின்றது. இத்தகைய கந்தக் கடவுளை வணங்கும்போது தோகைமயில் ஆகிய பிரணவத்தில் உட்பொருளாக ஞானப்பழமாகிய முருகப்பிரான் வீற்றிருப்பதாக நாம் சிந்திக்க வேண்டும். இரு சக்திகளில் தெய்வநாயகியைத் தேவர்கள் அழைத்துச் சென்று முருகனிடம் சேர்த்தார்கள். வள்ளி நாயகியைத் தேடித்தானே வலிய வந்து, வேடர்களை வென்று தன்னோடு சேர்த்துக்கொண்டான். இதனைக் கந்தபுராணம் கூறுகின்றது. சிவஆன்மாக்கள் ஞானத்தினாலே முருகனை அடைவது உண்டு. பலர் அஞ்ஞானத்தினாலே அறியாதிருப்பினும், கருணை மேலீட்டினாலே ஞானப்பழமாகி முருகன் தானேவந்து தடுத்தாட்கொண்டருளுவதும் உண்டு என்பதனை நாம் நினைவுகூர்தல் வேண்டும்.

வள்ளியை இச்சாசக்தியெனவும் தெய்வானையைக் கிரியாசக்தி எனவும் வேற்படைக்கலத்தை ஞானசக்தியெனவும் வர்ணிப்பார்கள். ஆணவம் மேலிட்ட நிலையிலிருந்த சூரபத்மனை அவனது தவத்தின் மேம்பாட்டினாலே, முருகன் தானே வந்து ஞானாஸ்திரமாகிய வேலாயுதத்தின் மூலம் அவனது அஞ்ஞானத்தைப் போக்கித் தன்னைத் தாங்கும் வாகனமாகவும் தன் புகழ்பாடும் கொடியாகவும் நிலைபெறச் செய்து தன்னோடு சேர்த்து யாவரும் போற்றி வழிபடச் செய்துள்ளான். இதனை "சேவலும் மயிலும் போற்றி, திருக்கைவேல்போற்றி, போற்றி" என்பதனாலறியலாம். முருகப் பெருமானின் வேல் மகிமை அளவிடற்கரியது என்பதனால் "போற்றி போற்றி" என இருமுறை கூறினார்.

வீரவேல் தாரைவேல், விண்ணோர் சிறைமீட்ட தீரவேல், செவ்வேள் திருக்கைவேல், வாரிகுளித்தவேல், கொற்றவேல், சூர்மார்புங் குன்றும் துளைத்தவேல் உண்டேதுணை எனவும் கூறப்பட்டிருப்பதனால் வேற்படைக்கலத்தின் மகிமையை நன்குணரலாம்.

## வைரவசுவாமி

முருகப்பெருமானைத் தரிசித்த பின்பு, வைரவப் பெருமானைத் தரிசித்தல் முறையாகும். வைரவப் பெருமானைத் தரிசிக்கதும்பொழுது நான்கு வேதங்களின் முதல்வனாக இவரைச் சிந்தித்தல் வேண்டும். நாய்வாகனம் வேதவடிவாக விளங்குகின்றது. வைரவர் சூலமானது முப்பெரும் சக்திகளையும் குறிப்பிட்டு, படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் ஆற்றுபவர் இவரே என்று பறைசாற்றுகின்றது. “மூவிலை இருதாட் சூலமேற்துதல் மூவரும் யாமென மொழிந்தவாறே” என வரும் புராணத்தினாலும் இதனையுணரலாம். கபாலம் ஏந்தியிருப்பது ஆணவ முனைப்பைத் தாமே குறைத்து நம்மிடமிருந்து அஞ்ஞானத்தை ஏற்றுக்கொள்பவர் என்பதனைக் குறிக்கின்றது. பலி என்பது பிச்சை எனப் பொருள்படும். இரத்தத்தைப் பிச்சையாக ஏற்பவர் என்பதனால் “இரத்தப்பலிப்பிரியர்” எனக் கூறப்பட்டுள்ளதனைத் தவறாகப் புரிந்துகொண்டு ஏராளமாக உயிர்க்கொலை புரிவதில் மக்கள் சிரத்தைகொண்டு விளங்கினர். இரத்த மிடுக்கினால் நாம் அடாத காரியங்கள் செய்வதனையும் இரத்தங்குன்றியபோது அமைதியாக வலுவிழந்து நிற்பதனையும் அனுபவத்தினாலேயே அறிவோம். மேலும் பலகோடி பிரம்மா, விஷ்ணு, இந்திரராதி தேவர்களின் மண்டை ஓடுகளைத் தாம் தரித்திருப்பது தனது நிலையான தன்மையினையும் நமக்கு உணரச் செய்கின்றது. மண்டையோட்டு மாலையை நினைவு கூர்வதற்கே வடைமாலைஅணிவிக்கின்றோம். இவற்றைச் சிந்தித்தால் நாமும் கர்வம் இன்றிப் பணிவு மிகுந்தவர்களாக மாறி நற்கதியடையலாம் என்பது துணிபு.

## நாகேஸ்வர (நாகதம்பிரான்) சுவாமி.

நாகதம்பிரான் சந்நிதிக்கு வந்தவுடன் அங்கு ஐந்துதலை நாகபாம்பு பெரிய உருவத்துடன் காட்சி தருகிறது. சிறிய சிவலிங்கம் உள்ளே காணப்படுகிறது. லிங்கத்திலும் பார்க்கப் பாம்பின் தோற்றம் அமைக்கப்பட்டிருப்பது நமக்கு ஒர் உண்மையை விளக்குகின்றது. உலகம் முழுவதிலும் அடங்கியும் ஆதாரங்களனைத்தையும் கடந்தும் இறைவனது பேரருட் சக்தி விளங்கும் என்பதைக் காட்டவே இலிங்கத்தின் மேல் ஐந்து தலை நாகம் கவிந்திருப்பது உணரவைக்கின்றது. மூலாதாரத்திலிருந்து கிளம்பும் மூச்சுக் காற்றானது இடை, பிங்கலை ஆகிய இரு நாடிகளையும் யோக சாதனை மூலம் கட்டுப்படுத்தும்போது மிகவும் வேகத்துடன் சுழுமுனையாகிய நடு நாடிமூலம் மேற்கிளம்புகிறது. அப்போது மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, அஞ்சை ஆகிய ஆறு ஆதாரங்களையும் கடந்து இறுதியில் சிரசின் மூலம் வெளிக்கிளம்பித் துவாத சாந்தம் என்னும், (துரியம் - துரியதீதம் என்னும்) பரமண்டலத்தையடையும்போது உள்ள பெருநிலையை இந்த நாகம் புலப்படுத்துகிறது. யோகத்தின் மூலம் உணரப்படும் உட்பொருள் சிவம் என்பதனை இலிங்கம் உணர்த்துகின்றது. சில இடங்களில் நாகத்தில் விஷ்ணு காணப்படுவார். எப்படியிருப்பினும் தத்துவக் கருத்து ஒன்றேயாம் “காளிங்க

நிருத்தம்” என்னும் தோற்றத்தில் கிருஷ்ணபகவான் பாம்பின்மீது நின்று அதன் வாலையும் கையில் பிடித்திருப்பது மூலமும் முடிவும் நானே என்பதனைப் புலப்படுத்துவதாகும். இவரை வணங்கியபின் சண்டேசுவரரைத் தரிசிப்போம்.

## சண்டேசுவரர்

இறைவன்மேல் இடையறாத பக்தி செலுத்தியதின் மூலம் விசார சருமர் என்பவருக்கு இறைவன் சண்டேசபதம் என்னும் பதமுத்திப் பேற்றினைக் கொடுத்தருளினார். இவர் இறைவனுடன் எக்காலமும் அவரையே தரிசித்துக்கொண்டு தியானத்தில் இருப்பவர். இறைவன் தனக்குப் படைக்கப்படும் திருவமுது மற்றும் பரிவட்டங்கள் ஆகிய அனைத்தும் எனக்கே உரியவை என்று கூறியருளினார். அதனால்தான் இறைவனுக்கு நிவேதனமாகும் அனைத்தும் சண்டேசுவரருக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் “பக்தர்கள் எம்மைப் பூசித்த பலனை நீயே அவர்களுக்கு வரமாக வழங்குவாயாக” என்று இறைவன் கட்டளையிட்டருளினார். ஆகவே நாம் இறுதியில் சண்டேஸ்வரப் பெருமானைத் தரிசித்து அவர் அருளைப் பெறுகின்றோம். அவர் கண்களை மூடி சிவ சிந்தனையில் தியானித்திருப்பதால்தான் மெதுவாக மும்முறை கையைத்தட்டி அவரது கிருபாநோக்கம் எம்மீது செலுத்தப்படவேண்டும் என்று தியானிக்கிறோம். பலமாகக் கை தட்டுதலோ, அவரது திருவுருவத்தை தூக்கிய படியே வேகமாக ஓடிச் செல்வதோ மகாபாவத்தைத் தருவதாகும். மேலும் சண்டேசுவரருக்கும் மூலமூர்த்திக்கும் இடையே குறுக்காகச் செல்லுதல் தகாது.

ஆகவே மூலமூர்த்தியை வலம் வரும்போது இவரையும் சேர்த்து நாம் வலம் செய்வதனால், இவரைத் தனியாக வலம் செய்தல் ஆகாது. மூலமூர்த்தியை வலம் செய்யும் போது பரிவார மூர்த்திகளை வலம் வருதல் அவசியமில்லை. சிரசின்மீது கைகளைக் குவித்து அல்லது மார்பின் நேரில் குவித்து வணங்கிக்கொண்டு இறைவனது துதிகளை அல்லது திருநாமங்களை உச்சரித்துக்கொண்டு மெதுவாக அடிமேலடி வைத்து வேறு எங்கும் கவனம் செலுத்தாது இடையில் வேறு வார்த்தைகளைப் பேசாது வலம் வருதல் முறையாகும்.

## தியானம்


அர்ச்சனை வழிபாடுகளை இயன்றளவு செய்ததன் பின்பு இறுதியாக ஆலய வழிபாட்டின் முக்கியமான பெரும் பயன் யாதெனில் நாம் ஓர் இடத்தில் அமர்ந்து அமைதியாக இருந்து கண்களை மூடிக்கொண்டு மனத்தை அடக்கி வெளியே நாம் இதுவரை கண்டுகளித்த இறைவனது அழகிய திருக்கோலத்தினையும் பூஜை ஆராதனைகளையும் மனத்தில் மீண்டும் சிந்தித்துத் தியானத்தில் அமர்தலாகும். வழிபாட்டினால் பெறும்பயன் நாம் தியானத்தில் ஈடுபடுதலேயாகும். இதுவே தவம் எனப்படும்.

அருணகிரிநாதர்


"சரணகம லாலயத்தை
அரை நிமிட நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க
அறியாத சடகசட மூடமட்டில்"

என்று தம்மைப் பற்றித் தாழ்த்திப் பாடுகிறார். எனவே நாம் ஒவ்வொருவரும் பூசையைத் தரிசித்தபின் உடனே வீண் வார்த்தையாடுவதில் ஈடுபடாது தியானத்தில் உட்கார்ந்து இருத்தல் அவசியம். ஆலயத்தினுள் நம்மை வீண் வார்த்தை பேசுவதற்குத் தூண்டுபவர்களும் ஆண்டவனால் ஏவப்பட்டவர்களே. இது இறைவன் நம்மைப் பரீட்சை செய்வதற்காக ஏற்படுத்தியதேயாம். எனவே இதனை வென்று மௌனத்தைக் கடைப்பிடித்தலே நமது வழிபாட்டின் குறிக்கோளாகும்.

இங்ஙனம் ஆலய வழிபாட்டினைத் தினமும் நியதியாக மேற்கொண்டு நமது அன்றாட அலுவல்களையும் கவனித்துக்கொள்வோமேயானால் நமது வாழ்வு தெய்வீக வாழ்க்கையாக அமையும். மேலும் தினந்தோறும் ஆலய வழிபாடு செய்ய இயலாவிடின் விசேட நாள்களிலும் புண்ணிய காலங்களிலுமாவது ஆசார சீலர்களாகச் சுவாமி தரிசனம் செய்பவர்களும் இறைவனது கருணைக்கு ஆளாவார்கள்.



மூலஸ்த்தானத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் விக்கிரகம்



1972ம் ஆண்டு கண்ணகி அம்மனின் பொங்கல் விழா நடைபெறுகின்றது.

அமரர்களான சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள், சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் மற்றும் திருப்பணிச் சபையினர்.

# கலைகள்

த. இலங்கேஸ்வரன்

அன்று முதல் இன்று வரை இந்து சமயத்தில் கலைகளுக்கென ஒரு தனி இடம் உண்டு. இந்துக்களைப் பொறுத்தமட்டில் கலைகள் வெறும் மகிழ்வுக்காக உருவாக்கப்பட்டவை அல்ல. அவை மோட்ச சாதனங்களாக கருதப்படுகின்றன. பொதுவாக மனிதனாற் படைக்கப்படும் சகல படைப்புகளும் கலை என்றே கொள்ளப்படத்தக்கன. இருந்த போதும் நமது நூல்கள் கலைகள் 64 ஆக வகுத்துள்ளன. "ஆயகலைகள் அறுபத்து நான்கு" என்று குமரகுருபரர் கூறுவது குறிப்பிடத்தக்கது.

இவற்றுள் அழகு பளிச்சென தென்படும் நுண்கலைகள்.

1. கட்டடக்கலை
2. சிற்பக்கலை
3. ஓவியக் கலை
4. இசைக் கலை
5. நாட்டியக் கலை
6. நாடகக் கலை
7. இலக்கியம்

ஆகிய ஏழுமாகும். இவை ஏழும் அழகை வெளிப்படுத்துவதை குறிக்கோளாக கொண்டவை. இதனால் இவை அழகியற் கலைகள் எனப்படும்.

## 1. கட்டடக்கலை

இந்துக்களை பொறுத்தமட்டில் கட்டடமோ அல்லது ஏனைய கலைகளோ சாஸ்திர நூல்கள் கூறும் நியமங்களின்படி அமைக்கப்பட வேண்டும் என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறை. இவற்றில் நியமந் தவறியவற்றிற்கு உரிய மரியாதை வழங்கப்படுவதில்லை. அத்துடன் அவை அமங்கல பொருள்களாக கருதப்படுகின்றன. கோயில்கள், கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டிய விதிமுறைகளைப் பற்றிக் கூறும் நூல்கள் "வாஸ்து வித்யா நூல்கள்" என்று அழைக்கப்படும்.

"வாஸ்து" என்றால் வடமொழியில் வசிப்பிடம் என்று அர்த்தம். வாஸ்து சாஸ்திர நூல்கள் தரும் விதிமுறைகள் கட்டடக்கலையில் பின்பற்றப்படுமிடத்து அவை மனிதனுக்கு மன அமைதி, ஒருமைப்பாடு, மகிழ்ச்சி அனைத்தையும் ஒருங்கே தருவனவாக நம்பப்படுகின்றது.

இந்தியக் கட்டக்கலை மிக நீண்டகாலத்து வரலாற்றைக் கொண்டது. அது தொன்மைக் காலத்தில் உற்பத்தியாகி வளர்ச்சி பெற்று வந்துள்ளது. ஏறக்குறைய 4000 ஆண்டுகளுக்கு முன் நிலைபெற்ற மொஹொஞ்சதாரோ, ஹரப்பா நகரங்களில் கோயில்களின் அடையாளம் காணப்படாவிடினும் மாளிகைகள், வீடுகள், அரண்கள், தானியக் களஞ்சியங்கள், பொது அரங்குகள் முதலானவற்றின் அழிபாடுகள் காணப் பெற்றன.

இந்த தொல்பொருளாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட நீர்ப்பாசன நிர்மாணங்கள், மற்றும் வசிப்பிடங்கள், நீர்த்தடாகங்கள் என்பன அக்காலத்தில் காணப்பட்ட மிகவும் நுட்பமான அதிசயிக்கத்தக்க கட்டடக்கலைக்கு சான்று பகர்கின்றன. இவற்றுள் தற்காலத்தில் உலகெங்கும் உள்ள நவீன பாணியிலான குளியலறைகள், மலசல கூடங்களிற்கான அடிப்படை உருவமைப்புகள். மொஹொஞ்சதாரோ நகரின் வீடுகளில் காணப்பட்டன என்பது மிகவும் வியக்கத்தக்கது. ஹரப்பாவில் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட செங்கற்கள் ஐந்தாயிரம் ஆண்டுகளிற்கு பின் இன்றும் பாவிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கின்றன என்பதை நம்ப முடியுமா?

**2. சிற்பக்கலை**

இந்துக்களின் கலை மரபில் முதன்மையானது சிற்பக்கலை. சிற்பம் என்னும் சொல் பொதுவாக கற்சிற்பங்களையே குறிப்பதாயினும் தெய்வ உருவங்கள் அனைத்தையும் அது குறிக்கும். சிற்பங்கள் மனிதனின் காட்சிக்கு விருந்தாகி உள்ளத்தில் உறைந்து கிடக்கும் உணர்ச்சிகளைத் தூண்டி அழகியல் இன்பத்தைக் கொடுக்க வல்லன. இந்த அனுபவம் ஆன்மீகப் பயணத்தில் மனிதனைப் படிப்படியாக பூரணம் பெற வழி செய்கின்றது.

சிற்பக் கலைக் கொள்கைகளாகக் கூறப்படும் நியமங்கள் சிறப்பங்களுக்கு அழகைக் கொடுப்பன. அவையாவன:-

1. அளவைப் பிரமாணம்: சிற்ப வடிவில் உறுப்புகள் ஒவ்வொன்றும் அமைய வேண்டிய விதிகள்.
2. இலட்சண விதி : பார்ப்போர் மனதில் ரசபாவங்களை உண்டு பண்ணுதல்.
3. பங்கம் : சிற்பங்களின் தமபங்கம், அபங்கம், திரிபங்கம் என்ற மூன்று நிலைகள்.
4. ஹஸ்தம் (முத்திரை): கை அபிநயங்கள்.
5. ஆபரணம் : சிற்பங்கள் அணியும் நகைகள்.
6. ஆயுதம் : அவை தாங்கும் ஆயுதங்கள்.

## 3. ஓவியக்கலை

ஆன்மீக வாழ்வு வாழ்ந்து இறையருள் பெற்று புறத்தே கண்டதை அகத்தே நிறுத்தி பின்னா் அதை ஓவியமாகத் தீட்டுபவனே ஓவியன். ஓவியக்கலையானது ஒரு தனிக்கலையாக வளர்ச்சி பெறாமல் சிற்பக் கலையின் ஓர் இன்றியமையாத உறுப்பாகவே இடம் பெற்று வந்துள்ளது.

துணிகளில் உருவங்களை ஓவியமாக தீட்டி வழிபடுவதும் புராண செய்திகளை ஓவியமாக பிரகார சுவர்களில் வரைவதும் தனித்துவமான கலையாகும். மன்னர்களின் அரண்மனைகளிலும் செல்வந்தர்களின் இல்லங்களிலும் உள்ள கட்டட சுவர்களில் ஓவியம் வரைந்து அழகுபடுத்தும் வழக்கம் மிக மிக பழைமையானது. இம்மாதிரியான சுவர் சித்திரங்கள் தான் காலத்தால் மிக முந்தியவை என்பதற்கு பண்டைக்கால இலக்கியங்கள் ஆதாரமாக இருக்கின்றன.

இந்துக்கலை மரபில் சிற்பக்கலை போன்று ஓவியக்கலையும் பல்வேறு நியமங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றது. "விஷ்ணு தர்மோத்தர புராணத்தில்" இடம் பெறும் சித்திர சூத்திரம் என்னும் பகுதி இந்துக்களின் ஓவியக் கொள்கை பற்றி அறிய உதவுகிறது. சிற்பம், ஓவியம் இரண்டும் அடிப்படையில் வேறுபட்டாலும் ஒத்த விதிமுறைகளைக் கொண்டவை. சித்திரம் ஆர்வத்தைத் தூண்டும் கவிதையைப் போன்று ஒவ்வொருத்தரின் ரசனையிலே தங்கியுள்ளது.

## 4. இசைக்கலை

அகிலத்தில் முதன்முதலாக ஒலிக்கப்பட்ட நாதப் பிரம்மமான "ஓம்" என்ற தூய இனிமையான ஒலியே எல்லா இசைக்கும் அடிப்படை. சிறந்த கலைகளான நுண்கலைகளுள் மேன்மையானது இசைக் கலையாகும். மனிதர்கள், மிருகங்கள், பண்டிதர்கள், பாமரர்கள் முதலிய எல்லோருக்கும் இன்பத்தை தரக்கூடியது இசை.

இசைக்கு காந்தர்வ வேதம் என்று பெயர். காந்தர்வ வேதம் நான்கு உப வேதங்களில் ஒன்று. கடவுள் வழிபாடு செய்வதற்கும், கடவுளை அறிவதற்கும் இசை ஒரு முக்கிய சாதனமாகும். இசை ஒரு தெய்வீகமான கலை. சிவபெருமான் கையிலுள்ள உடுக்கும் கண்ணபிரான் கையிலுள்ள புல்லாங்குழலும், கலைமகளின் கையிலுள்ள வீணையும் இதற்கு சான்று பகர்கின்றன.

இசைக்கு உயிர்நாடியாக விளங்குபவை ஸ, ரி, க, ம, ப, த, நி என்ற சப்த ஸ்வரங்களாகும். இந்த ஏழு ஸ்வரங்களும் சிவனின் பஞ்ச முகங்களிலிருந்தும் வெவ்வேறு திக்குகளில் எழுப்பப்பட்ட ஒலிகள் என்பது ஐதீகம். இவை முறையே 'ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தெய்வதம், நிஷாதம் எனப் பெயர் பெறும்.

இசைக்கு முக்கியமானது ஸ்ருதி. ஸ்ருதி மாதாவாகவும் லயம் பிதாவாகவும் கருதப்படுகின்றன. ஸ்ருதியும் லயமும் இல்லாமல் இசை இருக்க முடியாது.

லயம் எனப்படும் தாளம் இசைக்கு முதுகெலும்பைப் போன்றது. இது இசைக்கு ஒரு காலப்பிரமாணத்தை அளிக்கிறது. தாளங்கள் அடிப்படையில் ஏழு வகைப்படும். அவை ஸப்த தாளங்கள் எனப்படும். அவையாவன

1. துருவ தாளம்
2. மட்டிய தாளம்
3. ரூபக தாளம்
4. திரிபுட தாளம்
5. ஜம்பை தாளம்
6. அட தாளம்
7. ஏக தாளம்

இந்திய இசையில் பல வகையான வாத்தியங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

1. ஸ்ருதி வாத்தியங்கள் : தம்புரா, ஸ்ருதிப் பெட்டி
2. சங்கீத வாத்தியங்கள் : வீணை, கோட்டு வாத்தியம், வயலின், புல்லாங்குழல், நாதஸ்வரம், ஹர்மோனியம், ஜலதரங்கம்
3. லய வாத்தியங்கள் : மிருதங்கம், தவில், மோர்சிங், கெஞ்சிரா, கடம், தப்லா

தென்னிந்தியாவிற்குரிய கர்நாடக சங்கீதத்திற்கு புத்துயிரளித்து நூற்றுக்கணக்கான அரிய உருப்படிகளை இயற்றி, அநேக அபூர்வ ராகங்களைப் பிரசித்தி பெறக் கொண்டு வந்த இயலிசைப் புலவர்களாகிய ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள், முத்துஸ்வாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் என்னும் மகான்கள் சங்கீத திரிமூர்த்திகள் என அழைக்கப்படுகின்றனர்.புகழ்வாய்ந்த வாக்யக்காரர்கள் பலர் இருப்பினும், இம்மூவரை மட்டுமே இவ்வாறு அழைப்பதற்கு பல காரணங்கள் உண்டு. தற்காலத்தில் வழங்கி வரும் ஸ்ருதி என்னும் உருப்படி வகையைச் சிறப்பான நிலைமைக்கு கொண்டு வந்தவர்கள் இம்மூவரே. இவர்களைப் பற்றி இன்னும் விசேஷமான அம்சங்கள் பல உள. மூவரும் திருவாரூர் என்னும் புனித ஷேத்திரத்தில் அவதரித்தவர்களாவர்.

### 5. நாட்டியக் கலை

மனிதன் தோற்றுவித்த நுண்கலைகளுள் காலத்தால் மிகவும் முற்பட்டது நாட்டியக்கலையே என்பது ஆராய்ச்சியாளர்களின் ஏக போக முடிவு. இந்த அழகியற்கலை மிக தொன்மையான வரலாறு கொண்டதாகவும் ஏனைய பல கலைகளுக்கு அடிப்படையாகவும் அமைந்து வந்துள்ளது. சமய தத்துவங்களையும், கருத்துக்களையும் புலப்படுத்தி மனித குலத்தை ஆன்மீக நெறியில்

செலுத்துவதற்கு உகந்ததோர் சாதனமாக இந்நாட்டியக்கலை விளங்கி வந்துள்ளது.

நாட்டியக் கலையின் தொன்மைக்கும் ஆதாரமாக சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன் காணப்பட்டதாகக் கருதப்படும். அகழ்வாராய்ச்சிகளின் போது கண்டெடுக்கப்பட்ட ஆடல் உருவமொன்றை சான்றாகக் கூறலாம்.

நாட்டியக் கலையின் தோற்றத்திற்கு ஆதாரமாக இருந்தது, ஐந்தாவது வேதமாக கருதப்படும் நாட்டிய சாஸ்திரமாகும். இருக்கு வேதத்திலிருந்து பாடலையும், சாம வேதத்திலிருந்து இசையையும், யசுர் வேதத்திலிருந்து அபிநயத்தையும், அனுபவங்களை அதர்வ வேதத்திலிருந்தும் எடுத்து நாட்டிய வேதம் பிரம்மனால் தோற்றுவிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. பிரம்மனால் தோற்றுவிக்கப்பட்ட நாட்டிய வேதத்தை உலகுக்கு நாட்டிய சாஸ்திரமாக அளித்தவர் பரத முனிவராவார்.

பரத முனிவர் நாட்டிய சாஸ்திரத்தில் “நாட்டியம் தன்னை வெறுப்பவர்களுக்கு அவர்களின் கடமையை உணர்த்துகின்றது; தன்னை விரும்புபவர்களுக்கு அன்பை வழங்குகின்றது; நன்நடத்தையற்றவர்களைத் தண்டிக்கின்றது; ஒழுக்கமற்றவர்களுக்கு ஒரு வரையறையை ஏற்படுத்துகின்றது; கோழைகளுக்கு தைரிய மூட்டுகின்றது; புத்திசாலிகளுக்கு உற்சாகத்தை அளிக்கின்றது; கற்றவர்களுக்கு அறிவையும், தெளிவையும் அளிக்கின்றது அரசர்களுக்கு ஒரு திருப்பத்தையும், துன்பத்திலிருப்பவர்களுக்கு ஆறுதலையும், செல்வத்தை விரும்புவர்களுக்கு செல்வத்தையும், மனக்குழப்பத்திற்கு அமைதியையும் கொடுக்கின்றது” என நாட்டியத்தின் பெருமையை எடுத்தியம்பியுள்ளார்.“

பரத நாட்டியமானது பரத முனிவரால் தோற்றுவிக்கப்பட்ட காரணத்தினாலும், பாரத நாட்டில் தோற்றம் பெற்றதாலும், பாவ ராக தாளங்களின் சேர்க்கை என்பதாலும் பரத நாட்டியம் என்ற பெயரைப் பெற்றது.

இதில் மூன்று பிரதான அம்சங்கள் உள்ளன.

1. நிருத்தம் : தாளக் கட்டுப்பாட்டுடன் ஆடப்படும் அடவுகளைக் குறிக்கும்.
2. நிருத்தியம்: பாடலின் பொருளை பல்வேறு அபிநயங்கள் மூலமும் முத்திரைகள் மூலமும் வெளிப்படுத்துவதைக் குறிக்கும்.
3. நாட்டியம் : புராணக் கதைகளை நாட்டிய உருவில் வெளிப்படுத்துவதைக் குறிக்கும்.

இவை எல்லாவற்றிற்கும் அடிப்படையாக உள்ளவை அடவுகள், முத்திரைகள் மற்றும் அபிநயங்களாகும். அபிநயங்கள் யாவும் சிருங்காரம், ஹாஸ்யம், கோபம், வீரம், அற்புதம், பீபத்ஸம், கருணை, பயம், சாந்தம் என்ற நவரசங்களை அடிப்படையாக கொண்டு எழுந்தவையே. இவ்வாறு கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை என்பன இந்துப் பண்பாட்டில் முக்கிய இடம்பெறுகின்றன.

# ஓம்

"ஓம்" என்ற பிரணவ மந்திரம் மந்திரங்களுள் எல்லாம் தலை சிறந்தது. சக்தி வாய்ந்தது. ஓம் என்ற சத்தம் பிரணவம் என்றும் சொல்லப்படுகின்றது. அதன் கருத்து "அது உயிரை ஊடுருவுகிறது அல்லது பிராணன் என்ற மூச்சின் ஊடே ஓடுகிறது" என்பதாகும்.


ஓம் ஆத்மாவை குறித்து நிற்கிறது. ஆத்மா பரம்பொருள் இரண்டற்ற அத்வைதப் பொருள். இந்த ஆத்மா நான்கு நிலைகளில் அறியப்படுகின்றது. அவை முறையே விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்க நிலை மற்றும் துரிய நிலையாகும். இந்த நிலைகள் ஓமிலுள்ள அ, உ,ம், என்ற மூன்று ஒலிகளால் குறிப்பிடப்படுகின்றன. தொடரும் ஒலியற்ற மௌனமே அந்தச் சத்தத்தை சூழ்ந்து நிற்கிறது.

"அ" சத்தம் விழிப்பு நிலையைக் குறிக்கிறது. "உ" கனவு நிலையையும் "ம்" ஆழ்ந்த உறக்க நிலையையும் குறிக்கின்றன. விழிப்பு நிலையை "அ"வின் மேல் ஏற்றி பேசுவதற்குக் காரணம் விழிப்பு நிலை மூன்று நிலைகளிலும் முதல் நிலையாகும். அவ்விதமே "அ" வும் மூன்று ஒலிகளிலும் முதல் ஒலியாகும். கனவு என்பது விழிப்பு நிலைக்கும் ஆழ்ந்த உறக்க நிலைக்கும் இடையே ஏற்படும் நிலையாம். அதே போல "உ" சத்தம் "அ"வுக்கு அடுத்து வரும் ஒலி. தவிரவும் அது "அ"வுக்கும் "ம்"க்குமிடையே வருகிறது.

"ம்"வின் மேல் ஆழ்ந்த உறக்க நிலை ஏற்றி வைக்கப்படுகின்றது. ஓமின் கடைசி ஒலியையும் உறக்க நிலையையும் பொருத்தி ஒப்பிடுவதற்குக் காரணம் "ம்" என்பது முடியும் ஒலியாகும். அதே போல ஆழ்ந்த உறக்கமும் இளைப்பாறும் மனதின் இறுதி நிலையாகும். இரண்டு முறை ஓம் சொல்லும் போது இரண்டுக்கும் இடையே கருத்துப் பொதிந்த ஒரு மௌனம் ஏற்படுகின்றது. அந்த மௌனத்தின் மேல்தான் நான்காவதான துரிய நிலை ஏற்றி வைக்கப்படுகிறது. இந்த நிலையில் தான் ஜீவாத்மா தான் பரமாத்மா என்கின்ற தன்மையை உணர்கிறது. இது பரமானந்த நிலையாகும்.



கடலில் மிதந்து வந்த தேர்வடம்.



1978ம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேக விழாவின் போது புதிய தேருக்கு முன்னால் ஆலய திருப்பணிச் சபையினர்.

# தெய்வீகத் திருத்தலங்கள்

வாகீசகலாநிதி
**கனகசபாபதி நாகேஸ்வரன்**

தமிழர்கள் தம் வாழ்வில் தெய்வீகத் திருத்தலங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இத்தகைய கோவில்கள் சுயம்புஷேத்திரங்களாகவும், முனிபுங்கவர்கள், ரிஷிகள், அநுபூதிச் செல்வர்கள். ஞானிகள் போன்ற அவதார புருஷர்கள் அவர் தம் தவவலிமையால் நிர்மாணிக்கப்பட்ட கோவில்கள், போர்களில் வெற்றி பெற்ற அரசர்களால் கட்டப்பட்ட கோவில்கள், இப்படியாகப் பல ஆலயங்கள் தமிழ் மக்கள் வாழும் பிரதேசமெங்கும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இப்படிக் கோவில்கள் பல அமைந்தாலும் கோவில்களில் உறையும் இறைவனின் வரலாறு திருவிளையாடல் மற்றும் துஷ்டர்களின் சம்ஹாரங்கள் ஆகியவைகள் அல்லற்பட்டு அவதியுறும் மனிதனுக்கு மன அமைதியையும் நிம்மதியையும் ஆனந்தத்தையும் தருவனவாகும்.

## அட்டவீரட்டத்தலங்கள்

இராவணன், ஹம்சன் போன்றவர்களால் நாட்டில் அதர்மமும் துன்பங்களும் அதிகரிக்க அததுன்பங்களையும் அதர்மத்தையும் நிக்ரகம் செய்ய ராம கிருஷ்ண அவதாரங்கள் எப்படி ஏற்பட்டதோ அதேபோல தேவருலகிற்கும், பூலோகத்திலுள்ளவர்களுக்கும் கொடுந்தீமைகள் செய்த சில அசுரர்களைச் சங்கரிக்கச் சிவன் எடுத்த மூர்த்தங்கள் எட்டு. அவை "அட்டவீரட்டத்தலங்கள்" என்று மிளிருகின்றன. இதேபோன்று காலை முதல் இரவு வரை ஒரே நாளில் இறைவனைத் தரிசித்து அவன் அருளைப்பெறும் ஷேத்திரங்கள் "பஞ்சாரண்ய ஷேத்திரங்கள்" என்று தமிழ்நாட்டில் இன்றும் உள்ளன. ஒரே நாளில் அவ்வாலயங்களைத் தரிசிப்பது மிகவும் உத்தமம். விசேஷமும்கூட தெய்வீகத் திருத்தலங்களின் வரலாற்றையும். அதன் சிறப்புகளையும் நன்கறிந்து கொண்டு தரிசனம் செய்தால் அதற்கு விசேஷ பலனுண்டு.

தேவர் முனிவர் முதலியோர் சிவபெருமானை வழிபட்டு நல்வரங்கள் பெறுவதற்குரிய இடமாக விளங்குவது இம் மண்ணுலகம் தலபுராணங்கள் பலவற்றிலும் திருமுறைகளிலும் திருமால், பிரமன், இந்திரன் முதலியோர் இந்நிலவுலகில் விளங்கும் திருத்தலங்களில் வழிப்பட்டு நல்லருள் பெற்றதைத் தெரிவித்தலைக் காணலாம்.

## மூர்த்தி தலம் தீர்த்தம்

இந்திய நாட்டின் வடபகுதி புனிதத் தீர்த்தங்களாலும் தென்பகுதி தெய்வீகத் திருத்தலங்களாலும் சிறந்துள்ளன. இந்து சமயத்தினர் யாத்திரையாகச் சென்று புனித தீர்த்தங்களில் நீராடியும்

ஆலயங்களை வழிபட்டும் நலம்பெற்று வருகின்றனர். எல்லோரும் எல்லாத் தலங்களுக்கும் சென்று வழிபடற்கியலாது. ஆதலால் புராண வரலாற்றுச் சிறப்புடைய திருத்தலங்களையாவது சென்று வழிபடல் நல்லது அத்தகைய தலங்களைப் பலவாறு தொகையிட்டு அடைவு செய்து கூறியுள்ளனர் பெரியோர். அவற்றுள் ஒரு பிரிவே அட்டவீரட்டத் தலங்கள் சிவபிரானது வரம்பிலா ஆற்றலைக்குறிக்கும் "பழம் பாடல்" பின்வருமாறு:-

"பூமன் சிரம் கண்டி அந்கன் கோவில் புரம் அதிகை
மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர்
காமன் குறுக்கை யமன் கடவூர் இந்தக் காசினியில்
தேமன்று கொன்றையும் திங்களும் குடிகள் சேவகமே

தேவாரம் அருளிய மூவரும் இத்தலங்களைச் சிறப்பித்து பாடியுள்ளனர். இவற்றைச் சென்று தரிசித்து வருவது சிறந்த சிவபுண்ணியத்தைத் தரும். பஞ்சபூதத்தலங்கள், சப்தமாதர்கள் பூசித்த தலங்கள், முத்தித்தலங்கள், ஆறாதாரத்தலங்கள் முருகப்பெருமானுக்குரிய ஆறுபடை வீடுகள் சப்ததானத் தலங்கள், ஜோதிர்லிங்கத்தலங்கள் என்பவற்றைச் சென்று தரிசிப்பதும், நினைத்து வழிபடுவதும் சிறந்த சிவபுண்ணியப்பயனைத் தரும். ஒவ்வொருவரும் தத்தம் மனைவியோடு சென்றுதான் தீர்த்தம் ஆடுதல் ஆலய வழிபாடு செய்தல் முதலியவற்றை இயற்றவேண்டும் என்பது நம் இந்துசமய மரபு இலங்கையில் திருக்கோணேஸ்வரமும் திருக்கேதீச்சரமும், பாடல்பெற்ற சிவத்தலங்கள். இன்னும் முன்னேச்சரம், நகுலேச்சரம், தான்தோன்றீச்சரம் என்னும் சிறப்புமிகு திருத்தலங்களுள் வவுனியா கோவிற்குளத்தில் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோவில் கொண்டு தமது கருணையை உலகுக்கு உணர்த்தியுள்ளாா.

## கோயில்கள் கலைகளின் உறைவிடம்

பொது வாழ்வோடு கலந்த வழிபாட்டுணர்ச்சியை அடைய மக்கள் விண்ணளாவி நின்று வானை முட்டுகின்ற திருக்கோவில்களை அமைத்து நல்லமுறையில் வளர்த்த தமது வாழ்க்கையில் ஓர் அங்கமாகப் பாவித்துப் பாதுகாத்து வந்தனர். எண்ணிறைந்த சைவாலயங்கள் இருப்பதுமட்டுமன்றி பல விலைமதிக்க முடியாத வேலைப்பாடுகளும் சித்திரச் சிறப்புகளும் கலை வளங்களும் உள்ளன. கோவில்களே கலைகளின் உறைவிடம் கண்ணுக்குங் கருத்துக்குமுரிய உயர்பீடம்.

## உடலும் கோயிலும்

பாரிய இயந்திர சாதனங்களில்லாத அக்காலத்தில் அமைக்கப்பட்ட இந்த ஆலயங்களின் உயரமும் அகலமும், சுவர்களின் திண்மையும், சிலைகளின் கலையம்சமும் இக்காலத்துப் பொறியியல் வல்லுநர்களையும் திகைத்து வியக்கச் செய்வனவாகும். தமிழ் நாட்டில் விளங்கும் பிரமாண்டமான ஆலயங்கள் வேதகாலத்தில் இருந்ததில்லை. இயற்கையில் சூழ் நிலையே வழிபாட்டுக்குரிய இடங்களாயின நதி மற்றும் குளக்கரையோரங்களிலும், மரச்சோலைகளிலும் வேள்வித் தீயின் மூலம் இறைவழிபாடு பெரிதும் நிகழ்ந்துவந்தன. அத்தகைய மரச்சோலைகளில் உள்ள உயர்ந்த மரம் தலவிருட்ஷங்களாகவும், நதிகள், குளங்கள், ஆறுகள் புண்ணிய தீர்த்த தலங்களாகவும் மாறின. பின்பு ஆகமமுறைப்படி ஆலயங்கள் கட்டுவிக்கப்பட்டன. ஆலயங்கள் மானிட சரீரத்தை ஒட்டி அமைக்கப்பட்டு அதன் சின்னங்களாகவே காட்சியளிக்கின்றன.

## சுகத்தை அருளும் கலங்கரை விளக்குகள்

எல்லையற்ற பரம்பொருளாகிய இறைவன் - ஆதியந்தம் கடந்த பரம்பொருளாகிய இறைவன் எதிலும் நீக்கமற நிறைந்த விளங்குபவன். அங்கிக்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் எங்கும் எதிலும் நிறைந்திருப்பினும் சிறப்பாக ஞானிகளின், முனிவர்களின் திருவுள்ளத்திலும் திருக்கோயில்களிலும் விளங்குகிறான். பரப்பிரம்ம சொரூபியாய் விளங்கும் இறைவன் உலகில் உள்ள மக்கள் உய்யும் பொருட்டுக்கீழிறங்கி இப்பிரபஞ்சத்தில் உள்ள பல திருக்கோவில்களில் உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளி அன்புடன் கண்ணீர் சிந்தித் தொழுது வழிபடுபவர்களுக்கு நன்னெறிகாட்டி உய்வித்துத் தன்னிடம் ஆட்கொள்ளச் செய்கிறான்.

பாலின் நெய்போல் தயிரில் வெண்ணெய்போல் நிலத்தடியில் மறைந்திருக்கும் நிலத்தடி நீர் போல் பசுவின் உடலில் உறைந்திருக்கும் பால் போல் யாண்டும் எதிலும் இறைவன் மறைந்திருந்தாலும் ஆலயத்தின் கண் காட்சிதரும் மூர்த்தியாகவே உள்ளான். எங்கும் நிறைந்து பரந்து காட்சியளிக்கும் அவன் திருவருள் ஒருமுகப்படுத்தப்பட்டு வெளிப்பட்டு விளங்கும் இடம் இவ்வாலயங்களே. ஆகவே தான் எல்லா வழிபாட்டைக் காட்டிலும் ஆலய வழிபாடே சிறந்தது என அறிகிறோம். வாழ்க்கைச் சாகரத்தில் மூழ்கித் தத்தளித்துத் தடுமாறும் மக்களுக்கு இத்தெய்வீகத் திருத்தலங்களே சுகத்தை அளிக்கும் கலங்கரை விளக்காகத் திகழ்கின்றன.

## ஆலய அமைப்பு

ஆலயம் என்பது ஆன்மா லயப்படுவதற்குரிய இடம். அதாவது ஆணவ மலம் அடங்குவதற்குரிய இடம். கடவுள் என்னும் பெயர் மனம், மொழி, மெய் ஆகியவற்றைக் கடந்து நிற்பதாகும். ஆகமங்களில் விதிக்கப்பட்ட ஆலய அமைப்பு இரண்டு வகைப்படும். ஒன்று நம் உடல் அமைப்பை ஒட்டியது. மற்றொன்று நம் இதய அமைப்பையொட்டியது.

திருத்தலங்கள் நம் உடம்பு போல் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை "ஷேத்திரம் சரீரம் பிரஸ்தாரம்" என்பர். இதனையே திருமூலர்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்குவாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப்புலனைந்தும் காளாமணி விளக்கே" என்கிறார்.

ஆகம விதிப்படி ஆலயங்கள் கர்ப்பக்கிரகம் ஒன்று முதல் ஐந்து பிரகாரங்களுடன் கூடிய ராஜகோபுரம், நந்தி, பலிபீடம், கொடிமரம், யாகசாலை முதலியவற்றுடன் விளங்கும்.

பிண்டமாகிய உடலில் தலை, கழுத்து, மார்பு, நாடி, பாதம் என ஐந்து பிரிவுகள் உண்டு. புருஷவடிவமாக விளங்கும் சிவாலயத்தை நம் உடலோடு ஒப்பிடும்போது

1. கர்ப்பக்கிரகம் - தலை
2. அர்த்தமண்டபம் - கழுத்து
3. மகாமண்டபம் - மார்பு
4. யாகசாலை - நாடி
5. கோபுரம் - பாதம்

நமதுடலில் வாய், நாக்கு, அண்ணாக்கு, பஞ்சேந்திரியங்கள், இருதயம், உயிர் என்பன உள்ளன.

1. ஆலயம் - உடல்
2. கோபுரம் - வாய்
3. நந்தி - நாக்கு
4. துவஜஸ்தம்பம் - அண்ணாக்கு
5. தீபங்கள் - பஞ்சேந்திரியங்கள்
6. கர்ப்பக்கிரகம் - இதயம்
7. சிவலிங்கம் - உயிர்

## உடலும் கோயிலும்

பாரிய இயந்திர சாதனங்களில்லாத அக்காலத்தில் அமைக்கப்பட்ட இந்த ஆலயங்களின் உயரமும் அகலமும், சுவர்களின் திண்மையும், சிலைகளின் கலையம்சமும் இக்காலத்துப் பொறியியல் வல்லுநர்களையும் திகைத்து வியக்கச் செய்வனவாகும். தமிழ் நாட்டில் விளங்கும் பிரமாண்டமான ஆலயங்கள் வேதகாலத்தில் இருந்ததில்லை. இயற்கையில் சூழ் நிலையே வழிபாட்டுக்குரிய இடங்களாயின நதி மற்றும் குளக்கரையோரங்களிலும், மரச்சோலைகளிலும் வேள்வித் தீயின் மூலம் இறைவழிபாடு பெரிதும் நிகழ்ந்துவந்தன. அத்தகைய மரச்சோலைகளில் உள்ள உயர்ந்த மரம் தலவிருட்ஷங்களாகவும், நதிகள், குளங்கள், ஆறுகள் புண்ணிய தீர்த்த தலங்களாகவும் மாறின. பின்பு ஆகமமுறைப்படி ஆலயங்கள் கட்டுவிக்கப்பட்டன. ஆலயங்கள் மானிட சரீரத்தை ஒட்டி அமைக்கப்பட்டு அதன் சின்னங்களாகவே காட்சியளிக்கின்றன.

## சுகத்தை அருளும் கலங்கரை விளக்குகள்

எல்லையற்ற பரம்பொருளாகிய இறைவன் - ஆதியந்தம் கடந்த பரம்பொருளாகிய இறைவன் எதிலும் நீக்கமற நிறைந்த விளங்குபவன். அங்கிக்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் எங்கும் எதிலும் நிறைந்திருப்பினும் சிறப்பாக ஞானிகளின், முனிவர்களின் திருவுள்ளத்திலும் திருக்கோயில்களிலும் விளங்குகிறான். பரப்பிரம்ம சொரூபியாய் விளங்கும் இறைவன் உலகில் உள்ள மக்கள் உய்யும் பொருட்டுக்கீழிறங்கி இப்பிரபஞ்சத்தில் உள்ள பல திருக்கோவில்களில் உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளி அன்புடன் கண்ணீர் சிந்தித் தொழுது வழிபடுபவர்களுக்கு நன்னெறிகாட்டி உய்வித்துத் தன்னிடம் ஆட்கொள்ளச் செய்கிறான்.

பாலின் நெய்போல் தயிரில் வெண்ணெய்போல் நிலத்தடியில் மறைந்திருக்கும் நிலத்தடி நீர் போல் பசுவின் உடலில் உறைந்திருக்கும் பால் போல் யாண்டும் எதிலும் இறைவன் மறைந்திருந்தாலும் ஆலயத்தின் கண் காட்சிதரும் மூர்த்தியாகவே உள்ளான். எங்கும் நிறைந்து பரந்து காட்சியளிக்கும் அவன் திருவருள் ஒருமுகப்படுத்தப்பட்டு வெளிப்பட்டு விளங்கும் இடம் இவ்வாலயங்களே. ஆகவே தான் எல்லா வழிபாட்டைக் காட்டிலும் ஆலய வழிபாடே சிறந்தது என அறிகிறோம். வாழ்க்கைச் சாகரத்தில் மூழ்கித் தத்தளித்துத் தடுமாறும் மக்களுக்கு இத்தெய்வீகத் திருத்தலங்களே சுகத்தை அளிக்கும் கலங்கரை விளக்காகத் திகழ்கின்றன.

## ஆலய அமைப்பு

ஆலயம் என்பது ஆன்மா லயப்படுவதற்குரிய இடம். அதாவது ஆணவ மலம் அடங்குவதற்குரிய இடம். கடவுள் என்னும் பெயர் மனம், மொழி, மெய் ஆகியவற்றைக் கடந்து நிற்பதாகும். ஆகமங்களில் விதிக்கப்பட்ட ஆலய அமைப்பு இரண்டு வகைப்படும். ஒன்று நம் உடல் அமைப்பை ஒட்டியது. மற்றொன்று நம் இதய அமைப்பையொட்டியது.

திருத்தலங்கள் நம் உடம்பு போல் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை "ஷேத்திரம் சரீரம் பிரஸ்தாரம்" என்பர். இதனையே திருமூலர்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்குவாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப்புலனைந்தும் காளாமணி விளக்கே" என்கிறார்.

ஆகம விதிப்படி ஆலயங்கள் கர்ப்பக்கிரகம் ஒன்று முதல் ஐந்து பிரகாரங்களுடன் கூடிய ராஜகோபுரம், நந்தி, பலிபீடம், கொடிமரம், யாகசாலை முதலியவற்றுடன் விளங்கும்.

பிண்டமாகிய உடலில் தலை, கழுத்து, மார்பு, நாடி, பாதம் என ஐந்து பிரிவுகள் உண்டு. புருஷவடிவமாக விளங்கும் சிவாலயத்தை நம் உடலோடு ஒப்பிடும்போது

1. கர்ப்பக்கிரகம் - தலை
2. அர்த்தமண்டபம் - கழுத்து
3. மகாமண்டபம் - மார்பு
4. யாகசாலை - நாடி
5. கோபுரம் - பாதம்

நமதுடலில் வாய், நாக்கு, அண்ணாக்கு, பஞ்சேந்திரியங்கள், இருதயம், உயிர் என்பன உள்ளன.

1. ஆலயம் - உடல்
2. கோபுரம் - வாய்
3. நந்தி - நாக்கு
4. துவஜஸ்தம்பம் - அண்ணாக்கு
5. தீபங்கள் - பஞ்சேந்திரியங்கள்
6. கர்ப்பக்கிரகம் - இதயம்
7. சிவலிங்கம் - உயிர்

உடலில் அன்மையகோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமய கோசம் போலவும் தூலசரீரம், சூக்குமசரீரம், குணசரீரம், கஞ்சுக சரீரம், கிராண சரீரங்கள் போல் ஐந்து பிரகாரங்களும் ஐந்து சபைகளும் உள்ளன. உடலில் உள்ள ஆறு ஆதிரங்கள் போல கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம் முதலியவை உள்ளன. மேலும் இவ்வாலயங்கள் பொதுவாக எழுவகைப் பொருள்களால் ஆனது. நம் உடலும் தோல், இரத்தம் நரம்பு போன்ற ஏழுவகைத் தாதுக்களால் ஆனது.

**இராஜகோபுரம்**

பெரிய கோவிலொன்று அமைத்து அதற்கு வாயில் ஒன்று வைக்கப்படுகிறது. அந்த வாயிலுக்கு மேல் உயர்ந்த கோபுரம் ஒன்று எடுக்கப்படுகிறது. கோவிலுள்ள ஏனைய கோபுரங்களை விடராஜகோபுரம் மிகவுயர்ந்தது. நெடுந்தொலைவில் இருந்து பார்த்தால் கம்பீரமாகக் காட்சியளிக்கும். இது தூலலிங்கமாகும். வெகு தொலைவிலேயே கண்ணிற்படும் போது தெய்வ சொரூபமாகவே எண்ணி வணங்குவர். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்றும் "கோபுர தரிசனம் பாபவிமோசனம்" என்றும் வழங்குவதுண்டு

இராஜகோபுரத்தில் பல்வேறு வகைச் சிற்பங்கள் தேவவடிவங்கள், தேவகணங்கள், தெய்வ வடிவங்கள் பட்சிகள், மிருகங்கள், புராண இதிகாச வரலாறுகள், மானிட வடிவங்கள், மெய்யடியார்கள் மற்றும் ஏனைய வடிவங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இதன் தத்துவார்த்தம் யாதெனில் "பிரபஞ்ச அமைப்பில் இவை யாவுக்கும் இடமுண்டும்" என்பது கோட்பாடு விலங்கினம். மக்களினம், தேவர் கூட்டம் ஆகிய எல்லோரும் பிரபஞ்சத்தில் உள்ளார்கள். அண்டத்தில் இன்னது உள்ளது. இன்னது இல்லை என்று எவராலும் பாகுபடுத்த முடியாது என்னும் கோட்பாட்டை இராஜகோபுரம் விளக்குகிறது.

இராஜகோபுரத்தின் மேல் நிலை பொதுவாக ஒன்றைப்பட எண்ணில் அமைந்திருக்கும், மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று இவ்வாறு அதில் அமைந்துள்ளது நிலைகள் ஒன்றன்மேல் ஒன்றாகி பெருகிக்கொண்டே போகும்.

| | | |
|---|---|---|
| இராஜகோபுரத்தின் மூன்று நிலைகள் | - | சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என மூன்று அவத்தைகளைக் குறிக்கும் |
| இராஜகோபுரத்தின் ஐந்து நிலைகள் | - | ஐம்பொறிகளைக் குறிக்கும் |
| இராஜகோபுரத்தின் ஏழு நிலைகள் | - | ஐம்பொறிகளோடு மனம், புத்தி இரண்டும் சேரும் |
| இராஜகோபுரத்தின் ஒன்பது நிலைகள் | - | அந்த ஏழினொடு சித்தம், ததுங்காரம் என இரண்டும் சேர்ந்து ஒன்பதாகும். |

பஞ்சேந்திரியங்களைக் கொண்டும் மனம், புத்தி, முதலியவைகளைக் கொண்டும் புறவுலகை அறிகிறோம். புறவுலகை அறிகின்ற செயலை அப்படியே நிறுத்திவிட்டு மனதைத் துணையாகக் கொண்டு பரம்பொருளிடத்துப் பயணம் போகவேண்டும் என்னும் கோட்பாட்டை இராஜகோபுரவாயில்கள் பண்ணும் பிரவேசம் நமக்கு விளக்கிக்காட்டுகிறது.

### பலி பீடம்

இராஜகோபுரத்தைத் தாண்டி உள்ளே நுழைந்ததும் நம் கண்ணுக்கு எதிரிற் புலப்படுவது பலிபீடம், அதன் அருகில் சென்று வீழ்ந்து வணங்கி வழிபடும் போது மனதில் எழும் எண்ணமே மிக முக்கியமானது அவனது கீழான எண்ணங்கள், இச்சைகள், அனைத்துமே அவன் அவ்வாறு வணங்கும் போது பலிபீடத்தில் பலி கொடுக்கப்படுகிறது. இவ்வாறு பலியிட்டபின் தூய சிந்தனை, மேலான எண்ணத்துடன் அவன் எழ வேண்டும். அங்கு மனிதத்தன்மை வாய்ந்த மனிதன் எழுந்திருக்கிறான் என்ற எண்ணம் வலிமை பெறுகிறது. இந்த எண்ணத்தின் சக்தி, அவன் புதியதொரு பிறவி எடுத்ததற்குச் சமனாகிறது பலிபீடம் பத்திரலிங்கம் ஆகும்.

### கொடிமரம்

பலிபீடத்தை அடுத்துள்ள கொடிமரம். இது கோபுரம் அல்லது விமானத்தைப் போன்றது. நெடிதுயர்ந்தும் நந்திக்கு எதிரிலோ அல்லது பின்னரோ சில கோவில்களில் காணப்டும், த்வஜஸ்தம்பம், பலிபீடம் நந்தி ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் மூலவரை நோக்கி இருக்கும்.

கொடிமரம் எவ்வாறு நேராக இருக்கிறதோ அதேபோல் உடல் நேராக இருக்க வேண்டும். இதன் உயரம் விமானத்திற்குச் சமமாகவோ அல்லது அதன் முதல் மாடி போன்ற பகுதிகளுக்குச் சமமாகவோ இருத்தல் வேண்டும். இதன் அதிதேவதை சிவன், ஆகவே இது சிவனைக் குறிக்கும் இதனை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம்.

1. சதுரமான அடிப்பகுதி
2. எண்கோண வேதி போன்ற அமைப்பு
3. உருளை போன்ற தடித்த உயரமான மரம்.

சதுரமான அடிப்பகுதி பிரம்மாவையும், எண்கோண வேதி போன்ற பகுதி விஷ்ணுவையும் உருளை போன்ற தடித்த உயரமான மரம் உருத்திரனையும் குறிக்கும் என ஆகமங்கள் கூறுகின்றன. கொடிமரத்தின் ஏனைய பாகங்களான மூன்று குறுக்குக்கட்டைகள் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தியைக்குறிக்கும். இந்த குறுக்குத் தண்டுகள் சூரியன், சந்திரனைக்

குறிக்கும் கொடியேற்றம், கயிறு, அனுக்கிரக சக்தி, கொடி வாயு, கொடியில் வரையப்படும் நந்தி -ஆன்மா

த்வஜஸ்தம்பம் சைவாதமங்களில் குறிப்பிடும் போது மூன்று பொருள்களான பதி, பசு, பாசம் என்பவற்றையும் மேலும் பசு எவ்வாறு பாசத்தை ஒழித்து இறையருளுடன் சிவனை அடையமுடியும் என்பதை உணர்த்துகின்றது.

**வணங்குதல்**

கொடிமரத்தைத் தாண்டி மண்டபத்தில் நுழைந்த உடன் எந்த ஒரு சன்னதியிலோ அல்லது இடத்திலோ விழுந்து வணங்குதல் கூடாது. கொடி மரத்தில் முன் வணங்கும் ஆண்கள் அட்டாங்க நமஸ்காரம் செய்தல் வேண்டும். (தலை, இரண்டு கைகள், இரு காதுகள், இரு முழங்கால், மார்பு) இவைகள் பூமியில் படும்படி வணங்குதல் வேண்டும். பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்தல் வேண்டும். (இரண்டு கைகள், இரண்டு முழங்கால், தலை) இவைகள் பூமியில் படும்படி வணங்குதல் வேண்டும். மூன்று முறைக்கும் குறைந்து வணங்குதல் கூடாது. கிழக்கு நோக்கிய சந்நிதியாயின் வடக்கில் தலை வைத்தும் தெற்கில் கால் நீட்டியும் வணங்க வேண்டும். வடக்கு நோக்கிய சந்நிதியாயின் கிழக்கில் தலைவைத்தும் வணங்க வேண்டும். அவ்வாறு நமஸ்காரம் செய்யும் போது கிழக்காவோ அல்லது வடக்காகவோ சந்நிதிகள் இருந்தால் நமஸ்காரம் செய்தல் கூடாது. தலைமீது ஒரு கரம் குவித்து வணங்குதல் வேண்டும். தரையில் விழும் போது நமது உடலில் மண் போன்றவைகள் ஒட்டிக்கொள்ளக்கூடும். அவ்வாறு எவ்வளவு மண்கள் நமது உடலில் ஒட்டிக் கொள்கிறதோ, அவ்வளவு காலம் நாம் சிவனின் திருவடிகளில் வாழ்வோம் என வேதம் கூறுகிறது. கோவில் விழாக்காலங்களில் விழாவினைக் குறிக்கும் ஏற்றுக்கொடியை உயர்த்துவதற்காக கொடிமரம் பயன்படுகிறது.

**யாகசாலை**

இது 36 தத்துவ ஸ்வரூபமாகவும், சிவபெருமானது அட்ட மூர்த்தி வடிவமாகவும் கூறப்படும். யாகசாலையில் ஒன்பது குண்டங்களில் அக்னி வளர்க்கப்படும். அசை நாற்கோணம், முக்கோணம், அர்த்த சாஸ்திரம் முதலிய வடிவங்களில் காணப்படும். குண்டங்களைச் சுற்றிப் பசுந்தர்பைகளைப் பரப்பி ஆல், ஆரசு முதலிய சமித்துக்களைக் குண்டத்தில் கடைந்தெடுக்கப்பட்ட சுத்தமான அக்னி கொண்டு அதற்குரிய மந்திரங்களைச் சொல்லி அதிதெய்வங்களை மனதில் தியானித்து சிருச்சுருவம், சிருக்கு, சிருவம் என்னும் கருவிகளைக் கொண்டு நெய் சொரிந்து தீ வளர்க்கப்படும். மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றாலும் வழிபாடு நிகழும். ஓமகுண்டத்திலிருந்து எழுகின்ற புகையும் வேதம், சிவாகமங்கள், திருமுறை ஒலிகளும், அன்பர்களின் நல்லெண்ணங்களும் எங்கும் வியாபிக்கின்ற இறைவனது அருட்சத்தியைத் தூண்டி உலகெங்கும் பரவச் செய்து நன்மைகளை உண்டுபண்ணும்.

## நந்தி

ஒரு ஆலயத்தில் சிவலிங்கம், நந்தி, பலிபீடம், கொடிமரம் ஆகியவரிசையில் இருக்க காணலாம். நந்தி கர்ப்பகிரகத்தில் உள்ள சிவனைப் பார்த்தவாறு அமர்ந்திருக்கிறது. இது சிவனின் வாகனம் வாகனம் எதுவாயினும் அது ஜீவான்மாவைக் குறிக்கிறது. மூலப்பொருளான இறைவனைப் பார்த்த வண்ணமாக உள்ளது. ஜீவான்மாவின் குறிக்கோள் இறைவனைச் சென்றடைய வேண்டுமென்பதுதான் அந்தக் கோட்பாட்டை விளக்கும் பொருளாக நந்தியும் பெருமான் சிவனை நோக்கி இருக்கின்றார். ஆகவே பக்தர்கள் வலம் வரும்போது நந்திக்குக் குறுக்கே செல்லாமல் அதைச் சுற்றித்தான் வலம் வரவேண்டும். இந்நந்தியின் உத்தரவு பெற்றே கர்ப்பக்கிரகத்தில் எழுந்தருளியிருக்கும் சிவனை நாம் தரிசனம் செய்ய வேண்டும்.

## பிரகாரம்

ஆலயத்தில் ராஜகோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்றால் பிரகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு ஆலயத்திலும் உள்ள பிரகாரங்கள் அவ்வாலய வரலாற்றை ஒட்டிப்பல பெயர்களில் அழைக்கப்படுகின்றன. இத்தகைய பிரகாரங்களின் மதில் சுவர்கள் இறைவனை மறைத்துக் கொண்டிருக்கின்றன. எந்தத்திசைகளிலிருந்தும் இறைவனைக் காண முடிவதில்லை. பிரதான வாயில் எனப்படும் ராஜகோபுரம் வழியாக்தான் உள்ளே சென்று நாம் இறைவனை வழிபட முடிகிறது. ஐந்து பிரகாரங்கள் உள்ள கோயில் மூன்று பிரகாரங்கள் உள்ள கோயில் ஒரு பிரகாரம் உள்ள கோயில் என்ற ஆலயங்களைப் பார்க்கலாம். ஐந்து பிரகாரங்கள் அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம் ஆனந்தமயம் என்னும் ஐந்து வித கோசங்களையும் குறிக்கும். மூன்று பிரகாரங்கள் துருல, சூட்சும, காரணம் என்னும் மூவகை உடம்புகளைக் குறிக்கும். கோயிலில் வழிபடுவோர் மூன்று முறை, ஐந்துமுறை பிரகாரங்களைச் சுற்ற வேண்டுமென்பது. மூவகை உடம்பையும் ஐந்துவித கோசங்களையும் கடந்து இறைவன் விளங்குகிறான் என்பதை நினைவூட்டும்.

## பிரதட்சணம் செய்தல் - வலம் வருதல்

ஆலயத்தில் உள்ள பிரகாரங்களில் பிரதட்ஷம் செய்தால் உண்டாகும் பலன்

1. காலையில் வலம் வருதல் - நோய் நீங்கும்
2. பகலில் வலம் வரல் - விருப்பம் அளிக்கும்
3. மாலையில் வலம் வரல் - எல்லாப் பாவத்தையும் அகற்றும்.
4. அர்த்தசாமத்தில் வலம் வரல் - மோட்சசித்தி உண்டாகும்.
5. விநாயகருக்கு - ஒரு முறைவலம்
6. சூரியனுக்கு - இரண்டு முறை வலம்
7. சிவனுக்கு - மூன்று முறைவலம்

சாத்திர ரீதியாக அனுமதிக்கப்பட்டிருக்கும் (விதிப்பிரமாணப்படி) ஓசைகளை மணி அடிப்பது வேதகோஷம், தேவாரம், மேளம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆலயம் அமைதியின் இடம், அடிப்படையில் இதனை உணர்வுடன் ஐயமறப்புரிந்து கொள்ள வேண்டும். இத்தத்துவம் ஒவ்வொருவரும் அறிய வேண்டியதுண்டு.

## மூலவர்

மூலவர் என்பவர் கர்ப்பக்கிரகத்தில் உள்ள சிவலிங்கம் ஆகும். இவரைத் தரிசிக்க கருவறை வாயில் எழுந்தருளியிக்கும் துவார பாலகர்களிடம் அனுமதி பெற்றே செல்ல வேண்டும். லிங்கம் என்பதற்குக் குறி என்று பொருள். குறி என்றால் அடையாளம், அண்டசராசரங்கள் அனைத்தும் ஒடுங்குமிடம் என்னும் அவ்வாறு ஒடுங்கிய அப்பொருள் உள்ளவன் மீளத்தோன்றுவதற்குரிய இடம் எனவும், பொருள் கூறுவர். காணமுடியாத இறைவனைக் காணுவதற்குரிய அடையாளமே சிவலிங்கமாகும். சிவலிங்கத்தின் அடிப்பாகம் பிரமபாகம் என்றும் ஆவுடையார் விஷ்ணு பாகம் எனவும், பானம் ருத்திரபாகம் என்றும் அழைக்கப்படும். சிவலிங்கங்கள் பலவகைப்படும். அவைகள் முறையேதானே தோன்றிய சுயம்பு லிங்கம் எனவும், விநாயகர், ராமர், முருகன் போன்ற கணங்களால் ஸ்தாபிக்கப்பட்டதைக் கணகலிங்கம் என்றும். இருடிகளால் ஸ்தாபிக்கப்பட்டதை ஷணிகலிங்கம் எனவும். மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்டதை மானுடலிங்கம் எனவும் கூறுவர். சிவலிங்கத்தை வழிபட்டால் யாவற்றையும் வழிப்பட்டதாகும். நினைத்தாலும் எல்லாவற்றையும் நினைத்தலாகும். போய் தரிசித்தால் எல்லாவற்றையும் தரிசித்தலாகும். இவ்வாறு வேதங்களும், உபநிடதங்களும் கூறுகின்றன. இச்சிவலிங்க வழிபாட்டின்னை 28 ஆகமங்களும் விரிவாக விபரிக்கின்றன. இந்தக் கலியுகத்தில் சிவனுடைய சக்தியை அறியும் பொருட்டு பாரெங்கும் பல லட்சக்கணக்கான சிவஸ்த்தலங்கள் உண்டாகியிருக்கின்றன. பிரதியோருதலத்தில் பல லிங்கங்கள் உள்ளன. சிவலிங்கம் இல்லாத பூமியே இல்லை. கலியுகத்தில் மக்கள் நன்னெறியுடன் வாழ நாயன்மார்கள் அவதரித்து பல தலங்களுக்குச் சென்று தரிசித்து பின்முத்தியடைந்து நமக்கும் முத்தியடையும் மார்க்கத்தையும் காட்டியிருக்கிறார்கள். இந்த கலியுகத்தில் சிவஞானமே சிறந்த ஞானம்.

## மகாமண்டபம்

நந்தியின் அருகில் நின்று மூலவரைக் கண்டு வணங்கிய அடியவர். அடுத்துள்ள மகா மண்டபத்திற்குச் செல்கிறார். ஆசாரியர். குருக்கள் எனக் கூறப்படும் அவர்கள் உள்ள இடம் மகாமண்டபம். ஆலய வழிபாடு புரிவோர் தம்முடன் தேங்காய் வெற்றிலை, பாக்கு, பழம், பூ ஆகியவற்றை எடுத்துச் செல்ல வேண்டும் என்பது ஆகமவிதி, இவற்றை எடுத்துச் செல்லும் அடியவர் மகா மண்டபத்தில் வீற்றிருக்கும் ஆன்ம லிங்கமாகிய குருக்களிடம் அளிக்கவேண்டும். குருக்கள் இவற்றைக் கொண்டு செய்யும் ஆராதனையும் ஓர் தத்துவத்தை விளக்கும்.

| | | |
|---|---|---|
| தேங்காய் | :- | இது வழிபடச் செல்லும் ஆன்மாவைக் குறிக்கும். இதில் உள்ள மூன்றுகண்கள் மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயையைக் குறிக்கும். |
| ஓடு | :- | ஆன்மாவைப் பதித்து நிற்கும் பாகங்களின் கடினத் தன்மையைக் குறிக்கும். |
| தேங்காய் பருப்பு | :- | ஆன்மாவைக் குறிக்கும் |
| தேங்காய் உடைக்கும் கருவி | :- | ஆன்ம விடுதலைக்குத் தேவையான இறைவனது திருவருளைக் குறிக்கும் |
| பழங்கள் | :- | அடியவரின் நல்வினைப் பலன்களைக் குறிக்கும் |
| கற்பூரம் : | - | இறைவனோடு இரண்டறக் கலக்கும் பக்குவம் வாய்ந்த ஆன்ம நிலையை உணர்த்தும். |

**இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்**

பகவானுக்குப் பொன்னையும் பூஷணத்தையும் கொடுத்து பெரிதாகக் கோயில் கட்டி வைத்து, மேளதாள விமரிசையோடு திருவிழாச் செய்யவே Community thanks giving ஆக, சமூக நன்றியறிவிப்பாக (Collective offering) ஆக, (கூடி காணிக்கை செலுத்துவதாக) எங்கள் ஆலய வழிபாட்டு முறை அமைந்திருக்கிறது. இங்கே அமைதியை எதிர்ப்பார்க்க முடியாது. சின்னமணி (பெரிய) கண்டா மணி, அமர்க்களம், ஆரவாரம், மேளதாளம், அதிர்வேட்டு இருக்கத்தானிருக்கும், சங்கு சேமக்கலம், சல்லரி என்பன ஓங்கி ஒலிக்கும், ஒலிபெருக்கியும் தந்திரங்களும், திருமுறை பஜனைகளும் இருக்கத்தானிருக்கும். அமைதியாகத் தியானம் பண்ண அவரவர் வீட்டிலும் பூஜையறை உண்டு. ஆற்றங்கரை,குளத்தங்கரை உண்டு. சேர்ச்சிலும், மசூதியிலும், விகாரையிலும் எல்லோரும் சேர்ந்துகூடிப் பெரிதாக ஒலி முகப்பிலே ஆண்டவரைத் தொழுகின்றனர். அதன் மூலம் தெய்வீக உணர்வைப்பெறுதல் என்பதே நோக்கமாகும். இப்படிச் சொன்னதால் கோயில் அவரவர்களும் இரைச்சல் போட்டுக்கொண்டு அரட்டை அடித்துக்கொண்டிருப்பதற்கு "லைசன்ஸ் தந்தாக அர்த்தம் இல்லை. சாஸ்திர ரீதியாக அனுமதிக்கப்பட்டிருக்கும் (விதிப்பிரமாணப்படி) ஓசைகளை மணி அடிப்பது வேதகோஷம், தேவாரம் திவ்யபிரபந்தம் பஜனை மேளம், புறப்பாட்டில் வெடி இவற்றைத் தான் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. ஆலயம் - அமைதியின் இடம். அடிப்படையில் இதனை உணர்வுடன் ஐயமறப்புரிந்து கொள்ள வேண்டும். இத்தத்துவம் ஒவ்வொருவரும் அறிய வேண்டியதுண்டு.

## கோயிலுக்குச் செல்வது அவசியம்

ஆலயங்களில் உள்ள மூர்த்திகளுக்கு நிவேதனமும், காணிக்கை செலுத்துவதும் எல்லாவற்றையும் கிடைத்த பரம்பொருளுக்கு நன்றி செலுத்துவதற்கு அறிகுறியாகச் செய்யப்படுபவைகளே, மனிதனால் ஒரு சிறு புல்லைக்கூட சிருஷ்டிக்க முடியாது. எனவே நாம் உட்கொள்ளுவதை முதலில் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும். எல்லாருமே வீட்டில் பூஜை செய்து ஈஸ்வரனுக்கு அர்ப்பணம் செய்ய இயலாது. அதனால் ஆலயங்கள் ஏற்பட்டன.

## தவமுறை தியானம்

திருத்தலங்களில் அநேக தர்மங்கள் இருக்கின்றன. கஞ்சிவார்ப்பது. பணஉதவி செய்வது, அன்னதானம் செய்வது எல்லாம் தர்மம் தான். மூலமான தர்மம் ஆலய பூசை குறையாமல் இருக்கிறதா என்று கவனிப்பதுடன் சுத்தமாக இருக்கவேண்டும். விளக்கு இருக்க வேண்டும் இப்படியெல்லாம் ஆலயம் இருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். இப்படிஇருந்தாலே போதும். ஏராளமான நவீன வசதிகளுடன் அஸ்பத்திரிகள் ஏற்படுவதனால் நமக்கு என்ன நன்மைகள் உண்டாகிறதோ அது உண்டாகும். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று தான் ஔவை சொன்னார்.

“ஆலயம் தொழு” “அரனை மறவேல்” “தெய்வம் தொழு” ஒவ்வொன்றும் நாம் செய்ய வேண்டிய கடமையைத்தான் நினைவுறுத்துகிறது. இவற்றை நாம் மறக்கக்கூடாது. ஆலயத்தைத் தொழுதாக வேண்டும். வாரத்தில் இரு நாளாவது (செவ்வாய், வெள்ளி) ஆலயத்தைத் தொழுவது தினமம் நாம் பாராயணம் செய்வது என்று வைத்துக்கொண்டால் நிரந்தரமான நன்மைகள் எல்லாம் உண்டாகும்.

## சிவசின்னங்கள் ஏன்?

சிவசின்னங்கள் ஆசாடபூதித்தனத்திற்காக அமைந்தனவல்ல. வெளி வேஷத்துக்காகவுமல்ல பிறரைப் பேய்க்காட்டிப் பம்மாத்துத்தனம் செய்வதற்கல்ல, களவுகளையும் இதர பாவச் செயல்களையம் மறைக்கும் தன்மைக்காவல்ல. ஆயின் இவை ஏன் என்ற வினாவெழுகிறது.

“எந்தப் பிராணியின் உடம்பிலும் துர்கந்தம் வீசும். எல்லாப் பிராணிகளின் மலமும் துர்க்கந்தமே. மற்றப் பிராணிகளைவிட மனிதனுடைய தேகமே அதிக துர்க்கந்தம் உடையது. ஆனால் பசு மாட்டின் சாணம் அத்தகையதல்லா. எல்லாவிதமான மலத்தையும் போக்குவது பசு மாட்டின் சாணம். எல்லா மலத்தையும் போக்கும் சக்தி அதற்கு இருப்பதனால் அது மிகவும் பரிசுத்தமானது. அந்த சாணத்திலிருந்து உண்டாகும் திருநீறு மிகவும் பரிசுத்தமுடையது. பசுமாடு மற்றப்பிராணிகளைவிடப் பரிசுத்தமான மிருகம். எல்லாத் தெய்வங்களும் பசு மாட்டின் சரீரத்தில் இருக்கின்றன என்று சாஸ்த்திரங்கள் சொல்கின்றன. எல்லாவிதமான தோஷமும் பசு மாட்டின்

சாணத்தினால் போகும் என்று சொல்லுவார்கள். அந்த சாணத்திலிருந்து உண்டாகிற திருநீறு எல்லா மலத்தையும் போக்கும்.

## அழியாத நீறு

ஈஸ்வரனான சிவனுக்குரிய ஐந்து அடையாளங்களில் பஸ்மம் எனப்படும். விபூதி ஒன்று. மற்றோர் அடையாளம் ருத்திராட்சம். வில்வம் மற்றொன்று. வில்வம் மகாலக்சுமி வாசம் செய்யும் விருட்ஷம். பஸ்மம் உலகத்திலுள்ள பொருள் எல்லாம் எரிந்து போனால் நீறாகவே ஆகிவருகிறது. அதை எரித்தால் அது அழிவதில்லை. நீறாகவே நிற்கும். சிவசொரூபமும் அத்தகையதே.

ருத்திரனுடைய நேத்திரம் ருத்திராட்ஷம் "திருக்கண்மணி" மற்ற விருட்ஷங்களுடையது விதைகளுக்கு இல்லாத சிறப்பு ருத்திராஷத்திற்கு உண்டு. மற்றப்பழங்களில் உள்ள விதைகளுக்கு உள்ளே துணை இல்லை. இயற்கையிலே துளையோடு உண்டாவது ருத்திராஷம் ஒன்றுதான். ருத்திராட்ஷம் நேபாளத்தில் விளைகிறது. பஞ்சமுகருத்திராட்ஷம், ஆறுமுகருத்திராட்ஷம், ஏழுமுகருத்திராட்ஷம், ஏகமுகருத்திராஷம், இரண்டு முகம், மூன்று முகம், நான்கு முகம் என்று ருத்திராட்ஷங்களில் பலவகை உண்டு. 7முதல் 3 வரையிலும் சாதாரணமாகக் கிடைக்கும் 32 முகம் உள்ள ருத்திராட்ஷங் கூட அருமையாகக் கிடைப்பதும் உண்டு. (நேத்திரம் - கண் : திரிநேத்திரம் - முக்கண்) உருத்திராட்சம் அணிவதால் உள்ளத்தில் ஆனந்தம் உண்டாகி மகிழ்வுண்டாகிறது.

## சிவசின்னங்கள்

திருநீறு ருத்திராட்ஷம், வில்வம், ஸ்படிகலிங்கம், பஞ்சாட்ஷரம்

ஸ்ரீருத்திரத்தின் நடுவில் பஞ்சாட்ஷரம் இருக்கிறது. வேதத்திற்கு ஆதாரமாக இருப்பது ஸ்ரீருத்திரம். அதில் மத்திய மணி பஞ்சாட்ஷரம். இந்த மத்திய மணியை எடுத்துவிட்டால் ஆபரணம் வியர்தமாகி விடும். வேதத்திற்கும் திலகமாய் இருக்கிறது. பஞ்சாட்ஷரம். அந்தப் பஞ்சாட்ஷரத்தின் மத்தியிலே "சிவ" என்ற இரண்டு எழுத்துக்கள் இருக்கின்றன. பஞ்சாட்ஷர உபதேசம் நாவுக்கு ஆபரணமாக இருப்பது. இறைவனுக்கு பூசை நடந்து முடியும் வரை மணி அடித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

## அபிஷேகப் பலன்கள்.

எவ்வாறு நிதிகள் எல்லாம் கடலில் கலந்து தன் நிலை இழந்து ஒரே கடலாவது போல் சிவன் பரமனிடம் ஒன்றிக்கலக்க வேண்டும் என்று உபநிடதம் கூறுகிறது.

| | |
|---|---|
| 1. நீர் | - சாந்தி உண்டாகும். |
| 2. வாசனைப் பொருள்களுடன் கூடிய அபிஷேகம் | - மல நிவாரணம். |
| 3. வாசனைத் திரவியம் | - ஆயுள் வலிமை |
| 4 சந்தனம் | - செல்வம் உண்டாதல் |
| 5. சந்தனாதித்தைலம் | - சுகம் |
| 6. பால் | - ஆயுள் விருத்தி |
| 7. தயிர் | - மக்கள் விருத்தி |
| 8. நெய் | - மோட்சம் |
| 9. தேன் | - சங்கீதம் |
| 10. கருப்பஞ்சாறு | - நித்திய சுகம் |
| 11. சர்க்கரை | - பகை அழித்தல் |
| 12. வாழைப்பழம் | - பயிர் அபிவிருத்தி |
| 13. பலாப்பழம் | - உலக வசியம் |
| 14. மாம்பழம் | - சகல விஜயம் |
| 15. மாதுளம்பழம் | - பகைநீக்கம் |
| 16. நாரத்தம்பழம் | - சற்புத்தி |
| 17. எலுமிச்சை | - மருத்துவ நிவாரணம் |
| 18. இளநீர் | - புத்திரப்பேறு |
| 19. கோரோசனை | - தீர்க்க ஆயுள் |
| 20. பச்சைக்கற்பூரம் | - அச்சம் நீங்குதல் |
| 21. கஸ்தூரி | - வெற்றி அடைதல் |
| 22. பன்னீர் | - சாசோச்யம் |
| 23. அன்னம் | - ஆயுள், ஆரோக்கியம் |
| 24. பஞ்சகவ்யம் | - ஆனமசுத்தி |
| 25. பஞ்சாமிர்தம் | - செல்லவம் |

இவ்வபிஷேகங்களை எத்தெய்வத்திற்குச் செய்தாலும் பலன்கள் ஒன்றே. விநாயகர், முருகன், மற்றும் சிவனுக்கு மட்டுமே விபூதி அபிஷேகம் செய்ய வேண்டும்.

### ஆகமங்கள் கூறும் சோடசோபசாரங்கள்

குடை, கொடி, விசிறி, கண்ணாடி, சுருட்டி, அப்தாகிரி, சாமரம், அர்க்கியபாத்திரம், தீபம், தூபம், நாகதீபம், யானைதீபம், 11 அடுக்கு அலங்காரதீபம், ரிஷப தீபம், அன்னதீபம், புருஷதீபம், குதிரை தீபம், மயில் தீபம், 5அடுக்கு அலங்கார தீபம், 5 தட்டுக்களுடன் கூடிய பூரண கும்பதீபம், கோழி தீபம், சிங்க தீபம், நட்சத்திர தீபம், கற்பூர தீபம், மேரு தீபம், ஏழு கிளை கற்பூரம் ஆரத்தி, கற்பூர ஆரத்தி, ஆரத்தியை இருகரங்களாலும் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டால் நேத்ர ஆரோக்கியத்துடன் ஞானக்கண்ணும் உண்டாகும்.

அட்டவீரட்டத் தலங்கள்

1. திருக்கண்டியூர் வீரட்டம்
2. திருக்கோயிலூர் வீரட்டம்
3. திரு அதிகை வீரட்டம்.
4. திருக்குறுக்கை வீரட்டம்
5. திருக்கடவூர் வீரட்டம்
6. திருப்பறியலூர் வீரட்டம்
7. திருவிற்குடி வீரட்டம்
8. வழுவூர் வீரட்டம்

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் எல்லா வீரட்டங்களின் பெயர்களையும் தொகுத்து கூறுகிறது.

*காவிரியின் கரைக் கண்டி வீரட்டானம்*
*கடவூர் விரட்டானம், காமருசீர் அதிகை*
*மேவிய வீரட்டானம் வழுவை வீரட்டம்*
*வியற்பறியல் வீரட்டம், விடையூர்திக் கிடமாம்*
*கோவல் நகர் வீரட்டங் குறுக்கை வீரட்டம்*
*நாவில் நவின்று உரைப்பார்க்கு நணுகச் சென்றால்*
*நமன் தமரும் சிவன் தமர் என்று அகல்வர் நன்கே*

(அப்பர் திருத்தாண்டகம்)



1972ம் ஆண்டு கும்பாபிஷேக விழாவின் போது சிவாச்சாரியார்கள்
திருப்பணிச்சபையினரால் வரவேற்கப்படுகிறார்கள்.



1978ம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேக விழாவில்
கலாநிதி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி உரையாற்றுகிறார்.

# இலங்கையில் இந்து சமயம்

முன்னாள் வித்தியாதிபதி
**அமரர். கி. லக்ஷ்மண ஐயர்**

இலங்கையில் இந்து சமயம் மிக நீண்ட வரலாற்றையுடையது. உலகில் இந்து மதம் நிலவும் வேறு எந்த நாட்டிலும் இல்லாத தனியம்சங்கள் இங்கு காணப்படுகின்றன.

திருநீற்றின் மகிமையைக் கூற வந்த திருஞானசம்பந்த சுவாமிகள் இலங்கை வேந்தனாகக் கருதப்பட்ட "இராவணன் மேலது நீறு" எனப்பாடியதன் மூலம் வரலாற்றுக்கு முற்பட்ட இதிகாச காலத்திலேயே இலங்கையிலே நிலவிய சிவ வழிபாட்டு மகிமையைச் சுட்டிக்காட்டுகின்றார்.

வரலாறு, அகழ்வாராய்ச்சி, ஆலயங்கள், விழாக்கள், இலக்கியம், கல்வி இன்னும் என்ன என்ன துறைகளை எடுத்து ஆராய்ந்தாலும், மிகப்பழைய காலத்திலே சிங்கள மக்களே விஷ்ணுவை இலங்கையின் காத்தற் கடவுளாகக் கொண்டு விஷ்ணுவுக்குத் தென்னிலங்கையின் கோடியாகிய தேவந்துறையிலே அற்புதமான ஆலயத்தை அமைத்தது தொட்டு, கல்வித்துறையிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துப் பண்பாட்டுக்கென அமைக்கப்பட்ட பீடம்வரை இலங்கையிலே இந்துசமயம் உலகில் வேறெங்கும் காணாத பல தனியம்சங்களைக் கொண்டுள்ளது என்பது புலனாகும்.

நூற்றுக்கு மேற்பட்ட பல்கலைக் கழகங்களைக் கொண்ட இந்திய நாட்டிலேகூட ஒரு பல்கலைக்கழகத்திலாவது இந்துப் பண்பாடு என்ற பெயரில் பீடமெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. காசிப் பல்கலைக்கழகத்திலே மட்டும் இதுவரை இருந்த சைவ சித்தாந்த பீடத்தைக் கூட தத்துவத்துறையின் ஓர் அங்கமாக மாற்றி விட்டார்கள்.

இந்து சமயம் என்னும் தலைப்பில் இக்கட்டுரையைத் தொடங்கும்போது சென்னையில் நடைபெற்ற இந்துமத மாநாட்டிலே வரவேற்புரை நிகழ்த்திய பேராசிரியர் டி.எம்.பி. மகாதேவன் வெளியிட்ட கருத்தொன்றினை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். "ஏனைய நாடுகளில் வாழும் எங்கள் சகோதரர்கள் எங்கள் பழம் பாரம் பரியத்திலே வைத்திருக்குமளவு நம்பிக்கையை இந்திய நாட்டிலே வாழும் நாம் வைத்திருக்கிறோமா என்பதையிட்டு ஐயப்பட வேண்டியிருக்கிறது". இதுவே பேராசிரியர் வெளியிட்டகருத்து. இவ்வாறு பேராசிரியர் கூறியதன் மூலம் இந்துமதத்தின் தாயகமாகக் கருதப்படும் இந்தியாவிலும் பார்க்க ஏனைய நாடுகளிலே இந்து மதத்தின் பிடிப்பு மிகவும் இறுக்கமாகவுள்ளது என்ற ஒரு தொனியை வெளியிட்டு ஏனைய நாடுகளைப் பாராட்டி வெளிநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்றார். பேராசிரியர் வெளியிட்ட கருத்து இலங்கையர்களாகிய எமக்கும் மகிழ்ச்சி தருவது மட்டுமன்றிப் பெருமையையும் தருகிறது.

### கல்வித்துறையின் தனிச்சிறப்பு

கல்வித்துறையில் இலங்கைக்கேயுரிய தனிச்சிறப்பையும் குறிப்பிடலாம். உலகம் முழுவதிலும் இலங்கையில் மட்டுமே சமய பாடம் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாய பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகின்றது. இதனால் இந்து மாணவர் அனைவரும் இந்து சமயத்தைத் கட்டாயமாகக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சமயத்துக்குப் பெயர் பெற்ற இந்திய தேசத்தில் கூட அது மதச்சார்பற்ற நாடு என்ற காரணத்தால் இத்தகைய வாய்ப்புக் கிடையாது.

### இலங்கைக்குச் சிவபூமி என்ற பெயர்

ஈஸ்வரங்கள் என்ற பெயரில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் தொட்டே நிலவி வந்தவை என்ற பெருமைக்குரிய சிவத்தலங்களாக ஐந்தைக் குறிப்பிடுவது வழக்கம். இராமேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம் என்பனவே அந்த ஐந்து சிவத்தலங்களுமாகும். இராமேஸ்வரம் தவிர்ந்த ஏனைய நான்கும் இலங்கையில் இடம் பெற்றுள்ள சிறப்பொன்றே இலங்கையில் இந்து சமயத்தின் பழமைக்கும் பெருமைக்கும் போதிய எடுத்துக்காட்டாகும். இவற்றுள் முன்னேஸ்வரமே ஏனைய எல்லாவற்றையும்விட மிகப்பழையது என்பது அதனுடைய பெயரிலிருந்தே புலப்படுகின்றது என்பது அறிஞர் சிலருடைய கருத்து.

இந்த நான்கு புராதன சிவத்தலங்களுள் நகுலேஸ்வரம் வட இலங்கையிலும், திருக்கேதீஸ்வரமும், முன்னேஸ்வரமும், மேற்கிலங்கையிலும், கோணேஸ்வரம் கிழக்கிலங்கையிலும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இவை தவிர, வட மத்தியில் தான் தோன்றீஸ்வரமும், தென்கோடியில் தேவந்துறையில் சந்திரசேகரம் என்ற பெயரில் ஒரு சிவஸ்தலமும் குறிப்பிடத்தக்கவை.

தேவந்துறையிலே சந்திரசேகரம் என்ற சிவாலயத்தைக் கட்டுவித்தவன் விஜயன் எனவும் போர்த்துக்கேயரால் அவ்வாலயம் அழிக்கப்பட்டதெனவும் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறு மிகப் பழங்காலத்திலேயே எல்லாத்திசைகளிலும் முக்கியமான சிவத்தலங்கள் இருந்த காரணத்தாற் போலும் திருமந்திரத்தை இயற்றிய திருமூலர் தமது திருமந்திரத்திலே நமது இலங்கையைச் “சிவபூமி” எனக் குறிப்பிட்டுள்ளார்.

### நாடு முழுவதும் இந்துசமயம்

இதுவரை உதாரணத்துக்காக இரண்டொரு தனிச்சிறப்புக்களைக் குறிப்பிட்டோம். இனி, மேலே நாம் குறிப்பிட்ட ஒவ்வொரு துறையையொட்டியும் சிற்சில கருத்துகளைத் தெரிவிப்போம்.

வரலாற்றையொட்டி இலங்கையில் இந்துசமய வரலாற்றை இதிகாச காலம் ஆதிக்குடிகள் காலம், விஜயன் முதல் தேவநம்பியதீசன் வரையுள்ள சிங்கள இந்து அரசர்கள் காலம், பௌத்தம் வந்ததன்பின் ஏற்பட்ட சிங்கள பௌத்த அரசர்கள் காலம், சோழ பாண்டிய அரசர்கள் காலம், போத்துக்கேய ஒல்லாந்தர் காலம், யாழ்ப்பாண அரசர் காலம், பிரித்தானியர் காலம், தற்காலம் எனப்பலவகையாகப் பிரிக்கலாம்.

எவ்வாறாயினும் மக்கள் இந்த நாட்டில் வாழத்தொடங்கிய காலந்தொட்டுப் பௌத்தமதம் இந்த நாட்டுக்கு வந்த நாள்வரை இந்த நாடு முழுவதும் வழங்கி வந்தது இந்துமதமே எனக்கொள்வது தவறாகாது.

இந்நாட்டு ஆதிக்குடிகளாகக் கருதப்படும் வேடர்கள்கூட மலைத் தெய்வத்தையும் கடல் தெய்வத்தையும் வழிபட்டு வந்தனர் என ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டுள்ளனர். முருகனும், திருமாலுமே .இங்கு குறிப்பிடப்படும் மலைத்தெய்வமும் கடற்றெய்வமும் எனக்கொள்ள இடமுண்டு. பௌத்தம் இலங்கைக்கு வரும்வரை இலங்கையை ஆண்ட அரசர்கள் இந்து சமயத்தைப் பின்பற்றியவர்களே என்பது தெளிவு. அவர்களும் பலர் பெரும் சிவாலயங்கள் பலவற்றைக் கட்டுவித்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பௌத்தம் இலங்கைக்கு வந்தபின் பௌத்தமதத்தைத் தழுவிய சிங்கள அரசர்களுள் மகாசேனன் தவிர ஏனையோர் யாவரும் இந்துமதத்துக்கும் பலவித ஆதரவு கொடுத்திருக்கிறார்கள் என்பதையும், சிவாலயங்கள் பலவற்றைக் கட்டுவித்திருக்கிறார்கள் என்பதையும் இங்கு குறிப்பிடல் வேண்டும். இவர்களுள் 2ம் விக்கிரமபாகு, 2ஆம் கஜபாகு, 1ஆம் பராக்கிரமபாகு, 1ஆம் ராஜசிங்கன், புவனேகபாகு போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

1ஆம் பராக்கிரமபாகு 13 இந்து ஆலயங்களைக் கட்டுவித்தான் எனவும், பழுதடைந்த 79 ஆலயங்களைத் திருத்திப் புதுப்பித்தான் எனவும் கூறப்பட்டுள்ளது. 1ஆம் ராஜசிங்கனே கதிர்காம முருகன் ஆலயத்தைக் கட்டுவித்தான் எனவும், அவன் தன் ஆட்சிக்காலத்திலே 48 பத்தினிக் கோயில்களை அதாவது **கண்ணகி அம்மன்கோவில்களைக் கட்டுவித்தான்** எனவும் கூறப்படுகின்றது. 1450இலே நல்லூரிலே முருகனுக்கு ஒரு கோயில் கட்டுவித்தவன் புவனேகபாகு.

இவையாவும் இந்துமதத்தின் சிறப்புக்கும் அக்காலச் சிங்கள பௌத்த அரசர்களின் பரந்த மனப்பாங்குக்கும் நல்ல எடுத்துக்காட்டுகளாகும். இவை பாராட்டுக்கும் மகிழ்ச்சிக்கும் உரியவை. சிங்கள அரசர் பலர் தமிழக இளவரசியரை மணஞ் செய்துகொண்டமை, பிராமணர் பலர் சிங்கள அரசர்களுக்கு ஆசிரியர்களாகவும் ஆலோசகர்களாகவும் அமர்த்தப்பட்டமை, சமஸ்கிருதக் கல்விக்கு இடமளிக்கப்பட்டமை போன்ற பல காரணங்களே அக்கால அரசர்கள் இந்துசமயத்திலே ஈடுபடவும், அதனைப் பேணிப் பாதுகாக்க முன்வரவும், இந்து கலாசாரங்களையே தாமும் பெரும்பாலும் அனுட்டிக்கவும் செய்தவை எனலாம்.

சிங்கள அரசர்கள் இந்துமதத்துக்கு ஆதரவு நல்கியது போலவே தமிழரசர்கள் ஆட்சி செய்த காலங்களில் பௌத்த மதத்துக்கு நீதி வழங்கி வேண்டிய ஆதரவுகளையும் நல்கியுள்ளார்கள் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

## போத்துக்கேயரும் ஒல்லாந்தரும் இழைத்த இன்னல்கள்

இவ்வாறு சிங்கள அரசர்கள் ஆண்ட காலமாயினும் சரி, தமிழரசர்கள் ஆண்டகாலமாயினும் சரி, பல நூற்றாண்டுகளாக இலங்கையிலே சிறப்புற்று விளங்கி வந்த இந்துசமயத்துக்கு, என்று போர்த்துக்கேயர் இந்த நாட்டிலே கால் வைத்தனரோ அன்று தொடங்கியது அதன் துன்ப காலம்.

போத்துக்கேயரும் அவருக்குப்பின் வந்த ஒல்லாந்தரும் இந்துமதத்தை இந்நாட்டில் இருந்து அழித்தொழிப்பதிலே காட்டிய வேகத்தையும் அதன்பொருட்டு அவர்கள் இழைத்த கொடுமைகளையும் நோக்கும்போது இந்துசமயம் இந்நாட்டிலே மீண்டும் ஒரு போதுமே தலையெடுக்க முடியாமல் முற்றாக அழிந்துபோயிருக்குமென்றே சொல்ல வேண்டும்.

அவ்வாறு அழிந்தொழியாது தப்பிப் பிழைத்தமைக்கு இரு வித காரணங்களைக் கூறலாம். ஒன்று இந்து மதத்தின் மகிமையும் உள்ளார்ந்து அமைந்துள்ள அதன் ஜீவ சக்தியும் மற்றது அதனை அனுட்டித்து வந்தவர்களுக்கு அதன்பாலிருந்த தீவிரமான பற்றும் நம்பிக்கையும் என அனைத்துலக இந்துமத நாட்டிலே பேராசிரியர் மகாதேவன் குறிப்பிட்டவை எனக் கொள்ளலாம்.

## அகழ்வாராய்ச்சிகள்

காலத்துக்குக் காலம் இலங்கையிலே பற்பல இடங்களிலே இந்துமத சின்னங்களும் விக்கிரகங்களும் அகழ்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் சில மிகப் பழங்காலத்தவை. பல பல போத்துக்கேயர் இந்துக் கோயில்களை அழித்தபோது மண்ணுள்ளே புதைந்தவையும் புதைக்கப்பட்டவையுமாகும். திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம், பொலநறுவை ஆகிய இடங்களிலே கண்டெடுக்கப்பட்டவை குறிப்பிடத்தக்கவை. 1908 ஆம் ஆண்டு பொலநறுவையிலே கண்டெடுத்த சோமாஸ்கந்த மூர்த்தி, சிவகாமி, நடராஜர் ஆகியன மிக அற்புதமானவை. இவ்வகழ்வாராய்ச்சிகள் பற்றியும் கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களின் அமைப்புகள், அவற்றின் காலம், அவற்றை அமைத்தோர் பற்றியும் அறிஞர் பலர் கட்டுரைகள் பல எழுதி வெளியிட்டுள்ளனர்.

## ஆலயங்கள்

வடகோடியில் உள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தொடக்கம் தென்கோடியிலுள்ள கதிர்காமம் வரையும், வடமேற்கில் திருக்கேதீஸ்வரம் முதல் தென் கிழக்கே கோணேஸ்வரம் திருக்கோவில் ஈறாக இலங்கை எங்கணும் பெரியதும் சிறியதுமாக எத்தனையோ கோவில்கள் உள்ளன. இவை சிவன் கோவில், அம்மன் கோவில், பிள்ளையார் கோவில், முருகன் கோவில், பெருமாள் கோவில் எனப் பல வகையின. இவற்றுள் எத்தெய்வத்துக்குரிய கோவில்கள் எண்ணிக்கையில் மிகக்கூடியவை என்பதைக் கணக்கிட்டுச் சொல்வது சிரமமான காரியம்.

இக்கோவில்கள் தமிழகத்திலுள்ளவை போலப் பிரமாண்டமான கோபுரங்களையோ, விமானங்களையோ கொண்டிராதபோதும் இவற்றுள் பல நல்ல வேலைப்பாடுகளும் அழகிய தோற்றமும் உடையன. பல கோவில்களிலுள்ள மூலமூர்த்தி, நந்தி முதலியன நல்லகளையும்,

கலைநுட்பமும், பொருந்தியனவாயுள்ளன. இவற்றுள் பல இந்த நூற்றாண்டுத் தொடக்கத்திலும் சென்ற நூற்றாண்டு இறுதியிலும் தமிழகத்திலுள்ள தேவகோட்டை போன்ற இடங்களிலுள்ள சிற்பிகளால் .செய்யப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டவை.

## விழாக்கள்

கோவிலிலே விழாத் தொடங்கிவிட்டால் ஊர் முழுவதிலுமே பரபரப்பு ஏற்பட்டுவிடும். ஊர் முழுவதுமே புனிதமாகி விடும். விழாக்காலம் முடியும்வரை மக்கள் விரதம் அனுட்டிப்பதும், மாமிச உணவை முற்றாகத் தவிர்த்து, சைவ போசனத்தைக் கைக்கொள்வதும் வழக்கமாகும்.

யாழ்ப்பாணத்துக் கோவில்களில் வருட விழாக்கள் சித்திரை மாதத்திலே தொடங்கி ஆவணி மாதத்தோடு முடிந்துவிடும். இந்தமாதங்களைத் தெரிந்ததற்குரிய காரணங்கள் ஆராயத்தக்கன. பெரும்பாலான கோவில்களில் 10 நாள் விழாவே நடைபெறும். சுதுமலை அம்மன் கோவில் போன்ற கோவில்களில் 18 நாள் திருவிழாவும், மாவிட்டபுரம், நல்லூர் ஆகிய முருகன் கோவில்களில் 25 நாள் விழாவும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. கடைசி நாள் தீர்த்தக் திருவிழாவும் அதற்கு முதல் நாள் தேர்த்திருவிழாவும் நடைபெறுவது யாவரும் அறிந்தது..

பெரும்பாலான கோவில்களில் ஒருதேரும் சுதுமலை அம்மன் கோவில் போன்ற கோவில்களில் மூன்று தேர்களும், மாவிட்டபுரத்தில் 5 தேர்களும் தேர்த்திருவிழாவில் வீதிவலம் வருகின்றன. இந்த வித்தியாசங்கள் ஆரம்பத்திலே எப்படித் தொடங்கின என்பன தெரியவில்லை. அவ்வக் காலத்தில் அவ்வவ்வூர்களிலிருந்த வசதிகள் தான் காரணமோ அல்லது வேறு காரணங்களும் உண்டோ என்பது தெரியவில்லை. சில கோவில்களில் தீர்த்தம் பௌர்ணமி தினத்திலும், சில கோவில்களில் தீர்த்தம் அம்மாவாசை தினத்திலும் நடைபெறுவதையும் குறிப்பிட வேண்டும்.

கொடித்தம்பம் உள்ள கோவில்களிலே கொடியேற்றித் தினமும் கொடித்தம்பத்துக்கும் முறையாகப் பூசைகள் நடைபெறும். கொடித்தம்பம் இல்லாத கோவில்களில் “அலங்காரத் திருவிழா” என்ற பெயரில் கொடியேற்றாமலே 10 நாட்கள் விழாக்கள் நடைபெறும். இவ்விழாக்களின் உட்கிடைக்கைகளையும் தத்துவக் கருத்துக்களையும் சைவசித்தாந்த அடிப்படைகளோடு இணைத்துக் காலஞ்சென்ற அச்சுவேலி குமாரசாமிக் குருக்கள் தாம் எழுதிய மகோத்ஸவ விளக்கம் என்னும் நூலிலே விளக்கியுள்ளார்.

## ஆலயங்களில் நுண்கலைகள்

எழுந்தருளிய விக்கிரகங்கள் வீதி வலம் வருமுன் அவற்றுக்குச் செய்யப்படும் அலங்காரத்தைச் “சாத்துப்படி” எனக்குறிப்பிடுவது வழக்கம். இந்த அலங்காரமும் ஒரு கவின் கலையேயாகும்.

அலங்காரத்தைப் பற்றிப் பேசும்போது நல்லூர்க் கந்தசாமி கோவில் தண்டிகைத் திருவிழாவிலே தண்டிகையிலே சுப்பிரமணிய சுவாமி வீதி வலம் வரும் அழகையும் தேர்த்திருவிழாவிலே

தேரில் ஏற வரும்போதும் தேரைவிட்டு இறங்கி வரும்போதும் ஆறுமுக சுவாமியின் அழகையும் சிறப்பாகக் குறிப்பிடலாம். அவற்றைக் கண்டவர் எவரையும் அவை கவராமல் விடா. நம் நாட்டிலே "சாத்துப்படி" கட்டுவதிலே பிரபல்யம் அடைந்த பலர் இருந்திருக்கிறார்கள்.

கோவில் விழாக்களிலே மேள வாத்தியம் முக்கிய இடம் பெறுவதைச் சொல்லத் தேவையில்லை. இதன் விளைவாக நம் நாட்டிலே தவில் வாசிப்பதிலும், நாதஸ்வரம் வாசிப்பதிலும் அதிவிற்பன்னரான ஒரு பரம்பரையே இணுவில், அளவெட்டி போன்ற கிராமங்களில் ஏற்பட்டு வருவதையும், அவ்விற்பன்னருட் சிலர் உலகப் புகழ்பெற்ற நம் நாட்டுக்கே பெருமை தேடித் தருவதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

**விசேஷ விழாக்கள்**

வருடாந்த விழாக்களை விட, சிற்சில கோவில்களில் மட்டுமே சிறப்பாக இடம்பெறும் சில விழாக்களையும் குறிப்பிட வேண்டும். நல்லூர்ச் சிவன்கோவிலில் யமசங்காரம், வண்ணை பெருமாள் கோவிலில் உறியடி உற்சவம், ராவண சங்காரம், முன்னேஸ்வரத்தில் நவராத்திரி விழா ஆகியன நினைவுக்கு வருகின்றன. காலஞ்சென்ற சோமாஸ் கந்தகுருக்கள் என்பவர் முன்னேஸ்வரத்திலே நவராத்திரி நாள்களிலே அம்மனுக்கு பூசை செய்வது பார்ப்பதற்கு ஒரு தனி அழகாக இருக்குமெனப் பலர் சொல்வதுண்டு.

**அர்ச்சகர்கள்.**

அர்ச்சகர்களின் சிறப்பைப் பொறுத்ததே இந்து சமயத்தின் மதிப்பும் வளர்ச்சியும் என்று கொண்டாற் கூட மிகையாகாது. அறிவு, ஆசாரம், பக்தி ஆகியன நிரம்பிய அர்ச்சகர்கள் பலர் நம் நாட்டிலே இருந்திருக்கின்றனர். இப்போதும் இருக்கின்றனர். இவர்களுடைய சமய அறிவையும் கிரியைகளில் இவர்களுக்குள்ள திறமையையும் விருத்தி செய்வதன் பொருட்டுக் காலத்துக்குக் காலம் பெரியோர் பலர் பல நன்முயற்சிகளை மேற்கொண்டு வந்திருக்கின்றனர். அவற்றுள் காலஞ்சென்ற சதாசிவ ஐயரும், வித்துவான் கணேச ஐயரும் சுன்னாகத்தில் நடத்திய பிராசீனா பாடசாலையும் அகில இலங்கை இந்து மாமன்றம் இப்போது யாழ்ப்பாணத்தில் நடத்திவரும் குருகுலமும் குறிப்பிடத்தக்கவை.

இக்குருகுலம் முன்பு திருக்கேதீஸ்வரத்தில் நடத்தப்பட்டு இப்போது யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. நம் நாட்டிலே இந்துமத வளர்ச்சிக்கு இக்குருகுல விருத்தி எவ்வளவு முக்கியமானது என்பதைப் பலர் இன்று போதிய அளவு உணராமலிருக்கக் கூடும். ஆயினும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்து கலாசார அமைச்சு இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படத் தொடங்கியிருப்பது மிகமகிழ்ச்சிக்குரியது.

**சில தனி அம்சங்கள்**

நம் நாட்டு ஏனைய முருகன் கோவில்களிலே காணாத ஓர் அம்சத்தைத் தெற்கே கதிர்காமத்திலும், வடக்கே செல்வச் சந்நிதியிலும், கிழக்கே மண்டூர் கந்தசுவாமி கோயிலிலும்

காண்கின்றோம். இம்மூன்று இடங்களிலும் பூசை செய்யும் பூசாரிகள் மந்திரம் கட்டிக் கொண்டு பூசை செய்கின்றனர். இதன் தொடக்கம் ஆராய்ச்சிக்கு உரியது.

**கண்ணகி அம்மன் கோவில்கள்**

**அம்மன் கோயில்களுள் நம் நாட்டிலே பல இடங்களிலே கண்ணகி அம்மன் கோவில்கள் மிகுதியாக உள்ளன. கண்ணகி தோன்றிய தமிழ் நாட்டை விட நம் நாட்டிலேயே கண்ணகிக்கு அதிகமான கோவில்கள் இருக்கின்றன என்று கூடச் சொல்லலாம். சில கண்ணகி அம்மன் கோவில்களிலே நடைபெற்று வருகின்ற மாற்றம் ஒன்றையும் இங்கு குறிப்பிட வேண்டும். ஆகம விதிப்படி கண்ணகியை உத்ஸவ மூர்த்தியாகக் கொள்ள இடமில்லை, என்ற காரணத்தால் சில கண்ணகி அம்மன் கோவில்களிலே கண்ணகி அம்மனையும் வைத்துக்கொண்டு ராஜராஜேஸ்வரி அம்மனையே மூலமூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். இக்கோயில்களின் பெயர் தொடர்ந்து கண்ணகி அம்மன் கோவிலென்றே இருந்த போதும் மூலமூர்த்தி ராஜராஜேஸ்வரியேயாகும்.**

## விஷ்ணு ஆலயங்கள்

நம் நாட்டு விஷ்ணு கோவில்களைப் பற்றியும் ஒன்று சொல்ல வேண்டும். இந்தியாவிலே வைஷ்ணவ மதத்தைச் சேர்ந்தவர்கள் பெருந் தொகையினராக இருக்கின்றனர். அவர்கள் தொகைக்கேற்ப அங்கு விஷ்ணு ஆலயங்களும் பெருந்தொகையாக இருக்கின்றன. ஆனால் இலங்கை இந்துக்களுள்ளே வைஷ்ணவரே இவர் என்று கூடச் சொல்லுமளவுக்கு மிகச் சிலரே உள்ர். இருந்தும் விஷ்ணு ஆலயங்கள் பல இருக்கின்றன. இதிலே விசித்திரம் என்னவெனில் இவ்விஷ்ணு ஆலயங்களிலே பூசை செய்யும் அர்ச்சகர்களும் சைவர்கள். அங்கு சென்று வழிபடுவோரும் சைவர்கள். இலங்கையிலே இந்து சமயத்தில் அன்றாட வாழ்விலும் சமய நிலையிலும் சைவத்துக்கும், வைஷ்ணவத்துக்கும் அதிகவேற்றுமை பாராட்டப்படுவதில்லை என்பதையே இந்தநிலைமை எடுத்துக்காட்டுகின்றது.

## தலைநகர் ஆலயங்கள்

இலங்கையில் தலைநகரம் கொழும்பு. இங்கு பல்வேறு இன மக்கள் வாழ்கின்றார்கள். பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லீம்கள் ஆகியோர் குறிப்பிடத்தக்க இனத்தவர்கள்.

கொழும்பில் இந்துக் கோயில்கள் கணிசமான அளவு உள்ளன. இந்து சமய விழாக்களும் பெருமளவு நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக ஆடி மாதத்தில் வேல்விழா என்று ஒரு பெரிய விழா நடைபெறுகின்றது. இந்தவிழா வினை நகரத்தார் எனப்படும் தென்னிந்திய வணிகப் பெருமக்கள் நடத்தி வருகின்றார்கள். அவர்களுடைய நிருவாகத்தில் மூன்று, நான்கு பெரிய கோயில்கள் கொழும்பில் இருக்கின்றன.

வேல்விழாக்காலத்தில் தங்கரதம், வெள்ளிரதம் என்ற இரு பெரிய அலங்கார ரதங்கள் சுமார் ஏழு மைல் தூரம் சென்று வருகின்றன. இந்த விழாவிலே இந்துக்கள் மட்டுமன்றி ஏனைய மதத்தவர்களும், இனத்தவர்களும் வெகு உற்சாகத்தோடு கலந்து கொள்கின்றார்கள்.

கொழும்பிலே சேர். பொன் இராமநாதன் என்ற ஒரு பெருமகனாரால் நிருமாணிக்கப்பட்ட பிரம்மாண்டமான சிறந்த கோயில் ஒன்று உண்டு. கருங்கற் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கும் இந்தக் கோயில் ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் கோயில் என வழங்குகின்றது. இங்கே திருவிழாக்களும் தேர்த்திருவிழாக்களும் இடம்பெற்று வருகின்றன. மார்கழி மாதத்தில் இந்த ஆலயத்திலிந்து, ஒலி பரப்பப்படும் திருவெம்பாவைப் பாடல்கள் அன்னிய நாடுகளிலுமுள்ள இந்துப் பெருமக்களும் கேட்கும் வண்ணம் அதிகாலையில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படுவது உண்டு. கொழும்பிலே மேற்குறிப்பிட்ட ஆலயத்தை விட விநாயகர் ஆலயங்களும் முருகன் ஆலயங்களும், அம்மன் ஆலயங்களும் பல உள.

## கதிர்காமம்

இலங்கையிலே தலைசிறந்த தலங்களிலே ஒன்றாக விளங்குவது கதிர்காமத் திருத்தலம் ஆகும். கதிர்காமத்தில் இருக்கின்ற முருகன் ஆலயத்திற்கு அருகில் மாணிக்கப்பிள்ளையார் ஆலயமும் இருக்கின்றது. இந்த ஆலயத்தை அரவணைப்பதுபோல மாணிக்க கங்கை இங்கு ஓடிக்கொண்டிருக்கின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று பெருமைகளையுடைய இந்தத் தலத்தில் இந்துக்கள், பௌத்தர்கள், முஸ்லீம்கள் ஆகிய மூன்று இன மக்களும் ஒன்று சேர்ந்து வணங்குவது ஒரு சமய ஐக்கிய அறிகுறியாக விளங்குகின்றது.

## பௌத்த இந்து இணைப்பு

இந்துக் கோவில் எதிலும் பௌத்த சிலை எதையும் வைக்கும் வழக்கம் கிடையாது. ஆயினும் பௌத்தக் கோவில்கள் பலவற்றிலே விநாயகர், முருகர், விஷ்ணு,கண்ணகி ஆகிய தெய்வங்களை வைத்து வழிபடுகின்றனர். அதைப் போலவே பௌத்த கோவில்களுக்கு வழிபடுவதற்காக இந்துக்கள் எவரும் செல்லும் வழக்கம் இல்லை. ஆயினும் பௌத்தர்கள் பலர் இந்துக் கோவில்களுக்குச் சென்று வழிபடும் வழக்கம் உண்டு. முக்கியமாகக் கதிர்காமம், முன்னேஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய கோவில்களுக்குப் பெருந்தொகையான பௌத்தர்கள் சென்று வழிபடுகின்றனர். இவை தவிர கண்டியிலே நடைபெறும் பெரகராவில் கதிர்காமத் தெய்வமும் முக்கிய இடம் பெறுகின்றது. இவையாவும் நம்நாட்டுப் பாரம்பரியத்தில் இந்து மதத்துக்கும் பௌத்தத்துக்குமுள்ள நெருங்கிய இணைப்புக்கும், இந்துக் கலாசாரமும் வழிபாட்டு முறைகளும் பௌத்தத்தில் எவ்வளவு தூரம் செறிந்துள்ளன என்பதற்கும் எடுத்துக்காட்டுகளாகும்.

## புராணப் படிப்பு

இங்கு நடைபெற்று வரும் புராணப்படிப்பு இந்திய மக்களாலும் பாராட்டப் பெற்றது. முக்கியமாகக் கந்தபுராணமே படித்துப் பயன் சொல்லப்படுவது. இதன் மூலம் சமய அறிவு மட்டுமன்றி எழுத வாசிக்கத் தெரியாத கிராம மக்கள் ஒரளவு இலக்கண, இலக்கிய அறிவைக்கூடப் பெற்று வந்திருக்கின்றனர். இதனை இப்போது ஆங்கிலத்தில் முதியோர் கல்வியின் ஓர் அம்சம் என்று கூடக் கருதலாம்.

மார்கழி மாதத்திலே வரும் திருவெம்பாவை நாள்களிலே சில கோவில்களிலே திருவாதவூரடிகள் புராணம் படித்துப் பயன்சொல்லுவது உண்டு. பிட்டுக்கு மண்சுமந்த சருக்கம் படித்துப் பயன் சொல்லப்படும் நாளன்று சர்க்கரைப் பிட்டையே சுவாமிக்கு நைவேத்தியமாக வைத்துப் பின்னர்

புராணப் படிப்பைக் கேட்க வந்தவர்களுக்கு வழங்குவது வழக்கம். இவ்வாறு சிந்தனைக்கும் நாவுக்கும் ஒருங்கு விருந்தளித்து வந்த அரிய மரபுகள் படிப்படியாக அருகி வருகின்றன.

## நூல்கள்

இந்துசமய வாழ்விலே கோவில்கள் முக்கிய இடம் வகிக்கும் காரணத்தால் கோவில்கள் பற்றிய விவரங்கள் பலவற்றை இதுவரை குறிப்பிட்டோம். இவற்றுள் பெரும்பாலானவை நம்நாட்டுக்கேயுரிய தனியம்சங்களாகும். இனி, இந்து சமய இலக்கியப் பணியிலே நம் நாட்டவர் ஆற்றிய பணிகளுட் சிலவற்றைக் குறிப்பிடுவோம். இவற்றை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று இந்து தத்துவம் (Hindu Philosopy) மற்றது இந்து சமயம் (Hindu Religion) இவற்றை மேலும் இரண்டாகப் பிரிக்கலாம். தமிழில் இயற்றப்பட்டவை ஒரு பிரிவு. ஆங்கிலத்தில் இயற்றப்பட்டவை மற்றப் பிரிவு. எல்லாப் பிரிவுகளிலும் நம் நாட்டவர் காலத்துக்குக்காலம் இயற்றிய நூல்கள் தொகையால் ஒருவேளை குறைவாயிருப்பினும் வகையாலும் தரத்தாலும் உயர்ந்தவை எனக் கருதலாம். எல்லாவற்றையும் இங்கு குறிப்பிடுவது இயலாது. சிலவற்றை மட்டுமே இங்கு குறிப்பிடுவோம்.

## தத்துவ நூல்கள்

தத்துவத் துறையிலே முதலிலே மனத்துக்கு வருவது நீலகண்டபாஷ்யத்துக்குப் புன்னாலைக் கட்டுவனிலே பிறந்து காசியிலே வாழ்ந்த காசி வாசி செந்திநாதையர் செய்த மொழி பெயர்ப்பேயாகும். பிரம்மசூத்திரம் எனப்படும் நூலே இந்திய தத்துவ ஞானத்துக்கு முக்கியமான ஒரு மூலநூல். அதற்குப் பலர் சமஸ்கிருதத்திலே பெரிய விளக்கங்கள் எழுதியுள்ளனர். அந்த விளக்கங்களே பாஷ்யங்கள் எனப்படும். பாஷ்யங்களை எழுதினோர் வேதாந்தச் சார்பாகவே எழுதியுள்ளனர். நீலகண்டர் என்பவர் மட்டுமே சைவ சித்தாந்தச் சார்பாக விளக்கம் எழுதியுள்ளார். அவருடைய பாஷ்யத்தைத் தமிழாக்கி அதன்மூலம் சைவ சித்தாந்தத்துக்கு வலுவூட்டிய பெருமைக்குரியவர் செந்திநாதையர்.

இவர் இம்மொழிபெயர்ப்பின் முகப்பிலே எழுதிய இரண்டு உபக்கிரமணிகைகளைப் பண்டித மணி கணபதிப்பிள்ளை தாம் எழுதிய கந்தபுராண கலாசாரம் என்னும் நூலிலே குறிப்பட்டு "ஒவ்வொன்றும் தனித்தனி கோடி பொன் பெறும்" எனக் கூறுகின்றார். சித்தாந்த சாத்திரங்களுள் முக்கியமான சித்தியார் சுபக்கத்துக்கும் சிப்பிரகாசத்துக்கும் திருவிளக்கம் எழுதிய உரைகள் ஆகியன தமிழில் நம் நாட்டவர்கள் செய்த தத்துவப் பணிகளுக்குச் சில உதாரணங்கள்.

ஆங்கிலத்தில் எத்தனையோ நூல்களைக் குறிப்பிடலாம். சேர். பி. இராமநாதனின் மாமனார் முத்துக்குமாரசாமி 1857 இல் வெளியிட்ட (Synopsis of Saiva siddhanta) தொடக்கம் அண்மையிலே காலஞ்சென்ற கே. ராமச்சந்திரா இயற்றிய Hinduism in a nutshell; வரை அவை வளரும்.

கலாயோகி ஆனந்தக்குமாரசாமி இயற்றிய பல நூல்கள், முக்கியமாக 'Dance of Shiva' சேர். பி. அருணவலம் அவர்கள் இயற்றிய Studies and Translations Phlosophical and

Religions: கலைப்புலவர் நவரத்தினமவர்கள் இயற்றிய Studies in Hinduism சிவபாதசுந்தரமவர்கள் இயற்றிய Saiva Shot of Hindusim போன்றவை குறிப்பிடத்தக்கவை

இத்தொடர்பிலே சிவபாதசுந்தரமவர்கள் ஆற்றிய பணியொன்றையும் குறிப்பிடுவது பொருத்தமாகும். சென்னையிலேயிருந்து வயலற் பரஞ்சோதி என்பவர் சைவ சித்தாந்தம் என ஆங்கிலத்தில் தம் ஆராய்ச்சியாக வெளியிட்ட நூலில் சிற்சில இடங்களிலே வேதாந்தத்தோடு ஒப்பிட்டுச் சைவசித்தாந்தக் கோட்பாடுகளைச் சாடியிருப்பதைக் கண்டபோது சிவபாதசுந்தரமவர்கள் வயலற் பரஞ்சோதியின் கருத்துக்களின் பொருந்தாமையைக் காட்டி அவற்றுக்கு மறுப்பெழுதியமையையே இங்கு குறிப்பிடுகின்றோம்.

## சயம நூல்கள்

சமய நூல்களைப் பொறுத்த மட்டில் இலங்கை அறிஞர் இயற்றியவற்றைப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். தலபுராணங்கள், உரைகள், வசன நூல்கள், கட்டுரைகள், கிரியா விளக்கங்கள், மறுப்புகள், கண்டனங்கள், என இந்நாட்டு அறிஞர் காலத்துக்குக் காலம் இயற்றிய நூல்கள் எண்ணிலடங்கா. இலங்கையிலுள்ள பல ஆலயங்கள் பெயரில் இயற்றப்பட்ட உலா, ஊஞ்சல், பிள்ளைத்தமிழ், தலபுராணங்கள் அனைத்தனையும் கணக்கெடுக்கின் அவை பெருந்தொகையினவாகும்.

தலபுராணத்துக்கு உதாரணமாகக் காலஞ்சென்ற இளமுருகனார் இயற்றிய ஈழத்துச் சிதம்பர தலபுராணத்தைக் குறிப்பிடலாம். உரைகளுக்கு உதாரணமாகப் பருத்தித்துறை சுப்பிரமணிய சாஸ்திரிகள் கந்தபுராணத்துக்கு எழுதிய உரை, பண்டிதர் அருளம்பலவனார் செய்த திருவாசக ஆராய்ச்சியுரை, பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் தட்சகாண்ட உரை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

புராண வசன நூல்களுக்கு நாவலர் பெருமானுடைய பெரியபுராண வசனம் கந்தபுராண வசனம் கருவியை உற்புராண வசனம் ஆகியவை சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். கட்டுரை நூல்களுக்குப் பண்டிதமணி கணபதிப் பிள்ளையவர்களின் “சமய கட்டுரைகள்” மட்டக்களப்பு அருணாசல தேசிகரவர்களின் “சைவ சமய சிந்தாமணி” போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சைவாலயங்களிலே நடைபெறும் கிரியா விளக்கங்களுக்கு அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள் இயற்றிய மகோற்சவ விளக்கமும் கலாநிதி கைலாசநாதக் குருக்கள் இயற்றிய, “சைவத் திருக்கோவிற் கிரியை நெறியும் பயனுள்ள ஆக்கங்களாகும்.

மறுப்புகள் கண்டனங்களின் விளைவாக எழுந்தவற்றுக்கு எத்தனையோ உதாரணங்களைக் கூறலாம். சென்ற நூற்றாண்டிறுதியிலும் இந்த நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்தும் தமிழகத்தில் இந்து சமயம் பற்றிக்காலத்துக்குக்காலம் எழுப்பப்பட்ட ஒவ்வொரு பிரச்சனையிலும் ஈழநாட்டறிஞர்களும் ஈடுபட்டு, ஒட்டியும் வெட்டியும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இதனால் சமயக் கருத்துக்கள் தெளிவு பெற்றது மட்டுமன்றிச் சமய இலக்கியங்களும் வளர்ச்சி பெற்றுள்ளன.

உதாரணத்துக்கு இரண்டைக் கூறுவோம். வடமொழி வேதங்கள் வேறு, தமிழ்மறைகள் எனப்படுவன வேறு. இரண்டுக்கும் தொடர்பு கிடையாது என்ற கருத்தைத் தமிழ்நாட்டிலே சிலர் எழுப்பியபோது, அவை இரண்டும் கூறுவன ஒன்றே என்று நிலைநாட்டி வேதங்களிலிருந்தும் தேவாரங்களிலிருந்தும் மேற்கோள்கள் காட்டிச் செந்திநாதையர் எழுதிய நூலே "தேவாரம் வேதசாரம்" என்ற நூலாகும். "சஜவஞான போதம்" முதல்நூலா அல்லது வடமொழியிலுள்ளதுதான். தமிழாக்கமா என எழுந்த பிரச்சனையிலே அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள் போன்றோரும் ஈடுபட்டுத்தம் கருத்துக்களை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்துசமய வளர்ச்சிக்கு நம் நாட்டவர் ஆற்றிய பணியை விளக்கும்பொருட்டுச் சில பெயர்களையும் நூல்களையும் மட்டுமே இங்கு குறிப்பிட்டோம். இங்கு குறிப்பிடப்படாத முக்கியமான பெயர்களும் நூல்களும் இன்னும் எத்தனையோ உள. இலக்கியங்களைப் பற்றி ஆராயும்போது இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகள் சமயத்துக்குக் கொடுத்து வரும் ஆதரவும் குறிப்பிடத்தக்கது.

ஈழத்திலே தோன்றி, கதாப்பிரசங்கத் துறையிலே முன்னோடியாகத் திகழ்ந்த ஈழத்தில் மட்டுமன்றித் தமிழ்கத்திலும் புகழ்பெற்ற திருவாலங்காடு சங்கரசுப்பையர் நினைவுகூரத்தக்கவர். மாணிக்கத் தியாகராச பண்டிதரும் இத்துறையிலே குறிப்பிடத்தக்க மற்றொருவராவர்.

### ஆதீனம்

சங்கரசுப்பையரைப் போலவே கதாப்பிரசங்கம், புராணப் பிரசங்கம் ஆகிய துறைகளிலே திறமை பெற்று, ஈழத்திலும் தமிழகத்திலும் மட்டுமன்றி, மலாயாவிலும் புகழீட்டிவந்து சென்றாண்டு பரிபூரணநிலையெய்திய நல்லை ஆதீனத் தலைவர் இந்துசமய விருத்தியின் பொருட்டு ஆற்றிவரும் அரும்பணிகள் யாவும் பாராட்டுக்குரியன.

### இராமகிருஷ்ண மிஷன்

நம்நாட்டிலே இந்துமத வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றிவரும் நிறுவனங்களுள் இராமகிருஷ்ண மிஷனுக்குச் சிறப்பான தனியிடமொன்றுண்டு. சுவாமி விபுலானந்தர் அவர்களின் முயற்சினால் வடக்கில் வைத்தீஸ்வர வித்தியாலயம் உட்பட எத்தனையோ இந்துக்கல்லூரிகளைத் தொடங்கி நடத்திய பெருமை இராமகிருஷ்ண மிஷனுக்குரியது. கிழக்கிலங்கையில் ஆரம்பித்த இந்துக்கல்லூரிகள், அங்கு மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்ற அநாதை இல்லம், தென்னிலங்கையில் கதிர்காமத்தில் மடம், கொழும்பிலிருந்து பற்பல பணிகள் என இராமகிருஷ்ண மிஷன் ஆற்றிவரும் அரும்பணிகள் யாவும் பாராட்டத்தக்கன.

### இலங்கை வானொலி

ஈழத்துப்பாரம்பரியத்தில் இந்துமதம்பற்றிக் குறிப்பிடும்போது இலங்கை வானொலியும் கட்டாயம் இடம் பெற்றேயாக வேண்டும். சைவ நற்சிந்தனையோடு தொடங்கி எத்தனையோ சமய நிகழ்ச்சிகள், பல ஆலயங்களில் நடைபெறும் எத்தனையோ விசேஷங்களின் நேர்முக வர்ணனைகள் யாவும் வானொலியில் இடம்பெறுகின்றன. அத்தகைய நிகழ்ச்சிகளை இலங்கை

வானொலியில் கேட்ட இந்திய அன்பர் பலர் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்ததாகக் குறிப்பிட்டனர். சைவ நற்சிந்தனை என மதத்தையும் சேர்த்துக் கூறுவதே குறிப்பிடத்தக்க செயல். மதச்சார்பற்றதெனக் கருதப்படும் தமிழகத்திலே இவ்வாறு பெயரிடுதல் இயலாது.

### இன்றைய நிலை

கடைசியாக இன்றைய நிலை பற்றிச் சில வார்த்தைகள். இந்து சமயம், "ஆன்மா நிலையானது; இறைவன் ஒருவனுளன்; கர்ம பலன், மறுபிறப்பு என்பன நிச்சயம்" என்ற அடிப்படைக் கொள்கைகளையுடையது. இவற்றுக்கு அனுசரணையாகவும் இவற்றுக்கு வடிவம் கொடுக்குமுகமாகவும் அமைந்தவையே விழாக்கள், வழிபாடுகள் சமயச்சடங்குகள் ஆகிய அனைத்தும். இன்றைய நிலையில் பலவித போக்குகளைக் காண்கிறோம். ஒரு சிலருக்குச் சமய வாழ்வின் சிறிதாவது ஈடுபடுவதற்கு வேண்டிய பொறுமையுமில்லை.; விருப்பமுமில்லை; அக்கறையுமில்லை. இன்னும் சிலர் சமய சம்பந்தமான எதுவும் தேவையில்லை என்ற முடிவுக்கு வந்தவர்கள். இவருள் சிலர் வெளிப்படையாகவே தம் முடிவைத் தெரிவிப்பவர்கள். வேறு சிலர் உபசாரத்துக்காக வெளிப்படையாக எதையும் பேசாத போதும், மௌனமாகத் தம் முடிவைச் செயல்களிலே சாதிப்பவர்கள். வேறு சிலர் சாரத்தைத் தவறவிட்டுச் சக்கையைப் பிடித்துக் கொண்டவர்கள் போலச் சமயத்தின் உள் நோக்கங்களை உணராது புற வேடங்களிலும் வெற்றாரவாரங்களிலும் மட்டுமே ஈடுபடுகின்றனர்.

அண்மைக் காலத்தில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வருவதைத் காணக்கூடியதாக இருக்கிறது சமய மன்றங்கள் தொடக்கப்பட்டுள்ளன. இளைஞர்கள் மத்தியில், குறிப்பாக உயர் வகுப்பு மாணவர்கள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. இலங்கைப் பல்கலைக்கழத்தின் ஒரு பிராதான வளாகம பேராதனையில் அமைந்திருக்கின்றது. அங்கு கல்வி பயிலச் சென்ற பல்கலைக் கழக மாணவர்கள் தங்கள் சொந்த முயற்சியால் பக்கத்தில் இருந்த குன்றின் மீது குமரனுக்கு அழகிய ஆலயம் அமைத்துள்ளார்கள்.

இவ்வாறு புத்துணர்ச்சி ஏற்பட்டு வருகின்ற இந்த வேளையிலே எந்த நாட்டிலும் இல்லாத, இந்து சமயத்திற்கான ஒரு தனி அமைச்சு ஈழ நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். நேபாளத்தைத் தவிர உலகில் இந்துசமயம் அரசாங்கத்தால் ஆதரிக்கப்படும் நாடு இலங்கை மட்டுமே எனலாம். இலங்கை பௌத்தர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட நாடு. இந்த நாட்டிலே இந்து சமயத்திற்கு மதிப்பளித்து அதற்கென ஓர் அமைச்சை உண்டாக்கி, அதன் மூலம்சமய சமரசத்தைக்காண்பதற்கு வழி செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இநதப் பின்னணியில்தான் இலங்கையில் முதன் முதலாக ஓர் அகில உலக இந்து மாநாடு நடைபெற ஏற்பாடாகி இருக்கின்றது. பல இடங்களில் இந்து மாநாடு இடம்பெற்றபோதிலும் அரசாங்க ஆதரவில் நடைபெறுகின்ற முதலாவது இந்து மாநாடு இலங்கையில் நடைபெறுவது என்பது இலங்கைவாழ் இந்துப் பெருமக்களுக்குப் பெருமைதரும் ஒரு நிகழ்ச்சியாகும்.

# கண்ணகி அம்மன் கதை

**திருவாசகமணி நாகமணி சண்முகம் ஜே.பி**
(தலைவர் அ.இ.தீவுப்பகுதி கண்ணகி கலாச்சார மன்றம்)

அக்காலத்தில் கண்ணகி தேவசக்தி காளியாகக் கோவில் கொண்டு அருள் பாலித்து வரும் நேரத்தில் கோவலன் எண்ணை ஈவிற்கும் வாலிபனாக இருந்தான். அவன் காளிகா தேவி ஆலய முன்றலால் தினந்தோறும் எண்ணை விற்பதற்காக காலையில் போவதும் மாலையில் வருவதும் வழக்கம்.

அவன் அந்தத் தேவியின் வீட்டு விளக்கிற்கு தினந்தோறும் விளக்கேற்றி வந்தான். இதைக்கண்ட தேவி இவன் மீது கருணை கொண்டு பூவுலகில் பாண்டிய அரசனின் தவப்புதல்வியாக அவதரித்தாள்.

எண்ணை விற்று வந்த வாலிபனும் மானாகர் செட்டியின் ஏக புதல்வனாக பூவுலகிற் பிறந்தான். பாண்டியன் இந்தக் குழந்தை பாண்டி நாட்டில் இருந்தால் நாடு நகரம் தீ பரவி எரிந்து அழிந்து விடும் என்று தங்கப்பேழை செய்து பேழையுள் பஞ்சணை அரவணைப்பில் பால் மணம் மாறாத பச்சிளம் பாலகியை பேழைக்குள் வைத்து சமுத்திரத்தில் தள்ளிவிட்டான். பேழை பாண்டி நாட்டுச் சமுத்திர எல்லையை அடுத்த நாட்டு எல்லையை அடைந்தது.

அடுத்த நாட்டு வாசியாகிய மாசாத்தார் செட்டியாரிடம் பேழை சிக்கியது. பேழையுள் இருந்த குழந்தையை செட்டியார் கொண்டு சென்று மிகவும் செல்லமாக பாலூட்டி தாலாட்டி கண்ணகி என்று நாமமும் சூட்டி மிகவும் அன்போடு வளர்த்து வரும் நாளில் குழந்தைக்கு ஐந்து வயது வந்தவுடன் அவர்கள் மரபு முறைப்படி மானாகர் மகன் கோவலனுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். மணமக்களின் நாலாம் திருமணத்தில் நடனம் ஆட வந்து நடனமாது மாதவியின் சூட்சியில் அகப்பட்ட கோவாலன் பன்னிரெண்டு வருடம் அவளோடு வாழ்ந்து வந்தான்.

பின் கண்ணகியிடம் சென்றான். மாதவியிடம் பட்ட கடனைத் தீர்ப்பதற்காக கண்ணகியின் காற் சிலம்பை வாங்கி விற்பதற்காக மதுரா புரிக்குச் சென்றான். குற்றமற்ற கோவலனை பாண்டிமா தேவியின் சிலம்பைத் திருடிய கொடிய திருடன் என்று வஞ்சிப் பத்தனின் சூட்சியால் பாண்டியன் கோவலனை கொலை செய்தான்.

இதைக் கோள்வியுற்ற கண்ணகித்தேவி பாண்டியனையும் மதுராபுரியையும் தன் கற்பினால் தீ மூட்டி பின் கோவலனையும் கற்பின் மகிமையினால் உயிர் பெறச் செய்து கோவலனுக்கும் மணம் முடித்து வைத்தாள்.

இவ்வாறு மதுரையை எரித்துவிட்டு கோபமுற்று வெளிக்கிட்ட கண்ணகி அம்பாள் கடற்பாதை வழி நடந்து நயினாதீவு அமர்ந்தாள். அங்கு நாகம் மலர் கொண்டு வணங்கி நிற்க நாகபூசணி எனப் பெயர் பெற்று அன்பர்க்கு வரம் அளித்தாள். அதுவே இன்று நயினை நாகபூசணி எனப் பெயர் கொண்டுள்ளது. புங்கை நகர்ப் பகுதியிலே தேவி கண்ணகையாள் புனிதமுள்ள ஆலடியில் அமர்ந்தாள்.

அந்தப் பதியை விட்டு வழி நடந்த கண்ணகையாள் அல்லைப்பிட்டி மண்கும்பானில் தான் அமர்ந்து அடியார்க்கு அருள் புரிந்தா. அதைத் தொடர்ந்து சண்டிலிப்பாய் சீரணியில் தேவி பத்தினியாள் சிறுவர்க்கென்று வரம் கொடுத்தாள். இவ்வாறு சிறுவர்க்கு வரம் அளித்த தேவியார் சீறணி பதியை விட்டு அப்பால் வழி நடந்து கோப்பாய் பதிதனிலே ஸ்ரீ மகா மாரி எனப் பெயர் கொண்டு அரசர்க்கு வரம் அளித்தா அந்தப் பதியை விட்டெழுந்த ஆரணங்கு வேலம் புராய் கோவிலாக்கண்டி பதியிலே மகிழமர நிழலிலே மாது கன்னி தானமார்ந்து வேலம்புராய், கோவிலாக்கண்டி, மறவன்புலோ ஆகிய கிராமங்களில் வாழும் வேளாளர்க்கு வாழ்த்தி வரம் அளித்தது மட்டுமல்லாமல் வயல் புலங்கள் செழித்திடவும் மாடு, கன்று வளர்த்திடவும் மாரி என்று பெயர் கொண்டு மனம் நிறைவாய் அருள் புரிந்தாள்.

அப்பால் வழி நடந்த தேவி கண்ணகையாள் நுணாவில்குளம் பதிதனிலே உத்தம மருதடியில் ஓங்கார வடிவினிலே ஓங்காரி எனப் பெயர் கொண்டு அமர்ந்திருந்தாள். அவ்வூர் மாந்தர்க்கு அள்ளி வரம் கொடுத்தாள்.

நுணாவில் குளத்தை விட்டு அப்பால் வழி நடந்த உத்தமியாள் பன்றித் தலைச்சியிலே பாங்காகத் தான் அமர்ந்தா மட்டுவில் கிராமத்தை நோக்கிச் சென்ற கண்ணகையாள் நாநூறும் பத்தும் சென்ற முழுக்கிழவி வடிவெடுத்து ஐந்நூறும் பத்தும் சென்ற அரைக்கிழவி வடிவெடுத்து அம்பிகையாள் இயலாத வயோதிபப் பெண்மணியாக உருவெடுத்து உட்கார்ந்திருந்தாள் அக் குக்கிராமக் குடிசை ஒன்றிலே அவ்வூரில் வாழும் செட்டியாரிடம் பெரும் எண்ணிக்கையான மாடுகள் காணப்பட்டன. ஒவ்வொரு நாளும் அம்மாடுகளில் ஒன்று குறைந்து வரும். இதனையறிந்த செட்டியார் யோசனையுற்று மாடுகளைப் பராமரிப்பவனிடம் குறை கூறினார். மாடு மேய்ப்பவன் இதனைக் கண்டறிந்து அக் கிராமத்தில் வாழும் புலையன் ஒருவனே கள்வன் எனச் செட்டியாரிடம் கூறினான்.

இதனையறிந்த செட்டியார் கள்வனைப் பிடிப்பதற்காக புலையன் வாழும் இடம் நோக்கிச் சென்று அக் கள்வனைக் கூப்பிட்டு நீ பிடித்த மாடுகளின் கழிவுப் பொருட்களை அதாவது மாட்டுத் தலை, மாட்டுத்தோல் ஆகியன புதைத்த இடத்தைக் காட்டு என்றார். புலையன் குடிசையிலே வயோதிப வடிவில் வந்தமர்ந்த கண்ணகையாளிடம் முறையிட்டு வேண்டிக் கொள்ள கண்ணகியும் வரம் கொடுத்து புலையனை அனுப்பி வைத்தாள் கள்வன் தான் பிடித்த மாடுகளில் உணவுக்கானது போக மிகுதியை புதைத்த இடத்தைச் சுட்டிக் காட்டினான். அவ்விடத்தை செட்டியாரின் ஆட்கள் தோண்டிக் கொண்டு போகையில் என்ன அதிசயம்!

மாட்டுத் தலையெல்லாம் பன்றித் தலையாகவும் மாட்டுத் தோல் எல்லாம் பன்றித் தோலாகவும் காணப்பட்டன. வியப்படைந்த செட்டியார் கள்வனைக் காட்டிக் கொடுத்தவன். மேல் கோபமுற்றார் இவன் கள்வனல்ல எனப் புலையனை அனுப்பி வைத்தார். புலையனின் ஆனந்தம் சொல்ல முடியாது. தான் கள்வனாக இருந்ததும் என்னை அந்த ஈஸ்வரி தயாபரி காப்பாற்றி விட்டாளே என புளகாங்கிதமடைந்து ஓடோடிச் சென்றான். அந்த வயோதிபப் பெண்ணிடம் "அம்மா நீ உண்மையில் கண்ணகையாள் தான் என நான் நம்பி விட்டேன் இன்று முதல் இவ்விடத்திலேயே பன்றித் தலைச்சி அம்மனாக உன்னை வைத்துத் தொழுகிறோம்" என்றான் புலையன்.

அன்று தொட்டு இன்று முதல் மாட்டுத்தலையை பன்றித் தலையாக மாற்றியதால் தேவி கண்ணகையாளை மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் என அழைக்கிறோம். வருடந்தோறும் வரும் பங்குனி மாதத் திங்கட்கிழமைகளில் பொங்கலுடன் கூடிய குழுத்தி படையல் படைத்து அபிஷேக்கின்றோம். அவ்வாறு பன்றித்தலைச்சியில் புலையனுக்கு வரம் கொடுத்த தேவி கண்ணகையாள் எங்கள் தாயார் பத்தினியாள் அப்பால் வழி நடந்து வந்தாள்.

சூட்டிபுரம் பதி தனிலே சுந்தரியாய் தானமர்ந்தாள். தேவி கண்ணகையாள் தன்னைச் சுற்றி வரும் அன்பர்க்கெல்லாம் தன்னை தொழுது நிற்கும் அடியார்க்கெல்லாம் சுட்டிபுரம் கண்ணகையம்மன் எனப்பெயர் கொண்டு திறந்த மனம் கொண்டு அருளினை அள்ளிச் சொரிந்தாள்.

இடைக்காலத்தில் இவ் ஆலயத்தில் இசை நிகழ்வு ஒன்று இடம் பெற்றது. தென்னிந்தியப் பாடகர் சீர்காழி கோவிந்தராஜன் இணைந்திருந்தார். இசை நிகழ்வு இடம் பெற்றுக் கொண்டிருக்கையில் மழை பெய்யத்தொடங்கி விட்டது. இசை நிகழ்வு நிகழ்த்திக் கொண்டிருப்பவர்களும் பார்த்துக் கொண்டிருப்பவர்களும் பெரும் சிரமத்திற்குள்ளானார்கள்.

இவ்வேளையில் சீர்காழி கோவிந்தராஜன் உளம் உருகி மனம் நெகிழ்ந்து "சுட்டிபுரம் பதி வாழும் சுந்தரியே கண்ணகையாள் கட்டி உந்தன் கால் பிடித்தேன் கருணை கொஞ்சம் காட்டம்மா....."

எனத் தொடங்கும் பாடலை மெய் மறந்து பக்தி சிரத்தையுடன் பாடினார். வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் கொடுப்பவளல்லவா அம்பிகை கண்ணகையாள்? உடனே மழை நின்றுவிட்டது. ஆனந்தப் பரவசம் அடைந்த இசைக்குழுவினரும் மக்களும் தேவி புகழ் பாடி போற்றி வணங்கினர்.

இவ்வாறு சுட்டிபுரம் அமர்ந்த சுந்தரியாள் கண்ணகையாள் சுட்டிபரம் வாழ் மக்களுக்கு வரம் அளித்தாள்.

சுட்டிபுரத்தை விட்டே அம்மா கண்ணகையாள் எங்கள் கன்னி நல்லாள் தான் நடந்தாள் தேவி கண்ணகையாள். கன்னி நல்லாள் தான் நடந்து இலுப்பைக் கடவையிலே அம்மா கண்ணகையாள் இங்கிதமாய் வீற்றிருந்தாள்.

இலுப்பைக் கடவையில் வீற்றிருந்த ஈஸ்வரி கண்ணகை அவ்வூர் மக்கள் நலன் கருதி மழை பெய்ய பயிர் செழிக்க மாந்தர் ஓங்க வரம் அளித்து அந்தப்பதியை விட்டு அருங்காளியாள் வழி நடந்து வன்னிவிளான் குளத்தில் மாரி என்று பெயர் கொண்டு வந்தமர்ந்தாள் தேவி கண்ணகை இங்கும் வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் கொடுத்தாள்.

வன்னிப்பதி இருந்தே அம்மா கண்ணகையாள் எங்கள் வடிவழகி தான் நடந்தாள் கண்ணகையாள் அப்பால் வழி நடந்த அம்மா கண்ணகி வற்றாப்பளைதனிலே வைகாசி விசாகமதில் வந்தமர்ந்தாள் வேல் விழியாள் பத்தினியாள் வந்தமர்ந்து வாழ்த்தி வரம் கொடுத்து மக்கள் வாழ வழிகொடுத்து ஆரணியாள் நீலக்கடல்நீரை அற்புதமாய் தான் எரித்து அடியவரை அன்புடனே அன்னை அவாகாத்து வைத்தா வற்றாப்பளை வாழும் வடிவழகி சரணம் சரணம் சரணம்.

# கடவுளைக் காண்போமா?

புலவர் ஈழத்துச் சிவாநந்தன்

கடவுள் என்றால் என்ன? ஆணா? பெண்ணா? அதுவா? இதுவா? உயர்திணையா? அஃறிணையா? எப்படிச் சொல்வது கடவுளைக் கண்டவர்கள் உண்டா? கண்டவர்கள் கண்டவாறு காட்டியது உண்டா? காட்டியபடி நாம் கண்டுகொண்டுள்ளோமா? அப்படி ஒருவர் இருப்பது உண்மைதான் என்று நம்பிக் கொண்டோமா? நம்பாமல் சும்மா கடவுள் கடவுள் என்று சொல்லிக் கொண்டும் வணங்கிக் கொண்டும் பூசை, அர்ச்சனை செய்து கொண்டும் காலத்தைக் கடத்துகின்றோமா? விளங்காமல் வாழ்ந்து காலத்தைக் கடத்துவது தான் கடவுளோ?

ஐய்யப்பாடு எழவேண்டும் - சந்தேகம் தோன்ற வேண்டும், விசாரணை இருக்க வேண்டும். தேடல் நடக்க வேண்டும். சரி சந்தேகமாய்த்தான் இருக்கிறது. தேடுவோம் யாரிடம் கேட்பது? எங்கு போவது? எவரிடம் விசாரிப்பது?

நம் கண்ணில் படுபவர்கள் யாருக்கும் சரியாகப் படாது. சாடையான விளக்கம் இருந்தாலும் நமக்குப் புரியும்படி சொல்ல முடியாது. சிவஞான போத சூத்திரமும், சித்தியார் விளக்கமும் நம்மை குழப்பி விடக்கூடும். தோத்திர சாத்திரங்கள் கேட்க நமக்கு நேரம் இல்லை. காலமும் இல்லை. பின்னே என்ன செய்யலாம். சும்மா கற்பூரத்தைக் கொழுத்திக் கும்பிட்டுவிட்டு ஓடுவோமா? எல்லோரையும் போல் செய்து விட்டு போவதற்கு நமக்கேன் விசாரணையும் வீண் வம்பும்? கடவுள் தம்மை விளங்கிக் கும்பிட்டவர்க்கு மட்டுமா கருணை காட்டுகிறார்? சீச்சீ ! மனதிலை நெடுகக் கிடந்து அடிக்கிற அவர் எந்நாளும் சாப்பாடும் நித்திரையும், வேலையும், வியாபாரமும், சாமத்தியமும், கலியாணமும், கோடும், கச்சேரியும், செத்த வீடும், அந்திரட்டியும் தானே கண்ட மிச்சம். இண்டைக்காவது கடவுளைக் கண்டு கொண்டு போவம் ஒருநாளாவது மனதுக்கு நிம்மதியாய் எல்லாத்தையும் மறந்து போறவழிக்காவது புண்ணியம் கிடைக்க இந்தக் கடவுளைப் பற்றி கேட்டுக்கொண்டு போவம். நடவுங்க.

கடவுள் என்றால் செலுத்துவது என்று கருத்து. இந்த உலகத்தை உயிர்களை இயங்க வைப்பது என்று பொருள். எல்லாவற்றையும் கடந்து , எல்லாவற்றுள்ளும் கலந்தும் இருப்பதனாலே கடவுள் என்று சொல்லப்பட்டது கடவுளை அவரவர் மனநிலைக்கேற்றபடி அப்பனாகவும் கொள்ளலாம். அம்மையாகவும் கொள்ளலாம். அம்மையப்பனாகவும் ஏற்கலாம். அவருக்கு ஊருமில்லை, உருவமுமில்லை, பேருமில்லை, எல்லா உலகமும் அவர் ஊரே. எல்லா உருவும் அவர் உருவமே. எல்லாப் பெயர்களும் அவர் பெயரே. “எல்லா உலகமும் ஆனாய் நீயே” “ஒரு நாமம் ஒரு உருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெற்றேணம் கொட்டாமோ” என்று கடவுளை கண்டு தெளிந்த மாணிக்க வாசக சுவாமிகளின் வாக்குகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கடவுள் என்பது உலகத்தைக் கடந்து தனியாய் நிற்பதென்றும் கருத்துக் கொள்ளலாம். இக்கருத்தும் உண்மையே. உலகத்தை நீக்கி தனியாய் நிற்கும் கடவுளைப் பற்றி நமக்கு கவலை இல்லை. அவர் வழிபாட்டிற்கு உரியவரும் அல்லர். நம்மை விட்டுப்பிரிந்தவருடன் நமக்குக் கொண்டாட்டம் உண்டா,? இல்லையே. நம்மோடு கலந்தும் நமக்கு தன்னைத் தெரிய வைத்தும் குருவோடு சேர்ந்தும் நிற்கின்ற கடவுளைப்பற்றியே நாம் சிந்திக்க வேண்டும். கடவுளின் இந்த மூன்று நிலைகளை, மூவித நிலையென பெரியோர் வகுத்தனர். தனித்து மனம், வாக்குக் கடந்து.

வழிபாட்டிற்கு உதவா நிலையினர் என்றும், இயற்கையை உலகத்தை உடலாகக் கொண்டு தான் உயிராக நிற்கும் நிலையும் விளங்க வைக்கும் குருநாதர் மூலமாக தெரிய வரும் நிலையுமே வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உதவ கூடியது என்றும் தெளிய வைத்துள்ளார்கள்.

உலகத்தோடு கலந்து நிற்கும் கடவுள் வானமாகவும் மண்ணாகவும் காற்றாகவும் வெளிச்சமாகவும் ஊனாகவும், உயிராகவும், உண்மையாகவும் இன்மையாகவும், கோனாகவும் இன்றுஇயங்குகின்றான் என்று கூறினார் மணிவாசகர். தன்னைப் பிறருக்கு விளங்க வைக்கும் குருவின் உள்ளத்தைக் கோவிலாகக் கொண்டு கடவுள் குரு மூலமாக நமக்குத் தெரியவருவான். தானே குருவாகித் தன்னைத் தெரிய வைக்கும் நிலைப்பாட்டினையும் எடுப்பான். குருந்த மர நிழலில் குருவாகி இருந்த நிலைப்பாடு நமக்குத் தெரிந்ததே.

"குருவே சிவனுமாய் கோனுமாய் நிற்கும்" என்பது திருமந்திரம். குரு என்றால் யார்? சுயநலம் இல்லாது பொது நலம் விரும்பி கடவுளைத் தவிர வேறொன்றும் விளங்கப்பெறாத உள்ளம் உடையவரே குரு. குரு ஆணாகவும் இருக்கலாம் பெண்ணாகவும் இருக்கலாம். குருவின் வழியில் கடவுளின் அருட்செயல்கள் நிகழவும கூடும். குருநாதர் செயல் எல்லாம் கடவுளின் அருட்செயல்களே. குருவின் கட்டளையும் ஆண்டவன் கட்டளையே. குருநாதன் நாம் காண்பதைக் காட்டி அதனுள் விளங்கும் கடவுளைக் காட்டுவான். எண்ணத்திற்கெட்டாத ஒன்றை எண்ணத்திற்கு பார்வைக்கெட்டும் ஒன்றைக் கொண்டே புரிய வைப்பான்.

கடவுளைப் பற்றி விளக்கம் கூறிய திருவள்ளுவர், கடவுள் வாழ்த்து என்னும் தனது அதிகாரத்தில் காணப்பட்ட உலகத்துள் காணப்படாத கடவுளைக் காட்டுகிறார். கண்டது கொண்டு காணாதது காட்டலும், உள்ளதை வைத்து உறைந்ததை உணரச் செய்வதும் குருவின் வேலை. "தேடித் தேடொனாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்". என்று நம்மையும் உள்ளத்தில் கடவுளைத் தேடச் சொல்கிறார் ஒரு குரு.

கடவுளைத் தேடுவதும் காண்பதும் வழிபடுவதும் நமக்கு வேண்டியது கேட்பதும் போதுமானதா? கடவுள் சிரிப்பார். நமது சுயநலத்தை அறியாமையை எண்ணி அட்டகாசமாய் சிரிப்பார். அதுதான் புயலாய், சூறாவளியாய் நமக்குக் கேட்கும். கடவுளின் இப்பெரும் சிரிப்பு நமக்கு சில வேளை விளங்குவதும் இல்லை. கடவுளை விளங்கிக் கொள்ள கடவுளின் அசரீரியும், அசைவும், அட்டகாசச் சிரிப்பும் நமக்குப் புரிய வேண்டும்.

கடவுளைக் காண்பது உணர்வது மட்டுமல்ல. கடவுளோடு கதைக்கவும் நமக்குத் தீராத விருப்பம். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும். நம் புங்குடுதீவுக் கவிஞர் மு. பொன்னம்பலம் கவிதை மூலம் ஓர் ஆலோசனை சொல்கிறார். அதனையும் கேட்போம்.

கடவுளோடு கதைக்கலாம் வாரும்
சந்தை இரைச்சலில் சங்கீதம் கேட்பதில்லை,
ஆனால் இனிமேல் கடவுளோடு கொஞ்சம்
கதைக்கலாம் வாரும்.
சாப்பாடு முடிந்து சிறிது சாய்மனையில்
சரியப் போகிறீரா? நல்லது
அப்போ இப்படிக் கொஞ்சம் கணக்கெடுத்துப் பாரும்.

உ

சிவமயம்

ஓம் சக்தி

# மலர் மலர

**திரு. மு. கனகசபாபதி**
அருள் நெறிக்காவலர்

கடற்கரை அழகுக்கும் கலை மகிழ்வுக்கும் கடவுள் அருளிற்கும் ஏற்ற இடமாய்ப் போற்றப்படுகிறது "திருச்செந்தூரின் கடலோரத்தில் செந்தில்நாதன் அரசாங்கம்" என்று கவிஞர் கண்ணதாசனின் பாடல் பரவசம் ஊட்டுகிறது. இது போன்றே ஈழமணித் திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள தீவுக் கூட்டங்களில் தலை சிறந்த தீவாக விளங்கும் புங்குடுதீவின் தெற்குக் கடற்கரை ஓரம் கோவில் கொண்டு அருளாட்சி செய்யும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பல ஆண்டுகளுக்கு முன்னால் கண்ணகை அம்மன் என தெய்வமாகக் கொண்டாடப்பட்டது.

கண்ணகி என்ற பெயரோடும் புகழோடும் கண்ணகி அம்மன் கோவில் என்ற நாமத்தோடும் அன்று தோன்றிய அம்மை இன்று ஆகம விதிகளோடும் முறைகளோடும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரியாய் திகழ்கின்றாள். 1931ம் ஆண்டு கோவில் புனருத்தாரணம் செய்யப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெற்ற போது கருவறையில் அன்னை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளும் இரண்டாம் மண்டபத்தில் வடக்குப் புறத்தில் தெற்கு வாசல் ஊடாக சமுத்திரத்தைப் பார்த்தபடி ஸ்ரீ கண்ணகை அம்பாளும், பிரதிஷ்டை செய்யப்பட்டது.

1944ம் ஆண்டு மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1957ல் கோவிலின் சுண்ணாம்புக் கட்டிடம் முழுவதும் புதுப்பிக்கப்பட்டது. இத்திருப்பணியை கொழும்பு பிரபல வர்த்தகர் உயர் திரு மு. முத்தையாபிள்ளை அவர்களின் குடும்பத்தினர் செய்து முடித்தனர். 1964ம் ஆண்டு இவ்வாலயத்தை மிகவும் சிறப்பான முறையில் கும்பாபிஷேகம் நடந்து முடிந்தது.

திரு.மு. முத்தையாபிள்ளை அவர்கள் கும்பாபிஷேகம் முடிந்த பின்னர் அவர்களின் மனதில் இருந்து வந்த நினைவுகள் இரண்டு. ஒன்று முன்வாசல் ஐந்து தலை இராஜ கோபுரம். இரண்டாவது அம்பாளிற்குத் அழகான சித்திரத் தேர். இவை அம்பாளின் அருளால் கைகூடியது. 27.06.1979 ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளிற்கு 33 குண்டமும், ஸ்ரீ கண்ணகை அம்பாளிற்கு 9 குண்டமும் பரிகார மூர்த்திகளிற்கு 6 குண்டமுமாக மொத்தம் 48 குண்டமும் அமைத்து மிக மிகச் சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கண்ணகி அம்பாள் காலம் காலமாய் தினம் தினம் உள்ளத் தூய்மையோடு கும்பிட்டவர்களின் தீராத நோய்களைத் தீர்த்து வைத்தவள். திருமணமாகாத கன்னிப் பெண்கள் கண்ணகையைத் தரிசித்து திருமணம் கைகூடப் பெற்றவர்கள் எத்தனையோ பேர்.'. திருவிழாக்காலங்களில் அம்மன் கோயில் கடலில் பல அற்புதங்கள் நிகழ்ந்திருக்கின்றன. எண்ணெய் பீப்பாக்கள் தீராந்திப் பல்லக்கு, அண்மையில் தேர்வடம் போன்றவை கடலில் மிதந்து வந்தன.

கடற்கரைக் கண்ணகியை எண்ணும் போது அங்கு நடந்த சிலப்பதிகார விழா இலங்கையடங்கிலும் உள்ள மக்களுக்கு நினைவுக்கு வரும். சிலப்பதிகார விழாவை இலங்கையில் உள்ள கண்ணகி அம்மன் கோவில்களில் எந்தக் கோயிலில் நடத்துவதென்று திருவுளச் சீட்டு போட்ட போது புங்குடுதீவு கண்ணகை அம்மனுக்கே திருவுளச் சீட்டு விழுந்தது.

புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் நடத்துவதற்கு திரு அருள் பாலித்தது. புங்குடுதீவு மக்களின் பெரும் பங்களிப்புடன் ஈழத்துப் பேரறிஞர்களும் இந்தியப் பேரறிஞர்களும் சிலம்புச் செல்வியை மக்களுக்கு குலச்செல்வியாக விளங்க வைத்தனர். கண்ணகைக்கு அவரது சந்நிதானத்திலே மூன்று நாட்களாக நடந்த இந்த சிலப்பதிகார விழாபற்றி இலங்கை இந்தியா மலேசியா, சிங்கப்பூர் பத்திரிகை பாராட்டி எழுதியிருந்தன.

1954ம் ஆண்டு நடந்த சிலப்பதிகார விழாவிலே இந்தியப் பேரறிஞர்களான அருட்செல்வர் திரு.அ. ச. ஞானசம்பந்தர், சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சிவஞான கிராமணியார் கலைமகள் ஆசிரியர் கி.வா. ஜெகநாதன், பேராசிரியர் திரு. அ. முத்துச்சிவன் ஆகியோரும், ஈழத்து அறிஞர்களான அமைச்சர் திரு. சு. நடேசபிள்ளை ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம், பண்டிதர் கா.பொ. இரத்தினம் , வித்துவான் திரு சி. ஆறுமுகம், வித்துவான் திரு. பொன். அ. கனகசபை, வித்துவான் திரு. க. வேந்தனார் முதலியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

யாழ்ப்பாணம் மலாயன் கபே அதிபர் திரு. கதிரவேலு கோவிலின் கிழக்கு வாசலில் மலேயா கபே என்ற பெயர் பலகை போட்டு காலையும் மாலையும் விழாவிற்கு வருகை தந்தவர்களுக்கு அறுசுவை உணவை வழங்கினார். இத்துடன் புங்குடுதீவு மக்களின் விருந்தோம்பும் பண்பும் பரவலாய் நடந்தது.. ஆலடிச் சந்தியில் இருந்து அம்மன் கோவிலடி வரை திரண்டிருந்த மக்கள் வெள்ளம் இலங்கையின் பலபாகங்களிலிருந்தும் குவிந்தமை வியப்பான காட்சியானது.

ஆலய நுழைவாசலில் அமைவது கோபுரமாகும். இது தவிர, மூலஸ்தானம் இறைவனின் தலைப்பாகத்தையும் கோபுரப்பகுதி திருப்பாதத்தையும் எடுத்துக் காட்டுகிறது. இறைவனின் மலரடியை நினைத்து வழிபடும்போது கோபுரத்தை நமது மனக்கண்ணில் உருவமாக்கிவிட வேண்டும். இதனால் தான் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்றனர் ஞானிகள்.

கண்ணகி கோயில் கறுப்பாத்தை உடையார் காலத்தில் இருந்து இன்று வரை படிமுறை வளர்ச்சி பெற்றது. என்.கே. மயில்வாகனம். எஸ்.கே. செல்லையா ஆகியோர் முயற்சியால் ஐந்து தலை இராஜகோபுரம் இனிதே நிறைவேறியது.

நினைத்த வரம் அருளும் அம்பாளின் ஆலயத்தில் பல ஆண்டு காலமாக தேர்த்திருவிழா நடைபெற்று வருகிறது. 1970ம் ஆண்டு தேர்த்திருவிழாவின் போது தேர்வடம் அறுந்து அடியார்களின் மனதில் வேதனை உண்டாக்கியது. அடுத்த ஆண்டு தேர்வடம் ஒன்று அன்னையின் வரலாற்றோடு இணைந்த கடலோரத்தில் கண்டு எடுக்கப்பட்டது. வடத்தை நேரில் கண்ட எனது தந்தையார் திரு. முத்துக்குமாரு அவர்களின் மனதில் அம்பாள் திருவருள் கொண்டு அவர்களின் முயற்சியால் அம்மனைச் புதிய சித்திரத்தேரில் அமர வைத்து அழகு பார்க்க வேண்டும் என்று ஆசையும் காரணமானதால், அவரின் முயற்சியால் ஆசை அடியேனுக்கும் உண்டாகியது. அடியேன் திருப்பணிச் சபையில் ஒருவனாக இணைந்தேன். ஆலயத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய சபையினரோடு கலந்து தொண்டாற்றினேன்.

எமது தந்தையார் திரு. சி.முத்துக்குமாரு அவர்களின் நினைவாக அவர் பிள்ளைகளாகிய நாங்கள் 1989ம் ஆண்டு வசந்தமண்டபம் கட்டி கும்பாபிஷேகம் செய்ய அம்பாளின் திருவருள் கிடைத்தது. இந்துக் கோவிலின் நித்திய பூசைக்குரிய பொருட்களை தந்தையார் செய்தது போன்று இன்று வரை அவரது வியாபார நிலையத்தால் கொடுக்கப்படுகின்றது. இதுவும் அம்பாளின் கருணை என்றே கருதுகின்றோம்.

மகா கும்பாபிஷேகம் 1979ம் ஆண்டு 27. 06.1979 ல் 48 குண்டங்களோடு நடைபெற்றது. அத்துடன் புதிய அம்பாளை ஆரோகணித்து இருத்திய கைங்கரியத்திற்கு கோயில் பிரதம குருக்களாக இருந்து சிவஸ்ரீ. க. கணேசராச குருக்கள் எனக்கு மிகவும் உதவியாக இருந்தமை போற்றுதலுக்குரியது. மேலும் பஞ்சாயத்துச் சபையினரும், ஆலய பரிபாலன சபையினரும் தேர்த் திருப்பணி சபையினரும், திரு . கிருஸ்ணசாமி, திரு. கண்ணையா ஆசிரியர், திரு.சி. சின்னத்துரை ஆசிரியர், திரு. க. நுட்பநாதன், திரு. சிதம்பரநாதன், திரு.ஆ.துரைசாமி, திரு. ச. வைரவநாதன் ஆகியோர்களின் ஒத்துழைப்பும் நினைவு கூரத்தக்கது.

இச்சித்திரத் தேரை நீண்டகாலத்திற்கு பாதுகாக்கக் கூடிய தேர் முட்டியை கொழும்பு வர்த்தகர் உயர் திரு. க. தியாகராசா தமது தாயாரின் ஞாபகார்த்தமாகச் செய்து தந்து உதவினார்.

தேரைத் தலை சிறந்த சிற்ப ஆச்சாரியர் ஆ. ஜீவரட்ணம் திறம்படச் செய்து தந்தார்.

இப்பொழுது நீண்ட காலத்தின் பின் யாவும் உள்சுற்றுப்புறம் மதில் உள் பரிகார மூர்த்திகளாகிய பிள்ளையார் சந்நிதி, முருகன் சந்நிதி, நவக்கிரக சந்நிதி, வைரவர் சந்நிதி, சண்டேஸ்வரர்

சந்நிதி, மணிக்கோபுரம், அர்த்த மண்டபம், உள்மண்டபம், மடப்பள்ளி இவ்வளவும் புதிதாக அமைக்கப்பட்டுவிட்டதென்றால் அம்பாளின் திருவருள் தான் என்று சொல்வதற்கு மிகையாகாது.

(2005.03.30 ம்) 2005ம் ஆண்டு பங்குனி மாதம் 30ம் திகதி மகா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடி உள்ளது. எல்லாம் வல்ல கண்ணகி என வழங்கும் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாளின் திருவருள் ஆலய பரிபாலன சபையினருக்கும் தர்மகர்த்தா சபையினருக்கும் அம்பாளின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

கும்பாபிஷேகம் நடப்பதும் திருவிழாக்கள் நடப்பதும் மக்களுடைய நல்வாழ்விற்கே. மக்கள் அம்பாளின் ஆலயத்திற்கு சென்று வழிபடுவதாலும் ஆலயத்தை சரிவரப் பராமரிப்பதாலும் ஊர் உயரும் உறவுகள் இறுகும். நாடு நலம் பெறும். நல்லன நடக்கும்.

# தேர் ஓடியது

**அமரர். சி. முத்துக்குமாரு**
தேர்த்திருப்பணியாளர்

பொன்கை நகர் கண்ணகை அம்மன் என விளங்கி அடியார்களுக்கு அருள்மழை பொழியும் அன்னை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் அற்புதங்கள் நிறைந்த வரலாற்று புகழ் மிக்கதோர் ஆலயமாகும். நினைத்த வரம் அருளும் அம்பிகை ஆலயம் 400 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமை உடையது. அதன் புதுமை நிகழ்ச்சிகளில் ஒன்று எமது காலத்தில் (1971ம் ஆண்டில்) நடைபெற்றது. அதுவே புதிய சித்திரத்தேர் ஒன்றை உருவாக்க எம்மைத் தூண்டியது.

பல ஆண்டுகளாக இவ்வாலயத்தில் தேர்த்திருவிழா நடைபெற்று வருகின்றது. 1970ம் ஆண்டு தேர்த் திருவிழாவில் தேர்வடம் அறுந்து அடியார்கள் மனதில் வேதனையை ஏற்படுத்தியது. அடுத்த ஆண்டு தேர்வடம் ஒன்று அன்னையின் வரலாற்றோடு சம்பந்தப்பட்ட கடலோரத்தில் ஒரு அடியவரால் கண்டெடுக்கப்பட்டது. அதனை அவர் விற்க முற்பட்டபோது நாகபாம்பொன்று வடம் வைக்கப்பட்ட இடத்திலிருந்து தோன்றி படம் விரித்தாடியது. இதனைக் கண்டு பயந்த அந்த அடியார் வடத்தை விற்க மறுத்ததும் பாம்பு மறைந்து விட்டது. அன்று இரவு அம்பிகை அவர் கனவில் தோன்றி தனது தேவைக்கு வந்த கயிறு எனவே ஆலயத்தில் ஒப்படைக்கும் படி குறிப்பிட்டதாகவும் அடியார் அடுத்த நாள் மங்கல வாத்தியங்களுடன் ஊர்வலமாக ஆலயத்திற்கு கொண்டு வந்து ஒப்படைத்தார். வடத்தை நேரில் கண்டதும் என் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்ச்சியே புதிய சித்திரத்தேர்.

ஆலயத்தில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்து மகா கும்பாபிஷேகத்தை நடாத்தி அத்துடன் புதிய சித்திரத்தேரையும் ஓட வைக்க வேண்டும் என்ற எனது முயற்சிக்கு அம்பிகையின் அருளால் ஆதரவு தந்து மகாகும்பாபிஷேகத்தை சிறந்த முறையில் நடாத்தி இன்று தேரோட்டத்தையும் நிறைவு செய்யும் பஞ்சாயத்து சபையார், பரிபாலன சபையார், தேர்த்திருப்பணிச் சபையார் மற்றும் அடியார்கள் யாவர்க்கும் எனது அன்பு நன்றி கலந்த வாழ்த்துகளைச் சமர்ப்பிக்கும் அதே வேளையில் குறுகிய காலத்தில் சித்திரத் தேரினைச் சிறப்புற அமைத்த சிற்பி "சிற்பரதவித்தன்"

திரு. ஆ. ஜீவரட்ணம் அவர்களை வாழ்த்துகின்றேன்.

அம்பிகையின் அருளால் நலம் பெறும் அடியார்கள் நல்வழி நின்று பணிபுரியும் பஞ்சாயத்து சபையார், பரிபாலன சபையார், தேர்த்திருப்பணி சபையார், மற்றும் ஆதரவு நல்கும் அடியார்கள் யாவரும் நலம் பெற எல்லாம் வல்ல அன்னை கண்ணகை என விளங்கும் ஸ்ரீ

இந்நிகழ்ச்சியில் பக்தர்கள் யாவரும் பங்கு பற்றி பிரார்த்திப்போமாக.

இன்றைக்கு நான் எவ்வளவு தூரம்
வீண் பெருமை இல்லாமல்,
அடுத்தவனை அநாவசியமாகத் தூற்றாமல்
கட்சியின் பெயரில் என் சொந்த வயிற்றெரிச்சலை
பிறரில் வஞ்சம் தீர்க்காமல்
பொய்யின்றி, களவின்றி, போலி நடிப்பின்றி
பதவி, அந்தஸ்த்துக்களால் உலைக்கப்படாமல்
உண்மைப் பொதுமைக்கு விட்டுக் கொடுப்பவனாய்
நடந்திருக்கின்றேன் என்று
உனது மனச்சாட்சியை கேளும்
மனச்சாட்சியின் நிமிர்வு தான் கடவுளின்
ஆரம்பச் செருமல்.
உனது கேள்வியால் உனது மனம் சுருங்குகிறதா?
சுருங்கினால் அது கடவுளைச் சந்திக்க விரும்பாத
உனது தனி நலக் குணத்தின் சுருக்கம்
தொடர்ந்து நாளும் இப்படிக் கேளும்.
மனத்தின் சுருக்கம் குறையக் குறைய
கடவுளின் குரல் நெருங்கிக் கொண்டே இருக்கும்
ஒருநாள் உனது மனம் எந்தச் சுருக்கமும் அற்று
விரியும் போது கடவுள் உன்னோடு
நேரடியாய் உரையாடுவார்!

ஏன், கடைசியில் உன் குரலே கடவுள் குரலாய் இருக்கும்.

நல்ல யோசனை முயன்று பார்ப்போமே

புதிய சித்திரத் தேரில் புதுப் பொலிவு கொண்டு புன்முறுவல் பூத்து புங்குடுதீவை இன்ப அன்புடன் மகிழ்ந்து வாழ வைத்த கருணை மிகு காட்சியுடன் இராஜராஜேஸ்வரி ஆரோகணித்து எழுந்தருளியமை எம்மவர் முயற்சியின் தவப்பயன் அல்லவா? வாழ்த்துவோம் அம்பிகையை வணங்கி வாழவைத்து வாழவும் மகிழ வைத்து மகிழவும் வரமருள வேண்டுவோம்.

"கடவுள் இல்லை என்றோ கடவுள் முட்டாள் என்றோ கடவுளை நிந்தித்தோ ஒருவன் எவ்வளவு தூற்றினாலும் அதை அவர் அலட்சியம் செய்வதில்லை. ஆனால் கடவுள் பக்தனுக்கு ஒருவன் தீங்கு நினைத்தால் அவர் பொறுக்க மாட்டார். சூரியனின் உஸ்ணத்தைத் தாங்க முடியும். ஆனால் சூரியனின் வெப்பத்தைத் தாங்கும் பொடி மணலின் உஸ்ணத்தை நாம் கால்களால் தாங்க முடியாது. அது போல பிரகலாதனுக்கு இழைத்த கொடுமையை தாங்க முடியாமல் தான் கடவுள் நரசிம்ம அவதாரம் எடுத்தார்."

**- கிருபானந்த வாரியார் வாக்கு -**

# ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள்

## 1. ஆலய திருவிழா உபயகாரர்கள்

### 1. ஆம் திருவிழா (கொடியேற்றமும், சாந்தியும்)

ச. இராசரெத்தினம் குடும்பம்
ச. திருஞானம் குடும்பம்

**2. ஆம் திருவிழா**

இ. பூலோகசிங்கம் குடும்பம்
சோ. க. ஐயம்பிள்ளை குடும்பம்

**3. ஆம் திருவிழா**

கு. மயில்வாகனம் குடும்பம்
ப. சொர்ணலிங்கம் குடும்பம்

**4. ஆம் திருவிழா**

சு. நடராசா குடும்பம்

**5. ஆம் திருவிழா**

பெ. முத்துவேலு குடும்பம்
சி.க. நாகலிங்கம் குடும்பம்

**6. ஆம் திருவிழா**

சு. குமாரசாமி குடும்பம்
மு. கதிர்காமன் குடும்பம்

**7. ஆம் திருவிழா**

மு. மு. நடராசா குடும்பம்
கு. சண்முகம் குடும்பம்

**8. ஆம் திருவிழா**

சி. முத்துக்குமாரு குடும்பம்

**9. ஆம் திருவிழா**

நா. முருகேசு குடும்பம்

**10. ஆம் திருவிழா**

வை. பொன்னுத்துரை குடும்பம்

**11. ஆம் திருவிழா**

ந. கமலாம்பிகை குடும்பம்

**12. ஆம் திருவிழா**

இ. பஞ்சாட்சரம் குடும்பம்

**13. ஆம் திருவிழா**

வே. சுப்பையா குடும்பம்
நா. கார்த்திகேசு குடும்பம்

**14. ஆம் திருவிழா-தேர்**

சின்னத்துரைவிதானையார் குடும்பம்

**15. ஆம் திருவிழா-தீர்த்தம்**

சின்னத்துரை விதானையார் குடும்பம்

**16. ஆம் திருவிழா (பூங்காவனம்)**

க. உலகநாதன் குடும்பம்
அ. இலங்கைநேசன் குடும்பம்

## 2. தர்மகர்த்தாக்கள்

1. திரு. வி.ச. இராசரெத்தினம் (காப்பளர்)
2. திரு. ஆ.ச. சித்திரவேல் (காப்பளர்கள்)
3. திரு. நா. செல்லதுரை (தலைவர்)
4. திரு. செ. இராமச்சந்திரன் (துணைத்தலைவர்)
5. திரு. சி.க. இலட்சுமணன் (செயலாளர்)
6. திரு. இ. வைத்தியலிங்கம் (பொருளாளர்)
7. திரு. கு. கனகலிங்கம்
8. திரு. நா. முருகேசு
9. திரு. மு. கிருபானந்தவாரி

## 3. பழைய நிர்வாக சபையினர்

1. திரு. மு.சி. சின்னத்துரை விதானையார்
2. திரு. மாலைகட்டி கந்தையா
3. திரு. சோ. க. ஐயம்பிள்ளை
4. திரு. கு. இலகுப்பிள்ளை
5. திரு. சி. முத்துக்குமாரு
6. திரு. சி. சின்னத்துரை ஆசிரியர்
7. திரு. ப. கதிரவேலு (சட்டத்தரணி)
8. திரு. சி.க. நாகலிங்கம் ஆசிரியர்
9. திரு. சி.கு. செல்லையா
10. திரு. நா.க. மயில்வாகனம்

## 4. நடப்புகால நிர்வாக சபையினர்

1. திரு. செ. நீலகண்டன்
2. திரு.ப. கணேசசர்மா
3. திரு. செ. இராமச்சந்திரன்
4. திரு. கு. கனகலிங்கம்
5. திரு. சி. முருகானந்தவேல்
6. திரு. ச. திருஞானம்
7. திரு. மு. கிருபானந்தன்
8. திரு. ந. செல்லத்துரை
9. திரு.க. விக்னேஸ்வரன்
10. திருமதி. கு. செல்லமுத்து
11. திரு. இ. பரமலிங்க்ம்
12. திரு. ஆ. சபாரெத்தினம்
13. திரு. சி.க. இலட்சுமணன்

## 5. கும்பாபிஷேக புனர்நிர்மாண செயலணிக்குழு

1. திரு. சி. க. செல்லையா (ஆலோசகர்)
2. திரு. சி. முருகானாந்தவேல்
3. திரு. அ. இலங்கைநேசன்
4. திரு. மு.மு. நடராசா
5. திரு. மா. லிங்கநாதன்
6. திரு. பொ. ஆரூரன்
7. திரு. ச. திருஞானம்
8. திரு. சி. பஞ்சாட்சரம்

## 6. 2005ஆம் ஆண்டுக்கான கும்பாபிஷேக ஒழுங்குபடுத்தல் குழுவில் பின்வருவோர் அங்கத்தவர்களாவார்கள்

**தலைவர்** : திரு. த. குழுந்தைவேல்

**செயலாளர்** : திரு. த. ரகுநாதன்

**பொருளாளர்** : மா. லிங்கநாதன்

**உறுப்பினர்கள்** :

1. திரு.சி. முருகானந்தவேல்
2. திரு. கு. வீரசுப்பிரமணியம்
3. திரு. செ. யுகேந்திரன்
4. திரு. த. சிவராசா
5. திரு. மா. கிருஷ்ணராசா
6. திரு. தம்பிஜயா தேவதாஸ்
7. திரு. வை. பொன்னுத்துரை
8. திரு. நா. சண்முகம்
9. திரு. இரா. பரமலிங்கம்
10. திரு. ஆ. கனகலிங்கம்
11. திரு. த. செல்வகுமார்
12. திரு. ச. வசுந்தரன்
13. திரு. க. கௌரிமனோகரன்
14. திரு. இ. சுந்தரலிங்கம்
15. திருமதி. எம். மகாலெட்சுமி
16. திருமதி. கு. சிவானந்தலோசனி

## 7. வெளிநாட்டில் வாழும் எமது ஆலய கும்பாபிஷேகக் குழுப்பிரதிநிதிகள்

1. திரு. சின்னத்துரை கிருபானந்தவேல்
(இங்கிலாந்து. தொ.பேசி: 0049-2084274009)

2. திரு. கனகரெத்தினம் யோகநாதன்
(சுவிஸ். தொ.பேசி: 0041-61921731)

3. திரு. வைரமுத்து கிருஷ்ணலிங்கம்
(ஜேர்மனி. தொ.பேசி: 0049 2314776161)

4. திரு. முருகேசு கோவிந்தராஜா
(அவுஸ்திரேலியா தொ.பேசி: 040 8027771 97433260)

5. திரு. தாமோதரப்பிள்ளை மணி வாசகர்
(கனடா. தொ.பேசி: 416 492 5734)

6. திரு. வைரமுத்து முத்துலிங்கம்
(பிரான்ஸ். தொ.பேசி: 0140051876)

7. திரு. சுப்பையா திருச்செல்வம்
(டென்மார்க். தொ.பேசி: 004555775023)

8. Dr. சின்னத்துரை வசந்தகுமார்
(அமெரிக்கா. தொ.பேசி: 0017709829258)


## 8. Sri Rajarajeswary Ambal Thevasthanam - Pungudutivu -10.
## (Alias - Kannakai Amman Temple)
## Committee Members of the
## Paripalana Sabai & Trustee

### Festival Devotees

1. S. Rasaratnam
2. R. Poologasingham
3. K. Mailvaganam & P. Sornalingam
4. S. Nadarajha.
5. P. Muthuvelu & S.K. Nagalingam
6. S. Kumaraswamy
7. K. Shanmugam
8. M. Kanagasabapathy
9. N. Murugesu
10. V. Ponnuthurai
11. N. Kamalambikai
12. S. Panchadcharam
13. V.Suppiah & N. Karthigesu
14. S. Shanmugarasa
15. R. Vaithilingam
16. K. Ulaganathan
17. A. Elanganesan
18. S. Neelakandan
19. P.Ganesha Sarma
20. S. Ramachandran
21. K. Kanagalingam
22. S. Muruganandavel
23. S. Thirugnanam
24. M. Kirupanandavari
25. N. Selladuri
26. K. Vickneswaran
27. K. Sellamuthu
28. R. Paramalingam
29. A. Sabaratnam
30. L.K. Ledchumanan

www.pungudutivutemples.com





Printed by : Sunprintek 44A, Kathiresan Street, Colombo-13 Tel : 2433641